

# புலனாய்வு ஊடகத் துறைக்கான

## வள நூல்

FRIEDRICH EBERT STIFTUNG

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

**புலனாய்வு ஊடகத் துறைக்கான**
**வள நூல்**

இரண்டாவது பதிப்பு - 2012 டிசம்பர்

**திட்டமிடல் குழு:**
திரு. லக்ஷ்மன் குணசேகர, திரு. நாமல் பெரேரா, திரு. சஞ்சனா ஹத்தோட்டுவ, திரு.லசந்த றுகுணுகே, திரு. ஜெயசிறி பேதுறு ஆராய்ச்சி, திரு. ராகுல் ஹெட்டியாராய்ச்சி, திரு. அசல பட்டகே, திரு. மங்களனத் லியனாராய்ச்சி, திரு. அசோக சேனாரத்ன, திரு. ரி. எம் ஜனூர் கிச்சிலன்

**மதிப்பிடல் குழு:**
திருமதி. ஷர்மினி பொய்ல், திருமதி. மனிக் மென்டிஸ், திரு. லசந்த ருகுணுகே, திரு. சி. தொட்டவத்த, திரு. கமல் லியனாராய்ச்சி

**பிராந்திய மதிப்பிடல் குழுக்கள்**

**விசேட பங்களிப்புக்கள்**
இலத்திரனியல் தடயங்கள் அத்தியாயத்திற்காக, திரு. சஞ்சனா ஹத்தொட்டுவ, பதிப்பாசிரியர் http://www.groundviews.org
ஆய்வுகளின் தொகுப்பிற்காக, திரு. லசந்த ருகுணுகே, செய்தி ஆசிரியர் ராவய

**TISL இன் புலனாய்வு பத்திரிகைத்துறை குழு:**
ரி. கலைமகள்
டில்றுக்ஷி ஹந்துன்நெத்தி
ஷான் விஜயதுங்க
ஆனந்த தர்மப்பிரிய ஜயசேகர
ஹரித தஹநாயக்க

ISBN: 978-955-1281-49-6

அனைத்தும் பதிப்புரிமைக்குட்பட்டவை. ட்ரான்ஸ்பரன்சி இன்ரர்நஷனல் ஸ்ரீலங்காவினதும் (TISL), பிரெட்றிச் இபேட் ஸ்ரிவ்ரங்கினதும் (FES) எழுத்து மூலமான முன்னனுமதியுடனேயே மீள்பதிவு செய்யலாம்.



# புலனாய்வு ஊடகத் துறைக்கான வள நூல்

# பொருளடக்கம்


| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 1 |
| நன்றியுரை | 3 |
| இவ்வளத்துணை நூலை எவ்வாறு பயன்படுத்துவது? | 5 |
| **பாகம் ஒன்று** | |
| அத்தியாயம் ஒன்று: புலனாய்வுச் செய்தித்திரட்டல் : ஏன் - எதற்காக ? | 8 |
| அத்தியாயம் இரண்டு: தொழில் தகைமை - ஒழுக்க நெறி | 16 |
| **பாகம் இரண்டு** | |
| அத்தியாயம் மூன்று: புலனாய்வுச் செய்திகள் பற்றிய சில யோசனைகள் | 24 |
| அத்தியாயம் நான்கு: மேம்பாட்டுடன் செய்தியை நிலைப்படுத்தல் | 31 |
| அத்தியாயம் ஐந்து: மனித தகவல் மூலங்கள் | 36 |
| அத்தியாயம் ஆறு: பத்திரிகை தடயங்கள் | 47 |
| அத்தியாயம் ஏழு: இலத்திரனியல் தடயங்கள் | 56 |
| அத்தியாயம் எட்டு: செய்தியைத் தயாரித்தல் | 63 |
| அத்தியாயம் ஒன்பது: முரண்பாடான பேட்டி | 70 |
| அத்தியாயம் பத்து: செம்மைப்படுத்தலும் தகவல்களை சரிபார்த்தலும் | 76 |
| **பாகம் மூன்று** | |
| அத்தியாயம் பதினொன்று: புலனாய்வுச் செய்தித்துறை செயற்திட்டங்களை நிர்வகித்தல் | 82 |
| அத்தியாயம் பன்னிரெண்டு: பாதுகாப்பு | 87 |
| **பிற்சேர்க்கை** | |
| 01 புலனாய்வுச் செய்தித்துறையின் வரைவிலக்கணங்கள் | ii |
| 02 ஊடகத்துறையின் பத்துக்கட்டளைகள் | iii |
| 03 புலனாய்வுச் செய்தித்திரட்டலுக்கான ஏழு அடிப்படை விதிமுறைகள் | iv |
| 04 தொழில்சார் நடைமுறைக்கான இலங்கை பத்திரிகையாசிரியர் குழாத்தின் ஒழுக்கவிதிகள் | vi |
| 05 ஊடகவியலாளர்களின் செயற்பாடு குறித்த சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஒழுக்கவிதிகளின் பிரகடனம் | xi |
| 06 இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு எவ்வாறு முறைப்பாடொன்றைச் செய்வது | xiii |
| 07 PCCSL முறைப்பாட்டு விண்ணப்பம் | xix |
| 08 உதடுகளை இலகுபடுத்தல் | xx |
| 09 சர்வதேச செய்திப்பாதுகாப்பு நிறுவனம் (INSI) ஊடகவியலாளருக்கான பாதுகாப்பு விதிமுறைகள் | xxvi |
| 10 Resource List (வள பட்டியல், நிறுவனங்களின் பட்டியல்கள்) | xxxiii |
| 11 Related Web Sites (இணையத்தளங்கள்) | xxxv |
| 12 Bibliography (துணை நூல்பட்டியல்) | xxxvii |

# முன்னுரை

அரசாங்க நிறுவனங்களைச் சேர்ந்த முப்பதிற்குமதிகமான அலுவலர்களால் ஒரு கிராமத்துக்கான சேவைகள் இன்று மேற்கொள்ளப்படுகின்றன. அந்த அலுவலர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்களின் சேவை மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்றதா? இதுபோன்ற அதிகமான சேவை நிறுவனங்கள் அவசியமானதா? இதற்கான வேறு சிறந்த மாற்றுத்திட்டங்கள் இருக்கின்றனவா? சர்வதேச ரீதியாக பெறப்படுகின்ற உதவிகள் குறித்து எடுக்கப்படுகின்ற தீர்மானங்களால் மக்களின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற தாக்கங்கள் எப்படியிருக்கும்? காலாவதியான அல்லது காலாவதியாகும் தினத்தை அண்மித்ததான உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் எவ்வாறு வியாபார நிலையங்களில் வைக்கப்பட்டிருக்க முடியும்? என்பவை போன்ற நூற்றுக்கணக்கான கேட்கப்படாத மற்றும் விடை காணப்படாத விடயங்கள் கேள்விகளுக்குள் அடங்குகின்றன.

இந்நிலையில் அரசியல், வர்த்தக, சமூக, கலாசார உறவுகளைக் கொண்டுள்ள உலகப்பின்னணியில், எது சரி, எது பிழை, எது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது எது ஏற்கப்படமுடியாதது போன்ற விடயங்கள் நீதி, மற்றும் உரிமைகள் அடிப்படையிலும், பகிரங்க கலந்துரையாடல்களுடனும் தொடர்ச்சியாக காலத்துக்கேற்ப வரையறை செய்யப்பட வேண்டியவையாக இருக்கின்றன. எனவே ஆரோக்கியமான விமர்சனங்களோடு கூடிய விவாதங்கள், சிந்தனைகள் என்பவை நல்ல தரத்திலான நிர்வாகம், நியாயாதிக்கம் போன்றவற்றை நோக்கி மக்களை வழிநடத்துபவையாக அமையும். எதிலும் பங்கெடுக்காத, ஊக்கமற்ற மக்கள் ஊழலுடன் கூடிய அரசாங்கங்கள் வளர்ச்சி பெறுவதற்கான உந்துசக்தியாக இருக்கின்றனர். ஒன்றைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆவலும் ஆர்வமும் மக்களிடமிருந்து மடிந்துவிட்ட நிலையில் மாத்திரமே இத்தகைய ஒரு நிலை ஏற்பட முடியும்.

மக்கள் நலன்களில் செல்வாக்கு செலுத்தும் அம்சங்கள் சம்பந்தமாக கடுமை யான உழைப்புடன் ஆராய்ந்து அறியத்தரும் ஆற்றலலானது தொழில் ரீதியான ஒழுங்கமைப்பான புலனாய்வுச் செய்தித்துறைக்கே உரியது. ஆதாரங்களுடன் கூடிய செய்தி அறிக்கையிடலுக்கு கடும் உழைப்புடன் கூடிய, ஏற்றுக்கொள்ளத்தக்கதான விடயங்கள் தேவைப்படுகின்றன. அப்போதுதான் இவ்விடயங்கள் உள்வாங்கப்பட்டு வாசகர்கள் நேயர்கள் ஆகியோரின் முடிவுக்கு விடப்படமுடியும். இத்தகைய ஓர் ஊட்டசக்தியின்றி ஜனநாயக செயற்பாடு வலுவிழந்ததாகிவிடும். இந்நிலையில்தான் ஊடகத்துறை மூலமான அணுகுமுறைகள் மக்களுக்கு அவர்களது நலன்களைப்பாதுகாக்கும் விதத்தில் அறிவூட்டுவனவாகவும், பக்கபலமாகவும் இருக்கும் வகையில் அமைந்திருக்க முடியும்.

இதனைக் கருத்திற்கொண்டே யுத்தத்துக்குப்பின்னரான சூழ்நிலையில் ஜனநாயக நடைமுறைகளைப் பலப்படுத்தும் விதத்தில் டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா (TISL), பிரெட்றிச் ஈபேர்ட் ஸ்டிவ்டங் ஸ்ரீலங்கா (FES) ஆகியன ஒன்றிணைந்து புலனாய்வுச் செய்தித்துறையை ஊக்குவிக்க முன்வந்துள்ளன. டிரான்ஸ்பெரன்ஸி இன்டர் நஷனல் ஸ்ரீலங்கா மற்றும் பெரட்றிக் ஈபேர்ட் ஸ்டிவ்டங்

ஸ்ரீலங்கா ஆகியன ஒன்றிணைந்து புலனாய்வுச் செய்தித்துறையை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டமொன்றை 2011-2015 ஆகிய காலப்பகுதிக்களுக்கென வடிவமைத்து ஊழல் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முறியடிக்கும் பயிற்சித்திட்டத்தினை மேற்கொள்ள முன்வந்துள்ளன.

புலனாய்வு செய்தித்துறை ஆரோக்கியமான கலந்துரையாடலுக்கு வழிவகுத்து தரம் வாய்ந்த நல்லாட்சிக்கு இலங்கையில் வாய்ப்பளிக்கும் அதேவேளை இவ்விடயம் தொடர்பில் இலங்கை சமூகங்களுக்கிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் என்று FES நிறுவனம் எதிர்பார்கின்றது.

இக்கூட்டு முயற்சியின் வெற்றியென்பது, புலனாய்வுச் செய்தித்துறை சார்ந்த பயிற்சித்திட்டத்தில் பயிற்றப்பட்டவர்களால் சேகரிக்கப்படுகின்ற தரமான செய்தித்தகவல்களிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

இத்தரமான மற்றும் ஆக்கபூர்வமான பங்களிப்பே ஊழல், மோசடிக்கெதிராக அனைத்துப் பிரஜைகளையும் ஒன்றிணைத்துப் பலமடைய வைப்பதுடன், நல்ல தரமான நிர்வாகத்துக்கும் வழியமைக்குமென குறிப்பிடமுடியும்.

ஆரோக்கியமான வேலைத்திட்டத்துக்காகவும், தொழில் ரீதியான விமர்சனத்தோடு கூடிய பிரதிபலனுடன் தொழில் நுட்ப ஒத்துழைப்பை நல்கும்விதத்தில் ஓர் ஆக்கத்திறனை உருவாக்க அணி இணைக்கப்பட்டுள்ளது.

மூன்று முக்கிய ஆக்கங்களாவன:

(1) புலனாய்வுச்செய்தித்துறையின் வளத்துணை நூல்.

(11) புலனாய்வுச் செய்தித்துறையின் கைநூல்.

(111) பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி.

இவற்றின்மூலம் ஊடகவியலாளர்களுக்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்படுவதோடு அந்த அறிவுரைகளை அவர்களது தெற்காசிய சகாக்களுடன் பகிர்ந்து தமது உன்னதமான பணியை முன்னெடுக்க உதவுவதே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது இந்த ஆக்கங்களைப் பயன்படுத்துவோரை நாம் வாழ்த்துவதோடு, வாசகர்களிடமிருந்து இது குறித்த ஆரோக்கியமான விமர்சனத்தையும் எதிர்காலப்பதிப்புக்களை மேலும் வளப்படுத்தும் வயைில் எதிர்பார்க்கிறோம்.

விஜய ஜயதிலக்க PhD
நிர்வாக இயக்குநர்,
டிரான்ஸ்பெரன்ஸி இன்டர் நஷனல்,
ஸ்ரீலங்கா.

ஜோகிம் ஷ்லுட்டர்
வதிவிடப்பிரதிநிதி,
பிரெட்றிச் ஈபேர்ட் ஸ்டிவ்டங்,
ஸ்ரீலங்கா.

ஜுலை 2011, கொழும்பு.

# நன்றியுரை

இலங்கையில் முதல்தடவையாக புலனாய்வுச் செய்தித்துறை சார்ந்த இந்த வளத்துணை நூல் இலங்கை ஊடகவியலாளருக்காக வெளியிடப்படுகிறது. இலங்கைச் செய்தியாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், 2011 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் பங்குபற்றியிருந்தனர். இவர்கள் புலனாய்வுச் செய்தித்துறை சம்பந்தமான பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

இதன்மூலம் இவ்வளத்துணை நூல் இறுதி வடிவம் பெற்றுள்ளது. எனவே தமது பங்களிப்பை வழங்கிய இலங்கைச் செய்தியாளர்கள், பத்திரிகையாசிரியர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஷாமினி பொய்ல், திருமதி மெனிக்மென்டிஸ், திருவாளர்கள்: லக்ஷ்மன் குணசேகர, நாமல் பெரேரா, ஜயஸ்ரீ பேதுறுஆராச்சி, ராகுல் ஹெட்டியாராச்சி, அசேலா பெத்தகே, மங்களநாத் லியனாராச்சி, ஐனூர் கிச்சிலான், அசோக்கா சேனரட்ன ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

ஆபிரிக்கா, கம்போடியா, மத்திய கிழக்கு மற்றும் பால்கன் நாடுகளில் யுத்தத்துக்குப் பின்னர் அங்குள்ள சமூகங்களைச் சேர்ந்த செய்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள், விடயங்களை உள்ளடக்கியதாகவும் இந்த நூல் அமைந்துள்ளது. அராபிய செய்தியாளர்களால் தகவல்களை மையமாகக் கொண்டு புலனாய்வுச் செய்தித்துறைக்கென தயாரான வழிகாட்டி நூல் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்ததை சுட்டிக்காட்டவேண்டும். இத்தகைய பதிப்புகள் புலனாய்வுத்துறை செய்தியாளர்களுக்கு துணிச்சலைக் கொடுப்பதோடு ஓர் உந்துசக்தியாகவும் அமைந்துள்ளன.

http;//groundviews.org ஸ்தாபகரும், அதன் ஆசிரியருமான திரு. சஞ்ஜன ஹத்தொட்டுவவின் பங்களிப்புக்கும் நன்றி கூறுகின்றேன். அவர் இலத்திரனியல் புலனாய்வு சம்பந்தமான சுருக்கமான ஒரு வடிவத்தை எதிர்காலப் பாவனைக்கெனத் தந்திருந்தார்.

புலனாய்வுச் செய்தித்துறைத் தகவல்கள் பற்றி இலங்கையில் கிடைக்கக்கூடிய சில விடயங்களைத் தேர்ந்தெடுத்துதந்தமைக்காக திரு. லஸந்த ருகுணகேவுக்கும் விசேட நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இத்திட்டத்துக்கு வழிகாட்டியதோடு ஒத்துழைப்பு நல்கிய இலங்கை டிரான்ஸ்பெரன்ஸி இன்டர் நஷனல் (TISL) நிர்வாக இயக்குநர் கலாநிதி விஜய ஜயதிலக்கவுக்கும் பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் குழுவினரான செல்வி.ரி.கலைமகள், திருவாளர்கள். ஷான் விஜேதுங்க, ஆனந்த ஜயசேகர ஆகியோருக்கும் நன்றி கூறுகிறேன்.

இவ்வளத்துணை நூலின் எண்ணக்கரு உருவாக்கத்துக்கு உதவியதோடு நிதியுதவியும் புரிந்த பிரெட்றிக் ஈபேர்ட் ஸடிவ்ரங் (FES) நிறுவனத்தின் இலங்கை வதிவிடபிரதிநிதி திரு. ஜோகிம் ஷ்லுட்டர் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை வடிவமைப்பதில் உறுதுணையாக நின்று ஒத்துழைத்த (TISL) நிறுவன பரிந்துரை இயக்குநரும், தேசிய புலனாய்வுச் செய்தித்துறை நிகழ்ச்சித்திட்ட ஆலோசகரும், சன்டேலீடர் பத்திரிகையின் முன்னாள் புலனாய்வுச் செய்தித்துறை ஆசிரியருமான டில்ருக்ஷி ஹந்துன்நெத்தி அவர்களுக்குத் மிகப்பெரும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மனித செய்தி மூலங்கள் என்ற அத்தியாயத்துக்கென ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கியதோடு பொதுவாக அனைத்துமே சிறப்பாக அமைவுற அவர் பெரிதும் ஒத்துழைத்திருந்தார்.

இலங்கையில் புலனாய்வுச் செய்தியாளர்கள் பலரும் தமது புலனாய்வுச் செய்திகள் மூலமாக உண்மையை வெளியிட பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். சிலர் தமது உயிர்களையும் தியாகம் செய்தனர். அவர்களின் நினைவுக்கு இவ்வளத்துணைநூலை சமர்ப்பிக்கின்றோம்.

ரால்ப்வ் பிரம்மொலினோ,
முன்னாள் லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் புலனாய்வுச் செய்தியாளர்,
ஊடக ஆலோசகர்.
கொழும்பு, ஸ்ரீலங்கா

ஆகஸ்ட் 2011

# இவ்வளத்துணை நூலை எவ்வாறு பயன்படுத்துவது?

இவ்வளத்துணை நூல், புலனாய்வு செய்தியாளர்களுக்கு குறிப்பாக பிராந்தியங்களில் பணிபுரிபவர்களுக்கு ஆரம்பம் முதல் இறுதிவரை ஒரு புலனாய்வுச் செய்தி தொடர்பாகவும், அது பற்றிய திட்டமிடல் குறித்தும் வழிகாட்டும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அத்தியாயங்களை வாசிக்கும் போது செய்தியாளர்களும், பத்திரிகையாசிரியர்களும் புலனாய்வுச் செய்தித் திரட்டல் என்பது எவ்வளவு தூரம் பொதுவான செய்திச் சேகரிப்பிலிருந்தும் வேறுபட்டுள்ளதென்பதை அறியமுடிவதோடு, ஓர் உயர்ந்த தரத்திலான செய்தி அறிக்கையை எவ்வாறு தயாரிக்க முடியுமென்பதையும் அறிய முடியும்.

புலனாய்வுச் செய்தியொன்றுக்கான யோசனையைத் தரக்கூடிய வழிவகைகளை தெரிவு செய்தல், மூலத்தடயங்களை பின்தொடர்தல் - மானிட, பத்திரிகை, மற்றும் இலத்திரனியல் - தொடர்புகளுடன் இறுதி எழுத்துமூல அறிக்கையை பல்வேறு அரங்குகளுக்கும் வழங்குதல் பற்றிய விபரங்கள் இவ்வளத்துணை நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பெரிதும் பொருட்படுத்தப்படாத முக்கிய விடயங்கள் பற்றியும், புலனாய்வுச் செய்தித்திரட்டும் நடவடிக்கைகளை எவ்வாறு கையாளுவது என்பது பற்றியும் இந்நூல் விளக்கமளிக்கிறது. இவ்வளத்துணை நூல் புலனாய்வு செய்தித்துறை தொடர்பான இலங்கையிலும், வேறு தெற்காசிய நாடுகளிலும் நிஜ - வாழ்க்கை உதாரணங்களையும் கொண்டுள்ளது. ஏனைய வழிகாட்டல்கள், தகவல்கள், தரவுகள் என்பவற்றை உள்ளடக்கிய ஓர் அட்டவணையையும் இவ்வளத்துணை நூல் புலனாய்வுச்செய்தித்துறை தொடர்பாகக் கொண்டுள்ளது.

இவ்வளத்துணை நூல், கையடக்கமான கைநூல் ஒன்றையும் களத்தில் உள்ள செய்தி சேகரிப்பாளர் நன்மைகருதி மேலதிகமாகக் கொண்டுள்ளது.

இக்கை நூல் ஓர் நடைமுறைச்சாத்தியமான வழிகாட்டியாக செயற்பட்டு வளத்துணை நூலில் உள்ள முக்கிய விடயங்களை முன்னுதாரணப்படுத்தி செய்தியாளர்களை அவர்களது புலனாய்வுப்பணியில் முழுக்கவனத்தோடு ஈடுபட வைப்பதாக அமைந்துள்ளது.

பால் நிலை வித்தியாசங்கள் பற்றிக்குறிப்பிடுகையில், அவன் - அவள் என்ற சொற்பிரயோகங்கள் தவிர்க்கப்பட்டு இலங்கையின் செய்தியாளர்கள், பத்திரிகையாசிரியர்கள் தொடர்பில் ஆண்பால், பெண்பால் சார்ந்த பொதுவான சொற்பிரயோகங்களை இவ்வளத்துணைநூல் பயன்படுத்தியுள்ளது.

## பாகம் ஒன்று

# புலனாய்வுச் செய்தி சேகரிப்பு பற்றிய ஒழுங்கும் செயற்பாடும்

## அத்தியாயம் ஒன்று

# புலனாய்வுச் செய்தித் துறை: என்ன? எதற்காக?

மனித நாகரிகம் வளர்ச்சிபெற ஆரம்பித்ததும் சமூக அமைப்புக்கள் மட்டத்தில் உரிமைகள், ஜனநாயகம் என்பவை பற்றிய விழிப்புணர்வோடு தகவல்களை அறிந்துகொள்ளும் தேவையும் முக்கியத்துவம் பெற ஆரம்பித்தது.

மானிடவியல் ஆய்வாளர்கள் மக்களின் இந்த அறிந்துகொள்ளும் ஆவலை தொன்மைவாய்ந்த கலாசாரங்களுடன் தொடர்பு படுத்துகின்றனர். பழங்குடிமக்கள் உணவு, நீர் மற்றும் உறையுள் போன்றனவற்றை தேடுவதில் கொண்டிருந்த ஆவலைப்போன்று தம்மைச்சுற்றி நடைபெறுவனவற்றையும் அறிந்துகொள்ள ஆவல் கொண்டிருந்தனர். காலப்போக்கில் சமூகங்கள் உரிமைகள் சம்பந்தமாகவும், துறைகளில் பங்களிப்பின் அவசியம் பற்றியும் மற்றும் ஜனநாயகம் பற்றியும் ஆர்வம் செலுத்த ஆரம்பித்த போது "அறிவதன் அவசியம்" பற்றிய ஆர்வம் மென்மேலும் அதிகரித்தது.

ஆட்சி நிர்வாகம், ஜனநாயகம் என்ற கோட்பாடுகள் தென்னாசியாவுக்குப் புதிதானவையல்ல. அரசியல் விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை அர்த்தசாஸ்திரம் என்ற பிரகடனம் கிறிஸ்துவுக்கு முன்னர் 4 ஆம் நூற்றாண்டில் கௌடில்யாவினால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. சாணக்கியா, விஷ்ணுகுப்தா என்ற பெயர்களாலும் இவர் அழைக்கப்பட்டார். முதலாவது மயுரசக்கரவர்த்தி சந்திரகுப்தன் அரசாட்சி, பொருளாதாரம் தொடர்பான ஒழுங்கமைக்கப்பட்ட பிரகடனங்களை வெளியிட்டபோது, அச்சக்கரவர்த்தியின் ஆலோசகராக கௌதில்யா சேவையாற்றினார். அரசியல் விஞ்ஞானத்தில் கௌடில்யா ஒரு முன்னோடியாகக் கருதப்படுகிறார். அத்துடன் அவரது காலம் மாக்கியவல்லி என்ற அரசியல் விஞ்ஞானியுடைய காலப்பகுதியைவிட 1200 ஆண்டுகள் முற்பட்டதாகவே அமைந்திருக்கின்றது.

அர்த்தசாஸ்திரம் அரசாட்சியின் அனைத்து அம்சங்களையும் கையாளுவதாக இருக்கின்றது. இதில் தர்மத்தின் காவலனாக அரசன் சித்தரிக்கப்படுகிறான். ஆயினும் தர்மத்தின் முழுவடிவமாக அரசன் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் பல மதத்தன்மையையும், மதத்தையும் அரசாட்சியையும் பிரித்துக்காண்பிப்பதுடன் ஒரு பல்வகைத்தன்மையை ஆட்சியதிகார விடயத்தில் கொண்டிருப்பதாகவும் அர்த்தசாஸ்திரம் காணப்படுகின்றது.

இலங்கை 1931 ஆம் ஆண்டு முதல் ஒரு ஜனநாயக நாடாக இருக்கின்றது. 1970 ஆம் ஆண்டுகாலப்பகுதியிலிருந்து கிழக்கு ஐரோப்பாவின் பலநாடுகளிலும், ஆசியாவில் பல பாகங்களிலும் 60க்கும் அதிகமாகமான நாடுகளில்

ஜனநாயகம் வியாபித்துள்ளதை அவதானிக்க முடியும். இணையத்தின் செல்வாக்குக் காரணமாக இஸ்லாமிய நாடுகளான எகிப்து, டுனீசியா, யேமன், பாஹ்ரெய்ன் ஆகிய நாடுகளிலும் ஜனநாயக அமைப்புகள் உயிரோட்டம் பெற ஆரம்பித்துள்ளன.

ஜனநாயகத்தின் ஒவ்வொரு திருப்பு முனைகளிலும், தமது அரசியல் எதிர்காலம் குறித்து தெளிவற்றிருந்த மக்கள், தற்போது அரசாங்க தலைவர்களை வாக்களிப்பு மூலமாக தெரிவு செய்யும் சக்தியைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு கச்சிதமான, காலமறிந்த அன்றாடத் தகவல்கள் கிடைக்கப்பெற வேண்டியது அவசியமானதாகின்றது. இவ் அத்தியாவசியத் தேவையை ஊடகத்துறை பூர்த்தி செய்வதாக இருக்கின்றது. ஊடகத்துறையின் காரணிகள் என்று விபரிக்கப்பட்டவற்றில் சுதந்திரமாகவும், சுயமாகவும் பிரஜைகள் ஆளப்படுவதற்கான தகவல்களை வழங்குவதே முக்கிய நோக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மரபுமுறை ஊடகத்துறை என்பது பெரும்பாலும் மனித அவலங்கள், இயற்கை அனர்த்தங்கள், வழமையான உத்தியோகபூர்வ அறிக்கைகள் என்பவற்றை புதிய செய்திகளாக தெரிவிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை பற்றியும், ஜனாதிபதி, பாராளுமன்றம் தெரிவிப்பவற்றையும் வெளியிடுகின்றன. மரபுமுறை ஊடகத்துறை என்பது அத்துறை சார்ந்த அதிகாரிகளின் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இயங்குகின்றது. பெரும்பாலான பத்திரிகை மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் என்பவை மரபுமுறை ஊடகத்துறை சார்ந்தவையாகவே இருக்கின்றன.

## புலனாய்வுச் செய்தித்துறை வித்தியாசமானதாகும்

1900 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இடம்பெற்ற சமூக இயக்க நடவடிக்கைகள் காரணமாக உருப்பெற்ற புலனாய்வுச் செய்தி திரட்டும் செயற்பாடு, சக்தியும், சுறுசுறுப்பும் மிக்கதாய் விளங்குகின்றது. செல்வாக்குள்ளவர்கள் புரிகின்ற தவறுகளை வெளிப்படுத்துவதன்மூலம், ஜனநாயக ரீதியான சமூக அமைப்பொன்றில் அரசாங்க அலுவலர்களின் அத்துமீறிய செயற்பாடுகளைக் களைவதாக புலனாய்வுச்செய்தி திரட்டும் நடவடிக்கை அமைந்துள்ளது. இதன் காரணமாக புலனாய்வுச் செய்தித்துறையை ஒரு "காவல் நாய்", "அசுத்தங்களை அகற்றும் பணி", "கடும் போக்கான ஊடக நடவடிக்கை" என்றும் குறிப்பிடுவதுண்டு.

பொதுவான ஊடகத்துறை தற்போது ஜனநாயக நாடுகள் அனைத்திலும் காணப்படுகிறது. புலனாய்வுச் செய்தித்துறையும் இவ்வாறு ஏனைய நாடுகளிலும் விரைவில் இவ்வாறு விரிவடையும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

முன்பு அதிகாரங்களில் இருப்போரின் கைப்பொம்மைகளாக இருந்த செய்தியாளர்களும், பத்திரிகையாசிரியர்களும் தற்போது அவ்வாறன்றி செயல்பட ஆரம்பிப்பதை அவதானிக்க முடிகிறது. பெருமளவு பேட்டிகளை கண்டு குற்றவியல் மற்றும் மோசடிகள் குறித்த தவறான நடவடிக்கைகளை வெளிக்கொணர்வதில் ஆர்வத்தை வெளிப்படுத்தும் போக்கு காணப்படுகிறது. ஏனையவர்கள் இரகசியமாக வைத்துள்ள தகவல்களை பகிரங்கப்படுத்தி சமூக அமைப்பில் காணப்படும் பிரச்சினைகளைக் களைவதில் ஆர்வம் காட்டப்படுகிறது.

**விசேட தன்மைகள்:** பல்வேறுபட்ட இயல்புகள் காரணமாக புலனாய்வுச் செய்தித்துறை மரபுமுறை ஊடகத்துறையிலிருந்தும் வேறுபட்டிருக்கின்றது.



Daily reporting is like hunting

அவையாவன வருமாறு:

- **செயற்திறன் படைத்தது:** மரபுமுறை செய்திச்சேகரிப்பென்பது ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அமைந்தது. ஆனால் புலனாய்வுச் செய்தித்துறை என்பது தகவல்களை மோப்பம் பிடித்துச் சொல்வதாக அமைந்துள்ளது. இதனால் "சவாலுடன் கூடிய செய்தித்திரட்டல்" என்றும் இதனைக் குறிப்பிட முடிகிறது.

- **தவறுகளை வெளிப்படுத்துகிறது:** புலனாய்வுச் செய்தித்துறை யானது, பிரதானமாக ஊழல், துஷ்பிரயோகம், பொதுச் சொத்துக்களை விரயமாக்குதல் என்பவற்றை களைந்தெறிவதை நோக்காகக்கொண்டது. அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்குள் ஊடுருவி வெளிப்படைத் தன்மைக்கு வழிவகுப்பதாகவும் புலனாய்வுச் செய்தித்துறை அமைந்துள்ளது.



Investigative reporting is like farming

- **பொறுப்பை உணர்த்துவது:** தவறுகளை கண்டறியும் அதேசமயம் மறுசீரமைப்பை மேற்கொள்ளக் கூடியவர்களையும் புலனாய்வுச் செய்தித்துறை இனங்காணுகின்றது. இதன் மூலம் அதிகாரிகளுக்கு அவர்களது பொறுப்பையும் இப்புலனாய்வுச் செய்தித்துறை உணர்த்திவைக்கின்றது.

- **பிரதிபலன் கருதியது:** தவறான நடவடிக்கைகளை மக்கள் கவனத்துக்குக் கொண்டுவரும் அதேசமயம், மக்களின் அபிப்பிராயங்களை மாறுதல்களை நோக்கியதாக திசை திருப்புவதும் புலனாய்வுச் செய்தித்துறையின் பங்களிப்பாக இருக்கின்றது.

- **காலநேரம் தேவையானது:** புலனாய்வுச் செய்திச்சேகரிப்பை குறுகிய கால எல்லையில் மேற்கொள்ளமுடியாது. இப் பணி கடினமானதும், கடின முயற்சியைக் கொண்டதா கவுமிருக்கிறது. இதன்காரணமாக புலனாய்வுச் செய்திச் சேகரிக்கும் பணியென்பது தென் ஆசியாவிலோ அல்லது இலங்கையின் செய்தி நிறுவனங்களிலோ பெரிதும் இடம் பெறுவதில்லை. இங்கெல்லாம் செய்தியாளர்கள் தினமும் பல்வேறு செய்திகளை சாதாரண முறையில் வழங்கும் விதத்திலேயே பணியாற்றுகிறார்கள்.

- **ஆழமானதும், பரந்துபட்டதும்:** மரபுமுறை செய்தி சேகரிக் கும் பணியைப்போலன்றி புலனாய்வுச்செய்திச் சேகரிப்பு நடவடிக்கைகள், பலதரப்பட்ட செய்தி மூலங்களை வேண்டி நிற்பதோடு, சேகரிக்கப்பட்ட தகவல்களை உறு திப்படுத்துவதற்கான ஆவணங்களையும் கொண்டிருக்க வேண்டியதாகின்றது.

- **பல்வேறு கால வரையறைகள்:** புலனாய்வுச் செய்திச் சேகரிப்பு என்ற விடயம் குறிப்பிட்ட காலவரையறைக்குட்பட்டதல்ல. குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் நிச்சயப்படுத்தி புலனாய்வுத் தகவல்களை திரட்ட முடியாது. ஆரம்பம் முதல் இறுதிவரை எதனையும் வரையறை செய்ய முடியாது. எப்போது இறுதிக்கட்டத்தை அடைகிறதோ அப்போதே அதனை நிறைவுற்றதாகக் கொள்ளமுடியும்.

- **மீளமைப்பது:** சிலசமயங்களில் புலனாய்வுச் செய்திச்சேகரிப்பில் முக்கியத்து வமிக்க சில தகவல்கள் புதிய வடிவத்தில் இடை நடுவில் தோன்றலாம். அவற்றையும் இணைத்துக் கொள்ளவேண்டிய தேவை ஏற்படலாம்.

பால்கன் பிரதேச புலனாய்வுச் செய்தியாளர்களுக்கெனத் தயாரான "ஆழமாக ஊடுருவிச்செல்வது" என்ற வழிகாட்டி நூலில் (2009) எதனைப் புலனாய்வுச் செய்திச்சேகரிப்பாகக் கொள்ளமுடியாது என்ற தகவல் உள்ளடங்கியிருக்கின்றது.

அவையாவன:

- **நாளாந்த செய்தி சேகரிப்பு அல்லது பிரத்தியேகச்செய்தி:** நாளாந்த செய்தியொன்றை தயார்படுத்துவதற்கான நேரத்தைவிட புலனாய்வுச் செய்திச் சேகரிப்பு நீண்ட கால நேரத்தை எடுத்துக்கொள்கின்றது. இன்னுமொரு வகையில் கூறுவதானால் நாளாந்த செய்திச் சேகரிப்பானது ஒரு வேட்டையாடலைப் போன்றது. தனது செய்தி நிறுவனத்துக்கென ஒரு செய்தியாளர் வெளியே சென்று ஒரு செய்தியைக் கொண்டுவருகிறார். ஆனால் புலனாய்வுச் செய்தித்திரட்டல் என்பது விவசாயம் செய்வதைப் போன்றது. தனது அறுவடைக்காக பயிர்களை நீண்டகாலம் வளர்த்துப்பாதுகாப்பது போல புலனாய்வுச் செய்தியாளரும் ஒரு நல்ல செய்தி அறுவடைக்காக பல வாரங்கள், மாதங்கள் என்று தனது முயற்சியை தொடர்ந்து மேற்கொள்கிறார்.

- **ஒற்றைச் செய்தி மூலம்:** புலனாய்வு செய்தி சேகரிப்பில் செய்தி மூலங்கள் பலதரப்பட்டவையாக இருக்கின்றன. மனிதர்கள் மூலமாகவும் ஆவணங்கள் கோப்புகள் என்பவை மூலமாகவும் உண்மைத்தகவல்கள் திரட்டப்படுகின்றன.


- **செய்திக்கசிவு:** தகவல்கள் கசிவதன் மூலம் புலனாய்வுச் செய்தித்தகவல்களை திரட்டமுடியும். அரச மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்குள்ளேயிருந்து செய்திக்கசிவு ஏற்படலாம். ஆனால் முழுமையான புலனாய்வுச் செய்திச் சேகரிப்பென்பது நேர்த்தியான தகவல் சேகரிப்பிலேயே தங்கியுள்ளது. ஏனெனில் தமது நலன் கருதியும், செய்தியாளரைத் தமக்கேற்றவாறு பயன்படுத்தும் விதத்திலும் செய்திகளைக் கசியச் செய்வோர் பெரும்பாலும் செயற்படமுடியும். எனவே தகவல் கசிவுக்கு அப்பாலும் சென்று புலனாய்வுச் செய்தித்திரட்டல் அமைந்திருக்க வேண்டும்.

- **"பப்பராஸி" ஊடகம்:** பிரபலங்கள் மற்றும் தனவந்தர்களைச் சுற்றித்திரிந்து தகவல் சேகரிப்பது புலனாய்வுச் செய்தித்திரட்டலாக இருக்கமுடியாது. பொதுநலன் கருதியதாகவே புலனாய்வுச் செய்தித்திரட்டல் அமையமுடியும். அத்துடன் தனிப்பட்டோர் தகவல்களை பொது நலனை மையப்படுத்தியதாக மட்டுமே சேகரிக்க வேண்டியதாகின்றது.

## புலனாய்வுச் செய்தித்துறைக்கான நான்கு முக்கிய நிலைப்பாடுகள்

எத்தகைய ஒரு தகவலாக இருப்பினும், புலனாய்வுச் செய்தித்திரட்டல் என்பது பின்வரும் ஒரு இலகுவான கணிப்பீட்டின் கீழ் அமையமுடியும்.

ஓர் அதிகாரநிலை, பொதுநிறுவனம், கூட்டுத்தாபனம் அல்லது ஓர் அடையாளம் காணப்பட்ட தனிநபர் என்பவை பற்றிய புரிந்துணர்தல், கோட்பாடுகள், வாக்குறுதிகள் என்பவை உண்மையான செயற்பாடுகளுக்கு எதிராக அமையும் போது புலனாய்வுச்செய்தித்துறை அவைபற்றி ஒப்பீட்டு ரீதியாக மதிப்பீடு செய்கின்றது.




**நாம் ஒவ்வொரு அம்சத்தையும் ஆராய்வோம்:**

கோட்பாடுகள் என்பன ஓர் அரசியல்வாதி, அரசாங்க அலுவலர் அல்லது நிறுவனம் ஆகியவற்றின் குறிக்கோள் மற்றும் செயல்பாடுகளில் தங்கியிருக்கின்றன. இதுவே பொதுப்படையான தன்மையாகும். உதாரணமாக உள்ளூர் பாடசாலை நடைமுறை என்பது இன, மத, பொருளாதார வேறுபாடுகளின்றி மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதாக இருக்கின்றது. வரவு செலவு திட்ட செலவைக் குறைப்பது அல்லது ஒழுக்கநெறியை மேம்படுத்துவது என்ற ரீதியில் அரசியல்வாதி ஒருவர் தேர்தலிலும் உத்தியோகபூர்வ பிரசுரங்களில் குறிப்பிடுவது அல்லது அரசாங்க நிறுவனமொன்றின் சட்டதிட்டங்களில் காணப்படக்கூடியவையாகும். கோட்பாடுகளும் அவைகுறித்த பொதுமக்களின் புரிந்துணர்வும் ஒன்றுடன் ஒன்று நிச்சயமாக தொடர்புடையவையாகும்.

புரிந்துணர்தல் என்பது ஓர் அலுவலர் அல்லது நிறுவனத்தின் சுயவடிவத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றது. குறிப்பாக நன்கு தயாரான ஒருவர், பொதுமக்களை தட்டிக்கொடுப்பதுடன் அவர்களுடைய நம்பிக்கையைப்பெறும் நோக்கத்தையும் கொண்டிருக்கமுடியும். நாம் இத்தகைய தன்மையை அரசியல்வாதிகளிடத்திலும் அவர்களது பிரசார நடவடிக்கைகளின்போதும் அவதானிக்கமுடியும். அத்துடன் அரசநிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும்

சமூக அமைப்புகளுக்கும் இத்தன்மை பொருந்துவதாக இருக்கும். புரிந்துணர்தல் என்பது, உரைகள், விளம்பரம், மக்கள் தொடர்பு முன்னுதாரணமான நடவடிக்கை அல்லது உத்தியோகபூர்வ நடவடிக்கை என்பவற்றின் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றது.

வாக்குறுதிகள் என்பது பொதுமக்களால் அல்லது நிறுவன ரீதியாகக் குறிப்பிட்டு வெளியிடப்படுகின்ற அறிக்கைகளைக் குறிப்பதாக அமைந்துள்ளது. இலங்கையில் 2004 ஆம் ஆண்டு சுனாமிப்பேரலை அனர்த்தத்தையடுத்து நிவாரண உதவிகள் வழங்குவது சம்பந்தமாக நிறையவே வாக்குறுதிகள் அரச அதிகாரிகளால் வழங்கப்பட்டன. ஆயினும் நிவாரண உதவிகளை வெளிப்படைத் தன்மையோடு சமமான முறையில் பகிர்ந்தளிப்பதை நிச்சயப்படுத்த அரசு தவறியதன் காரணமாகவும் சுனாமிக்குப்பின்னரான புனரமைப்புப்பணிகளில் ஊழல் குற்றச்சாட்டுக்களும் புலனாய்வுச் செய்தித்திரட்டலுக்கு வழியமைத்திருந்தது.

எனவே ஏற்கனவே குறிப்பிட்ட நான்கு அம்சங்களும் புலனாய்வுச் செய்தித்திரட்டலுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இதுபற்றிய தகவல் சேகரிப்புகள் கடினமான உழைப்போடு பேட்டிகள் மற்றும் ஆவணங்கள் மூலமாக தேடப்படவேண்டியவையாக இருக்கின்றன.

## ஒரு புலனாய்வுச் செய்தியாளரின் நடைமுறைகள்

புலனாய்வுச் செய்தித்திரட்டல் சில நடைமுறைகளைக் கொண்டிருப்பதுபோலவே நீண்டகால அனுபவத்தின் அடிப்படையில் புலனாய்வுச் செய்தியாளர்களும் சில நடைமுறைகளைப் பொதுவாகக் கொண்டுள்ளனர்.

- **விமர்சன சிந்தனை:** தமக்குக்கிடைக்கப்பெறும் இன்னோரன்ன தகவல்களை ஒழுங்குபடுத்தி அவற்றிலிருந்து தவறுகள், மாறுபாடான நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராயவேண்டியதோடு, நேர்மையற்ற மற்றும் தவறான விவாதங்களை ஆராய்ந்தறிந்து உண்மைகளை கண்டுபிடிக்கக்கூடிய செயல்திறனையும் புலனாய்வு ஊடகவியலாளர் கொண்டிருக்கவேண்டும்.

- **உந்தப்படுதல்:** உத்தியோகபூர்வ விளக்கங்கள் மூலம் புலனாய்வுச் செய்தியாளர்கள் திருப்தியடைவதில்லை. தாமாகவே தகவல்களைத் தேடி அறிய வேண்டுமென்பதிலேயே ஆர்வங்காட்டி அறிக்கைகளை ஆழமாக ஆராய்கின்றனர். இந்நடவடிக்கையை தாம் திருப்தியடையும் வரை அவர்கள் நிறுத்துவதில்லை. அவர்கள் ஆவல்கொண்டவர்களாய் இருப்பர். ஆயினும் அவர்களின் இந்த ஆவல் அவர்களது சிந்தனையையோ அல்லது தொழில்சார்ந்த தீர்மானங்களையோ மழுங்கச்செய்வதில்லை.

- **சமூக மனப்பாங்கு:** புலனாய்வுச் செய்தித்துறை கவர்ச்சிகரமானதாக இருக்கலாம். ஆயினும் இப்பணி 95 சதவீதம் கடினமானதாகும். காரியாலய வாசலிலேயே சுயநலத்தைக் கழற்றி விடுகின்றனர். பொது நன்மை கருதியதாகவே புலனாய்வு செய்தியாளர்கள் கடுமையாகவும், ஆழமாகவும் செயற்படுகிறார்கள். பாராட்டுதல்களையோ விருதுகளையோ அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. நீதியை நிலைநாட்டவேண்டும் என்ற நோக்கில் தவறுகள் திருத்தப்பட்டு, ஊழல்கள் முறியடிக்கப்பட்டு, குற்றமிழைத்த அதிகாரிகள் அவர்களது துஷ்பிரயோகங்களை ஏற்றுக்கொள்ளும்வரை புலனாய்வுச்செய்தியாளர்கள் ஓய்ந்துவிடுவதில்லை. ஜனநாயகம் பலம்

படைத்தோருடையதாக இல்லாமல், மக்கள் நலன் கருதியதாகவே இருக்க வேண்டுமென்ற பரந்த எதிர்பார்ப்பை புலனாய்வுச் செய்தியாளர்கள் கொண்டுள்ளனர்.

- **துணிச்சலோடு மதியூகமானது:** புலனாய்வுச் செய்தியாளர்கள் பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு உள்ளாக நேரிடும். அவர்கள் அதிகாரிகளால் ஓரங்கட்டப்படமுடியும். சட்டநடவடிக்கை மூலம் அச்சுறுத்தப்படமுடியும். தாக்குதலுக்குள்ளாகமுடியும். அநீதியான தடுப்புக்காவல், தலைமறைவு, ஆகியவற்றோடு மரணத்தைக் கூட சந்திக்கநேரிடும். இந்த ஆபத்துக்களை அவர்கள் அறிந்திருந்தபோதும் அவற்றின் பாதிப்புக்களை கூடுமானவரை குறைத்துக்கொள்கின்றனர். எந்தவொரு செய்தியும் உயிருக்கு ஈடாகாது என்பதையும் அறிந்திருந்தவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர்.

- **ஒழுங்கமைத்தல்:** புலனாய்வுச் செய்தியாளர்கள் கவனக்குறைவானவர்களாக இருக்கமுடியாது. தமது செயற்பாடுகளைப் பொறுத்தவரை நேர்த்தியாவும் திட்டமிட்டும் இயங்குபவர்களாக இருக்க வேண்டும். தகவல்களை சரியான முறையில் சமர்ப்பிப்பதற்கு இது உதவியாய் அமையும் என்பதையும் அவர்கள் அறிவர்.

- **நியாயம்:** சந்தேகக் கண்ணோடு விடயங்களைத் தேடுகின்றபோது உண்மைத் தன்மைகளையே புலனாய்வுச் செய்தித்திரட்டல் நோக்குகின்றதே தவிர, தவறான எண்ணக்கருத்துக்களால் கொண்ட உந்துதலினால் அல்ல. தமது தகவல்கள் யாரை இலக்கு வைத்துள்ளதோ அவர்கள் பதிலுரைப்பதற்காக போதுமானளவு வாய்ப்புக்களைக் கொண்டுள்ளதாக புலனாய்வுச் செய்தியாளர் கருதுகின்றனர். புலனாய்வுகள் ஓர் ஆயுதம்போல சிலரை காயப்படுத்தலாம். ஆகவே இந்த ஊடக ஆயுதத்தை அவர்கள் அவதானமாகப் பாவிக்க வேண்டுமென அரபு புலனாய்வு செய்தியாளர்களுக்கான வெளியீடு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கையில் புலனாய்வுச் செய்தித்துறை

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பலவற்றிலும்போல, குறிப்பாக யுத்தத்தின் பின்னரான சமூக அமைப்புக்களில் இருக்கின்ற நிலவரத்தையொத்ததாக இலங்கையிலும் புலனாய்வுச் செய்தி சேகரித்தல் பல்வேறு சவால்களைச் சந்தித்ததாக இருக்கின்றது. தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சுதந்திரம் இன்மை, பொது ஆவணங்களை ஆராய முடியாமை போன்றன பத்திரிகையாளர்களுக்குப் பெரும் சவாலாக இருக்கின்றன. அதிகாரத்திலுள்ளோருக்கு எதிராக செய்தியாளர்கள், பத்திரிகையாசிரியர்கள் மற்றும் செய்தி நிறுவனங்கள் இயங்குவதற்கு சமூக அமைப்பைச் சேர்ந்தோர் நிறுவன ரீதியான ஆதரவை வழங்குவதில் பலவீனமாக உள்ளனர். 30 வருடகால யுத்தம் பல பத்திரிகையாளர்கள் கொல்லப்படுவதற்கும், ஊடகத்துறையினர் மீதான பகை உணர்வு அதிகரிப்பதற்கும் முக்கிய காரணமாக அமைந்துள்ளது. ஊடகத்துறையினர் பலர் அரசாங்கத்தின் யுத்தநடவடிக்கைகளை விமர்சித்ததன் காரணமாக சிறையிலிடப்பட்டனர். அத்துடன் நாட்டைவிட்டு வெளியே புகலிடம் கோரும் நிலைக்கும் தள்ளப்பட்டிருந்தனர்.

ஊடக நிறுவனங்களில் பணியாளர்கள் குறைவாக இருக்கின்றனர். அத்துடன் பத்திரிகைகளை பக்கங்கங்களை நிரப்பவும், வானொலி - தொலைக்காட்சி வழியாக செய்திகளை வெளியிடவும் பொதுப்படையான செய்திகளிலேயே பத்திரிகையாளர்கள் தங்கியுள்ளனர். இது தவிர செய்திகள் கூட பெரும்பாலும் கொழும்பை மையப்படுத்தியதாகவே இருக்கின்றன.

அச்சுறுத்தல்கள் காரணமாக செய்தியாளர்களும், பத்திரிகையாசிரியர்களும் சுயதணிக்கை நடைமுறையைக் கையாள்வதோடு, ஆழமான புலனாய்வுச் செய்திகளைத் திரட்டும் பணியிலிருந்தும் ஒதுங்கியிருக்கின்றனர். அத்துடன் போதிய வசதியில்லாத செய்தி நிறுவனங்கள், தகுந்த ஊதியமின்மை போன்றவையும் தடைக்கற்களாக இருக்கின்றன. இது தவிர வாசகர்களும், நேயர்களும் கூட தமது வாழ்க்கையில் மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய புலனாய்வுச் செய்திகளை அறிந்துகொள்வதில் பெரும் ஆர்வமின்றியும் இருக்கின்றனர்.

புலனாய்வுச் செய்திச் சேகரிப்பைப் பொறுத்தவரை பிராந்திய செய்தியாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். இவர்களுக்கான ஊதியம் குறைவாகவே இருப்பதோடு, பல்வேறு செய்தி நிறுவனங்களையும் அவர்கள் தங்கியிருக்கவேண்டியுமிருக்கின்றது. இவர்களில் பலர் பகுதி நேர செய்தியாளர்களாகவே இருக்கின்றனர். இதன்காரணமாக புலனாய்வுச் செய்திசேகரிப்பில் அவர்களால் அதிகளவு நேரத்தைச் செலவிடமுடிவதில்லை. இணையத்தள வசதியோ அல்லது நவீன முறையில் செய்திகளை அனுப்பும் வசதிகளையோ அவர்கள் கொண்டிருப்பதில்லை. அத்துடன் கொழும்பையே மையப்படுத்தும் பத்திரிகையாசிரியர்களோடு தமது செய்திகளை வெளிவரச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியவர்களாக பிராந்தியச் செய்தியாளர்கள் உள்ளனர்.

பிராந்தியச் செய்தியாளர்கள் புலனாய்வுச் செய்திச் சேகரிப்போடு சம்பந்த மில்லாதவர்களாகவும், அதுபற்றி தொழில் திறனை வளர்த்துக் கொள்ளாதோராயும் இருக்கின்றனர். ஏனெனில் தமது பிராந்தியச் செய்திகளையே அவர்கள் தருகின்றனர். அத்துடன் சர்ச்சைக்குரிய செய்திகளை வெளிக்கொணரும்போது தாக்குதல்களுக்கும் அவர்கள் உள்ளாகின்றனர். தாமாகவே முன்வந்து முக்கிய சர்ச்சைக்குரிய செய்திகளை அவர்கள் தருவதற்கு முன்வந்தாலும் அவர்களது பத்திரிகையாசிரியர்கள் புலனாய்வுச் செய்திகளை ஓரங்கட்டிவிடுகின்றனர். சில சமயங்களில் கொழும்பிலுள்ள வேறொரு முக்கிய செய்தியாளருக்கு அதனை வழங்கிவிடுகின்றனர்.

இவ்வாறான கட்டுப்பாடுகள் இருக்கின்றபோதிலும் சில செய்தியாளர்கள் சவால்களை எதிர்கொண்டு புலனாய்வுச் செய்திகளைத் தருகின்றனர். அத்துடன் இலங்கையிலுள்ள செய்தி நிறுவனங்கள் தமது புலனாய்வுத் தகவல்களை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் புலனாய்வுச் செய்தியாளர்கள் தமது தகவல்களை இலங்கைக்கு வெளியே இயங்குகின்ற இணையத்தளங்களுக்கு வழங்கிவிடுகின்றனர்.

## இரண்டாம் அத்தியாயம்

# தொழில் தகைமை - ஒழுக்க நெறி

புலனாய்வு செய்தித்துறை விசேட தன்மையைக் கொண்டுள்ளதால் புலனாய்வு செய்தியாளர்கள் உயர்ந்த தரத்திலான ஒழுக்க நெறியைக் கொண்டிருக்க வேண்டியவர்களாகின்றனர்.

ஒரு பலம்மிக்க உத்தியோகத்தர் அல்லது நிறுவனமொன்று தொடர்பாக குற்றங்காண முற்படும் ஒரு புலனாய்வுச் செய்தியாளரும் அவரது செய்தி நிறுவனமும் அப்பழுக்கற்ற கறைபடியாத கரங்களோடு நம்பகத் தன்மையுடையதாகவும் அமைந்திருக்கவேண்டும். தனது புலனாய்வுச் செய்தித்திரட்டலுக்கு எவ்வளவு தூரம் முக்கியமளிக்கப்படுகிறதோ அதேயளவு முக்கியத்துவத்தை தனது ஊடகத்துறை சார்ந்த இலக்குகளை அடைவதிலும் வழங்கவேண்டும்.

தொழில் ரீதியான ஒழுக்கக்கோவை, இலங்கை பத்திரிகையாசிரியர் குழாத் தினால் வெளியிடப்பட்டதாகும். அத்துடன் இலங்கை ஊடக முறைப்பாட்டு ஆணைக்குழுவினாலும் இந்த ஒழுக்கக் கோவை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பத்திரிகைத்துறையினர் இந்த ஒழுக்க நெறிக்கோவையை தமது நடவடிக்கைகளின் போது மிகவும் ஏற்கக்கூடியதெனத் தெரிவிக்கின்றனர். இந்த ஒழுக்கக்கோவையை இலங்கையில் இணையத்தளங்களை வைத்திருப்போருக்கு வழிகாட்டியாக வழங்கவும் திட்டமிடப்படுகிறது.

சில ஊடக நிறுவனங்கள் தாமாகவே தமக்குரிய ஒழுக்கக்கோவையை தயாரித்துள்ளன. சிங்களப் பத்திரிகையான “ராவய” தனது அலுவலகத்திற்கென ஒழுக்க விதிமுறைகளைத் தயாரித்திருப்பதோடு பத்திரிகைக்கென குறைகேள் அதிகாரி ஒருவரையும் நியமித்துள்ளது. அன்பளிப்புகளை பெற்றுக்கொள்வது சம்பந்தமாகவும் சில ஊடக நிறுவனங்கள் விதிமுறைகைளை அறிமுகப்படுத்தியுள்ளன.

ஆயினும் பிராந்திய மட்டங்களில் ஊடகவியலாளர்கள் மற்றும் பகுதிநேர செய்தியாளர்களாக இருப்போர் மத்தியில் தவறான அணுகுமுறைகள் காணப்படுகின்றன. அவர்களுக்கு தொழில்தன்மை, ஒழுக்கநெறி என்பவை பற்றி அறியத்தர வேண்டியுள்ளது. சில சமயங்களில் லஞ்சம் பெறுவதோடு, அச்சுறுத்தியும் செயலில் இறங்கும் தன்மை இவர்களிடம் இருக்கின்றது. குறிப்பாக வர்த்தகத் துறையிலிருப்போரிடம் நல்லமுறையில் எழுதுவதற்காக அவர்களிடம் பணம்பெறும் நிலையும் காணப்படுகிறது. சில வர்த்தகத்துறைச் செய்தியாளர்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்து தமது தேவைகளுக்காக அனுசரணைகளையும் பெறுகின்றனர். கையடக்கத் தொலைபேசி போன்றவற்றையும் பெறுகின்றனர். ஊடகவியலாளர் ஒருவர் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தமக்கும் தமது குடும்ப உறுப்பினர்கள் 25 பேருக்கும் இலவசமாக விருந்தளிக்குமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை பத்திரிகையாளர்களில் சிலர் அரசியல்வாதிகளின் தயவை நாடி தமது பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதியைப் பெற முயலுகின்றார்கள். உறவினர்களுக்கு தொழில் பெற்றுத்தருமாறு கேட்கிறார்கள். அத்துடன் அரசியல்வாதிகளின் தொலைநகல் கருவியைப் பயன்படுத்தி செய்திகளையும் தமது நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கிறார்கள்.

பிராந்திய ஊடக இணைப்பாளர்களாக அரசியல்வாதிகளிடம் பணிபுரிவோர் தமது அரசியல் தலைவரைப்பற்றி செய்தியாளர்கள் செய்திகளை பிரசுரிக்கும்போது அதற்கான சலுகைகளை இரட்டிப்பாக்கிக் கொள்கின்றனர்.

இத்தகைய நடைமுறைகள் ஊடகத்துறையின் நற்பெயருக்குக் களங்கமேற்படுத்துவதோடு பொதுவாகவே ஊடகவியலாளர் பற்றி நிலவும் தப்பபிப்பிராயங்களையும் வலுவடைய வைக்கின்றது. புலனாய்வுச் செய்தியாளர் பணி என்பது ஊழலை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. எனவே அவர்கள் தமது ஒழுக்க நெறியிலிருந்து வழுவாதிருக்க வேண்டும்.

இந்நிலையில் அனைத்து ஊடகவியலாளர்களும் கீழே குறிப்பிடப்படுபவற்றைத் தவிர்க்க வேண்டும்.

- **சொந்த நலனுக்காக செய்தி எழுதுவது:** பொதுநலனைக் கருத்திற்கொண்டதாகவே புலனாய்வு செய்திப்பணி அமைந்துள்ளது. எனவே தான் அறிந்து கொண்ட ஒரு முக்கிய செய்தியை பிரசுரிப்பது குறித்து புலனாய்வுச் செய்தியாளர் ஒருவர் லஞ்சம் பெறும் விதத்திலோ அச்சுறுத்தும் விதத்திலோ நடந்து கொள்ளக்கூடாது. தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யவோ, விருந்துபசாரங்களைப் பெறவோ, அன்பளிப்புகளைப் பெறவோ முயலக்கூடாது. இத்தகைய நடவடிக்கைகள் ஒரு செய்தியாளரினதும் அவர் சார்ந்த ஊடக நிறுவனத்தினதும் நம்பகத்தன்மையைப் பாதிப்பதாக அமையும்.

- **அரசியல் நிகழ்ச்சி நிரல்:** புலனாய்வுச் செய்திகள் ஊடகவியலாளர் ஒருவரின் அரசியல் கண்ணோட்டத்தைப் பொறுத்து விரிவாக அமைந்திருக்க முடியும். ஆனால் இது விடயத்தில் தகவல்கள் தொடர்பாக பக்கச்சார்புடனோ, வேறு காரணங்களுக்காக தகவல்களை மறைத்துவிடுவதாகவோ இருக்கலாகாது. தகவல்கள் தகவல்களேயாகும். எனவே உண்மையானவற்றிலேயே செய்தியாளர்கள் கவனமெடுக்க வேண்டுமே தவிர தமது தனிப்பட்ட காரணங்களை முதன்மைப்படுத்தக்கூடாது.

- **முரண்பாடான கரிசனைகள்:** எந்தவொரு வர்த்தக உடன்பாடோ, தனிப்பட்ட உறவோ செல்வாக்கோ செய்தி மூலங்கள், செய்தி இலக்குகள் தொடர்பாக இருக்கலாகாது. ஒரு செய்தியாளரின் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் கூட இது பொருந்துவதாக இருக்கும். தாம் ஆய்வு செய்கின்ற நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பில் சுதந்திரமாக செய்தியாளர்கள் இயங்கவேண்டும்.

- **சாதகப்போக்கு:** புலனாய்வுச் செய்தியாளர் தனது பணியை மேற்கொள்ளும்போது இலங்கை போன்ற சிறிய நாடொன்றில் தனக்கு நண்பராக இருப்பவர் தொடர்பாகவும் செய்தி சேகரிக்க நேரிடும். இது விடயத்தில் தனது பணியை மேற்கொள்ளும்போது தனது உறுதிப்பாட்டை இழக்காது தயவு தாட்சண்யமின்றி நடக்கவேண்டும்.

- **பரபரப்பானதன்மை:** புலனாய்வு செய்திகள் சலிப்புத்தட்டாதவையாக இருக்கும் அதேசமயம், திரிபுப்படுத்தப்படுவதையும், அதீத விளம்பரப்படுத்தப்படுவதையும் தவிர்க்க வேண்டியதாகவும் இருக்கின்றது.

- **களவாடல்:** புலனாய்வு செய்தியாளர் ஆவணங்களை திருடா திருக்க வேண்டும். தனக்காக வேரொருவரிடம் அவற்றை திருடித் தரவேண்டுமெனவும் கேட்கலாகாது. குறித்த ஆவணங்கள் உள்ளே இருப்போரால் கசியவிடப்பட்டிருந்தால் அதுபற்றி பரிசீலிக்க முடியும். திருடுவதற்கும் கசிந்ததை உபயோகிப்பதற்குமிடையில் ஒரு சிறிய இடைவெளியே இருப்பினும் சட்டரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும் இந்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

## அபகரித்தல் மற்றும் திரிபுப்படுத்தல்

இன்னுமொரு ஊடகவியலாளரின் தகவலை அல்லது மொழிப்பிரவாகத்தை திருடுதல் அல்லது தெரிவிக்கப்படுகின்ற தகவலை எங்கிருந்து பெற்றோம் என்ற பின்னணியை தராதிருப்பது பத்திரிகைத்துறையில் மிகவும் மோசமான நடவடிக்கையாகும். வேறொரு விடயத்தில் இருந்து தகவல்களை சேகரிப்பது மற்றும் இணையத்தளங்களின் உதவியோடு செயல்படுவதன் காரணமாக மேற்குறிப்பிட்ட தவறான நடவடிக்கைகள் தங்குதடையின்றி இடம்பெறுகின்றன. இலங்கையில் பல பிராந்திய செய்தியாளர்கள் இதுபோன்ற செய்தி திருடும் செயலை போட்டித்தன்மை காரணமாக மேற்கொள்கின்றனர்.

செய்தித்தகவல்கள் திருடல் என்பது நேர்மையற்றது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட. யு எஸ் ஏ ருடே, லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் மற்றும் நியூயோர்க் டைம்ஸ் போன்ற பத்திரிகைகளின் செய்தியாளர்கள் செய்திகள் மற்றும் முக்கிய சொற் பிரயோகங்களை வேறு தகவல்களிலிருந்து திருடியமைக்காக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் செய்தியாளர்களின் தகவல்களில் கச்சிதமற்ற தன்மையும் காணப்படுகின்றது.

புலனாய்வுச் செய்தியாளர்கள் வேறு செய்தி மூலங்களிலிருந்து தகவல் களைப் பெற முனையும் போது அவை சரியானவைதானா என்பதை உறுதிப்படுத்தவேண்டும். அப்படி முடியாவிட்டால் அத்தகவல்களை அவர்கள் பயன்படுத்தலாகாது. ஊடகத்துறையின் அடிப்படைத்தன்மை யாதெனில் ஊடகவியலாளர்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கினாலும் தமது சுயமுயற்சியிலேயே தங்கியிருக்கவேண்டும். தகவல்கள் மற்றும் கூற்றுக்களை பெறும் அவசியம் ஏற்பட்டால் அவை எங்கிருந்து பெறப்பட்டன என்று குறிப்பிடத் தவறக்கூடாது. இவ்விடயத்தில் புலனாய்வுச்செய்தியாளர் மிக அவதானமாக இருக்கவேண்டும். இந்நிலையில் தவறுகள் ஏற்பட்டால் வாசகரோ அல்லது நேயரோ அத்தவறுக்கு குறித்த செய்தியாளர் பொறுப்பல்ல என்று உணர்ந்துகொள்வர்.

சில ஊடகவியலாளர்கள் திருடுவதுமட்டுமல்லாமல் அதைவிட கீழ்த்தரமாக உண்மைத்தகவல்களையும், கூற்றுக்களையும் திரிபுப்படுத்தவோராகவும் இருக்கின்றனர். முக்கிய உதாரணமாக த நியு ரிபப்லிக் என்ற மிகவும் மதிக்கத்தக்க அமெரிக்க சஞ்சிகையொன்றின் செய்தியாளர் ஸ்டீபன்கிளாஸ் பணி நீக்கம் செய்யப்பட்டதைக் குறிப்பிடமுடியும். பல வருடங்களாக அவரால் எழுதப்பட்ட 27 கட்டுரைகளில் திரிபுப்படுத்தப்பட்ட தகவல்கள் இருந்ததை

அவரது ஆசிரியர் கண்டறிந்தமையே இதற்குக் காரணமாகும். இச்சம்பவம் குறித்த சஞ்சிகையினதும், அதன் பணியாளர் மீதான நம்பகத்தன்மையை மிகவும் பாதித்துவிட்டது.

ஒரு செய்தியைத் தயாரிப்பதற்காக தவறான வழிகளில் தகவல்களைச் சேகரிப்பதும், உண்மைக்குப் புறம்பாக செய்திகளை தருவதும் அடிப்படைத்தன்மையற்ற ஊடகப்பணியாகும். மக்கள் நலன்கருதிய செய்திச்சேகரிப்பே ஊடகத்துறையாகும். திரிபுபடுத்துவதென்பது கட்டுக்கதையாக மாத்திரமல்ல உண்மைத்தகவல்களை மாற்றியமைத்தும் விடுவதாக அமைந்துவிடுகிறது. அதிகாரி ஒருவர் தனது நண்பருக்கு ஒப்பந்தமொன்றை தேர்தலுக்கு முன்பாக வழங்கினார் என செய்தி தரப்படுகிறது. ஆனால் உண்மை என்னவெனில் தேர்தலுக்குப்பின்னரே அவர் குறித்த ஒப்பந்தத்தை வழங்கினார் என்பதே. புலனாய்வுச் செய்தியாளர்கள் கட்டுக்கதைகளையோ அல்லது திரிபுபடுத்தப்பட்ட தகவல்களையோ ஒருபோதும் வழங்க முன்வரமாட்டார்கள்.

## மறைமுக ஊடகத்துறை

ஊழல் மற்றும் தவறான நடவடிக்கைகளைக் கண்டறிய மறைமுகமாக இயங்குவது புலனாய்வுச் செயத்தித்திரட்டலில் சர்ச்சைக்குரியதாக இருக்கின்றது. மறைமுக ஊடகவியலாளர்கள் மதிக்கப்பட்டுமிருந்தனர். 1880 ஆம் ஆண்டு நியுயோர்க் நகரைச் சேர்ந்த நெல்லிபிளை என்பவர் தன்னை ஒரு சித்தப்பிரமை பிடித்தவர் போல பாசாங்கு செய்து அந்நகரின் மிகப்பெரிய மனநோய் மருத்துவமனையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பலதரப்பட்ட முறைகேடுகளையும் கண்டறிந்து எழுத முன்வந்திருந்தார். தென்னாசியாவில் தெஹெல்கா என்ற புதுடில்லியை மையமாகக் கொண்ட ஊடக இணையத்தளம் நடத்திய புலனாய்வின் மூலம் மறைமுக ஊடகவியலாளர்கள் பிரபலமானார்கள்.

கிரிக்கெட் பந்தய நிர்ணயத்துக்காக கிரிக்கெட் வீரர்களுக்கு லஞ்சம் வழங்கப்பட்டமை, வீடியோ கமெராக்கள் மூலம் பதிவு செய்யப்பட்டிருந்தது. இரண்டாவது நடவடிக்கையில் இரு தெஹெல்கா செய்தியாளர்கள் அதிநவீன கமெராக்களுடன் ஒரு சித்தரிக்கப்பட்ட பாதுகாப்பு நிறுவனமொன்றின் பிரதிநிதிகள் போல பாசாங்கு செய்திருந்தனர்.

இவர்கள் ஒரு பாதுகாப்பு நிறுவனமொன்றின் பிரநிதிகள்போல் நடித்து பாரதிய ஜனதா கட்சித்தலைவர் பங்காரு லக்ஷ்மன் மற்றும் இந்திய இராணுவத்தில் ஒரு சிரேஷ்ட அதிகாரியான ஜெயா ஜெய்ட்லி மற்றும் சமதாகட்சி பொதுச்செயலாளரும், பாதுகாப்பமைச்சருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோருக்கு லஞ்சம் கொடுக்க முன்வந்தனர். அவ்விரு செய்தியாளர்களும் பல்வேறு அரச அதிகாரிகள், அன்றைய பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர் லஞ்சம் வாங்குவதையும் விபச்சாரிகளின் சேவையைக் கேட்பதையும் தமது கமெராக்களில் பதிவு செய்திருந்தனர். இந்த மறைமுக நடவடிக்கை பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸை இராஜினாமா செய்யவைத்தது. அத்துடன் ஏனைய அதிகாரிகளை பதவி நீக்கஞ் செய்யவைத்ததோடு அவர்கள் மீது குற்றவியல் விசாரணைகளையும் மேற்கொள்ளத் தூண்டியிருந்தது.

இதன்மூலம் தெஹெல்கா இணையத்தளத்தை, நாளொன்றுக்கு 30 மில்லியன் பேர் அணுகியிருந்தனர். அத்துடன் இணையத்தள ஸ்தாபகர்களான தருண் தெஜ்பால், அனிருத்தா பஹல் ஆகியோர் ஊடகத்துறை நாயகர்களாகவும் பிரபலமடைந்தனர்.

பஹல் www.corbrapost.com என்ற இணையத்தளத்தை ஆரம்பித்து தனது மறைமுக செய்திப் பணியைத் தொடர்ந்தார். அத்துடன் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் லோக்சபாவில் கேள்வி கேட்பதற்காக லஞ்சம் பெற்றதையும் படமாக்கி அதுபற்றி அறியத்தந்திருந்தார். இதனால் அவர்கள் அனைவரும் பதவியிலிருந்து விலக நேரிட்டது. இத்தகைய மறைமுகப் புலனாய்வுப்பணி நன்கு பயனளித்தது. ஆயினும் இப்பணியைப் பொறுத்தவரை இருளான மறுபக்கமொன்றுமிருக்கிறது. இம்மறைமுகப்பணியில் ஈடுபடுவோருக்கும் வெளியிடும் நிறுவனத்துக்கும் பாதிப்புக்கள் ஏற்படும் சாத்தியம் உண்டு.

அமெரிக்காவில் எ.பி.ஸி தொலைக்காட்சி சேவை அந்தரங்கமாக கமெராக்களைப் பயன்படுத்தி சூப்பர் மார்க்கட் ஒன்றினுள் காலாவதியான, சுகாதாரக்கேடான உணவு வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமையை பற்றி காண்பித்திருந்தது. அது தொடர்பான வழக்கில் பிரஸ்தாப சூப்பர் மார்க்கெட் பெருமளவு பணத்தை நஷ்ட ஈடாகப்பெற்றுக் கொண்டதுடன் அதன் ஊழியர்களும் ஊழல் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். இம்மறைமுக நடவடிக்கையில் செய்தியாளர்கள் நடத்திய ஆள்மாறாட்டமே அவர்களுக்குத் தோல்வி யைத் தந்தது.

இதேபோல் தெஹெல்காவும் அதனுடைய தகவலொன்று தொடர்பில் நீதிமன்ற விசாரணையை எதிர்கொண்டது. பத்திரிகையாளரான பஹல் கைதானார். பின்னர் பிணையில் விடுதலையானார். இந்த இணையத்தளத்துக்கு நிதிப்பின்னணியை வழங்கியோரும் வருமானவரி செலுத்தாமையால் பிரச்சினைக்குள்ளாகினர். இருவருடங்கள் தெஹெல்கா மூடப்பட்டு பின்னர் ஒர் அச்சு சஞ்சிகையாக அது வெளிவந்தது. இதுபோன்ற சட்ட பொருளாதார அழுத்தங்கள் பிரச்சினையைக்கிளப்பி ஊடகவியலாளர்களின் ஆர்வத்துக்கும் சவால் விடுக்கின்றன.

**PRO**

"My ends more than justify the means."

--Aniruddha Bahal, Editor, Cobrapost.com, and prominent "sting" journalist.

**AGAINST**

"I don't think reporters should misrepresent themselves. Period."

--Ben Bradleee, former Executive Editor, The Washington Post

எனவே தொழில் ரீதியாகவும் ஒழுக்க விதிமுறைகள் தொடர்பாகவும் மறைமுக ஊடக நடவடிக்கைகள் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றன. உண்மையைக் கண்டறிய மறைமுகமாக ஊடகவியலாளர் கள் மாறு வேடமிட்டு இயங்குவது நம்பகத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதனால் நாளடைவில் ஒரு தோற்றுப்போகும் அணுகுமுறையாகவே பல ஊடகவியலாளர்கள் இதனை கருதுகின்றனர்.

இதேசமயம் ஒருவருடைய தனிப்பட்ட மற்றும் பிரத்தியேக வாழ்க்கை தொடர்பிலும் இதுபோன்ற மறைமுக ஊடகப்பணி சர்ச்சையைக்கிளப்புகிறது.

இதேசமயம் பல சோம்பேறித்தனமான பத்திரிகையாளர்கள் மறைமுக ஊடகப்பணியை மேற்கொள்கின்றனர்.

இதன்மூலம் முன்பக்கச் செய்திகளை தம்மால் கொண்டுவர முடியுமெனக் கருதுகின்றனர். எனவே கடுமையாக உழைக்கும் புலனாய்வுச் செய்தி நடவடிக்கையைவிட மறைமுக ஊடகப்பணி குறுக்குவழிகளைக் கொண்டதாக இருக்கின்றது. மறைமுக ஊடகப்பணி முற்றிலும் ஊடக நடவடிக்கைகள் தொடர்பாக நிராகரிக்கப்படவில்லை. ஆயினும் அதனை ஒரு குறித்த கட்டுப்பாட்டில் வைப்பதுவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

எப்போது மறைமுக ஊடகப்பணியை மேற்கொள்ளவேண்டுமென்பதையும், வாசகர்களுக்கும், நேயர்களுக்கும் அதனைத் தெரிவிக்க வேண்டியது பற்றியும் இந்நூல் மூன்று விடயங்களை கூறி நிற்கின்றது.

அவையாவன:

- மக்கள் நலன்கருதி செய்தியொன்றை பெற்றுக்கொள்வதற்கு வேறுமார்க்கமில்லாத நிலையிலேயே மறைமுக ஊடகப்பணியை மேற்கொள்ளவேண்டும்.

- மறைமுக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் குறித்த செய்தியில் தெரிவிக்கவேண்டும்.

- வாசகர்களுக்கும், நேயர்களுக்கும் மறைமுக நடவடிக்கை ஏன் அவசியம் என்பதையும் விளக்கப்படுத்தவேண்டும்.

## பாகம் இரண்டு

# புலனாய்வுச் செய்திகளை எழுதுதல் அல்லது உருவாக்குதல்

## மூன்றாம் அத்தியாயம்

# புலனாய்வுச் செய்திகள் பற்றிய சில யோசனைகள்

2006 ஆம் ஆண்டு அசோகா சேனாரத்ன என்ற அநுராதபுரத்தைச் சேர்ந்த பிராந்திய செய்தியாளர், கிராம மக்களுக்கு கறவைப் பசுக்களை அரசாங்கம் வழங்குவதில் தவறான நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளமையை அவதானித்தார். இக்கறவைப் பசுக்கள் பலவீனமானவையாகவும், வயதானதாகவும் நிறைகுறை வானவையாகவும் இருந்ததோடு பால் வழங்க முடியாதவையாகவும் காணப் பட்டன. சில கறவைப்பசுக்கள் அவை வழங்கப்பட்ட சில நாட்களில் இறந்திருந்தன.

இது குறித்து சில மோசடிகளைக் கண்டு எழுதுவதைவிட சேனாரத்ன ஆழமாக இவ்விடயம் தொடர்பாக ஆராயமுற்பட்டார். இதேபோல அரசாங்கம் ஆடுகளை வழங்கியபோதும் இடம்பெற்றிருந்ததை அறிந்திருந்தார். கிராமமக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டது போல திடகாத்திரமான கால்நடைகளுக்குப் பதிலாக நோய்வாய்ப்பட்ட கால்நடைகள் வழங்கப்பட்டிருந்தன. இது ஒரு பெரும் பிரச்சினை என்பதையும், அரசாங்கம் இதுபற்றி அறிந்திருந்ததா என்பது பற்றியும் அவர் யோசிக்கலானார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அலுவலகத்தைச் சேர்ந்த தகவல் மூலமொன்றினூடாக அவர் ஆய்வை மேற்கொண்டார். இப்பிரச்சினை விரிவாக ஆவணப்படுத்தப்பட்டு நாடளாவிய ரீதியில் இதுபற்றி ஆராயப்பட்டிருந்தது.

அந்த ஆவண அறிக்கையை பிரஸ்தாப செய்தியாளர் பெற்றுக்கொண்டு தேசிய சிங்கள நாளேடான தினமினவில் அதுபற்றி எழுதியிருந்தார். இதன் விளைவாக அநுராதபுரப் பிராந்திய கால்நடை திணைக்கள இயக்குநர் அவரது பதவியிலிருந்தும் நீக்கப்பட்டார்.

புலனாய்வுச் செய்தியாளர்கள் எவ்வாறு புதிய தகவல்களோடு இயங்குகிறார்களா? தமது சுற்றாடல் பற்றிய குறைபாடுகளை அவர்கள் மிக அவதானமாக அவதானிக்கிறார்கள். அத்துடன் தமது பொது அறிவைப் பயன்படுத்துவதோடு விடயங்களை மிக நிதானமாக செவிமடுத்துச் செயலாற்றுகிறார்கள் என்பதற்கு சேனரத்னவின் கதை நல்ல உதாரணமாகும்.

- **அவதானங்கள் தவிர வேறுவகையிலான புலனாய்வுச் செய்தி மூலங்களும் இருக்கின்றன:** பிரபல அமெரிக்க நகைச்சுவையாளரான வூடி அலென் 90 சதவீதமான வெற்றி என்பது வெறும் பகட்டுத்தனமே என்கிறார். புலனாய்வுச் செய்தித்தகவல்களைப் பெறுவதிலும் கூட இது ஏற்புடையதே. வழக்கமாக பணிகளில் ஈடுபடும் செய்தியாளர்கள் தாம் பத்திரிகைகளில்

பிரசுரிப்பதைவிட ஏராளமானவற்றை அவதானிக்கிறார்கள். அல்லது செவிமடுக்கிறார்கள். இவ்வகையில் அன்றாட செய்தி திரட்டும்பணி என்பது புலனாய்வுச் செய்தித்திரட்டலை பொறுத்தவரை சிறந்த வாய்ப்புகளை வழங்குவதாக இருக்கின்றது.

- **செய்திகளைப் பின்தொடர்தல்:** செய்திகளை பின்தொடர்தல் என்பது புலனாய்வுச் செய்தித் திரட்டலுக்கு ஒரு பாலமிடுவதைப் போலிருக்கின்றது. ஒரு புதிய வீதி ஆறு மாதங்களுக்கு பின்னர் மீளமைக்கப்படும்போது பல கேள்விகள் எழுகின்றன. வேறு எவ்வளவு தவறான வீதிகள் இருக்கின்றன? இவற்றை அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் என்ன? இவற்றைப் பாவிக்க அனுமதித்தது யார்? யார் இப்பணியை ஏற்றது?

- **துப்புத்தருவோர்:** "விமர்சகர்கள்" இவர்கள் எப்போதும் புறக்கணிக்கப் படுகிறார்கள். அதிகாரிகள் - தவறிழைப்பதால் அடுத்த மட்டத்தில் உள்ள வர்கள் குழம்பி போயிருக்கிறார்கள். புலனாய்வுச் செய்தியாளர்களைப் பொறுத்தவரை இந்த இருதரப்பினரும் நல்ல செய்தி மூலங்களாகும்.

- **கள ஆய்வு:** அதிகாரிகள் வாக்குறுதிகளை அல்லது அறிக்கைகளை விடுக்கும்போது, அவை பற்றி ஏனைய ஆவணங்கள், தகவல்களோடு புலனாய்வு செய்தியாளர் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அப்போது முரண்பாடான விடயங்கள் மேலெழும்போது, அல்லது குறிப்பிட்ட அதிகாரி தெரிவித்தவை தவறென அறியும் பட்சத்தில் நாளாந்த செய்திகள் வெளிவருவதற்கான வழிபிறக்கிறது. பின்னர் அதுவே சிறந்த புலனாய்வுச் செய்திகளுக்கும் வழிகாட்டுவதாக அமைகிறது.

- **தனிப்பட்ட அனுபவம்:** செய்தியாளர்களும் மக்களேயாவர். அவர்களும் வரிகட்டுகின்றனர். கம்பனிகளுடன் தொடர்பு கொள்கின்றனர். அரச சேவைகளையும் பயன்படுத்துகின்றனர். ஓர் அதிகாரியுடன் செய்தியாளர் ஒருவர் வைத்துள்ள தொடர்பு நல்லதோர் புலனாய்வுச் செய்திக்கு வழிவகுப்பதாக இருக்கின்றது. தன்னைச்சுற்றி நடக்கும் மாற்றங்கள் பற்றி ஒரு செய்தியாளன் அறியவேண்டியவனாகிறான். அத்துடன் "ஏன்" என்ற கேள்வியையும் கேட்க வேண்டியவனாகிறான்.

- **கூடுமிடங்கள்:** பொதுவான சிந்தனைகளைக் கருத்துக்களைக் கொண்டுள்ளவர்கள் ஒன்று கூடிப் பேசுகிறார்கள். பாராளுமன்ற கேட்போர் கூடம் இதற்கு நல்ல உதாரணமாகும். இங்கு பேசப்படும் விடயங்கள் பல புலனாய்வுச் செய்திக்கான நல்ல வாய்ப்புக்களைத் தருகின்றது.

- **உள்ளூர் கூட்டங்கள்:** பகிரங்கக் கூட்டங்களில் கலந்துரையாடப்ப டுபவையிலிருந்து புலனாய்வுச்செய்திக்கான பல தகவல்கள் கிடைக்கின்றன. பிராந்தியச் செய்தியாளர்கள் பல்வேறுபட்ட கூட்டங்களை தமக்குரிய தகவல்களைப் பெற நாட முடியும்.

அவையாவன:
மாகாணசபை, நகரசபை, பிரதேச சபைக்கூட்டங்கள்.
உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனக்கூட்டங்கள்.
மாவட்ட ரீதியாக இருபாலாரையும் மையமாகக் கொண்ட வன்முறை தவிர்ப்புக் கமிட்டிக் கூட்டங்கள்.
மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டங்கள் போன்றன.

## புலனாய்வுச் செய்திக்கான பொதுவிடயங்கள்

புலனாய்வுச் செய்தித்திரட்டல் எப்போதும் பொது நிதியை தவறாகக் கையாளுவது பற்றிய தகவல்களைச் சேகரிப்பதாக இருப்பதால், அரசாங்க நிகழ்ச்சித்திட்டங்கள் தகவல்களைப் பெறுவதற்கான பெருமளவு வாய்ப்புக்களை தருபனவாக இருக்கின்றன. செய்தியாளர் சேனரத்னவின் அனுபவம் ஒரு நல்ல முன்னுதாரணமாகும். அத்துடன் மாகாணங்களில் அபிவிருத்தி என்ற ரீதியில் இடம்பெறும் மோசடிகள், தவறான திட்டங்கள் என்பவற்றையும் புலனாய்வுச் செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

சில வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் போது சிறந்த புலனாய்வுச் செய்திகளுக்கான களம் கிடைக்கின்றது. அவையாவன.:

- **பொது வேலைத்திட்டங்கள்:** வீதி, வாய்க்கால், கழிவுநீர் போக்கிகளுக்காக வழங்கப்படும் ஒப்பந்தங்கள் பொதுவாகவே ஊழல் மோசடிகள் நிறைந்ததாக உள்ளன.

- **சுகாதாரத்துறை:** நோய் பரவுதல், நல்ல குடிநீர்வசதியின்மை, பணியாட்கள் குறைவான உள்ளூர் வைத்தியசாலைகள் என்பவை புலனாய்வுச் செய்திமுயற்சிகளுக்கு நல்ல வாய்ப்பினை அளிக்கின்றன.

- **தேர்தல்கள்:** வாக்குமோசடி, ஆள்மாறாட்டம், அச்சுறுத்தல், தேர்தல் வன்முறை என்பவையும் புலனாய்வுச் செய்திகளுக்கு வாய்ப்புக்களாகும்.

- **கல்வி:** பாடசாலை நேரங்களில் பணிபுரியாத ஆசிரியர்கள், பாடசாலை அனுமதிக்காக பெற்றோரிடம் லஞ்சம் பெறுதல், பாடசாலை நேரம் தவிர வேறு நேரங்களில் தனியார் கல்வியை ஊக்குவித்து பயனடையும் ஆசிரியர்கள் போன்றவை பற்றியும் புலனாய்வுச் செய்தியாளர்கள் கவனஞ்செலுத்தமுடியும்.

- **அரச செயற்பாடுகள்:** சுருக்கமாகக் கூறப்போனால், பொதுச்சேவை வாக்குறுதிகள், முதலீட்டு ஊக்குவிப்பு, மக்களுக்கான உணவு மற்றும் பணக்கொடுப்பனவுகள் போன்றவை முன்னர் குறிப்பிடப்பட்ட கோட்பாடுகள், வாக்குறுதிகள், செயற்பாடுகள், புரிந்துணர்தல் ஆகிய நான்கு அம்சங்களின் அடிப்படையில் புலனாய்வுச் செய்தித்திரட்டலில் ஆராயப்படமுடியும்.

## பிரச்சினை: ஊழல்

அனைத்து புலனாய்வு செய்தித்திரட்டலும் பொதுத் தன்மையை மையமாகக் கொண்டவை. ஊழலை வெளிப்படுத்தல் என்ற புலனாய்வு செய்தியாளர்கள் ஊழல் பற்றிய சரியான விளக்கத்தை பெற்றிருக்கவேண்டும். பொதுத் தீர்மானங்களை கொச்சைப்படுத்தும் காரணிகள், வரிப்பண விரயங்கள், திடீர் அபிவிருத்தித்திட்டங்கள், உயிராபத்துக்களை ஏற்படுத்தும் திட்டங்கள், பொதுநலனைப் பாதித்து ஜனநாயகத்துக்கு ஊறுவிளைவிக்கும் காரணிகள் போன்றன பற்றிய தெளிவான புரிந்துணர்வைக் கொண்டிருக்க வேண்டும்.

பொதுவாகக் குறிப்பிடுவதானால் ஊழல் என்பது ஒருவர் சுயநலம் கருதியோ அல்லது தனது குடும்ப, மற்றும் நண்பர்கள் நலன் கருதியோ தனது பதவியையோ அல்லது தனது செயற்பாடுகளையோ துஷ்பிரயோகம் செய்வதையே குறிக்கும். இவ்வாறானவர்கள் பொதுநலனைக் கருத்திற்கொள்ளாமல் ஊழல் அதிகாரிகள், பொதுமக்களின் பணத்தை மோசடி செய்தல், மக்களை வஞ்சித்தல், அல்லது அரச இயந்திரத்தை தமது சொந்த நலன்களுக்காகப் பயன்படுத்துவோராக இருக்கின்றனர்.

பல்வேறு முரண்படுநிலை:

இது என்னவென்றால் ஓர் அதிகாரி தனிப்பட்ட நலன் ஒன்றைக் கொண்டிருக்கும் போது நியாயமாக கடமையைச் செய்வது தொடர்பாகவும், சமத்துவமாகவும், மக்கள் நலன்கருதியதாகவும் ஆக்கபூர்வமானதாக செயல்படுவது சம்பந்தமாகவும் முரண்பட்ட நிலையை எதிர்நோக்குகின்றார். உதாரணமாக ஒரு பொதுவேலை அதிகாரி ஒரு சமூகத்துக்காகப் பாலமொன்றை அமைப்பதற்குப் பதிலாக ஊழல்தனத்தோடு தனது வீட்டுக்கு பாதையமைக்கிறார். அல்லது அதிகாரி ஒருவர் வறியவர்களுக்கு அரிசி வாங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை தனது தேவைக்காக எடுத்துக் கொள்கிறார். இல்லையேல் வறியவர்களுக்கான அரிசியை ஒரு தனியார் வர்த்தகருக்கு வழங்கி அவ்வர்த்தகரை பத்துமடங்கு கறுப்புச் சந்தையில் லாபமடையவைத்து, அதன் மூலமாக தானும் பயனடைகிறார். இவ்வாறு ஊழலில் பல்வேறு வடிவங்கள் உண்டு.

பெருமளவு ஆட்சியதிகார விடயங்கள் சம்பந்தப்பட்ட நாடொன்றில் ஊழல் இலகுவாக வேரூன்றிவிடும். ஊழலை சாதகமாக நடக்கும்போக்கு அல்லது வளைந்து கொடுக்கும் நிலையாக ஒரு கலாசாரமாக பார்க்கும் சமூகங்களும் இருக்கின்றன. உதாரணமாகப் பார்த்தால், ஒரு பொதுவேலை அதிகாரி நன்கு தராதரம்மிக்கவர்களுக்கு ஒரு வேலைத்திட்டத்தை வழங்காது தனது குடும்பத்தினால் நடத்தப்படும் கம்பனிக்கு அந்த வேலைத்திட்டத்தை வழங்குகிறார். இவ்வாறு வழங்குவதன் மூலம் தனது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் அனைத்தையும் செய்து முடிக்கமுடியுமென அந்த அதிகாரி வாதிடலாம்.

மக்களில் சிலர் அரச ஊழியர்கள் மீது அனுதாபப்படுவதுமுண்டு. குறிப்பாக பொலிஸார் மிகக்குறைவான வேதனத்துடன் பணிபுரிவதால் தமது வாழ்க்கைச் சுமைகளைக் குறைத்துக்கொள்ள மட்டரகமான நடவடிக்கைகளில் இறங்குகின்றனர். இவ்வாறு அனுதாபப்பட்டு சிந்திப்பது தவறானதாகும். இது போன்ற நடவடிக்கைகள் ஜனநாயக அமைப்பொன்றிலே மிகத்தவறானதாக இருப்பதோடு நடுத்தர மற்றும் வசதிபடைத்தோருக்காக சேவையாற்றும் ஒரு

நடவடிக்கையாகவே லஞ்சம், ஊழலை கருதமுடியும். இந்த நடவடிக்கை வறியவர்களுக்கெதிரான ஒரு குற்றச்செயலாக அமைவதோடு, லஞ்சம் கொடுக்கவேண்டிய நிலை காரணமாக தமது பிள்ளைகளுக்கு உணவு, உடை, கல்வி வழங்க முடியாதிருப்பதோடு மின்சாரம், குடிநீர், பொலிஸ் பாதுகாப்பு, அரச உணவு அனைத்துக்குமே லஞ்சம் வழங்குவது என்ற நிலையும் ஏற்பட்டுவிடுகிறது.

ஊழல் வசதிபடைத்தோருக்கும் வறியவர்களுக்குமிடையிலான இடைவெளியை அதிகரித்து வறுமையையும் அதிகரிக்கச் செய்கிறது. அதுமட்டுமல்லாமல் பொதுச்சேவைகளின் முக்கியத்துவத்தை மழுங்கடித்து மனித அபிவிருத்தி பாதையில் தடைகளையும் ஏற்படுத்துகிறது.

## ஊழலின் வகைகள்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் போதைவஸ்து மற்றும் குற்றவியல் பிரிவினால் ஊழல் தொடர்பாக வரையறை செய்யப்பட்ட அம்சங்கள் வருமாறு:-

- **பாரிய ஊழல்:** ஆட்சியதிகார நிலைகளில் தேசிய அரசாங்க மட்டங்களில் இடம்பெறுவதே பாரிய ஊழலாகும். நல்லாட்சியில் நம்பிக்கையற்ற தன்மையை ஏற்படுத்துவதோடு, சட்டம் ஒழுங்கு, பொருளாதார உறுதிப்பாட்டையும் இவ் ஊழல் ஆட்டங்காண வைக்கிறது.

- **சிறயளவிலான ஊழல்:** சிறியளவில் பணம் வழங்குதலையே இவ்ஊழல் குறிக்கும். அத்துடன் குடும்பத்தினர், நண்பர்களுக்கு சலுகைகளை வழங்கி சிறிய தொழில்களில் அமர்த்துவதும் இவ் ஊழலில் சம்பந்தப்பட்டதாக இருக்கும்.

- **செயலூக்க/செயலற்ற ஊழல்:** செயலூக்க ஊழல் என்பது லஞ்சத்தை ஒருவருக்கு வழங்குவதைக் குறிப்பதாகும். செயலற்ற ஊழல் என்பது லஞ்சத்தை பெற்றுக்கொள்வதைக் குறிப்பதாக இருக்கின்றது.

- **அரசியல் ஊழல்:** கடமைகளையும் அதிகாரங்களையும் மூலவளங்களையும் பொதுச் சொத்துக்களையும் அரச அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் தமது சொந்த நலன்களுக்காக துஷ்பிரயோகம் செய்வதையே இது குறிக்கும். பலாத்காரத்தை பிரயோகிப்பதாகவும் லஞ்சம் கேட்பதாகவும் அல்லது லஞ்சம் கொடுப்பதாகவும் இது அமைந்திருக்க முடியும்.

- **நிறுவன ஊழல்:** உள்ளிருந்தோ அல்லது வெளியே இருந்தோ நிறுவனத்தை சார்ந்தோர் புரியும் அதிகார துஷ்பிரயோகங்களையே இது குறிக்கின்றது.

## ஊழல் நடவடிக்கைகள்

- **லஞ்சம்:** ஒரு பயன்கருதி நியாயமற்ற முறையில் ஒரு விடயம் சம்பந்தமாக, அல்லது தீர்மானம் சம்பந்தமாக முறைகேடாக செல்வாக்குச் செலுத்துதல்.

- **வஞ்சகம்:** நம்பகத்தன்மையோடு ஒருவர் பாதுகாப்பின் பொருட்டு வழங்கியிருந்த பணம், சொத்து என்பவற்றை தனது பதவி, அந்தஸ்து மூலமாக வஞ்சகமாக அபகரித்தல்.

- **மோசடி:** போலியான முறையில் சொல்லாலும், செயலாலும் செயல்பட்டு தந்திரோபாயங்கள் மூலமாக அநீதியாகவும், நேர்மையற்ற முறையிலும் பயன்பாடுகளைப் பெறுவது.

- **கப்பம்:** பயமுறுத்தியும், பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அந்தரங்கவிடயங்களை வெளிப்படுத்துவதாக மிரட்டியும் பணத்தையோ அல்லது சேவைகளையோ பெறுவது.

- **சார்பாக நடந்துகொள்ளல்:** ஒரு தனிநபருக்கோ அல்லது குழுவுக்கோ பதவி, அதிகாரங்களைப் பயன்படுத்தி விசேட சலுகைகளை வழங்குதல்.

- **சொந்த நலன் பேணல்:** குடும்பத்தவருக்கு சலுகைகளை வழங்குவதில் செல்வாக்குச் செலுத்துதல்.

- **முறையற்ற நியமனங்கள்:** தகைமை, தராதரம் என்பவற்றை கருத்தில் கொள்ளாது நண்பர்கள், நலன் விரும்பிகளுக்கு முறையற்ற நியமனங்களை வழங்குதல்.

- **செல்வாக்கைப் பிரயோகித்தல்:** அரசாங்க மற்றும் அரசியல் தனியார் துறைகளைச் சேர்ந்தோர் தமது உத்தியோகபூர்வ செல்வாக்கை (இச்செல்வாக்கு ஏனையோருக்குக் கிடைப்பதில்லை) சொந்தநலன்களுக்காக பிரயோகித்தல்.

- **உள்ளார்ந்த தொடர்பாடல்:** தாம் சார்ந்த நிறுவனத்தின் அந்தரங்க தகவல்களை உள்ளேயிருந்தவாறே தமது லாபம் கருதி வெளியே விற்றுவிடல்.

- **பிரத்தியேகத்தன்மையின் துஷ்பிரயோகம்:** ஒருவருக்கு வழங்கப்பட்ட அவரது அந்தஸ்த்துக்குரிய பிரத்தியேக அதிகாரத்தை சொந்த நலனுக்காகப் பயன்படுத்துதல்.

## இறுதி வார்த்தை: சிறியதாகச் சிந்தியுங்கள்

பிராந்தியச் செய்தியாளர்கள் புலனாய்வுச் செய்தித் துறையிலிருந்து தம்மை விலக்கி வைத்திருக்கிறார்கள். ஏனெனில் அதனை ஒரு பெரிய காரியம் என்று எண்ணுகிறார்கள். புலனாய்வுச் செய்திகள் ஜனாதிபதி அல்லது அவரது குடும்பம், அவரது அரசியல் சகாக்கள், உயர்மட்ட அரச அதிகாரிகள் பற்றியதாகவே இருக்க வேண்டுமென அவர்கள் கருதுகிறார்கள். எல்லோரும் அமெரிக்க வாஷிங்டன் போஸ்ட் செய்தியாளர்களான பொப்வூட்வார்ட் அல்லது கார்ல் பேர்ன்ஸ்டீன் போல இருக்கமுடியாது. இந்த இரு செய்தியாளர்களும் 1970 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வார்ட்டர் கேட் ஊழலை அறியத்தந்தவர்கள். இதன்மூலம் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்ஸன் தனது பதவியை இராஜினாமாச் செய்ய நேரிட்டது.

இலங்கைச் செய்தியாளர்களிடம் தமது பணிகள் குறித்து நம்பிக்கையில்லாதிருப்பதோடு, உயர்மட்டத்தில் புலனாய்வு செய்வதற்கான வளப்பற்றாக் குறை, செயல்திறன் இல்லாதிருப்பதுமட்டுமல்லாமல் பலமிக்கவர்களை அணுகுவது தொடர்பிலும் அச்சமுடையோராக இருக்கின்றனர். அதனால் தமக்கேற்படப்போகும் விளைவுகள் பற்றியும் சிந்திக்கின்றனர். இப்புத்தகத்தில் பாதுகாப்புப் பற்றிய அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல், செய்தியாளர்கள் பாரதூரமான செய்திகளை அணுகும்போது, அச்சுறுத்தப்படுவது, தாக்கப்படுவது, காணாமல்போவது, சிறைவைக்கப்படுவது மட்டுமல்லாது கொல்லப்படும் அபாயத்துக்குமுள்ளாகியுள்ளனர்.

இது தவிர, கிராமப்புற வாசகர்களும் நேயர்களும் இதுவிடயமாக அக்கறைக் கொண்டவர்களாக இல்லை. அவர்கள் தமது வாழ்வாதார விடயங் களில் மட்டமே அக்கறை செலுத்துகிறார்கள். வீதியமைப்பு, பாலங்கள், கல்விக்கூடங்கள் நிர்மாணித்தல், உணவு விநியோகம் போன்றவற்றில் இடம்பெறும் ஊழல் களினாலேயே அவர்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் அவர்கள் உணர்வதில்லை. இதுபோன்ற ஊழல்கள் இலகுவாகவே அறியப்பட்டு ஆவணப்படுத்தப்படக்கூடியவை என்பது மட்டுமல்லாமல் பெரும் மோசடிகளின் அறிகுறியாகக் கூட இருக்கலாம். இப்பிரச்சினைகள் உரியதொடர்புகளைக் கொண்ட கொழும்பை மையமாக வைத்து செயல்படும் செல்வாக்குப்படைத்த பத்திரிகையாளர்களுடன் இணைந்து மேலதிக விபரங்களைத் திரட்டவும் உதவியளிப்பதாகவுமிருக்கும்.

இந்நிலையில் இலங்கைச் செய்தியாளர்கள் அறியவேண்டியது யாதெனில் சிறிய தகவல்கள் கவர்ச்சிகரமானவை. இச்சிறியளவிலான புலனாய்வுத்தகவல்கள் மூலம் அவர்கள் தமது புலனாய்வுச் செய்தி திரட்டும் திறனை கூர்மைப்படுத்திக் கொள்ளமுடியும். அத்துடன் தாம் சார்ந்த சமூகத்துக்கும் உடன் பலன்கிட்டக்கூடிய சேவையையும் செய்யமுடியும்.

நான்காம் அத்தியாயம்

# செய்திக்கான களம் அமைத்தலும் மெருகூட்டலும்

## பின்னணியமைத்தல்

ஒரு புலனாய்வுச் செய்தி பற்றிய தகவல் கிடைக்கும் பட்சத்தில் செய்தியாளர் ஒருவர் அதுபற்றித் தனது பத்திரிகையாசிரியரை அணுகுவதற்கு முன்பதாக, அத்தகவல் பற்றிய பின்னணி பற்றி விரைவாக அறிய வேண்டும். அப்படி செய்யும் போது மிக அவதானமாகவும் மறைமுகமாகவும் அதனை செய்யவேண்டும். ஆரம்பத்திலேயே சம்பந்தப்பட்டவர்களிடம் கேள்விகள் கேட்பதும் பேட்டிகள் காண முயற்சிப்பதும் கூடாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுதாரித்துக்கொண்டு உரிய ஆவணங்களை அல்லது தவறுகளை மறைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கக்கூடாது.

இதற்குப் பதிலாக செய்தியாளர், இரண்டாம் நிலை தகவல் மூலத்தின் ஊடாக தனது இலக்கை அடையமுடியும். பெரும்பாலான தகவல்களை செய்தியாளர் பதிவு செய்யப்பட்ட உரைகள், ஆய்வுக்கட்டுரைகள், அரசாங்க, நிறுவன அறிக்கைகள் விதிமுறைகள் போன்ற பகிரங்க ஆவணங்கள் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஆரம்ப பின்னணியமைத்தல்:** இலக்கு வைக்கப்பட்ட அதிகாரி அல்லது நிறுவனம் அல்லது முன்னர் வெளியான தகவல்கள் என்பவை பற்றிச் செய்தியாளருக்கு பொதுவான ஒரு உத்தேசத்தை பெறுவதற்கான நேரத்தைப் பெறுவதாக இது அமைந்திருக்கும். இது போன்ற பின்னணியமைக்கும் நடவடிக்கையை அலுவலகத்தில் வேறுபணிகளற்ற ஓய்வு நேரத்தில் மேற்கொள்ள முடியும்.

ஏனைய வழிமுறைகளாவன:

- **பத்திரிகை காப்பகங்கள்:** "சூரியனுக்குக் கீழே எதுவும் புதியதாக இல்லை" என்பது பழமொழியாகும். ஆராயவிருக்கின்ற விடயம் அல்லது அதிகாரி தொடர்பாக ஒரு செய்தி நிறுவனமாயினும் சில விடயங்களையாவது எழுதியிருக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கவே செய்யும். எனவே செய்தியாளர் தனது தகவல் குறித்து ஏற்கனவே அறிக்கையிடப்பட்டும் பின்தொடரப்பட்டிராத விடயங்களை தேடிப்பெறுவதோடு அவற்றை நன்கு அலசி ஆராயவேண்டும்.

- **கம்பியூட்டர் மூலமான தேடல்:** அமெரிக்காவில் லெக்ஸிஸ் - நெக்ஸிஸ் (Lexis-Nexis) என்ற கம்பியூட்டர் நிறுவனம் சட்ட மற்றும் ஆவணக்காப்பக

சேவைகளை வழங்குகின்றது. செய்தியாளர்கள் பல்வேறு காப்பகங்களை தற்போது இணையத்தளங்கள் மூலமாக அணுகமுடியும். 2006 ஆம் ஆண்டில் லெக்ஸிஸ் - நெக்ஸிஸ் நிறுவனம் உலகில் அதிகளவிலான கணணிமயப்படுத்தப்பட்ட சட்ட மற்றும் ஏனைய பொதுவான ஆவணங்களை பதிவு செய்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

- **இலங்கை தேசிய பொதுநூலக சபை:** அணுகப்படுகின்ற நிறுவனமொன்றிடம் உரிய தகவல்களைப் பெறமுடியாதவிடத்து, செய்தியாளர்கள் விரிவான தகவல்களைப் பெறுவதற்கு பற்றி பொது நூலகங்களை அணுகமுடியும்.

- **கூகிள் இணையத்தளம்:** கூகிள் மூலமாக தகவல்களைத் தேடுவது மிகவும் இலகுவான முறையாகும். இதன்மூலம் முதல் இரு அல்லது மூன்று பக்கங்களைப் பார்த்து பின்னணித் தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**ஆழமான பின்னணியைத் தேடுதல்:** தனது செய்தி பற்றி ஆராய்வதற்கான அனுமதி கிடைத்ததும், செய்தியாளர் ஆராயவுள்ள விடயத்தின் பின்னணியை தேடமுற்படுகிறார். தனது தகவல் இலக்குபற்றிய சட்டப்பிரச்சினை, கோட்பாடுகள் மற்றும் அது பற்றிய வழித்தொடர்புகள் என்பவற்றோடு தனது தேடல் குறித்து செய்தியாளர் பரிச்சயமாக முற்படுகிறார். குறுகிய காலப்பகுதியில் தனது பின்னணித்தகவல்களுக்குரிய அலுவலர் அல்லது நிறுவனம் சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்கள், நடைமுறைகள் என்பவை பற்றிச் செய்தியாளர் அறிந்துகொள்கிறார்.

எதற்காக இவ்வளவு நீண்ட தூரம் செல்லவேண்டும்? ஏனெனில், ஆழமான பின்னணி குறித்து ஆராய்தலானது பல நன்மைகளைக்கொண்டுள்ளது. அதன் செயற்பாடுகள் செய்தித்திரட்டலுடன் பல அம்சங்களை இணைத்ததாகக் காணப்படுகின்றது.

- ஒரு பலமான நிலையில் இருந்து செய்தி சேகரிப்பை மேற்கொள்ள செய்தியாளருக்கு வழிவிடுகிறது.
- தனக்கு பொய்யான தகவல்கள் கிடைப்பதை செய்தியாளருக்கு அறிய தருகின்றது.
- ஒரு செய்தியாளர் முட்டாளாக்கப்படுவதைத் தடுக்கின்றது.
- தனக்கு கிடைக்கின்ற குறித்த ஆவணங்கள் முக்கிய விடயங்களைத் தருகின்றன.
- ஊழல்கள் சம்பந்தமாக கண்களை திறக்கவைக்கிறது. அத்துடன் சட்டநியதிகளிலிருந்து விலகிச்செல்லும் போது எச்சரிக்கையையும் விடுக்கின்றது.

## அனுமானம்

ஒரு செய்தியாளர் தனது அவதானங்களை மேற்கொள்ளும்போது, செய்தியொன்று பற்றி அதன் நிர்மாணம் குறித்தும் பின்னணித்தகவல்களோடு வெற்றிடங்களை நிரப்ப தயாராகிறார். இது விடயத்தில் தனக்குரிய தகவலுக்கான தொனிப்பொருளை, எண்ணக்கருவை அல்லது தேடலின் அடிப்படையை அனுமானிக்கின்றார். இதனையே இங்கு அனுமானம் எனக் குறிப்பிடுகின்றோம்.

விஞ்ஞானிகள் முதலில் அனுமானிக்கின்றனர். அதன்பின் கட்டுப்பாடான பரிசோதனைகள் மூலம் உண்மைகளை அறிய முனைகின்றனர். இது போன்றே புலனாய்வுச் செய்தியாளர்களும் அனுமானிக்கின்றனர். உண்மையை அறிய விரிவான முறையில், ஆவணங்களையும், நேர்காணல்களையும் அவதானமாக கையாளுகின்றனர். அனுமானிப்பதற்கான இலகு முறை என்னவெனில் ஏற்கனவே குறிப்பிட்ட 4-p என்ற அணுகுமுறையை பயன்படுத்துவதாகும். இந்த அனுமானம் என்பது செய்தியாளர் யாரை இலக்காக கருதுகிறாரோ அவரின் கோட்பாடு, தன்மை, வாக்குறுதிகள் என்பவையுடன் அவரின் செயற்பாடுகள், ஆவணங்கள் மற்றும் அவருடனான நேர்காணல்கள் என்பனவற்றினூடாக அவரை பரீட்சிக்கின்றார்.

பசுமாடுகள் விடயத்தில் செய்தியாளர் சேனாரத்ன உத்தியோகபூர்வமாக விவரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் இந்த அனுமானத்தை கொண்டிருக்கலாம். அது இவ்வாறான முறையிலும் அமைந்திருக்கமுடியும்.

**அனுமானம்:** பசுமாட்டுத்திட்டம் ஒரு ஆரோக்கியமான 100 கிலோ கிராம் எடையுள்ள பசுவை ஒவ்வொரு கிராமிய குடும்பத்துக்கும் சிறு கடனடிப்படையில் பண்ணைகளை அபிவிருத்தி செய்ய வழங்கப்படுகின்றது. 20 கிலோ கிராம் எடைக்குக்குறையாத, ஆரோக்கியமான ஆடுகளையும் இறைச்சிக்காக விற்பனை செய்வதற்கென வளர்ப்பதற்கும் வழங்கப்படுகிறது.

செய்தியாளர் தனது கவனத்தை செலுத்தினார். குறித்த கால்நடைகளை அவதானித்ததோடு, பண்ணையாளர்களுடனும் உரையாடியிருந்தார். அப்போது தான் அனுமானித்ததை (செயற்பாடு மற்றும் வாக்குறுதி) என்பவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தார். புதிய தகவல்களை அறிந்தபோது தனது அனுமானத்தை அவர் மாற்றிக்கொண்டார். அவர் பிரச்சினை கறவை மாடு சம்பந்தப்பட்டதாகவும் ஆடுகளோடு சம்பந்தப்படவில்லை என அறிந்திருந்தால் கீழ்கண்டவாறு அவர் தனது அனுமானத்தை கொண்டிருக்கமுடியும்.

**பண்பட்ட அனுமானம்:** உறுதியளித்ததுபோல ஆரோக்கியமான ஆடுகளை அரசு வழங்கியிருந்தபோதிலும் கிராமத்தவருக்கு அநுராதபுரத்தில் வழங்கப்பட்ட பெருமளவிலான பசுக்கள் வாக்குறுதியளிக்கப்பட்டதற்கு மாறாக 100 கிலோ கிராமுக்கும் குறைவானவையாக, நோய்வாய்ப்பட்டும், வயதானதாயும் பால் தரமுடியாதவையாகவும் இருந்தன.

அனுமானம் என்ற இந்த அணுகுமுறை ஒரு புதிய அம்சமாக காணப் பட்டாலும், அது அப்படியானதல்ல. பல வருடகாலமாக பிரதான பத்திரிகை கள் தமது புலனாய்வுச் செய்தியாளர்களிடம் அவர்கள் இதுவரை அறிய வந்துள்ளனவற்றையும் மற்றும் எதனை கண்டறியப்போகிறார் என்பது பற்றியும் குறிப்புகளை தரும்படியும் சுருக்கமாக விளக்கமளிக்கும்படியும் கேட்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளன.

எந்த பெயரில் அழைக்கப்பட்டபோதிலும் அனுமான அணுகுமுறை சேகரிக்கப்படவேண்டிய தகவல் சம்பந்தமாக ஒரு சுருக்கமான அறிக்கையைக் கொண்டிருக்கவேண்டியது அவசியம். எ ஆர் ஐ. ஜே அறிக்கையில் குறிப்பிட்டது போல அனுமானம் என்பது செய்தியாளரின் குறிப்பில் அடங்கும் விடயம் மிகச்சரியானதாக இருக்கவேண்டுமென்பதல்ல. இங்கு எதிர்பார்க்கப்படுவதெல்லாம் செய்தியாளர் நேர்மையாகவும் தனது விடயங்கள்

பற்றி திட்டவட்டமாகவும் இருக்கவேண்டுமென்பதே. அத்துடன் இது செய்தியாளர் அவரது இறுதி செய்தி அறிக்கையினை ஒப்படைக்கும்போது விஞ்ஞான ஆய்வு போன்ற ஆய்வின் அடிப்படையில் தயாரித்துள்ளதையும் உறுதிசெய்கின்றது.

## செய்திக்கான களமமைத்தல்

செய்தியாளர்கள் சரியான முறையில் களமமைத்திராத காரணத்தினால் முக்கியமான பல புலனாய்வுச் செய்திகள் இடைநடுவிலேயே கைவிடப்படுகின்றன. அல்லது தமது மேலாளர்கள் ஏற்கக்கூடிடய முறையில் அவற்றை வழங்க முடியாதுள்ளன. இது ஊடகத்துறையில் முக்கியமானதோர் அம்சமாகும்.

புலனாய்வு செய்தி வெளியீட்டில் அனுபவம்வாய்ந்த பிரபலமான நிறுவனங்கள் பலவற்றிலும்கூட செய்தியாளர்கள் தாம் புலனாய்வு செய்யவுள்ள விடயம் பயனுள்ளது என்று தமது மேலதிகாரிகளை ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டியது அவசியமாகும்.

ஒரு செய்தியினை புலனாய களமமைப்பதென்பது செய்தியாளர் ஒருவர் தனது ஆசிரியருடன் கொண்டுள்ள உறவைப் பொறுத்தவிடயம். பிராந்திய செய்தியாளருக்கு இது இலகுவான விடயமல்ல. ஏனெனில் அவர் தொலைவிலுள்ள பிராந்தியத்திலிருந்து செயல்படுவதால் பொறுப்பாசிரியரோடு நேருக்குநேர் தொடர்பு கொள்ளமுடியாதுள்ளார். அதிகூடியதாக, ஒரு பிராந்திய செய்தியாளரினால் பிராந்திய செய்திகளுக்கு பொறுப்பாளரை மட்டுமே சந்திக்க முடியும். தனது புலனாய்வு செய்திக்கு அனுமதியளிக்கக்கூடிய சிரேஷ்ட ஆசிரியருடனான தொடர்பு அச்செய்தியாளருக்கு மிக அபூர்வமாக கிடைக்கிறது. சொந்த நலனைக் கருத்திற்கொண்டு தனது புலனாய்வுச் செய்தியை அதுகுறித்த அரசியல்வாதிக்கோ அல்லது நிறுவனத்துக்கோ அப்பொறுப்பாசிரியர் தெரிவித்து தமக்கு பிரச்சினையை உண்டு பண்ணுவாரோ என்ற அச்சமும் செய்தியாளருக்குண்டு.

ஆயினும் ஒரு புலனாய்வுச் செய்திவிடயம் தொடர்பாக தனது ஆசிரியரின் உதவி ஒரு பிராந்தியச் செய்தியாளருக்கு நிச்சயம் தேவை. சிலநேரங்களில் ஒரு முக்கிய நபருடனான பேட்டியை ஆசிரியர் தனது செய்தியாளருக்கு ஏற்பாடு செய்ய முடியும். அல்லது ஒரு புலனாய்வுச் செய்தியாளருக்கு செய்தி அலுவலகத்திலுள்ள நெருக்குதலில் இருந்து காப்பாற்றுவதற்காக புலனாய்விலிருந்து அகற்றி அன்றாட செய்திக்காக நியமிக்க முடியும். எது எப்படியாயினும், ஒரு செய்தியாளருக்கு அவரது புலனாய்வு செய்திக்காக செய்தியறையில் ஒரு நல்ல உறுதியான மேலாளரின் உதவி தேவைப்படுவதாகவே இருக்கின்றது.

ஒரு பிராந்திய செய்தியாளர் முயற்சியுள்ளவராக இருக்கவேண்டும். அத்துடன் குறித்த புலனாய்வுச்செய்தி பொது நன்மை கருதியதாக அமைந்திருக்கின்றதென்பதை நன்கு விளக்கி, குறித்த செய்தி ஸ்தாபனத்திடம் அதன் கவனத்தையும், நேரத்தையும் அச்செய்தியின் பக்கம் திருப்பவைப்பதாகவும் அமைந்திருக்கவேண்டும்.

ஒரு புலனாய்வுச் செய்திக்கான அனுமதியைப் பெறுவதற்கான வழிமுறைகள் என்று விசேடமாகக் குறிப்பிட்டுச் சொல்வதற்கு எதுவும் இல்லாதபோதிலும் பின்வரும் வழிமுறைகள் உதவக் கூடும் :

- **உணரவைத்தல்:** செய்தியாளரின் மேலாளரும் அனுமதியைப் பெறவேண்டிய மேலதிகாரிகள் உள்ளனர். எனவே தனது நடவடிக்கை சம்பந்தமாக தெளிவான திட்டவட்டமான குறிப்புகள், தகவல்களை தனது ஆசிரியருக்கு புரியும் விதத்தில் உறுதியான வகையில் வழங்கவேண்டும்.

- **முன் அறிக்கை:** தான் சேகரிக்கும் தகவல்கள் தொடர்பாக தனது ஆசிரியர் வினவும் கேள்விகளுக்கு உறுதியான பதிலை வழங்கும் பின்புலம் செய்தியாளருக்கு தேவை.

- **கட்டுக்குள்ளான எதிர்பார்ப்பு:** செய்தியாளர்கள் பல சமயங்களில் தமது செய்தி சம்பந்தமாக அதிகமாக வர்ணிப்பதால், தாம் எதிர்பார்த்த பலன் கிடைக்காத பட்சத்தில், ஆபத்துக்களை எதிர்கொள்வதுண்டு. ஆனால் சாதுரியம் மிக்க செய்தியாளர்கள் சிறிதானாலும் நிறையவே விடயதானங்களுடன் தனது மேலதிகாரிக்கு விளக்கம் அளித்துவிடுவர். செய்தியாளர் குறைந்தபட்சம் x என்ற பாத்திரம் தொடர்பான கதைளை எதிர்பார்க்க முடியும் என்றும் அனைத்துமே நன்கு செயற்பட்டால், x மற்றும் y கூடவே z பற்றிய செய்திகளையும் பெறமுடியும் எனவும் தெரிவிப்பார். இந்த நடைமுறைசாத்தியமான அணுகுமுறையை அவரது மேலாளரும் ஏற்றுக்கொள்வதோடு செய்தியாளரை அலட்சியம் செய்ய முடியாதவராகவும் கருதுவார்.

- **காலவரையறையை வகுத்தல்:** வெறுமனே ஒரு விடயத்தை ஆரம்பிக்காது காலவரையறையொன்றை வகுத்துச் செயற்படுவதே பயனளிப்பதாக அமையும். திகதியொன்றை இலக்கு வைத்து அதற்கமைவாக இயங்க வேண்டும்.

- **உள்வாங்குதல்:** நீங்கள் தெரிவு செய்துள்ள புலனாய்வு செய்யப் போகும் விடயம் சிறந்ததாக இருப்பின் உங்களுக்கு உதவியாக மேலாளர் மற்றொரவரை நியமித்தால் அதற்கு அனுமதி அளியுங்கள் பிராந்தியச் செய்தியாளருக்கு உதவியாக கொழும்பு செய்தி கூடத்தில் ஒருவரை மேலாளர் நியமித்தால் அனுமதியுங்கள். இதன்மூலம் அனுபவமிக்க கொழும்புச் செய்தியாளருடன் இணைந்து ஆக்கபூர்வமாக பணியாற்ற முடியும். பொதுநலனே முக்கியமாக கருதப்படுவதால் செய்தியில் எவர் பெயர் முன்நிலைப்பெற்றால் என்ன என்ற பரந்த மனப்பான்மையின் காரணமாக செய்தி அலவலகத்தினுள் செய்தியாளர் தனது சிறப்பினையும் கௌரவத்தினையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

- **படக்காட்சிகள்:** செய்திகள் தரப்படும்போது புகைப்படங்கள், வீடியோ காட்சிகள், தரவுகள் என்பவற்றை வழங்கும் செய்தியாளர் தமது நடவடிக்கையில் வெற்றிபெறுகிறார்.

## ஐந்தாம் அத்தியாயம்

# மனித செய்தி மூலங்கள்

புலனாய்வுச் செய்திகளின் ஆரம்பமும் முடிவும் மனித தகவல் மூலங்களிலேயே தங்கியுள்ளன.

மனித மூலங்கள் அரசாங்கதுறை அல்லது பொது அதிகாரி ஒருவரது துஷ்பிரயோகம் தொடர்பாகத் தரும் துப்பு மூலமாகவே புலனாய்வுச் செய்தியாளரின் பணி ஆரம்பமாகிறது. ஏராளமான மக்கள், நிபுணர்கள், சாட்சிகள், நடவடிக்கையாளர்கள், பாதிக்கப்பட்டோரிடமிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலமே இறுதி அறிக்கைகள் முடிவுறுகின்றன. இந்த உண்மையான மனித முகங்களும் குரல்களுமே ஊழலின் உண்மை நிலையை எடுத்தியம்புகின்றன.

புலனாய்வுச் செய்திசேகரிப்புக்கு பலதரப்பட்ட மூலங்கள் தேவைப்படுகின்றன. பலதரப்பட்ட தகவல்களின் உண்மைத்தன்மையினை உறுதிசெய்ய மனித மூலங்களை மிகக் கவனமான முறையில் பயன்படுத்துதல் புலனாய்வு செய்தி சேகரிப்பில் அனுபவ ரீதியாக பெறப்பட்ட மரபாகும். ஒரு புலனாய்வு செய்தியாளர் வேலைத்திட்டத்தின்போது ஒருவர் இருவரிடமிருந்து மட்டுமல்லாமல் பலதரப்பட்டவரோடு ஆலோசிக்கவேண்டியுள்ளது. தனது செய்தியை நன்கு வடிவமைக்கவும், உண்மைத் தகவல்களை வெளிப்படுத்தவும், விரிவான முறையில் தாக்கத்தை ஏற்படுத்தவும் பலதரப்பட்ட மூலங்கள் உறுதுணையாகின்றன. ஒரு சிறந்த புலனாய்வுச் செய்தி தகுந்த ஆவண ஆதாரங்களை மட்டுமல்லாது மேலதிக ஆதாரங்களை கொண்டிருந்தபோதும் அதற்கு குறைந்தபட்சம் நான்கு நல்ல பெறுமானமுள்ள மனித மூலங்கள் அவசியம் என்பது நியதியாகும்.

**உள்ளிருப்போர்:** துப்புத்தருவோரே உள்ளிருப்போர் எனக் கூறப்படுகின்றனர். இவர்கள் அரச நிறுவனங்களுக்குள்ளும் அரச அதிகாரிகளுடனும் நெருக்கமாக இருப்பவர்களாகும். செய்தியாளர்களுடன் பேசுவதற்கு பல காரணங்களின் நிமித்தம் இவர்கள் தூண்டப்படலாம். அவர்கள் ஒரு நிர்வாகத்துறை எதிராளியை பாதிப்புறச்செய்யும் விதத்தில் தகவல்களைக் கசியவிட முடியும். தமக்கு கிடைக்கவேண்டிய பதவி உயர்வு மற்றும் ஏனைய சலுகைள் கிடைக்காமையாலோ அல்லது நடைபெறும் தவறினை சகிக்க முடியாது கருத்துக்கள் வெளியிட்டதன் காரணமாக பதவியிறக்கம் செய்யப்பட்டதாலோ வஞ்சம் தீர்ப்பதற்காகவும் அவர்கள் இவ்வாறு தவறுகளை சுட்டிக்காட்டமுடியும்.

பெரும்பாலானோர் தமது மனச்சாட்சியின் நிமித்தம் நடக்கின்றனர். தம்மைச் சூழ நடக்கும் ஊழல், அதுகுறித்து பலவந்தமாக தாம் சம்பந்தப்படவேண்டிய நிலை காரணமாக அவர்கள் உண்மையாகவே குழம்பிப்போயுள்ளனர். இருந்தபோதிலும் தமது வாழ்க்கைப் பிரச்சினை காரணமாகவும், வெளிப்படையாக எதனையும் அரச புலனாய்வாளர்களுக்கு தெரிவிப்பதில்லை. அரசியல் அனைத்தையும் இறுதியில் மூடிமறைத்துவிடும் என்தை அவர்கள் அறிவர். எனவே இத்தகையவர்கள் ஊடகப்புலனாய்வாளர்கள் மூலமாக

ஊழல்பற்றி அறியத்தந்து அதன் மூலம் புதிய மாற்றங்களை கொண்டுவர விரும்புகின்றனர்.

நோக்கம் என்ன என்பது பற்றி பொருட்படுத்த வேண்டுமா? ஆம்/ இல்லை என்ற பதில்கள் இரண்டுமே இதில் அடங்கும்.

ஆம் என்ற பதில் ஏனெனில் ஒருவர் தகவல் ஒன்றை திரிபுப்படுத்தவோ அல்லது பக்கச்சார்பானதாக தெரிவிக்கவோ முனையக்கூடும். ஒரு செய்தியாளர் தான் உபயோகப்படுத்தப்படுவதையோ, ஆட்டுவிக்கப்படுவதையோ விரும்புவதில்லை. இதன்காரணமாக ஒருவர் கசியவிடும் தகவலை மட்டும் நம்பியிராது அதுபற்றிய பலதரப்பட்ட மூலங்களை ஒரு செய்தியாளர் அணுகுகிறார். கசியவிடப்படும் தகவல்கள் சில சமயங்களில் ஆபத்தானவை. ஏனெனில், மக்களுக்கு அறியத்தர வேண்டும் என்ற நோக்கத்துடனல்லாமல், தனிப்பட்ட பகைமைகளுக்காகப் பழிதீர்க்க தகவல்கள் கசியவிடப்படலாம். இதன் விளைவு திரிபுப்படுத்தப்பட்ட தகவலின் காரணமாக அதன் பெறுமதியை இழக்கின்றது.

இல்லை எனெனில் ஒரு துப்பைத்தருபவர் வழங்குகின்ற தகவலின் தரத்துக்கு முன்னால் அவர் நோக்கம் முக்கியமானதல்ல. இந்த வகையில், துப்புத்தருபவரின் நடவடிக்கை ஒரு செய்தியாளருக்கு சரியான நம்பகத்தன்மையான தகவல்களை பெற்றுக்கொள்ள வழியமைக்குமாயின் அவரது நோக்கம் எத்தகையதாகினும் பொருட்படுத்துவதற்கில்லை.

எப்படியானபோதும் தனக்குக் கிடைக்கும் தகவல்களை சரியான வகையில், உரிய ஆவணங்கள், தரவுகள் மூலங்களுடன் ஆராய்ந்து நல்ல கச்சிதமான, நம்பகத்தன்மையான தகவலை சுதந்திரமான செய்தி மூலங்கள், பேட்டிகள் மூலமாக வழங்குவது செய்தியாளரின் கடமையாகும்.

வெறுமனே செய்திக்கான தகவல்களை பெறுவதுமட்டுமல்லாது, உள்ளிருப்போரிடமிருந்து வேறு பல விடயங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

- **வரலாறு:** குறித்த செய்தி பற்றிய வரலாற்றுத் தகவல்கள் உட்பட சமாச்சாரங்களில் சம்பந்தப்பட்ட நபர்கள், அவர்களது செயற்பாடுகள் என்பவைபற்றி அறியத்தருவதில் உள்ளிருப்போர் நல்ல மூலங்களாவர்.

- **வரைபடம்:** செய்தியாளருக்கு ஒரு நிறுவனத்தின் பிரதானிகள் பற்றியும், அதன் ஆவணங்கள் மற்றும் ஏனைய பத்திரங்கள் யாரிடமிருந்து எவருக்கு செல்கிறது போன்ற விடயங்களை அறிய உதவ முடியும்.

- **வழிகாட்டி:** ஒரு குறித்த பிரச்சினை, அதனை கையாளுவோரை இனங்காணுவது, செய்தியாளரால் எந்த ஆவணம் வேண்டப்பட வேண்டும் போன்ற தகவல்களின் மூலம் உள்ளிருப்போர் உதவமுடியும்.

- **பெற்றுக்கொடுத்தல்:** உள்ளே இருக்கும் ஆவணங்களை உள்ளிருப்போர் பெற்றுக்கொடுக்க முடியும்.

இதில் இறுதி அம்சம் முக்கியமானது. ஏனெனில் புலனாய்வுச் செய்தித்திரட்டலில் ஊழல் சம்பந்தமாக உறுதியான ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. தமக்குத்

தேவையான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளவே மனித மூலங்களை பயன்படுத்துவதனால் அவை கிடைத்ததும் மூலங்கள் அர்த்தமற்று விடுகின்றன. இருப்பினும், திரட்டப்பட்ட புலனாய்வுத்தகவல் ஊடகங்களில் வெளியாகும்போது அம்மனிதச் செய்தி மூலங்களின் அந்தரங்கத்தன்மையை பாதுகாப்பதும் புலனாய்வுச் செய்தியாளரின் கடமையாகும்.

உள்ளிருப்போர் மூலமாக தகவல்களைப் பெறுவதிலும் அவதானம் தேவை தனக்குத் தேவையான தகவல்களைப் பெறும்போது மிகமிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சட்டவிரோதமான முறையிலும், திருடும் விதத்திலும் தனது செய்திமூலத்தை ஒரு செய்தியாளர் பெறலாகது. அத்துடன் தகவல்களைப் பெற செய்தி மூலத்துக்கு செய்தியாளர் பணமோ அன்பளிப்போ வழங்கலாகாது.
மீடியா கோர்பரேஷனின் வொய்ஸ்மெய்ல் துண்டாடப்பட்டது தொடர்பான புரளி 'த நியுஸ் ஒப் த வேர்ல்ட்' ஊடக நிறுவனம் மூடப்படுவதற்கான காரண-மாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை சட்ட நடைமுறை, ஒழுங்கு விதிமுறைகள் மீறப்படுவதால் ஏற்படக்கூடிய விளைவு பற்றிய ஓர் எச்சரிக்கையாகவும் கொள்ளமுடியும்.

**வெளியிலிருப்போர்:** இவர்கள் பெரும்பாலும் ஒரு நிறுவனத்தின் முன்னாள் ஊழியர்களாகவோ அல்லது அதுபோன்ற நிறுவனங்களின் அதிகாரிகளாகவோ அல்லது கல்விமான்களாகவோ அல்லது வெளிவாரி துறைசார் நிபுணர்களாகவோ இருக்க முடியும். முன்னாள் குடும்ப உறுப்பினராகக்கூட இருக்கலாம். அவர்கள் குறிப்பிட்ட நிறுவனத்துடனோ அல்லது அதன் அதிகாரிகளுடனோ நேரடி சம்பந்தமற்றிருப்பினும், அதுவிடயமாக விசேட தகவல்களையும் நிபுணத்துவ அறிவினையும் கொண்டிருக்கக்கூடும். நடைபெறும் ஊழல்கள் தொடர்பாக விளக்கமளித்து அர்த்தம் கொடுக்க அவர்களால் முடியும்.

**மக்களைப் பேசவைப்பது:** மரபுமுறை செய்தித்துறையில் உத்தியோகபூர்வ அதிகாரிகள் தகவல்களை சுயமாகவே செய்தியாளருக்கு வழங்குகின்றனர். இவை அநேகமாக அவர்களின் திட்டங்கள், செயற்பாடுகள், இலக்குகள் தொடர்பான பிரசாரங்களாகவே இருக்கும். தகவல்களிலிருந்து செய்திகளை மிக இலகுவாகவே பெற்றுக்கொள்கின்றனர். கேள்விகளும் வேண்டப்படும் விளக்கங்களும் அரசின் பிரசாரத்துக்கு சார்பாய் இருப்பின் எவ்வித பிரச்சினையுமின்றி பதில்களும் விளக்கங்களும் கிடைக்கும். செய்தியாளர்களும் சொல்லப்பட்டதை அப்படியே எடுத்துக்கொள்வர். ஆயினும், புலனாய்வு செய்தியாளர் அப்படி செய்யமாட்டார்.

செய்தியாளர் மாநாடொன்றில் பகிரங்கமாகக் கருத்துக்கூறிய ஓர் அதிகாரி புலனாய்வுச் செய்தியாளர் ஓருவர் செய்தியாளர்கள் மத்தியில் இருப்பதை அறிந்ததும் அமைதியடைந்துவிடுகிறார். புலனாய்வுச் செய்தியாளர் ஒருவேளை அங்கிருந்து வெளியேற்றப்படவும்கூடும். தென்னாசியப் பிராந்தியங்களில் ஏனைய நாடுகளைப்போல் இலங்கையிலும் இத்தகவல் திரட்டும் முறை சிரமமானதாகும். ஏனெனில் பல அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் மக்கள் கண்களுக்கு மறைக்கப்பட்டு, திரைமறைவில், அந்தரங்கமாகவே நடைபெறுகின்றன.

ஒரு நிறுவனத்தின் அதிமுக்கிய தகவல்கள் அந்நிறுவனத்தின் உயர்மட்டத்தின் இடைநிலையில் இருப்பதை புலனாய்வுச் செய்தியாளர்கள் அறிவர். இந்த இடைநிலை அதிகாரிகள் தமக்கு கீழே உள்ளோர் பற்றியும், அதேசமயம்

தமக்கு மேலுள்ளோர் பற்றியும் என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்து வைத்துள்ளனர்.

தமக்கு பாதிப்பு ஏற்படலாம் என்ற பயத்தினால் ஊழல் மற்றும் தவறான நடவடிக்கைகளை சுட்டிக்காட்ட மக்கள் முன்வருவதில்லை. இடைநிலை அதிகாரிகளை பேசவைப்பதும் சிரமமான நடவடிக்கையாகும். ஏனெனில் அவர்கள் தமது பதவிகளுக்கு ஆபத்து ஏற்படாதவாறு நடந்து கொள்கின்றனர். இதனை ஊடறுத்து அதனூடாக தகவல்களைப் பெறுவதில் காலநேரத்தினை அதிகமாக செலவிட நேரிடும். அத்துடன் விசேட திறனும் தேவைப்படுகிறது. அமெரிக்க புலனாய்வுச் செய்தியாளரான எரிக் நல்தார் என்பவர், "உதடுகளை இலகுபடுத்துவது" என்ற விவரணத்தில் (பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளது) சில வழிமுறைகளை தெரிவிக்கின்றார். வெற்றிகரமாக செய்தி திரட்டுவோர் தமது தகவல்கள் தொடர்பாக பல்வேறு வழிமுறைகளைக் கையாளுகின்றனர்.

- **கூகிள்:** ஒருவரை பேட்டி காணச்செல்லுமுன் அவர் சம்பந்தமான விடயங்களை கூகிளில் தேடிப்பெற்றுக்கொள்ள முடியுமா என்று பாருங்கள். அவர் எழுதிய விடயங்கள் ஏதாவது பத்திரிகைகளில் வந்துள்ளனவா, அவர் குடும்ப அங்கத்தவரின் மரணச்செய்தி எதாவது பிரசுரமாகியுள்ளனவா அல்லது அவர் எழுதிய நிபுணத்துவ கட்டுரை ஏதாவது வெளியாகியுள்ளதா என்பதை அறிந்து செல்லுங்கள். இது பேட்டியின் ஆரம்பத்துக்கான நல்லதோர் அடித்தளமாய் அமையும்.

- **புரிந்துகொள்ள முனைதல்:** லோரன்ஸ் ரைட் என்ற எழுத்தாளர் புரிந்துணர்தலை விட எந்தவொரு உளவியல் சக்தியும் மேம்பட்டதல்ல என்று கூறுகிறார். ஒரு புலனாய்வுச் செய்தியாளர் தனது செய்தி மூலத்தை கடுமையான தொனியில் அணுகமுற்பட்டால் நல்லபலனைப் பெறமுடியாது. ஆனால் அமைதியாகவும், அவதானத்தோடும் தகவல் தரும் ஒருவரை நாடும்போது அவர் ஆற அமர தனது நோக்கம், அனுபவம் குறித்து மனம் திறந்து பேசுவார். "ஏன் இப்படி நடந்ததென உண்மையில் நான் அறிய விரும்புகிறேன்" என்று கூறும்போது அவரிடமிருந்து பெறுமதிவாய்ந்த பல தகவல்களைப் பெறமுடியும்.

- **பச்சை - சிவப்பு விளக்குகள்:** கனேடிய புலனாய்வுச் செய்தியாளரும், எழுத்தாளரும் பேட்டி காண்பதில் நிபுணருமான ஜோன் சவற்ஸ்கி என்பவர் தமது செய்தி மூலங்களை பேட்டிகாணும் விதத்திலேயே செய்தியாளர்கள் தத்தமக்கு பாதிப்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர் என்று நம்புகின்றார். சிவப்பு, பச்சை விளக்கு கேள்விகள் என்பது செய்தியாளரது கேள்வி கேட்கும் அணுகுமுறை சார்ந்தது. சிவப்பு விளக்கு கேள்விகள் என்பது பதிலுரைப்பவரை ஆம், இல்லை என்ற வரையறைக்குள் மாத்திரம் வைத்துவிடுகிறது. சிவப்பு விளக்குமுறை நேரடியாகவே அப்பணத்தை நீங்கள் எடுத்தது உண்மையா எனக் கேட்பதை குறிக்கிறது. "இல்லை" என்று ஒரே வார்த்தையில் பதில் வருகிறது. ஆனால் பச்சைவிளக்கு முறையில், கேட்பது பேட்டிகாணப்படுபவரை விரிவாக, தெளிவாக பதிலளிக்க தூண்டுகிறது. இத்தகைய கேள்விகள் எவ்வாறு? ஏன்? எப்படி? என்ற ரீதியில், அப்பணம் எவ்வாறு மறைந்தது? உங்களுக்கு இது எப்படித் தெரியும் எனக்கேட்கும்போது அவரை விளக்கமாக பதிலளிக்கத் தூண்டுகிறது.

- **மெதுவாக அணுகல்:** அவசரப்படவேண்டாம். எடுத்த எடுப்பிலேயே தனது பேட்டியை ஆரம்பிக்கவேண்டுமென்ற நியதி செய்தியாளருக்கு இல்லை. ஒருவர் செல்வாக்குடையவராக அல்லது உணர்ச்சிவசப்படுபவராக இருந்தால் மெதுவாக, நிதானமாக அவரை அணுகவும். பேட்டியின் முதல்பாகத்தை குசலம் விசாரிப்பதோடு ஆறுதலாக பேட்டி தருபவரை புரிந்து கொள்ளும் விதத்தில் ஆரம்பிக்கவும். பேட்டி தருபவரை உற்சாகப்படுத்த ஓரிரு பேட்டிகள் கூட சில சமயங்களில் தேவைப்படலாம்.

- **முதலில் நெருக்கம் பின்னர் விடயங்கள்:** முதலில் செய்தி மூலத்துடனான தொடர்பு முக்கியமானதாகும். தொடர்பினை ஏற்படுத்துவீர்களானால் தகவல்கள் தானே வரும். சிலநேரங்களில், முக்கியமானதொரு செய்தி மூலத்தின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முதலில் சில பேட்டிகளை நடத்தவேண்டிய நிலையும் ஏற்படலாம்.

- **வாயடக்கம்:** சில செய்தியாளர்கள் உளறுவாயர்களாகவும், தமக்கு யாவுமே தெரிந்ததைப்போல நிறையவே பேசுகின்றனர். இது தவறான அணுகுமுறையாகும். ஒரு கேள்வியைக் கேட்டபின்னர் பதிலுக்காக அமைதி யாக காத்திருக்கவேண்டும். இதைவிடுத்து வெறுமனே பேசக்கூடாது.

- **செய்திகளை கொண்டுவரவும்:** நாளாந்த செய்தியொன்றினை ஒரு புலனாய்வுச்செய்தியாளர் பின்தொடரும் பட்சத்தில் அதனுடைய செய்தி மூலத்தோடு அதுபற்றி கலந்தாலோசிக்கவேண்டும்.

- **வார்த்தைகளைவிடமேலானவை:** தேக அசைவுக்குறிகள், குரல்தொனி ஆகியவற்றிலிருந்து நிறைய விடயங்களை கிரகிக்க முடியும். ஒரு செய்திமூலமானவர் எவ்வாறு இருக்கையில் அமர்ந்து கொள்கிறார், கண்சந்திப்பை தவிர்ப்பது, சொன்ன விடயத்தையே மீட்டுவது, நிதானத்தை இழக்கும்போது குரல் தொனியில் ஏற்படும் மாற்றம் போன்றவற்றையும் ஒரு பேட்டியாளர் அவதானிக்கின்றார். செய்திமூலமானவர் வெளிக்காட்டும் உணர்ச்சிகளையும் செய்தியாளர் குறித்துக்கொள்கிறார். அவையும் வெளிக்கொணரவேண்டிய தகவல்களேயாகும்.

- **பேட்டிகளை ஒலிப்பதிவு செய்தல்:** பேட்டியை எடுக்கும் போது ஓர் குறிப்புப் புத்தகத்தை பாவிப்பதைவிட ஒலிப்பதிவுக் கருவியை பாவிக்கவும். இதன் மூலம் பேட்டி காண்பவரும், காணப்படுபவரும் நிதானமாக நடந்து கொள்ள முடியும். அத்துடன் பேட்டியின் பின்னர் இருதரப்பினரும் சாதாரணமான முறையில் பேசவும் முடியும்.

- **ஒலிப்பதிவை நிறுத்தவேண்டாம்:** பேட்டி முடிந்ததும் ஒலிப்பதிவை நிறுத்தி யதும் சில சமயங்களில் பல முக்கிய விடயங்கள் தொடருகின்ற உரை யாடலில் வெளிவருவதுண்டு. எனவே அவ்வாறு செய்யாது பேட்டி முடிந்த பின்னரும் ஒலிப்பதிவு கருவியை நிறுத்திவிடாது அவரிடமிருந்து விடை பெறும் வரை அதனை இயக்கவும்.

- **ஒலிப்பதிவை மீளக்கேட்டல்:** கச்சிதமான பேட்டியை உறுதிசெய்யவும் பேட்டி தந்தவரது நம்பிக்கையைப் பெறவும் அவர் பாவித்த சரியான சொற்பிரயோகங்களை மீளவும் ஒலிப்பதிவில் கேட்டுப்பாவிப்பது அவசியம். அத்துடன் பேட்டியை பிரசுரிக்க முன்னர் அதிலுள்ள வார்த்தைப்

பிரயோகங்களை பேட்டி தந்தவரோடு சரிபார்த்துக் கொள்வது அவசியம். இதன்மூலம் தனது செய்தி மூலத்தின் மனநிலையை நிதானப்படுத்த முடியும். கூடவே பேட்டி தந்தவர் தான் கூறியவற்றை மீளவும் மாற்றியமைத்துக் கூற அனுமதிக்கலாகாது. அத்துடன் வேறு செய்தி மூலங்கள் மூலமாகப் பெறப்பட்ட நுண்மையான கூற்றுக்களைப் பகிர்ந்துகொள்ளவும் கூடாது.

பிரபலமான இறுதிவார்த்தைகள்:

புலனாய்வுச் செய்தியாளர் தனது பேட்டியின் இறுதியில் பாவிக்க வேண்டிய மூன்று முக்கிய கேள்விகள்.

- உங்களுக்கு அது எப்படித் தெரியும் ?
- நான் எதனையும் தவறவிட்டேனா ?
- வேறு யாரோடு நான் பேசவேண்டும் ?

**சேர்த்துக்கொள்ளலும் அடையாளம் காணலும் :** சேர்த்துக்கொள்ளல் என்பது மூன்று கட்டங்களில் இருப்பதோடு ஒரு புலனாய்வுச் செய்தியாளர் அதனைத்தனது வேலைத்திட்டத்தின் போது பயன்படுத்துகிறார். ஒரு புலனாய்வுச் செய்தியாளர் தனது செய்திமூலம் குறித்து தெளிவாகவும் அதன் பின்னணித் தன்மைகள் பற்றியும் முழுமையாக அறிந்து வைத்திருப்பார். செய்தியாளர் வெறுமனே தனது பேட்டி பின்னணி சார்ந்தது என்று கூறி கேள்விகளை ஆரம்பித்துவிடமுடியாது. பின்னணி என்னும்போது பலருக்கு பலதரப்பட்ட விடயங்களை அர்த்தப்படுத்துவதாக இருக்கும். விசேடமாக பத்திரிகையாளர்களது பணி விதிமுறைகள் விடயத்தில் பரிச்சயமில்லாதவர்கள் இத்தகையதோரில் அடங்குவர்.

மூன்று கட்டங்களிலான சேர்த்துக்கொள்ளல்:

**குறிப்பெடுக்கப்படமாட்டாது:** புலனாய்வுச் செய்தித்திரட்டல் பெரும்பாலும் சர்ச்சைக்குரிய தகவலோடு செய்தி மூலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையலாம். தனது பேட்டி பற்றி செய்தி மூலத்தை சிந்திக்கவும் வைத்துவிடும் . இதனால் செய்தி மூலத்துடன் நல்ல பேட்டியை ஆரம்பிக்க குறிப்பெடுக்கமாட்டாது என்ற ரீதியில் விடயங்களை ஆரம்பிக்கலாம். குறிப்பெடுக்கப்படாதது என்னும் போது செய்தியாளர் செய்திமூலம் குறிப்பிடும் எந்தவொரு தகவலையோ, கூற்றையோ பயன்படுத்தலாகாது. அத்துடன் ஏனையோருக்கும் கூறலாகாது. இது விடயத்தில் ஏனையோரிடம் குறித்த தகவல் பற்றி ஆராய்ந்தறிந்து கொள்ளமுடியும். தனது கலந்துரையாடல் பற்றியும், செய்திமூலத்தின் அடையாளம் பற்றியும் தனது மேலதிகாரிக்கு அறிவிப்பது பற்றிய தகவல்களை செய்தியாளர் தன்னோடு வைத்திருக்கும் உரிமையையும் கொண்டுள்ளார்.

குறிப்பெடுக்கமாட்டாத நிலை என்பது ஒரு விதிவிலக்கானது மட்டுமே தவிர நியதி அல்ல. அநாமதேயம் என்பது ஒரு முக்கிய உறவுநிலை, சில நாடுகளில் இதனை ஒரு வாய்மூல ஒப்பந்தமாக கருதி செய்தி மூலம் தனது அடையாளம் தெரியும் பட்சத்தில் நீதிமன்ற உதவியையும் நாடமுடியும்.

செய்தி மூலம் குறிப்பெடுக்கமாட்டாத நிலைக்கு இணங்கியதும், தரப்படும் தகவல் சிறைத்தண்டனைவரை கொண்டு செல்லுமா என்பதையும் செய்தியாளர் சிந்திக்கவேண்டும். இத்தகவலை வேறுவழியில் பெறமுடியுமா என்பதையும் யோசிக்கவேண்டும்.

இலங்கையில் பெரும்பாலும் குறிப்பெடுக்கப்பட முடியாதது பற்றி உறுதியளிக்

கின்றனர். ஆயினும் அவ்விடயத்தை நேரடியாக இல்லாமல் சூசகமாக குறிப்பிட்டுவிடுகின்றனர். இது விடயத்தில் தமது செய்தி மூலத்தை தகவலறிந்த மற்றும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் என அவர்கள் குறிப்பிட்டு விடுகின்றனர். இதனால் இது விடயத்தில் ஒரு நிலையான புரிந்துணர்வற்ற தன்மை ஏற்படுகின்றது.

இத்தகைய சூழ்நிலை பற்றிய பத்திரிகைகள் சிலவற்றின் முன்னுதாரணங்களும் உண்டு. செய்திமூலங்களின் அடையாளம் மற்றும் அதன் அந்தரங்கத்தன்மை ஒழுங்காக பேணப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு த சண்டே டைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் தனது செய்திமூலத்தை நீதிமன்ற விசாரணை ஒன்றின் போது பாதுகாத்தார். தனது பத்திரிகையின் அரட்டைப்பகுதி ஒன்றில் குறிப்பிடப்பட்டவை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பாதிப்பவையாக அமைந்திருந்தன. இதனால் குறித்த பத்திரிகை ஆசிரியர் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். அந்த அரட்டைப்பகுதியில் வெளியான தகவலுக்கு தாம் அதனை எழுதாதபோதிலும் அதற்கான பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். ஆயினும் அவர் அதனை எழுதியவரை யார் எனக் குறிப்பிடவில்லை. இத்தகைய நடவடிக்கை ஊடக சுதந்திரத்தை பொறுத்தவரை மிக உன்னதமான நிலையாகும்.

**பின்னணி பற்றியது:** இதன் அர்த்தம் என்னவெனில் தகவல்களையும், கூற்றுக்களையும் பயன்படுத்தமுடியும். ஆனால் அவற்றின் செய்திமூலமானவர் பெயரினால் அடையாளம் காணப்படமாட்டார். செய்திமூலம் பற்றிய மறைமுக விபரத்தை வெளியிட செய்தியாளர் முனையலாம். அதோடு தனது செய்தியின் காத்திரத்தன்மையைப் பேண தனது செய்தி மூலம் அதிகாரபூர்வமானவர் அல்லது நம்பத்தகுந்தவர் எனத் தெரிவிக்கமுடியும். உள்துறை அமைச்சில் சம்பந்தப்பட்ட விடயம் குறித்த விபரங்களை அறிந்தவர் என செய்தி மூலத்தை உதாரணத்திற்கு குறிப்பிடலாம்.

**குறிப்பெடுத்தல்:** இதன்போது தகவல்களும் கூற்றுக்களும் தடையின்றி செய்தி மூலத்தின் ஊடக நேரடியாக அடையாளப்படுத்தப்பட முடியும்.

**சேர்த்துக்கொள்ளலுக்கான படிமுறை:** புலனாய்வுச் செய்தித்திரட்டலுக்கோ அல்லது வேறு செய்திகளுக்கோ செய்திமூலங்களினது பெயர், பதவி என்பவை வாசகர்களின் நம்பகத்தன்மைக்காக குறிப்பிடுவது அவசியமானதாகும்.

இதனைக் கூறுவது இலகு. ஆனால் செய்வது கடினமாகும். ஆபத்தில்லாத தகவல்கள் கூட அநாமதேயக் கூற்றுக்களாகவே தென்னாசிய ஊடகங்களில் குறிப்பிடப்படுகின்றன. அரச அதிகாரிகள் தம்மை பெரிதும் அடையாளப்படுத்த விரும்புவதில்லை. செய்தியாளரும் தமது சிறந்த செய்தி மூலங்களை ஒதுக்கிக் கொள்ள விரும்புவதுமில்லை. தமது பாதுகாப்புக்கருதி பலர் புலனாய்வுத்தகவல்களில் தம்மை முழுமையாக வெளிக்காட்டுவதில்லை. அத்துடன் தமக்கு செய்தியாளர் மீதுள்ள செல்வாக்கினூடாக தமது அந்தரங்கத்தன்மையை பேணுமாறும் செய்திமூலங்கள் கேட்பதுண்டு.

இதனை எப்போதும் மனதில் வைத்துக்கொள்ளல் வேண்டும். குறிப்பெடுக்கத்தகாதவாறு பேட்டியொன்றை எடுக்கும் பட்சத்தில் பேட்டி தந்தவரிடம் சென்று அதன் பின்னணித் தகவலை மீளவும் கேட்டுத்தெரிய முனைவதுண்டு.

இது விடயத்தில் செய்தியாளர் அவதானமாக நடந்துகொள்ளவேண்டும். செய்திமூலத்தின் அந்தரங்கத்தன்மையை பாதுகாப்பதோடு தனது நேர்மையை யும் கருத்திற்கொள்ள வேண்டும். குறிப்பெடுக்க இலகுவான விதத்தில் செய்தி மூலங்கள் பேசுவதில்லை. ஏனெனில் தமது கருத்துக்கள் தொடர்பாக அவர்கள் கட்டுப்பாடற்றவர்களாக இருக்கமுடியும்.

இதன்காரணமாக தாம் முழுமையாக அடையாளம் காணப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் கூறியவற்றை செய்தியாளர்கள் பத்திரிகைகளில் அல்லது அலைவரிசைகளில் எவ்வாறு வெளியிடுவார்கள் என்று அவர்களுக்குத் தெரிவதில்லை.

இந்நிலையில் இப்பயத்தை செய்தி மூலங்களிடமிருந்து நீக்கும்போது அவர்கள் சாவகாசமாக தமது கருத்துக்களை குறிப்பெடுத்துக்கொள்ளும் விதத்தில் அனுமதிப்பார்கள்.





Image by Ron Leishman at http://ClipartOf.com/439457

## சிறுவர்களும் வேறு பாதிக்கப்படக்கூடியவர்களும்

சிறுவர்களுக்கு ஏற்படும் துயரங்கள், வேறு பாதிப்புக்குள்ளானோரான இடம் பெயர்ந்தோர், யுத்தம், இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோர், தொடர்பான அரச நடவடிக்கைகளை தமக்கு ஏற்றவாறு பயன்படுத்த தென்னாசிய செய்தியாளர்களும் முன்வருவதுண்டு.

உதாரணமாக பங்களாதேஷில் செய்தியாளர்களும், படப்பிடிப்பாளர்களும் வைத்தியசாலையொன்றின் அவசர சிகிச்சைப்பிரிவுக்குள் திடீரென புகுந்து பரபரப்பான செய்தியொன்றைப் பதிவுசெய்ய முற்பட்டனர். தமது கணவருக்கு இரண்டாவது மனைவி ஒருவர் இருப்பதை அறிந்த பெண்ணொருவர் தனது இரு பிள்ளைகளுடன் தீக்குளித்து தற்கொலை செய்ய முற்பட்டுள்ளார் . இதில் அப்பெண்ணின் இரு பிள்ளைகளும் இறந்தனர். அவர்களின் உருக்குலைந்த உடல்கள் ஊடகங்கள் வாயிலாக வெளிக்காட்டப்பட்டன. டாக்காவின் மிகப்பிரபலமான த டெய்லி ஸ்ரார் என்ற ஆங்கிலப் பத்திரிகையும் அப்படங்களை பிரசுரித்தது. ஒரு தடவையல்ல. மூன்று தடவைகள் அப்படங்களும் அச்சம்பவம் குறித்த ஏனைய விடயங்களும் ஆசிரிய தலையங்கமும் வெளியாகின.

சிலர் இச்சம்பவம் தொடர்பாக பலவிதமான விமர்சனங்களைக் கொண்டிருக்க முடியும். இத்துயர சம்பவத்தை அறியத்தரவேண்டுமெனவும், இது ஊடக நெறி-முறைகளை மீறுகின்றதெனவும் தரமற்ற ரசனை எனவும் சில விமர்சனங்களைக் குறிப்பிடலாம். அப்பரபரப்பான செய்தி அணுகுமுறை என்பது சிறுவர்களைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. ஏனெனில் அவர்கள் பெற்றோரால் ஊற்றப்பட்டு தீயிடப்பட்டுள்ளனர். பேட்டியளிக்கவும் முடியாத நிலை.

இது தொடர்பாக செய்தியாளர்கள் விசேட கவனத்துடன் சிறுவர்கள் குறித்து அணுகவேண்டும். அவர்கள் சட்டரீதியாக தமது அனுமதியை வழங்கமுடியாதவர்கள். இந்நிலையில் சிறுவர்களின் பெற்றோரிடமிருந்து அவர்களது படங்களையோ கூற்றுக்களையோ பிரசுரிக்க அனுமதி பெறவேண்டும். அத்தோடு அப்பிள்ளையின் முதல்பெயர் அல்லது புனைபெயரையே பாவிக்க முன்வரவேண்டும். ஏனெனில் வாசகர்கள், நேயர்களிடமிருந்து எச்சரிக்கையாக இருப்பதற்காக. அத்துடன் அச்சிறுவர்கள் வாழ்ந்த இடத்தையும் சரியாக தெரிவிக்காது அவர்களது அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டும்.

இவ் அணுகுமுறை, பாலியல் வல்லுறவு, குடும்ப வன்முறைகள் யுத்த மற்றும் அரச நடவடிக்கை என்பவற்றுக்கும் பொருந்தும். பாதிக்கப்பட்டவர்கள் தமது பெயரை வெளியிட விரும்பினால் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி அவர்களுக்கு தெரிவிக்கவேண்டும். ஒரு செய்தியாளர் குறித்த நபரைப் பெயர் மூலம் குறிப்பிடுவதால் அவர் ஒர் இலக்காக அல்லது அநாவசியமாக அவமானத்துக்குள்ளாவாரா என்பதை தனக்குத்தானே கேட்கவேண்டும். தொழில்சார் ஊடகவியலாளரின் அமைப்பொன்று ஏனையோருக்கு மதிப்பளிக்க வேண்டியது பற்றிய ஒழுக்கக்கோவை ஒன்றை தயாரித்துள்ளது. இதில் அந்தரங்கத்தன்மையை பாதுகாத்தல், உட்பட தனிநபர் பாதுகாப்பு குறித்த அனைத்து அம்சங்களும் காணப்படுகின்றன . இதனை இந்த இணையத்தளத்தில் பார்வையிட முடியும். http://www.spj.org/pdf/ethicscode.pdf.

## மனிதமூலம் ஓர் இலங்கை ஆய்வு

சிறந்த புலனாய்வு செய்தியாக்கத்திற்கு தகவல் மூலங்களைக் கொன்ட வலையமைப்பு எப்படி உதவியது என்பதற்கான சிறந்த உதாரணத்தை 2008ம் ஆண்டு சண்டே லீடர் பத்திரிகையில் பல மாதங்கள் தொடர்ச்சியாக வெளியான செய்திக் கட்டுரைகளில் காணமுடியும்

கொழும்பை மையமாகக் கொண்ட குழுவொன்று தமிழ் வர்த்தகர்களை கடத்தி அவர்களிடம் கப்பம் பெறுவது பற்றிய தகவல்களை இச் செய்தி சேகரிக்கும் நடவடிக்கை தர ஆரம்பித்திருந்தது. அமைச்சர் ஒருவர் தனது தொகுதியிலுள்ள சிறுபான்மையினரை பாதுகாக்க அரசாங்கம் தவறியுள்ளதாக ஜனாதிபதிக்கு அறிவித்திருந்ததன் மூலமாக அநாமதேயமான முறையில் இச்செய்திக்கான தகவல் மூலம் கிடைத்திருந்தது.

எவரையும் நேரடியாக குறிப்பிடாது இச்செய்தி அறிக்கை முதலில் வெளியா-னது. இத்தகவல் உண்மையானது. இதற்கு ஆதாரமாக சில வங்கிக்கணக்குகள் கப்பம் கொடுக்கப்பட்டதை எடுத்துக்காட்டின.

இந்த ஆரம்ப தகவலின் பின்னர் பாதிக்கப்பட்டோரின் உறவினர்கள், அந்தரங்கத் தகவல்கள் சகிதம் தமது பொலிஸ் முறைப்பாடு பிரதிகளோடு பொலிஸ் நிலை-லயம் வந்தனர். இதன்காரணமாக சண்டே லீடர் பத்திரிகையும் வேறு செய்தி நிறுவனங்களும் இலங்கையின் மேல்மாகாணத்திலும், வேறிடங்களிலும் இடம்பெறும் கடத்தல்கள், கப்பம் பெறுதல் பற்றிய தகவல்களை வெளியிட ஆரம்பித்தன.

சில மாதங்களுக்குப் பின்னர் இந்த ஆட்கடத்தல், கப்பம் பெறும் நடவடிக்கைகளில் நடவடிக்கைகளின் பின்னணியில் ஒரு ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி இருப்பதையும் அவருக்கு செல்வாக்குப் படைத்த பலரது உதவி இருந்தமையும் தெரியவந்தது. நாட்கள் செல்ல செல்ல முக்கிய சூத்திரதாரியின் அடையாளம் நன்கு நிரூபணமானது. நன்கு ஆராய்ந்ததன் மூலமும், பலதரப்பட்ட செய்திமூலங்கள் வாயிலாகவும், பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தவர் அரசியல்வாதிகள் எனப் பலதரப்படடோர் மூலமாகவும் அந்நபர் யார் என்று அறியப்பட்டார்.

இருப்பினும் அச்சூத்திரதாரி ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ள விபரம் அநாமதேய தகவல் மூலம் சண்டே லீடர் பத்திரிகைக்கு கிடைக்கும்வரை உறுதியாகவில்லை. இரு செய்தியாளர்கள் குறித்த ஹோட்டலுக்குச் சென்று அங்கு அவர் தங்கியிருந்த அறைக்கு வெளியே நின்று அவர் வெளிவரும்போது அவரைப் படம் பிடித்தனர்.

ஓர் எதிர்க்கட்சி உறுப்பினர் இந்த நபரின் அடையாளத்தை வெளிப்படுத்தி சூடான விவாதமொன்றை பாராளுமன்றத்தில் நடத்தி குறித்த ஹோட்டலில் தேடுதல் நடத்தி அச்சூத்திரதாரியைக் கைது செய்யும்படி கேட்டிருந்தார்.

இவ்விவாதத்தின் இரு தினங்களின் பின்னர் சண்டே லீடர் பத்திரிகை குறித்த செய்தியை வெளியிட்டிருந்து. அரசாங்கம் அச்சூத்திரதாரி பற்றியும், அவரது மறைவிடம் பற்றியும் எதுவும் தெரியாதென மறுத்தது. அதன்பின்னர் அதிகாரிகள் அச்சூத்திரதாரியை கைது செய்து குற்றப்புலனாய்வுப் பொலிஸ் பிரிவில் தடுத்து வைத்தனர். இக்கைதையடுத்து கொழும்பில் ஆட்கடத்தல் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதென ஒரு சிரேஷ்ட அமைச்சர் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

**செய்திமூலங்கள் இப்படி இருத்தலாகாது:** இலங்கை ஊடகத்துறையில் உள்ள முக்கிய பிரச்சினை என்னவெனில் செல்வாக்கு மிக்க செய்திமூலங்கள் எதை எழுதவேண்டும், எழுதக்கூடாது என செய்தியாளருக்கு கூறிவிடுகின் றன . இதற்கு முக்கிய காரணமென்னவெனில் செய்தியாளர்கள் அனுபவமற்றவர்களா கவும், தன்னம்பிக்கையற்றோராகவும் இருப்பதேயாகும். அவர்கள் செய்தி மூலங்களுடன் பயம் காரணமாக பகைக்க விரும்புவதில்லை. செய்திகளை பிரசுரமாகமுன்னர் செம்மைப்படுத்தும் செயலை அரசியல்வாதிகள் மட்டும் செய்வதில்லை. தனியார் நிறுவன முக்கியஸ்தர்களும் வீடியோக்களை அவை ஒளிபரப்புச் செய்யப்படுமுன்னர் செம்மைப்படுத்த முயற்சிக்கின்றனர். இந்நிலையில் இப்பணி செய்தியாளருடையது. இதில் எந்தவொரு செய்திமூலமும் தலையிடலாகாதென்பதை நினைவூட்ட வேண்டியதாகவுமிருக்கின்றது.

**சட்ட மற்றும் ஒழுக்க செய்தி மூலங்களின் விடயங்கள்:** இலங்கையில் புலனாய்வு செய்யும் செய்தியாளரைப் பாதுகாக்கும் சட்டங்கள் இல்லை. இதனால் புலனாய்வுச் செய்தியாளர்கள் அடிக்கடி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்படுகின்றனர். அப்போது செய்தி மூலங்களின் பெயர், விபரங்கள் கேட்கப்படுகின்றன. அத்துடன் செய்தியாளரும் நீதிமன்றம் மூலமாக செய்திமூலங்களின் பெயர்கள், குறிப்புப்புத்தகங்களை ஒப்படைக்கும்படியும் கோரப்படுகின்றனர்.

இலங்கையில் செய்திமூலங்களுக்கான சட்ட பாதுகாப்பு பலவீனமாக உள்ளது. ஆயினும் முக்கியத்துவம்மிக்க சந்திரிகா குமாரதுங்க எதிர் லக்பிம என்ற வழக்கில் இலங்கை நீதித்துறை செய்திமூலத்தின் பாதுகாப்பை ஏற்றுக்கொண்டிருந்தது.

இவ்வழக்கில் லக்பிம என்ற சிங்கள வாரப்பத்திரிகை ஆசிரியருக்கு ஜனாதிபதி சந்திரிகாவை களங்கப்படுத்தும் குற்றநோக்கம் இருக்கவில்லை என கொழும்பு மேல் நீதிமன்றம் ஏற்றிருந்தது. அத்துடன் குறித்த முக்கிய செய்திமூலத்தை லக்பிம ஆசிரியர் பாதுகாத்ததையும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதோடு பத்திரிகையாசிரியர்களையோ பதிப்பாளர்களையோ செய்தி மூலங்களை வெளியிடுவது பற்றி கட்டாயப்படுத்த முடியாதெனவும் நீதிமன்றம் வலியுறுத்தியிருந்தது.

இலங்கைப் பத்திரிகையாளர்கள் உரிய பாதுகாப்பு வரையறைக்குள் இல்லாத போதிலும் சிலர் தமது செய்திமூலங்கள் பற்றிய விபரங்களை புலனாய்வுப் பொலிஸாரிடமும் நீதிமன்றிடமும் வெளியிட மறுத்துள்ளனர். இலங்கைப் பத்திரிகையாசிரியர்கள் குழாத்தினால் வெளியிடப்பட்ட தொழில் ரீதியான நடைமுறைகள் குறித்த பிரிவு 5.1 என்ற வரைபு தெளிவாகக் குறிப்பிடுவது என்னவெனில் செய்திமூலம் தனது அனுமதியை தராதவரை அதனை வெளிப்படுத்த முடியாத உரிமையை செய்தியாளர்கள் கொண்டுள்ளனர். இது ஒரு பொன்னான நியதி. இதனை அனைத்து செய்தித் செயற்பாட்டாளர்களும் அனுசரிக்கவேண்டியுள்ளது.

## அத்தியாயம் ஆறு

# பத்திரிகை தடயங்கள்

புலனாய்வுச் செய்தியாளர்கள் தேவையான ஆவணங்களைப் பெறும் விதத்தில் மனித மூலங்களை பயன்படுத்துகின்றனர்.

ஆவணங்களுடன் பரிச்சயமாகித் தயாராதல் புலனாய்வுச் செய்தியாளரை ஏனைய பொதுப்படையான செய்தியாளர்களிடமிருந்து வேறுபடுத்துகிறது. ஆழமாகத் தகவல்களைப் பெறுவதும், கிடைக்கப்பெறுகின்ற அறிக்கைகளின் எண்ணிக்கையுமே ஒரு புலனாய்வுச் செய்தியாளரை வேறுபடுத்திக் காட்டுகிறது என்று ஓர் அமெரிக்க ஊடகவியலாளர் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வளவுக்கு எவ்வளவு ஆவணங்களை ஒரு செய்தியாளர் சேகரிக்கிறாரோ, அவ்வளவு தூரம் அவர் மனித செய்திமூலங்களில் தங்கியிருக்கத்தேவையில்லை. ஏனெனில் ஆவணங்கள் கச்சிதமாக தகவல்களை மாற்றமின்றித் தருகின்றன. ஆனால் மனித மூலங்கள் தமது நிலைப்பாடுகளை மாற்றமுடியும். இந்த நல்ல காரணத்துக்காகவே ஆவணங்கள் முக்கியம் பெறுகின்றன. ஊழல், தவறிழைப்பது சம்பந்தமான விடயங்களில் ஆவணங்கள் நல்ல ஆதார மாகின்றன. அத்துடன் ஆய்வு செய்தல் உட்பட பல்வேறு நிலைகளில் ஆராய்வது குறித்ததாக அவை இருக்கின்றன. ஆவணங்கள் பலமான ஊடக ஆயுதங்களாகும்.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஆவணங்களை அணுகுவதற்கும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் உரிமை என்பவை சம்பந்தப்பட்டதாக ஊடகவியலாளருக்கும், ஏனைய பிரஜைகளுக்கும் நிறையவே வாய்ப்பைக் கொடுக்கின்றது. ஆயினும் ஆவணங்கள் குறித்த நீண்ட பாரம்பரியங்கள் உள்ள நாடுகளிலும் செய்தியாளர்கள் தமக்கு வேண்டிய ஆவணங்களைப் பெற சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றை வழங்குவதில் செய்தியாளர்களுக்கு சலிப்புத்தன்மையை உண்டுபண்ணும் விதத்தில் அதிகாரிகள் நடந்து கொள்கின்றனர்.

லொஸ் ஏஞ்சல்ஸைச் சேர்ந்த செய்தியாளர் ஒருவர், ஆறு ஆண்டுகள் தமக்கு வேண்டிய ஆவணத்தைப் பெற காத்திருந்ததோடு, அண்மையிலேயே பல வேண்டுகோள்களுக்குப் பின்னர் எவ்.பி.ஐ என்ற அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வு நிறுவனத்தின் சர்ச்சைக்குரிய கொலை தொடர்பான அறிக்கையை பெற்றிருந்தார். இக்கொலை 1970 ஆம் ஆண்டு நடந்திருந்தது. த நியூயோர்க் டைம்ஸ் ஒரு வருடத்துக்கும் மேலாக அமெரிக்க பாதுகாப்பு திணைக்கள அறிக்கையை பெற முனைந்ததோடு, இறுதியாக மேன்முறையீட்டு நீதிமன்றமூடாக அதனைப் பெற்றிருந்தது. இந்த நடவடிக்கை 2009 ஆம் ஆண்டு புலிற்ஸர் பரிசுக்குமான வாய்ப்பையும் தேடித்தந்தது.

இலங்கையில் தகவல் உரிமைச்சட்டம் இல்லை. இதனால் முக்கிய அரச ஆவணங்களைப் பெறவும் அதன் அந்தரங்கத்தன்மையைப் பேணவும் இலங்கைச் செய்தியாளர்கள் கடுமையாக உழைக்கவேண்டியுள்ளது.

ஆயினும் முக்கிய ஆவணங்களைப் பெறுவதற்கான புலனாய்வுச் செய்தித்துறைக்கு வாய்ப்பான நிறுவனங்களும் உள்ளன.

- **பாராளுமன்றம்:** ஹன்சார்ட் ஆவணம் பாராளுமன்றத்தின் வாய்மூல அறிக்கையாகும். இதில் பாராளுமன்ற நடைமுறைகளை அறியமுடியும். ஆயினும் பல்வேறு கமிட்டி அறிக்கைகள் அந்தரங்கமானவை. சிலவற்றை மக்கள் அணுகமுடியும். வரவுசெலவுத்திட்ட முன்கணிப்பீடுகளை செய்தியாளர்களும் பெறமுடியும்.
- **குடிசனமதிப்பீடு புள்ளிவிபரவியல் திணைக்களம்:** சனத்தொகை பரிமாணம் மற்றும் அதுகுறித்த தகவல்கள்.
- **கம்பனிகள் பதிவாளர்:** இயக்குநர் சபை அறிக்கைகள், பங்குமுதலீடு, நிறுவன ஷரத்துகள்.
- **இலங்கை மத்தியவங்கி:** மாதந்தோறும் முக்கிய தரவுகள், புள்ளிவிபரங்கள், அறிக்கைகள், பொருளாதார ஆய்வுகள், உரைகள் என்பவை அடங்கிய சஞ்சிகை வெளியீடு.
- **சர்வதேச நிறுவனங்கள் / கடன் வழங்கும் ஏஜென்ஸிகள்:** உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய தேசிய அபிவிருத்திதிட்டம் ஆகியவை உட்பட பல்வேறு நிறுவனங்கள் இலங்கை பற்றிய ஆய்வறிக்கைகளை வெளியிடுகின்றன.
- **உள்ளூராட்சி அதிகாரசபைகள்:** பட்ஜட் ஆவணங்கள் வருடாந்த அபிவிருத்தித்திட்ட அறிக்கைகள் என்பவை பெறப்படமுடியும்.
- **மாவட்ட செயலகங்கள்:** இங்கு கிடைக்கப்பெறும் தகவல்கள், ஆவணங ்களைப் பெற பெரிதும் உதவுகின்றன.
- **அரசாங்க பதிப்பகம்:** இங்கு சகல அரசாங்க பதிப்புகளையும் அணுகமுடியும்.

**ஆவணங்களை கையாளுதல்:** ஆவணங்களைப் பெற்றுக்கொண்டதும் அதன்மூலப் பிரதியை கோவைக்குள் வைத்தபின்னர் அதன் நகல் பிரதியைப் பாவித்தே விடயங்கள் குறித்து குறிப்பெடுத்து நிதானமாக அறிந்து கொள்ளவேண்டும். ஆழமாக ஒரு செய்தியாளர் ஆவணங்களை ஆராயும்போது நிறையவே விடயங்களை விரிவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

**ஆவணங்களை ஒழுங்குபடுத்துதல்:** ஆயிரக்கணக்கில் ஆவணங்கள் இருக்கலாம் அல்லது சாதாரண தகவல்களோடு குறிப்பிட்ட சிலவாக காணப்படலாம். எப்படியிருந்தபோதிலும் ஆவணங்கள், தகவல்களை ஒழுங்கமைத்தல் ஒரு நல்ல செய்தியாளருக்குரிய விசேட அம்சமாகும். இதன்மூலம் தனக்குத் தேவையான விடயங்களை இலகுவாகவும், ஒழுங்காகவும் ஒரு செய்தியாளரால் பெறமுடியும்.

ஓர் ஆக்கமுள்ள புலனாய்வுச் செய்தியாளர் பல்வேறு விடயங்களின் பொருட்டு பல்வேறு ஆவணங்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதுண்டு.

நடந்த சம்பவங்களை ஒரு கோவைப்படுத்தலாக ஆவணங்கள் மூலமாக அணுகுவதன் மூலம் அதிகளவு பெறுமதிமிக்க தகவல்களை ஒரு செய்தியாளர் அறிய முடியும். ஊழல்பற்றிய ஆய்வு, அது பற்றிய விபரங்கள், எங்கு, எவர், எப்போது போன்ற தகவல்களையும் பெறமுடியும். முழு ஆவணங்களையும் பாவிக்க வேண்டிய தேவையில்லாவிடினும், ஒரு கால அனுமானத்தினுள் அவற்றை அடக்கமுடியும். இது மிகப்பிரயோசனமானது.

உயிரெழுத்து வரிசையில் ஆவணங்களை ஒழுங்குபடுத்துவதும் மற்றுமொரு முறையாகும்.

இறுதியாக பார்க்குமிடத்து ஆவணங்கள் பயனுள்ளனவையாக அமையவேண்டும். ஓர் அரசாங்க பாடசாலையில் பிள்ளையை சேர்ப்பதற்கு எவ்வாறு பெற்றோர் லஞ்சம் வழங்கினர். ஒரு செய்தியாளர் ஐந்து ஆரம்ப பாடசாலைகளில் அனுமதி பெற்ற பிள்ளைகளின் 30 பெற்றோர்களை பேட்டி காண்பதன் மூலம் ஒவ்வொரு பேட்டியையும் தொகுத்து இறுதியில் ஆவணமாக்க முடிகிறது.

ஆவணங்கள் பெற்றோர்களது பெயர்களின் அடிப்படையிலும் ஒழுங்குபடுத்தமுடியும். ஒவ்வொரு பாடசாலைக்குமென தனித்தனியாக கோவைகளை தயாரித்து அவற்றுள் அவ்வப்பாடசாலைக்குரிய ஆவணங்களை வைக்கமுடியும். இதன்மூலம் இலகுவாக அனைத்தையும் ஒழுங்குபடுத்தி செய்தியாளரால் ஆராயமுடிகிறது. அத்துடன் ஒவ்வொரு கோவையிலும் உள்ள முக்கிய விடயங்களை குறிப்பிட்டு அவற்றை தனது செய்தியில் குறிப்பிட முடியும்.

பாடசாலை ஆவணங்களை கோவையிடுவது வேறுவிடயங்களுக்கும் பயனளிக்கும். இருபாடசாலைகளைச் சேர்ந்த பெற்றோர்கள் தாம் ஆயிரம்ரூபா லஞ்சம் கொடுத்ததாக கூறியிருக்கலாம் . வேறு மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த பெற்றோர் தாம் ஐம்பது ரூபாவை வழங்கியதாக கூறியிருக்கலாம். எனவே இந்த வேறுபாடுகள், மற்றும் எதற்காக பெருந்தொகை லஞ்சம் வழங்கப்பட்டது. ஒரு மாவட்டத்தில் அப்பாடசாலைகள் ஒரே அதிகாரியின் கீழ் இருப்பதாகவும் ஆயினும் கூடுதல் வசதிகளைக் கொண்டிருந்தால் அவற்றுக்கான லஞ்சப்பணம் கூடுதலாகப் பெறப்பட்டிருக்கலாம் எனக்கருதமுடியும். இல்லையேல் இவ்விடயம் வேறு விதமாக புறக்கணிக்கப்பட்டிருக்கும்.

| உயிரெழுத்துகள் | காலப்பதிவு |
|---|---|
| A | July 30, 2011 (recent most) |
| B | June 3, 2011 |
| C | December 1, 2010 |

**தரவு அறிக்கை:** மிகவும் சிறந்த மற்றும் தெளிவாக அறிந்துகொள்ளக்கூடிய விதத்தில் தரவு அறிக்கைகளை ஒழுங்குபடுத்தவேண்டும். அல்லது நமக்குரியதை தயாரிக்கவேண்டும். இத்தரவு அறிக்கை புலனாய்வுத் தகவல்களைத்திரட்டி விடயங்களை ஆராய்வதில் மிக முக்கியமானவை . ஒரு தரவு அறிக்கையை தயாரிப்பது, பல்வேறு விடயங்களை பலதரப்பட்ட கோணங்களிலிருந்து பெற்று ஒருங்கிணைப்பதாக இருக்கின்றது.

“எக்ஸெல்” போன்ற கணணி மென்பொருள் வடிவமைப்புக்கள் இதுபோன்ற தரவு அறிக்கையை தயாரிக்க உதவுகின்றன. இதன்மூலம் பல்வேறு பயன்களை சலிப்பின்றிப் பெறமுடியும்.

லஞ்சம் பெற்றது சம்பந்தமான பேட்டிகள் இத்தரவுகள் மூலமாக கணணியில் உள்ளடக்கப்படமுடியும். இதன்மூலம் செய்தியாளரால் இந்த முறைகேடு குறித்த தன்மைகளையும், விபரங்களையும் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள், மற்றும் லஞ்சம் பெற்ற பாடசாலைகள், லஞ்சம் வழங்கப்பட்டதா? பிள்ளைகள் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டனரா? போன்ற விபரங்களையும் இந்த தரவு அறிக்கை மூலம் அறிய முடியும்.

| Name | School | Town | Bribe | Paid? | Admitted |
|---|---|---|---|---|---|
| Anishka | 1 | Galle | 500 | Y | Y |
| Aravinda | 4 | Jaffna | 400 | Y | Y |
| Ariyadasa | 2 | Kandy | 1000 | N | N |
| Ariyapala | 5 | Matale | 350 | Y | N |
| Ariyaratna | 3 | Kegalle | 200 | Y | Y |
| Ariyasiri | 3 | Kegalle | 200 | Y | Y |
| Arjuna | 2 | Kandy | 800 | Y | Y |
| Asanka | 6 | Anuradhapura | 150 | N | Y |
| Ashan | 5 | Matale | 300 | Y | N |
| Athula | 1 | Galle | 500 | Y | Y |
| Hashini | 1 | Galle | 500 | Y | Y |
| Hemi | 1 | Galle | 500 | Y | Y |
| Hasarangani | 2 | Kandy | 1000 | Y | Y |
| Chandrika | 4 | Jaffna | 400 | Y | Y |
| Bambi | 2 | Kandy | 1000 | N | N |
| Mahindra | 3 | Kegalle | 200 | Y | Y |

ஒவ்வொரு பகுதியாக வகுத்துக்கொள்ளும்போது செய்தியாளர் ஒவ்வொரு கோணத்திலும் ஆராயக் கூடியதாகவும் மேலும் தகவல்களுடன் நல்லதோர் செய்தியையும் வழங்கமுடியும். வழங்கப்பட்ட லஞ்சத்தொகை பற்றிப் பார்ப்போம்:

| Name | School | Town | Bribe | Paid? | Admitted |
|---|---|---|---|---|---|
| Ariyadasa | 2 | Kandy | 1000 | N | N |
| Hasarangani | 2 | Kandy | 1000 | Y | Y |
| Bambi | 2 | Kandy | 1000 | N | N |
| Arjuna | 2 | Kandy | 800 | Y | Y |
| Anishka | 1 | Galle | 500 | Y | Y |
| Athula | 1 | Galle | 500 | Y | Y |
| Hashini | 1 | Galle | 500 | Y | Y |
| Hemi | 1 | Galle | 500 | Y | Y |
| Aravinda | 4 | Jaffna | 400 | Y | Y |
| Chandrika | 4 | Jaffna | 400 | Y | Y |
| Ariyapala | 5 | Matale | 350 | Y | N |
| Ashan | 5 | Matale | 300 | Y | N |
| Ariyaratna | 3 | Kegalle | 200 | Y | Y |
| Ariyasiri | 3 | Kegalle | 200 | Y | Y |
| Mahindra | 3 | Kegalle | 200 | Y | Y |
| Asanka | 6 | Anuradhapura | 150 | N | Y |

இத்தகவல் எந்தெந்த நகரங்களில் கல்வி அதிகாரிகள் பேராசையோடு இருந்துள்ளார்கள் என்பதை விளக்குகிறது. கணித அடிப்படையில் இந்த அட்டவணை தயாராகியுள்ளதையடுத்து ஒவ்வொரு நகரிலும் சராசரியாகப் பெறப்பட்ட லஞ்சத்தொகையை செய்தியாளர் அறிய முடியும். கண்டியில் சராசரித்தொகை ருபா 950 ஆகும். இது பல்வேறு கேள்விகளுக்குரியதாகின்றது.

இதுபோன்ற அட்டவணைத்தொகுதி செய்தியாளருக்கு ஒரு விஞ்ஞானிக்குப்போல தனது தகவல்களை விரிவாக உரிய அனுமானத்தோடு தயாரிக்க உதவுகிறது. தன்னைத்தானே கேள்விகள் கேட்டு இதுபற்றிச் செய்தியாளர்கள் ஆராயமுடியும். லஞ்சம் வழங்கியவுடனேயே உங்கள் பிள்ளைக்கு அனுமதி கிடைக்கிறதா? என்ற கேள்வியும் எழுகிறது.

| Name | School | Town | Bribe | Paid? | Admitted |
|---|---|---|---|---|---|
| Ariyadasa | 2 | Kandy | 1000 | N | N |
| Bambi | 2 | Kandy | 1000 | N | N |
| Ariyapala | 5 | Matale | 350 | Y | N |
| Ashan | 5 | Matale | 300 | Y | N |
| Hasarangani | 2 | Kandy | 1000 | Y | Y |
| Arjuna | 2 | Kandy | 800 | Y | Y |
| Anishka | 1 | Galle | 500 | Y | Y |
| Athula | 1 | Galle | 500 | Y | Y |
| Hashini | 1 | Galle | 500 | Y | Y |
| Hemi | 1 | Galle | 500 | Y | Y |
| Aravinda | 4 | Jaffna | 400 | Y | Y |
| Chandrika | 4 | Jaffna | 400 | Y | Y |
| Ariyaratna | 3 | Kegalle | 200 | Y | Y |
| Ariyasiri | 3 | Kegalle | 200 | Y | Y |
| Mahindra | 3 | Kegalle | 200 | Y | Y |
| Asanka | 6 | Anuradhapura | 150 | N | Y |

எதிர்பார்த்ததைப்போலவே கண்டியில் லஞ்சம் வழங்காத இரு பெற்றோரின் பிள்ளைகளது அனுமதிகள் ரத்தாகின. மாத்தளையிலிருந்து வந்த இரு பெற்றோர்கள், லஞ்சம் கொடுத்த போதிலும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் இருதடவைகள் வஞ்சிக்கப்பட்டதை இது காட்டுகின்றது. இவ்விடயம் தனது குறிப்புப்புத்தகத்தில் எடுத்த பேட்டிகள் ஊடாகவோ கணணிக்கோவைகள் ஊடாகவோ செய்தியாளரின் கண்களில் பட்டிருக்கமுடியாது.

மற்றொரு பக்கம்: இவ் அட்டவணை அநுராதபுரத்தைச்சேர்ந்த பெற்றோர் ஒருவர் லஞ்சம் கொடுக்கவில்லை எனவும் அவரிடம் கேட்கப்பட்ட லஞ்சத்தொகை ரூ 150 மட்டுமே எனவும் தெரியவந்துள்ளது. இரு விதத்திலான அணுகுமுறைகளை இத்தகவல் தொடர்பாக இவ்விடயம் வழங்கி நிற்கிறது.

அட்டவணைத் தொகுப்பை சோதிக்கும் போது அந்த அட்டவணை குறிப்பிடாத மற்றொரு விடயம் பற்றியும் கவனத்தில் கொள்ளவேண்டும். இதன் ஊடாக மற்றொரு அட்டவணைக் கோவையைத் தேட முடியும். அதிலும் தகவல்கள் கிடைக்காத பட்சத்தில் தனக்குக் கிடைத்த தகவல்களுடன் செய்தியை சுருக்கமாக எழுதவேண்டும். பொதுவாகவே அனைத்து பெற்றோர்களும் தமது பிள்ளைகளை அனுமதிக்க லஞ்சம் வழங்க வேண்டுமென விரிவான முறையில அறிமுகமொன்றை செய்தியாளர் எழுத நேரிடும். (இது ஓர் ஊகமாக இருக்கலாம்). நம்பத்தகுந்த விடயங்கள் எமது அட்டவணைத்தொகுதியில் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.

## அபாயகரமான பஸ் சாரதிகள் : ஓர் ஆய்வு

இந்திய ஊடக கல்வி நிறுவனமொன்றின் (IIJNM) மாணவர்கள் இலத்திரனியல் தரவு அறிக்கையை மிகச்சிறப்பான முறையில் பயன்படுத்தி பெங்களூரில் உள்ள பஸ் போக்குவரத்து முறை பற்றி ஆராய்ந்தனர். அப்போது பாதசாரிகள், சைக்கிள் ஓட்டுபவர்களை மோதிப்பலியெடுக்கும் பஸ்சாரதிகளுக்கு என்ன நடக்கின்றதென்பது பற்றி பெங்களூர் பஸ் நடைமுறைகள் மக்களுக்கு தவறான தகவல்களை வழங்குகின்றன என்று அந்த ஊடக மாணவர்கள் தாம் சேகரித்த தகவல்கள் முலம் அறியத்தந்திருந்தனர்.

மாணவர்களுக்கு பதிலளித்த அதிகாரிகள் சாரதிகளே விபத்தில் ஈடுபடுவதாகவும் குற்றவாளிகளாகக் காணப்படும் சாரதிகள் பணிநீக்கம் செய்யப்படுவதாகவும் பஸ் வண்டிகளை போக்குவரத்தில் ஈடுபடுத்துபவர்கள் அல்லர் என்றும் கூறியிருந்தனர்.

இது பற்றி மேலும் ஆராயவிரும்பிய மாணவர்கள் இந்திய தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் விபத்துக்கள் பற்றிய விபர அறிக்கையைப் பெற்றனர். இதன் பின்னர் அம்மாணவர்கள் தரவு அறிக்கை ஒன்றை தயாரித்தனர். அதில் பஸ்வண்டி கம்பனிகள், அவற்றின் உரிமையாளர்கள், பஸ்சாரதிகள், அவர்களது இலக்கங்கள், சந்தித்த விபத்துக்கள், புரிந்த தவறுகள் போன்றவை அந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டன. கடந்த 8 வருட காலத்தில் இடம்பெற்ற 650 விபத்துக்கள் பற்றிய விபரங்கள் அம்மாணவர்களால் சேர்க்கப்பட்டன. அந்த அறிக்கைகளின் அடிப்படையில் பார்க்கும்போது அதிகாரிகள் மக்களுக்குக் கூறியவற்றுக்கு மாறாக வேறு பல தகவல்களும் வெளியாகியிருந்தன. புள்ளி விபரங்கள் 75 சதவீதமான மரணத்தை உண்டுபண்ணும் விபத்துக்கள் பஸ் சாரதிகளால் ஏற்படுத்தப்பட்டமை தெளிவாகியிருந்தது. இச்சாரதிகளில் 9 சதவீதமானவர்கள் மட்டுமே தண்டிக்கப்பட்டனர். ஏனையோர் மீது மெத்தனப் போக்காக நடந்து கொண்டிருப்பது தெரியவந்தது. சம்பளத்தோடு மீளவும் சாரதிகள் பணிக்கு அமர்த்தப்பட்டனர்.

இதில் அதிர்ச்சி தரும் தகவல் என்னவெனில் பணி நீக்கம் செய்யப்படும் முன்பே 28 பஸ் சாரதிகள் இரண்டு அல்லது மூன்றுக்கு மேற்பட்டவர்களை பலியெடுத்திருந்தனர். மற்றுமொரு தகவலில் சாரதி ஒருவர் ஒரு மாதத்தில் இருவரை விபத்தில் கொன்றிருந்தார்.

**ஆவணங்களை பகுதியாக மறைத்தல்:** உங்களது சொந்த தரவு அறிக்கையை அடிப்படையிலிருந்து உருவாக்கவேண்டுமென்ற நிலை இல்லை. ஏற்கனவே இருக்கும் இரு விதத்திலான தரவு அறிக்கைகள் மூலம் அவற்றை பெறமுடியும்.

புதிய ஊடக தொழில்நுட்ப கருவிகள் மூலமான இந்த அணுகுமுறை புலனாய்வுச் செய்தியாளர்களுக்கு பெரிதும் உதவுகின்றது. விசேடமாக வரைபடங்கள் மற்றும் வேவு பார்க்கக்கூடிய தகவல்கள் மூலமாக இதனை அணுகமுடியும்.

உதாரணமாக 2010 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களில் பரவலாக நடந்த வன்முறைகளை இலங்கை ஊடகங்கள் வெளிப்படுத்தின. இத்தகவல்கள் வழமையானவை போன்று அனைத்து ஊடகங்கள் வாயிலாகவும் சிலகாலம் வெளியாகியிருந்தன. ஆயினும் உண்மையில் பல்கலைக்கழகங்களில் நடந்தவை பற்றி சில தகவல்களை http://groundviews.org என்ற பிரஜைகள் ஊடக இணையத்தளம் கூகிள் மூலமாக வெளிப்படுத்தும் வரை தெரிந்திருக்கவில்லை. இத்தகவல்கள் ஊடகவியலாளர்களால் தவறவிடப்பட்டவையாக இருந்தன.

வன்முறைகள் ஏறத்தாழ அனைத்து இலங்கைப் பல்கலைக்கழகங்களையும் பாதித்துவிட்டிருந்தன. அத்துடன் ஆயிரக்கணக்கான மாணவர்களையும், பிக்குமாணவர்களையும் இவ்வன்முறைகள் உள்ளடக்கியிருந்தன. இது ஒரு புலனாய்வுச் செய்தித்திரட்டலாக பல்வேறு தகவல்களை உள்ளடக்கியிருந்தது.

ஒரு புலனாய்வுச் செய்தியாளர் ஆணித்தரமான ஆவணங்களிலேயே தங்கியிருக்கவேண்டும். இல்லையேல் ஆபத்தை எதிர்நோக்க நேரிடும்.

ஆவணங்களை ஆராய்வதற்கான அடிப்படை நியதிகள் சில:

- **செய்தி மூலத்தை பரிசீலிக்கவும்:** ஆவணங்கள் எங்கிருந்து எப்படி வந்தன என்று அறியவும். ஆவணத்தைத் தந்தவர் அதனை அணுகக்கூடியவரா? குறித்த விடயத்தில் அவர் நிபுணத்துவமுடையவரா? குறித்த செய்திமூலத்திடம் பொய்கூறும் பழக்கமுள்ளதா? வேறொரு மனித செய்தி மூலம் குறித்த ஆவணத்திற்கு உறுதியளிக்கிறதா? போன்றவற்றை உறுதி செய்யவேண்டும்.

- **தகவலை பரிசீலிக்கவும்:** குறித்த ஆவணம் அண்மையில் வெளியானதா? அதன் உள்ளடக்கம் ஆராயப்படக்கூடியதா?

- **உள்ளார்ந்த குறுந்தகவல்கள்:** ஒரு தவறான ஆவணத்தை நீங்கள் ஆச்சரியத்தோடு நோக்கும் போது நீங்கள் சில முரண்பாடுகளை காணலாம். சொற்பிழைகள், விநோதமான வார்த்தைகள் என அவற்றில் அடங்கலாம். எனவே முடியுமானால் அந்த ஆவணத்தின் ஒரு வெறுமையான பக்கத்தை எடுத்து அதனை ஒப்பிட்டு நோக்கி தவறுகளை அறியலாம்.

- **ஒரு நிபுணரிடம் காண்பித்தல்:** இவை சர்ச்சைக்குரிய ஆவணங்களாயின், புலனாய்வுப்பணி நிறைவேறும்வரை பொறுத்திருக்க வேண்டாம். அந்த ஆவணத்தோடு பரிச்சயமான பக்கச்சார்பற்ற நிபுணரிடம் காண்பிப்பதன் மூலம் அது சரியானதா என்பதை உறுதிப்படுத்தமுடியும்.

- **சம்பந்தப்பட்டவரிடம் காண்பித்தல்:** குறித்த ஆவணத்தை உறுதிப்படுத்துவதற்கு அதனை எழுதியவரிடம் பேட்டிகாணும் போது காட்டிக் கேட்க முடியும். இல்லையேல் அதனை தயாரித்தளித்த நிறுவன தலைவரிடம் கேட்க முடியும். குறித்த ஆவணத்தை இனங்காண முடிகிறதா? என சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் கேளுங்கள் அப்போது அவர் நடந்து கொள்ளும் முறையிலிருந்து அந்த ஆவணத்தின் உண்மைத்தன்மை பற்றி அறியமுடியும்.

- **நடுநிலையை சோதித்தல்:** விஞ்ஞானிகள் தமது கண்டுபிடிப்பின் நடுநிலைத்தன்மைக்காகப் பாடுபடுவதுண்டு. பத்திரிகையாளர், குறிப்பாக புலனாய்வுச் செய்தியாளரும் அவ்வாறே செயற்படவேண்டும். அத்துடன் இந்த நடுநிலைத்தன்மை உங்களது ஆவணங்களை ஆசிரியரிடம் காண்பிக்குமளவுக்கு இட்டுச் செல்லாததை உறுதிப்படுத்தவும்.

- **சரியான நேரம்:** சர்ச்சைக்குரிய ஆவணமொன்று திடீரென சரியான நேரத்தில் வெளிப்படுமானால் அந்த ஆவணம் சில சமயங்களில் ஒரு போலித்தன்மையானதாகவும் இருக்கலாம்.

சட்ட பிரச்சினைகள் அல்லது விடயங்கள். இறுதியாக ஆவணங்கள் என்பது ஒரு புலனாய்வுச் செய்தியாளரின் சட்டப்பாதுகாப்புக்குரியவையாகும். தனது செய்தி வெளியான பின்னர் குறைந்த பட்சம் இருவருடங்களாவது குறித்த அனைத்து ஆவணங்களையும் செய்தியாளர் தம்வசம் வைத்திருக்கவேண்டும். சில சமயங்களில் நஷ்டஈட்டு வழக்குகள் கூட தொடரப்படலாம். குறித்த ஆவணங்கள் மிகவும் முக்கியமானவையாயின் செய்தி நிறுவன சட்டப்பிரிவின் பாதுகாப்பிலும் வைக்கமுடியும்.

## அத்தியாயம் ஏழு

# இலத்திரனியல் சுவடுகள்

பத்திரிகை ஆவணங்கள் ஒரு குறித்த நேரத்தில் அல்லது ஒரு குறித்த இடத்தில் காணப்படும். ஆனால் அதிசயிக்கத்தக்க தொழில்நுட்பம் காரணமாக புலனாய்வுச் செய்தியாளர்கள் நேரம், காலம், இடம், சர்வதேச வரையறைகளைக்கடந்து பெருமளவு தகவல்களைப் பெறமுடியும்.

**புதிய ஊடகம் / ஒன்லைன் தேடல்கள்:** "புதிய ஊடகம் " என்ற சொற்பிரயோகம் கம்யூட்டர் மயமான செயற்பாடுகள், படங்கள், வீடியோக்கள், ஒலிவடிவங்கள், வரைபடங்கள், மற்றும் ஏனைய வடிவமைப்புகளையே குறிப்பதாக இருக்கின்றது. இப்புதிய சொற்பிரயோகம், தொலைக்காட்சி, திரைப்படங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள் என்பவற்றைக் குறித்து நிற்கவில்லை.

செய்தியாளர்கள் பிரபலமான கூகிள் (Google) மற்றும் அதுபோன்ற தேடல் இயந்திரம் வாயிலாக தமக்கு வேண்டிய முக்கிய தகவல்கள், செய்தி மூலங்கள் என்பவற்றை தேட முனைகின்றனர். இத்தகைய தேடல்களுக்கு இணையத்தளங்கள், இன்டர்நெட் என்பவற்றை கையாளும் அறிவோடு மின்னஞ்சல் பற்றிய அறிவும் குறைந்தபட்சம் தேவைப்படுவதாக இருக்கின்றது. ஒன்லைன் தேடல்களுக்குப் பயிற்சியும் மிக்க அவதானமும், பொறுமையும் அவசியமாகும். சைக்கிள் ஓடுவது, நீச்சலடிப்பது போன்றவற்றை பயிற்சி செய்வதன் மூலமே பயில முடியும் என்பது போல புதிய ஊடக தேடலுக்கும் பயிற்சி அவசியம்.

அத்துடன் இத்தகைய புதிய சமூக ஊடக செயற்பாடுகள், அவற்றின் நுட்பங்கள் என்பவை பற்றி ஆரம்பத்திலேயே அறிந்திருத்தல் நன்மையானதும், அவசியமானதும் கூட ஏனெனில் புதிதாக அறிமுகமாகிவரும் தொழில்நுட்பங்கள் கணணி மயப்படுத்தப்பட்ட ஊடகத்துறையில் அடிக்கடி மாற்றம் பெறுபவையாகவும், மாற்றஞ் செய்யப்படுபவையாகவும், புதிய புரட்சிகர தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்றவாறு அமைந்திருக்கக் கூடியவையாகவும் காணப்படுகின்றன.

இணையத்தளத் தேடலுக்கான அடிப்படை அம்சங்கள்:


- **தேவையானவை :** இணையத்தளத்தை கையாளுவதற்கு சில கருவிகளும் (ஹாட்வெயர்) பிரயோகங்களும் (சொப்ட்வெயர்) தேவைப்படுகின்றன. ஹார்ட்வெயர் என்பது மடிக்கணணி, அல்லது மேசைக்கணணி என்பவையுடன் சிறந்த இன்டர்நெட் (இணையம்) வசதியோடு (புரோட்பான்ட் விரும்பத்தக்கது) இருக்கவேண்டியதாகின்றது. அதேசமயம் சொப்ட்வெயர் (இதில் பல வகையுண்டு) என்பது கணணியை இயக்குவதற்கு அவசியமாக இருக்கின்றது. மற்றும் இணையத்தில் இணைவதற்கும் தகவல்களைப் பெறுவதற்குமான செயலை இது மேற்கொள்கிறது.

- **தேடல்:** கணணியை இயக்கி இணையத்தில் இணைந்ததும், செய்தியாளர் தாம் தேடும் விடயத்தை சரியான சொற்களை பிரயோகித்து தனக்குத் தேவையான தகவல்களைத் தேட ஆரம்பிக்கின்றார். உதாரணமாக செய்தியாளர் ஒருவர் உள்ளூர் குடிதண்ணீரில் புளோரைட் என்ற இரசாயணக் கலவை காணப்படுவதன் காரணமாக சிறுநீரக நோய் ஏற்படுகின்றது என்ற விடயத்தை ஆராய முற்படுகையில், இணையத்தளம் மூலமாக சிறுநீரகப்பாதிப்பு, மற்றும் புளோரைட் இரசாயணம் ஆகியவைபற்றி அறியமுற்படுகிறார். இது தொடர்பாகவும் தனக்குத் தேவையான விடயங்களை அச்செய்தியாளர் பட்டியலிட்டு புளோரைட் இரசாயணம் தண்ணீருடாக எவ்வாறு சிறுநீரகத்தைப் பாதிக்கின்றதென்பது பற்றிய ஆய்வுக் கட்டுரை பலவற்றை ஆராய்ந்து செய்தித் தகவல்களைத் திரட்டுகிறார்.

- **பரிசீலித்தல்:** தகவல்கள் சரியானவைதானா என்று ஆவணங்களைப் பரிசீலிப்பது போலவே இணையத்தளம் ஊடாக பெற்ற விடயங்களைப் பரிசீலித்தலும் செய்தியாளருக்கு சவாலானதொன்றாகவே இருக்கின்றது. இணையத்தளம் ஊடாக பதிவாகியிருப்பவை பாரபட்சமற்றவை, கச்சி தமானவை, பழமையான வழிமுறைகளைவிட நேர்த்தியானவை எனப் பெரும்பாலும் கருதப்படுவதுண்டு. ஆயினும் இணையத்தளம் மூலமாகப் பெறப்பட்ட தகவல்கள் பெரிதும் பாரபட்சமானவையாகவும் வழமையான தகவல்களைக் கொண்டவையாகவும் இருக்கக்கூடும். குறிப்பாக விக்கிபீடியா போன்ற இணையத்தளங்கள் பகிரங்க செய்தி மூலங்களாக இருக்கின்றன. இதில் எவரும் தகவல்களை சேர்க்கக்கூடியதாகவும் இருக்கின்றது. இத்தகைய நிலையில் செய்தியாளர் நேரடியாக அவற்றை நம்பகத்தன்மையுள்ள விடயங்களாக எடுத்துவிட முடியாது. இணையத்தளப்படங்கள் கூட உருமாற்றப்பட்டவையாக இருக்கலாம். எனவே செய்தியாளர்கள் ஏனைய செய்தி மூலங்களுக்குப் பயன்படுத்தும் அணுகுமுறையையே கணணி இணையத்தளங்களுக்கும் பயன்படுத்தவேண்டும். ஒரு தகவலை சரியாக பரிசீலிக்க முடியாவிட்டால் அதனைப் பயன்படுத்தலாகாது.

- **கூகிள்:** தகவல்களைப் பெறுவது தொடர்பாக இணையத்தளங்களைப் பொறுத்தவரை கூகிள் (www.google.com) மக்கள் மத்தியில் மிகப்பிரபலம் பெற்றதாக விளங்குகிறது. இது எந்த அளவுக்கெனில் "கூகிள் சேர்ச்" என்று வினைச் சொல்லாகவே இப்போது பயன்படுத்தப்படுகிறது. சந்திப்புக்களை மேற்கொள்வதற்கு முன்பதாக சந்திக்கவிருக்கும் நபர் சம்பந்தமான பின்னணி விபரங்கள், மேலதிக தகவல்கள் என்பவற்றுக்காகவும் பொது ஆவணங்கள், செய்தித்தகவல்கள் என்பவற்றை அறிந்துகொள்வதற்காகவும் கூகிள் இணையத்தளத்தை மக்கள் நாடுகின்றனர்.

கூகிள் பயன்படுத்தும் செயல்முறையானது ஒவ்வொரு தகவலும் எத்தனை தடவை அவதானிக்கப்பட்டது என்ற விபரத்தையும் தருவதாக இருக்கின்றது. அத்துடன் அதன் பிரபலம், முக்கியத்துவம் என்பவை பறறிய விபரங்களும் முதலில் தரப்படுகின்றன. கூகிளில் விடயங்களை அணுகுபவர்கள், நம்பமுடியாதளவு வேகமாக தமக்கு வேண்டியவற்றை அணுகுவதோடு வியக்கத்தக்க பெறுபேறுகளையும் பெறுகின்றனர். உதாரணத்துக்குக் குறிப்பிடுவதானால் மஹிந்த ராஜபக்ஷவை கூகிளில் அணுகும் பட்சத்தில், அவர் பற்றிய தேடல்களை செய்து 0.06 செக்கன்களில் 5,560,000க்கும் அதிகமான விபரங்களைப் பெறமுடியும்.




ஒரு குறித்த விடயம் பற்றி விரிவாக ஆராய்வதற்கு கூகிள் இணையத்தின் உயர்வான (Advanced Search) தேடல் வழிமுறைகள் புலனாய்வுச் செய்தியாளருக்கு மிகவும் உதவியாகவிருக்கின்றன. உங்களது தேடல் குறித்து சரியான வார்த்தைப் பிரயோகத்தின் மூலமாக நல்ல பயன் கிடைக்கும்.

எந்தவொரு புலனாய்வுச் செய்தியாளரும் தனது செயற்திட்டத்தை ஆரம்பிக்க கூகிள் இணையம் தவிர்க்க முடியாததென்றாகும். ஒருவர் தம்மிடம் பிரத்தியேக இன்டர்நெட் வசதி இல்லாத பட்சத்தில் சைபர் நிலையங்களுக்குச் சென்று தமக்கு வேண்டியதை கூகிள் செய்ய முடியும். கூடியவரை தனது நேரத்தைப் பயன்படுத்தி ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள ஒரு சில பக்கங்களை மட்டுமல்லாது சகல முக்கிய பக்கங்களையும் ஒரு செய்தியாளர் பார்வையிட வேண்டும். இறுதியில் தரப்பட்டுள்ள அதிகுறைந்த அளவு பார்வையிடப்பட்ட பக்கங்கள், அதிகூடிய தகவல்களைக்கொண்டதாய் இருக்கும்.

வரைபடங்கள், படங்கள், வீடியோ காணொளிகள், மற்றும் புலமைசார் கட்டுரைகள் என்பவற்றை அணுகவும் கூகிள் வழியமைக்கின்றது. பெருமளவிலான தகவல் குறிப்புக்குவியலில் இருந்து தமக்குரியதை வேறுபடுத்திப்பார்க்கும் வகையில் உயர்வான தேடல் அணுகுமுறைகளையும் கூகிள் கொண்டுள்ளது. பெயர்கள், இடங்கள் என்பவற்றின் சரியான சொற்கள் என்பவற்றை மீளவும் சரிபார்த்துக் கொள்ளவும் சிறப்பாக உதவுகின்றது.

கூகிள் ஒவ்வொரு இல்லம் வரை தன்னை நெருங்கி வரவைத்துள்ளது. கூகிள் இணையத்தை தற்போது தமிழ், சிங்களம் மொழிகளின் ஊடாகவும் அணுகமுடியும்.

**விக்கிபீடியா:** வீக்கிபீடியா என்பது ஒரு கணணிக் கலைக்களஞ்சியமாகும். ஒரு நபர்பற்றியோ அல்லது விடயம்பற்றிய தகவல் விக்கிபீடியா மூலமாகவே முதலில் இணைக்கப்படுவதாக இருக்கும்.

கணணிக்கலைக்களஞ்சியம் என்பது ஒரு திறந்த பக்கமாக இருப்பதோடு அங்கு எவரும் தமது தகவல்களை எழுதவும், செம்மைப்படுத்தவும் முடியும். "சனத்தின் கூர்மதி" என்ற ரீதியில் அனைவருக்கும் அறிவைப் பெற்றுத்தரும் ஓர் அம்சமாக இது விளங்குகின்றது. ஆயினும் இதில் பங்களிப்போர் தவறுகளை செய்திருப்பதோடு சர்வதேச ரீதியாக தவறான தகவல்களையும் தந்துள்ளனர். எனவே விக்கிபீடியாவை ஒரு விடயம் குறித்துபொதுவான தகவல்களுக்காக உபயோகிக்கும் செய்தியாளர்கள் அதில் வெளியாகும் அனைத்தையுமே நம்பகத்தன்மையானதாக எடுத்துக்கொள்ளலாகாது. நன்கு பரிசீலித்துப் பார்த்த பின்னரே உண்மைத்தன்மையை அவர்கள் உறுதிசெய்யவேண்டும். பல செய்தியாளர்கள் சரியான மூல விடயங்களை அடிக்குறிப்புகளை அழுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முயற்சிப்பர்.

**உத்தியோகபூர்வ இணையத்தளங்கள்:** உத்தியோகபூர்வ இணையத்தளங்களின் பெறுமானங்களை புறந்தள்ளிவிடலாகாது.

தென் புளோரிடாவைச் சேர்ந்த சன்சென்டிநெல் என்ற பத்திரிகையின் புலனாய்வுச் செய்தியாளர்கள் சமஷ்டி அவசரகால நிர்வாக ஏஜன்ஸியின் இணையத்தளமான (http;//www.fema.gov) ஊடாக சூறாவளி நிவாரண மோசடியொன்று தொடர்பான மிக முக்கியமான வியக்கவைக்கும் தகவல்களை பெற்றிருந்தனர். இலங்கையிலும் வேறு தென்னாசிய நாடுகளிலும் ஏஜன்ஸி இணையத்தளங்கள் அவற்றின் நிர்வாகக் கட்டமைப்பு பற்றிய விபரத்தை பெரும்பாலும் தருகின்றன. இதன்மூலமாக அணுகப்படக்கூடிய நிர்வாகத்தின் மத்தியிலிருப்பவரை அறிய முடிகிறது. இந்த விபரத்திரட்டு, சம்பளங்கள், ஒழுங்குவிதிகள், முன்னைய நடவடிக்கைகள், தொழில்கள் தகைமைகள் என்பவை பற்றி அறியத்தருகின்றன.

**வெளிநாட்டு இணையத்தளங்கள்:** இந்த இணையத்தளங்களைத் தேடுவதன் மூலம் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிநாட்டுக்கம்பனிகள், தனிநபர்கள் பற்றிய தகவல்களை தெளிவுற அறியமுடியும். அமெரிக்காவில் ஓர் இலங்கை கம்பனி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருக்குமேயானால், ஒரு செய்தியாளர் அதுபற்றிய மிகப்பயனுள்ள தகவல்களை அமெரிக்க பங்குச்சந்தை மற்றும் நாணய ஆணைக்குழுவின் எட்கார் விபரக்கொத்து மூலமாகப் பெறமுடியும். (http;//www.sec.gov/edgar/searchedgar/webusers.htm).

**இணையத்தளங்களின் உண்மைத்தன்மை:** பத்திரிகை ஆவணங்களின் உண்மைத்தன்மையை செய்தியாளர்கள் அறியமுற்படுவதுபோல, இணையத்தளங்களின் தகவல்களின் நம்பகத்தன்மையையும் அவர்கள் உறுதிசெய்யவேண்டும்.

### இணையத்தள உண்மையறிதல்

உரிமம்: குறித்த இணையத்தளம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிபுணரால் அல்லது மதிக்கப்படக்கூடிய நிறுவனமொன்றினால் இயக்கப்பட்டதா?

கச்சிதம்: எழுத்துப்பிழைகள் தவறான தகவல் உள்ள இணையத்தளங்கள் தவிர்க்கப்படவேண்டும்.

தோற்றம்: இணையத்தளம் நன்கு நிர்மாணிக்கப்பட்டதா? சாச்சைக்குரிய தொழில் ரீதியற்ற அணுகுமுறை குழப்பமானவையாகும்.

நோக்கம்: குறித்த இணையத்தளம் அதன் நோக்கத்தை பூர்த்திசெய்கிறதா?

நாணயம்: தகவல்கள் நேர்த்தியானவையா?

சிபார்சுகள்: நம்பத்தகுந்த நிபுணர்கள், நிறுவனங்களால் சிபாரிசுசெய்யப்பட்டனவா?

இணைப்பு: குறித்த இணையத்தளம் வேறு நம்பகமான மதிக்கப்படக்கூடிய இணையத்தளங்களுடன் தொடர்புபட்டதா?

ஆழம்: ஒரு விடயத்தை மிக நேர்த்தியாக அணுகியுள்ளதா?

புரிந்துகொள்ளல்: விடயங்கள் ஏற்கப்படக்கூடியவையா? நேரடியானவையாக இருக்கின்றனவா?

நம்பகத்தன்மை: தகவல்கள் அறிவுபூர்வமானவையா? அவற்றில் உறுதிப்படுத்தப்பட்டவை பலப்படுத்தப்பட்டுள்ளனவா?

### வலைப்பின்னல் தொடர்புடைய நண்பர்களிடமிருந்து ஒரு சிறு உதவி:

**சமூக ஊடகம்:** "சமூக ஊடகம்" என்பதன் வரைவிலக்கணம் பொதுவான விருப்பங்கள், விடயங்களைக் கொண்டுள்ள மக்கள் தம்மிடையே ஒலி, ஒளி மூலமான தொடர்புகளை இணையத்தளங்கள் மூலமாகக் கொண்டிருத்தலைக் குறிப்பதாக இருக்கின்றது.

"முகப்புத்தகம்" (பேஸ்புக்) என்பது மிகவும் செல்வாக்குடைய இணையத்தளமாக இருக்கின்றது. ஏனையவை டுவிட்டர், பிலிக்கர், வேர்ட்பிரஸ், புளொக்கர், யூ-டியுப் என்பனவாகும்

சமூக ஊடகத்துறை பத்திரிகைத்துறையை பெரிதும் மாற்றி வருகின்றது. சமூக ஊடகத்துறை உருவாகுமுன்னர் பொதுவான ஊடகத்துறை என்பது ஒருவழிப்பாங்கானதாக இருந்தது. செய்தியாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோர் செய்திகளைத் தயாரித்து, அவற்றை நேரடியாக வாசகர்கள் மற்றும் நேயர்களுக்குச் சேர்ப்பித்தனர்.




ஆனால் சமூக ஊடகத்துறையின் அறிமுகத்தோடு, ஊடகத்துறை என்பது பலவழிகளைக் கொண்டதாக இருக்கின்றது. இதில் தகவல்கள் பலவழிகளிலும் பரிமாறப்படுவதாக இருக்கின்றன. இதனை ஊடகத்துறையின் ஜனநாயகப் போக்கு என வர்ணிக்க முடிகின்றது.




ஊடகத்துறையின் தன்னாதிக்கத்தன்மையை மாற்றி அதனை விரிவாக்கிவிட்டுள்ளது.

புதிய சமூக ஊடகத்துறை, “பிரஜைகள் ஊடகத்துறை” என்ற புதிய உருவாக்கத்துக்கும் வழியமைத்துள்ளது. இதன்மூலம் சாதாரண பிரஜைகளும் தாம் அறியும் குறுந்தகவல்கள், படங்கள் என்பவற்றை ஒருவரோடொருவர் பரிமாறிக் கொள்ளமுடியும். இதன் மூலம் செய்திச் சேகரிப்பென்பது பிரத்தியேகமாக இனிமேலும் பயிற்றப்பட்ட தொழில்சார் பத்திரிகையாளர்களுக்கே உரித்துடையது என்ற எண்ணக்கரு மாற்றமடைந்துள்ளது. முன்பெல்லாம் ஓடிச்சென்று பேட்டிகளைக்கண்ட செய்தியாளர்கள் தற்போது கையடக்கத் தொலைபேசி மூலமாகவே பலதையும் கையாளுகின்றனர். தொடர்பாடல், படங்களை எடுத்தல், படங்களை அனுப்புதல், குறுந்தகவல் சேவை போன்றவை இவற்றில் அடங்கும்.

அண்மையில் எகிப்து, லிபியா. சிரியா போன்ற நாடுகளில் சாதாரண பிரஜைகள் தகவல்களை பிரவாகமெடுக்க விட்டதை நன்கறியமுடியும். தொழில் ரீதியான செய்தியாளர்களுக்கு கட்டுப்பாடுகள், தடைகள் விதிக்கப்பட்டுள்ள போதெல்லாம், சாதாரண பிரஜைகளே சமூக ஊடகத்துறை வாயிலாக பலதரப்பட்ட தகவல்களைக் கொண்டு வந்திருந்ததை அறியமுடிந்தது.

இந்நிலையில், செய்தியாளர்கள் இப்புதிய பிரஜைகள் சமூக ஊடகவியல் மூலமாக கசியவிடப்படும் செய்தித்தகவல்களால் பயனடைய முற்படுகின்றனர். இப்புதிய சமூக ஊடகவியல் உருவாக்கத்தை தமது புலனாய்வுச் செய்தித்துறை சார்ந்த நடவடிக்கைகளில் முழுமையாகப் பயன்படுத்த செய்தியாளர்கள் முன்வரவேண்டியதாகின்றது.

## அத்தியாயம் எட்டு

# செய்தியைத் தயாரித்தல்

பிழைவிடலாகாது: ஒரு புலனாய்வுச் செய்தியாளரிடம் அவ்வருடத்திற்கான மிகச்சிறந்த புலனாய்வுச் செய்தி ஒன்று இருக்கலாம். ஆனால் அதன் விபரங்கள் குறிப்புப்புத்தகங்களிலும், விபரக்கொத்தாகவும், கோவைகளிலும் இருந்தால் அர்த்தமற்றதாகிவிடும். அத்துடன் பத்திரிகைகளிலும், அலைவரிசைகளிலும் அச்செய்தி குழப்பமான தகவல்களோடு வருமாயின் அதனால் எவ்வித பயனும் இருக்கப்போவதில்லை.

எனவே ஒரு புலனாய்வுச் செய்தியை சரியான விதத்தில் வாசகர்களும், நேயர்களும் முழுமையான ஈடுபாட்டுடன் அறியும்விதத்தில் தெரிவிப்பதே ஒரு புலனாய்வுச் செய்தியாளரின் கடமையாகும். நல்ல தகவல்களோடும் முக்கியத்துவம்மிக்கதாக இருக்கும் அச்செய்தி ரசனையற்றதாக வெளிவரலாகாது.

ஒரு செய்தியை வழங்குவது சம்பந்தமாகவே புலனாய்வுச் செய்தியாளர் எப்போதும் சிந்திக்கவேண்டியவராகின்றார். சிலர் தாம் செய்தி சேகரிக்க ஆரம்பித்த நேரம் முதல் ஒரு நகல் பிரதியை முதலாவதாக எழுதுகின்றனர். இதன் மூலம் தமக்குக் கிடைக்கும் புதிய தகவல்களின் அடிப்படையில் தமது செய்தியை அவர்கள் நன்கு வடிவமைக்க முடிகிறது. இவ்வாறு செயற்படாவிட்டால், செய்தியாளர் தம்மிடமுள்ள அதிக தகவல்களுடன் தலையைக் குழம்பியபடி வெறும் பக்கமொன்றையே வைத்திருக்கமுடிகிறது. எனவே குறித்த செய்தியாளரின் அலுவலக மேற்பார்வையாளர் ஒரு நல்ல செய்தி குறித்து நிறையவே எதிர்பார்ப்போடு இருக்கையில் செய்தியாளர் ஸ்தம்பிதமடையும் நிலையும் ஏற்பட்டுவிடும்.

**ஊடகத்துறை "உத்தரவாதம்":** நகல் செய்தியை எழுதுவதற்கு மற்றுமொரு காரணமும் இருக்கின்றது. செய்தியாளர் தனது கதையின் கருப்பொருளுக்குரிய நபரையோ அல்லது நிறுவனத்தையோ ரகசியமான முறையில் வெளியேயிருந்தே அணுகவேண்டியதாகின்றது. இந்நிலையில் புலனாய்வுத்தகவல் திரட்டப்படுவது தொடர்பான விடயம் கசிந்து குறித்த செய்திக்குரிய நபர் உஷாரடையும் வாய்ப்பும் உள்ளது. இதனால் அந்நபர் தவறுகளை மூடிமறைக்கும் விதத்திலும் புலனாய்வுச் செய்திக்குள் தன்னை உட்படுத்தாதவிதத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்றுக்கு ஏற்பாடு செய்து தனது புதிய நடவடிக்கைகள் பற்றி அறிவிக்க முயலக்கூடும். செய்தியாளருக்கு போட்டியாயிருக்கும் மற்றொரு செய்தியாளருக்கு ஒரே விடயத்தை வேறொரு கோணத்தில் வழங்கி விடயத்தை திசைதிருப்பவும் முடியும். இல்லையேல் குறித்த ஊடக நிறுவனத்திற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முனையவும் கூடும்.

இதன் காரணமாகவே செய்தியாளர் தனது இலக்குக்குரிய நபரை அணுக முன்பு தனது விடயம் பற்றிய தகவல் குறிப்பொன்றை எழுதிவைப்பது அவசியமானதாகின்றது.

அக்குறிப்பென்பது சுருக்கமானதாகவும், மேலோட்டமானதாகவும் இருப்பதைவிடக் காத்திரமானதாக இருக்க வேண்டும். அத்துடன் குறித்த விடயத்தை மறுக்கமுற்படும் நபரையோ நிறுவனத்தையோ சுட்டிக்காட்டும் விதத்தில் பத்திரிகை வாயிலாகவோ, அலைவரிசைகள் வாயிலாகவோ வெளிப்படுத்தக் கூடியதாகவும் அக்குறிப்பு அமையவேண்டும். இவ்வாறு உத்தரவாதப்படுத்தி எழுதுவதென்பது செய்தியில் குறைகள் இருப்பின் எடுத்துக்காட்டுவதோடு, தனது இலக்குக்குரிய நபரிடம் குறிப்பாக கேட்கப்பட வேண்டியவற்றை நிச்சயப்படுத்துவதற்கும் உதவுவதாக இருக்கின்றது.

ஒரு உத்தரவாத நகலை எழுதுவது அல்லாது உத்தரவாத அறிக்கையை எழுதுவதென்பது எதிர்விளைவுகளை தருவதோடு நியாயமற்றதாகவும் தோன்றலாம். ஒரு செய்தியை முக்கிய தகவல் ஒன்றில்லாமல் எவ்வாறு எழுதமுடியும்? செய்தி சேகரிப்பு நிறைவடையும் முன்பதாக குறித்த செய்தி பற்றிய பாதகமான விடயங்களை குறித்துக்கொள்வது நியாயமா போன்ற கேள்விகள் தோன்றலாம். உண்மையில், அப்படி இல்லை. மோட்டார்வாகன உற்பத்தியாளர்கள் தமது தயாரிப்புக்களை விற்பனைக்கு முன்னர் பரீட்சிப்பது போலவே, செய்தியாளரும் தனது செய்தியைப் பரீட்சிப்பதே மேற்குறித்த நடவடிக்கையாகும். எனவே தமது நிலைப்பாடு தவறு என்று வரும்போது செய்தியாளர் அக்கதையை மாற்றியமைக்கலாம். அல்லது முற்றிலுமாக நீக்கியும் விடலாம். எனினும், அது பற்றி ஒத்திகை பார்ப்பது அவசியம்.

பினவருவனவற்றையும் கையாளலாம்:

- **பேசுதல்:** ஒரு கதையைப் பற்றித் தனது மேலதிகாரியுடன் அல்லது தனது சகபாடியுடன் பேசுவது கூட அக்கதையை எழுதுவதற்கு உதவியாக அமையும். இக்கதையை செவிமடுப்பவர் அதனை மேலும் செம்மைப்படுத்துவது பற்றிய ஆலோசனையை வழங்கமுடியும். புலிட்ஸர் விருது என்ற பத்திரிகைத்துறைக்கான பரிசினை மூன்று தடவைகள் வென்ற வோல்ட் பொக்டானிக் என்ற நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் பணியாற்றும் பத்திரிகையாளர், தனது செய்தி பற்றித் தனது சகாக்களுடன் அடிக்கடி தான் பேசுவதாக கூறியிருந்தார். அச்செய்தியை ஆச்சரியத்தோடு அவர்கள் கேட்காவிட்டால், அதனைத் தான் சரிவரப் பெறவில்லை என்று கருதியதாகவும் கூறியுள்ளார்.

- **அம்மாவுக்குக் கூறுவது:** தமது முதலாவது செய்தியை எழுதும்போது, செய்தியாளர் தாயாருடன் தமது சாப்பாட்டு மேசையில் அமர்ந்தவாறு அதுபற்றிப் பேசுவதுபோல எண்ணவேண்டும். சிநேகபூர்வமாகவும், ஒத்துழைப்பான முகபாவத்துடனும் செய்தியாளர் சங்கடப்படாது கதைசொல்வது போல ஒரு சாதாரண வாசகர் அறியும்படியாக தனது செய்தியைச் சொல்ல வேண்டும்.

- **ஆரம்பம்:** அவரது கதைக்கு ஒரு நல்ல ஆரம்பத்தை கொடுப்பதற்காக ஆரம்ப வசனங்களை எழுதவேண்டும். ஓர் உபயோகமான சொற்பிரயோகம் என்னவெனில் "இத்தகவல் எனது வாசகர்கள் / நேயர்களுக்கு ................. அறியத்தரும்" என்ற வசனம் இடைவெளி நிரப்பப்படும்போது செய்திக்கான அறிமுகமாய் அமைந்துவிடுகிறது. உதாரணம்: எனது வாசகர்கள் / நேயர்களுக்கு இத்தகவல் அறியத்தருவது யாதெனில்

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை கண்டிப்பிரதேசத்தைச் சூழவுள்ள நீரைப் பரிசோதித்தபோது அதில் புளோரைட் அளவு ஐந்து மடங்கு அதிகமாக இருப்பதை அறிந்துள்ளது. எனினும், விஞ்ஞானிகள் அந்நீர் மனிதப்பாவனைக்கு உகந்ததாகும் என்று கூறுகிறார்கள்.

- **கவர்ச்சியான வார்த்தை:** ஒரு புலனாய்வுச் செய்திக்கு கவர்ச்சிகரமான வார்த்தைப் பிரயோகம் ஒரு நல்ல ஆரம்பத்தைத் தரும். ஊழல், துஷ்பிரயோகம், அரச பாரபட்சம் என்பவற்றால் பாதிக்கப்பட்டவரின் நிலைமையையும் எடுத்துக்காட்டப்படுவதினால் சிக்கலான ஒரு விடயம் சுமுகமாகிவிடுகிறது.

- **இயல்பாக எழுதுதல்:** மனம் என்பது பலம் வாய்ந்தது. ஆயினும் தமது மனம் எவ்வளவு தூரம் கிரகித்துக்கொள்கின்றதென்பது பற்றி ஒரு புலனாய்வுச் செய்தியாளர் குறைத்தே மதிப்பிடுவதுண்டு. எனவே மனதால் கிரகித்து ஒரு செய்தியை எழுதுவது ஒரு முறைமையாகும். மனதில் பதியவைத்து எழுதுவதன் மூலம் செய்தியொன்றை காட்சிப்படுத்தி எழுதுவதோடு, தகவல்கள் பின்னர் மாற்றப்படவேண்டும் அல்லது உறுதி செய்யப்படவேண்டிய நிலை வந்தாலும் அவற்றைச் செய்யவும் முடிகிறது.

**எழுதும் விதம்:** புதிதாக செய்திகள் வெளிக்கொண்டுவரப்படும்போது, குறிப்பாக நேர்த்தியாகவும் நேரடியாகவும் எழுதப்படும் போது புலனாய்வுச் செய்திகள் சிறப்புற அமைந்துவிடுகின்றன.

- **இலகுநடை:** மிகவும் இயல்பாக இலகு நடையில் வசனங்கள் அமைக்கப்படவேண்டும். சிக்கலான வசனம் மற்றும் சொற்பிரயோகங்கள் ஒரு நல்லமொழிப் பிரவாகத்தை பாழாக்கிவிடும்.

- **அசைவு:** வசனங்களை அமைக்கும்போது செயப்பாட்டு வினை தவிர்க்கப்பட்டு செய்வினை சொற்பிரயோகங்களையே பாவிக்கவேண்டும்.

- **தொனி:** உங்களிடம் நல்ல விடயங்கள் இருக்கும்போது பரபரப்பாக தகவல்களைத் தெரிவிக்க வேண்டிய தேவை இல்லை. ஒரு சிறு அறிக்கை பத்திரிகைத்துறையில் கூடுதல் தொனியுடன் வெளிவரமுடியும். செயற்பாட்டுவினை போன்றவை ஒரு செய்தியை அதன் உண்மைத்தன்மைக்குப் புறம்பாக வர்ணிக்கக்கூடியவை. அத்துடன் பெயரெச்சம் மற்றும் வினையெச்சம் போன்றன செய்தியாளருக்கும் பிரச்சினையை உண்டுபண்ணக்கூடுமென்பதால் அவற்றை விலக்குவது நல்லது.

**விசேட சொற்கள்:** சாதாரண - இலகுநடையான சொற்களன்றி மயக்கம் தரும் விசேட சொற்களை தவிர்க்கவேண்டும். நிபுணத்துவம்மிக்கவர்கள் விசேட சொற்களைப் பாவித்துப் பேசலாம். ஆனால் ஊடகங்களில் இவற்றைப் பாவிக்கும் பட்சத்தில் வாசகர்களும் நேயர்களும் சலிப்படைய நேரிடும்.

ராய்ட்டர் செய்திச்சேவையின் செய்திகளை எழுதுவதற்கான வழிகாட்டலில் அர்த்தம்புரியாத மயக்கமளிக்கும் சொற்கள், வசனங்களைப் பாவிக்க வேண்டாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. முடியுமானவரை உங்களது பாட்டிமாரும் அறிந்து கொள்ளும் விதத்தில் எழுதவேண்டுமென்றே அவ்வழிகாட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இரத்தினக்கற்கள்:** சொற்பிரயோகங்கள், உதாரணங்கள், படங்கள் என்பவை ஒரு கதையின் தொனிப்பொருளை நகர்த்திச் செல்லுபவையாக இருக்கின்றன. வரண்டுபோன தகவல்களைக்கூட உயிரோட்டம் பெறச் செய்பவையாக அவை அமைகின்றன. எனவே பெறுமதியான இரத்தினக்கற்களைப்போல அளவோடு, அவதானமாக, உண்மையை அலங்கரிப்பவையாக வசன நடை அமையவேண்டும்.

**பிரஜைகள் ஊடக இணையத்தளம்:** ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலத்தை கொண்டாடும் விதத்தில் 12 ஆயிரம் கிலோகிராம் பாற்சோறு தயாரிக்கப்பட்டதை groundviews.org இணையத்தளம் அழகுறத்தந்திருந்தது. அப்பாற்சோறு தயாரானது பற்றி உலக உணவுதிட்ட தரவுகளை மேற்கோள்காட்டி அந்த இணையத்தளம் தந்திருந்த தகவலில் ஓர் அகதிக்கு 165 வருடங்கள் உணவளிக்க அப்பாற்சோறு போதுமானதாக இருந்ததென குறிப்பிட்டிருந்தது. அத்துடன் ஐந்து பேரடங்கிய ஓர் அகதிக்குடும்பத்து 41 வருடங்கள் உணவளிக்க அப்பாற்சோறு போதுமானதெனவும் குறிப்பிட்டிருந்தது.
(http;//groundviews.org/2010/11/19/record-breaking-rice-cakes-but-at-what-cost/)

**கதைவடிவம்:** புலனாய்வுச் செய்திகளைத் தரும் விதத்தில் நீண்டகாலமாக புலனாய்வுச் செய்தியாளர்கள் சில கதை அமைப்பு வடிவங்களை கையாண்டிருந்தனர்.

பிரபலமானதும், பயனுள்ளதுமான இருவகை அணுகுமுறைகள்:

**முன்குறிகள்:** இதுவே மிகப் பொதுவான பத்திரிகைப் புலனாய்வுச் செய்தியொன்றிற்கான கட்டமைப்பாகும். இதில் உள்ள சிறப்பென்னவெனில், இம்முன்குறிகளை தெரிவுசெய்ததும் அதனை அக்கதையின் பின்னணியான பல்வேறு கட்டங்களிலும் பயன்படுத்தலாம். ஒவ்வொரு குறியும் ஒரு முக்கிய பாகத்தை கொண்டிருக்கின்றது. இவை ஒவ்வொன்றையும் மேலதிக விபரங்களோடு மீளப்பார்க்கவும் முடியும்.

இதற்கான நியம அம்சங்கள்:

- ஒரு சுருக்கமான ஆரம்பம்.
- வாசகர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டி கதையின் முக்கியத்துவத்தை குறிப்பிடும் விதத்தில் ஓரிரு பத்திகள்.
- பிரச்சினையில் நிபுணத்துவமிக்கவரிடமிருந்து ஒரு கூற்று.
- விடயத்துக்குரியவரிடமிருந்து பதில் - பிரஸ்தாப கதையில் இது முக்கியமனதாக இருக்கவேண்டும்.
- மக்களுடைய ஆர்வம் பற்றிய கோணத்திலான ஒரு விளக்கம்.
- புலனாய்வில் கண்டுபிடிக்கப்பட்டவை பற்றி முன்குறிகள் என்ற அணுகுமுறை மூலமான வெளிப்பாடுகள்.

கீழ்வருவது குழப்பமானதாக இருக்கலாம். ஆனால் அதன் போக்கு இயல்பானதாகவே அமைந்துள்ளது. நோய்வாய்ப்பட்ட கறவைப்பசுக்களின் பழைய கதையை ஓர் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஆரம்பம்: ஒரு விவசாய திணைக்கள நிகழ்ச்சித்திட்டம் இலவசமாக கறவைப்பசுக்கள், ஆடுகள் என்பவற்றை கிராமிய மக்களுக்குத் தருவதாக உறுதியளித்திருந்தது. மாறாக நோய்வாய்ப்பட்ட, பலவீனமான கால்நடைகளே வழங்கப்பட்டதை கொழும்பைச் சேர்ந்த புலனாய்வாளர்கள் கண்டறிந்திருந்தனர்.

வெளியிடல்: கடந்த இரு வருடகாலமாக விவசாய திணைக்களம் ஆயிரம் கோடிரூபாவை தனது ஆரோக்கியமான கறவைப்பசு, ஆடுவளர்ப்புத் திட்டத்திற்கென செலவிட்டு பால்தரும் முதிர்ச்சியான பசுவையும் இறைச்சிக்காக ஆடுகளையும் கொழும்புக்கு வெளியே உள்ள நான்கு லட்சம் கிராமிய குடும்பங்களுக்கு வழங்க முன்வந்ததை பேட்டிகளும் அறிக்கைகளும் தெரிவித்தன.

வெளியிடல்: ஆனால் பலவீனமான நோய்வாய்ப்பட்ட கால்நடைகள் அதிக விலையில் வாங்கப்பட்டு அவை பின்னர் பயனற்ற முறையில் கிராமிய மக்களுக்கு வழங்கப்பட்டமை பரிசோதனைகளின்போது தெரியவந்தது. அத்துடன் அக்கால் நடைகளை வழங்கிய ஏக விநியோகஸ்தருக்கும் இந்த திட்டத்தை மேற்பார்வை செய்த நிர்வாக அதிகாரிக்கும் பணரீதியான தொடர்புகள் இருந்தமையையும் அறிக்கைகள் சுட்டிக்காட்டின.

பாதிக்கப்பட்டவரின் கூற்று: சோமபால ஹேவகே என்ற கண்டியைச் சேர்ந்த வறிய விவசாயி ஒருவர் குறித்த கால்நடைத்திட்டம் குறுகிய கடன் அடிப்படையில் திட்டமிடப்பட்டதாகவும், ஆனால் தமக்கு இத்திட்டம் அதிக செலவீனத்தை ஏற்படுத்தியிருந்ததாகவும் தெரிவித்திருந்தார். அத்துடன் நோய்வாய்ப்பட்ட பசுமாடொன்றையே தமக்குத் தந்ததன்மூலம் அரசாங்கம் தனக்குப் பெருஞ்சுமையை ஏற்படுத்திவிட்டதாகவும் அப்பசுவை உயிருடன் வைத்திருக்கவே தாம் பல நூறு ரூபாய்களை செலவிட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

“ஒரு பலவீனமான, நிற்கவே முடியாத பசுமாடொன்றை போட்டுவிட்டு அரச அலுவலர்கள் சிரித்தபடி சென்றுவிட்டனர்.” எனவும் ஹெவகே தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் “ நோய்வாய்ப்பட்ட அப்பசுவைப் பெற்றதிலிருந்து அதற்கு பெரிதும் மருந்துச்செலவை மேற்கொள்ளவேண்டியிருந்தது. இதனால் பிள்ளைகளுக்கு பாடசாலை சீருடைகளை வாங்க முடியாதிருந்தது. அத்துடன் அவர்கள் நல்ல உணவையும் உண்ண முடியவில்லை. அப்பசுமாடு மிகவும் மெலிவானதால் விற்பனை செய்யவும் முடியவில்லை.”

கிராமிய அபிவிருத்தி என்ற திட்டத்தின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு கோலாகலமான முறையில் இதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிமுகப்படுத்தி வறுமையை 20 சதவீதத்தால் குறைக்கப்போவதாக தெரிவித்திருந்தார். இத்திட்டம் ஜனாதிபதியின் செல்வாக்கை கிராமியப்பகுதியில் அதிகரிக்கச் செய்ததாக நிபுணர்கள் கூறியதோடு மீளவும் அவருக்கு தேர்தலில் அதிகளவிலான வாக்குகளைப் பெற்றுக் கொடுத்ததாகவும் தெரிவித்தனர்.

தெரிந்து கொண்டவை: இத்திட்டம் எவ்வாறு செயற்படுகிறது என்பதை புலனாய்வுச் செய்தியாளர்கள் அறிய முற்பட்டனர். அவர்கள் பெருமளவு அரச ஆவணங்களை பரிசீலித்தனர். அதிகளவு கிராமிய மக்களைப் பேட்டிகண்டனர். தொண்டர் மிருகவைத்தியர்கள் ஊடாக 100 பசுக்களையும், 100 ஆடுகளையும் பரிசீலிக்கவைத்தனர்.

இப்புலனாய்வுகள் கண்டறிந்தவை: 80 வீதத்துக்கதிகமான பசுக்கள் மிக வயோதிபமடைந்தவையாகவும் பால் சுரக்க முடியாதுமிருந்தன. 75 சதவீதமான ஆடுகள் நோய்வாய்ப்பட்டு இறைச்சிக்கு உதவாதவையாக இருந்தன. அனைத்து கால்நடைகளினதும் எடை அரசாங்க நிர்ணய அளவுக்குக் குறைவானவையாக இருந்தன.

அரசாங்கம் கால் நடை ஒன்றுக்கு சராசரி 500 ரூபாவைச் செலுத்தியிருந்தது. இது கால்நடைக்கான சந்தை விலையை விட இரட்டிப்பானதாகும்.

இந்த கால்நடைகளின் ஏக விநியோகஸ்தர் கொழும்பு சீமெந்து ஆலை நடத்துனராவர். இவருக்கு ஒரு தொடர்மாடிக்கட்டிடமிருந்தது. அங்கேயே இக்கால்நடைத்திட்டத்தின் நிர்வாகியான பீட்டர் சில்வா இருந்து வருகிறார்.

பதில் விளைவு: சில்வா புலனாய்வுச் செய்தியாளரின் இக்கண்டுபிடிப்புக்களை மறுத்திருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் எதிரிகளே இத்திட்டத்தை விமர்சிப்பதன் பின்னணியில் இருப்பதாகவும், இதுவோர் “எக்குறையுமற்ற வெற்றித்திட்டம்” எனவும் அவர் கூறியிருந்தார்.

பதில்விளைவு: அவர் மேலும் கூறுகையில் தனது தொடர்மாடிச் சொந்தக்காரரே ஏகவிநியோகஸ்தர் எனவும் 15 கம்பனிகள் ஏலத்தில் இந்த திட்டத்தை ஏற்க முன்வந்தபோதிலும் குறித்த கொழும்பு சீமெந்துக் கம்பனி முக்கியஸ்தரே குறைந்த ஏலத்தில் வழங்க முன்வந்ததாகவும் சில்வா குறிப்பிட்டார்.

**நேரடித்தகவல்:** இதுவொரு புலனாய்வுத்தகவல் ஆகையால் பிரச்சினையை விபரிக்கக்கூடிய விதத்தில் இதன் ஆரம்பம் இருக்கவேண்டும். இதன் பின்னர் அப்பிரச்சினையை தெளிவுபடுத்தும் விபரங்கள் அமைந்திருக்கவேண்டும். இதுவிடயத்தில் முன்குறி அணுகுமுறையை பயன்படுத்தமுடியாது. ஏனெனில் இது இறுக்கமானதல்ல. அத்துடன் பெரிதும் அலசப்படக்கூடியதாகின்றது. கீழ்வரும் தண்ணீர் புளோரைட் பிரச்சினை ஓர் உதாரணமாகும்.

நேரடித்தகவல்: ஒன்பது வயதான சிறுமி சேபாளிகா வேதனையோடு படுத்திருக்கிறாள். தனது சிறுநீரக பிரச்சினைக்கான டயலிஸில் சிகிச்சைக்காக உடல் வியர்த்தவாறு, சிலாபத்தின் கிராமிய வைத்தியசாலையொன்றில் அவர் காத்திருக்கிறார். அவ்வைத்தியசாலை உட்பகுதியில் ஒவ்வொரு வாரமும் அப்பெண் காத்திருப்பது வழக்கமாகும்.

நேரடித்தகவல்: சேபாளிகாவின் சிறுநீரகங்கள் வாழ்நாள் முழுவதும் குணப்படுத்த முடியாத நிலையில் இருக்கும். இதுபோலவே பல சிறுவர்களது சிறுநீரகங்களும் பழுதாகி அவர்கள் சிறுநீரக இயக்கத்துக்காகப் பயன்படுத்தும் டயலிஸில் சிகிச்சைக்குள்ளாக வேண்டியுள்ளனர். இதற்கான முக்கிய காரணம் அவர்கள் அருந்தும் தண்ணீராகும்.

விபரச் சேர்க்கை: ஆனால் நிபுணர்கள் அருந்துவதற்கு உகந்ததெனக் கூறியுள்ள நியம அளவைவிட தண்ணீரில் ஐந்து மடங்கு புளோரைட் கலந்துள்ளமை பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. அத்துடன் இதுபற்றிய தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபையின் விசாரணையிலிருந்து தெரியவருவதாவது..........

**நிறைவு:** ஆரம்பத்தைப்போலவே செய்தியின் நிறைவும் முக்கியமானது. குறித்த புலனாய்வுத் தகவல் முக்கியத்துவம் பெறும் நிலையில் அத்தகவல் சார்ந்த விடயங்களை ஒன்றன்பின் ஒன்றாக கொண்டு செல்வது ஒரு முடிவை நோக்கி நகருவதாக இருக்கின்றது. அக்கதையம்சத்தோடு அதனைத்தரும் செய்தியாளருடன் அவரது வாசகர்கள் / நேயர்கள் இருப்பார்களேயானால் அவர்களுக்கு நல்லமுறையில் தனது விடயங்களை அவர் தெரிவிக்க வேண்டியவராகிறார். இதனை ஓர் உணர்வுபூர்வமான அணுகுமுறை மூலம் வாசகர் மனதில் நன்கு பதியும் விதத்தில் அவர் செய்யவேண்டியவராகிறார். இது பெரும்பாலும் குறித்த கதையின் ஆரம்ப நிலையோடு தொடர்புபட்டு பின்னர் நிறைவுக்கு வருவதாக இருக்கின்றது.

**படத்தகவல்கள்:** புலனாய்வுச் செய்தியாளர்கள் பெரும்பாலும் தமது விடயங்களை படங்கள், வீடியோக்கள், மற்றும் ஒலிவடிவங்களோடு கொடுப்பது பற்றி எண்ணவேண்டும். இதற்கு பிராந்தியச் செய்தியாளர்களும் விதிவிலக்கல்ல. இலங்கை சம்பந்தப்பட்ட இணையத்தளங்களில் உள்ள படங்கள் மற்றும் வீடியோக்கள் மூலமாக தமது செய்தியை நன்கு வளர்த்துச் செல்லமுடியும்.

படங்களை நன்கு திட்டமிட்டு தெரிவு செய்யவேண்டியுள்ளது. தமது மேற்பார்வையாளரின் உதவியோடு சில ஆணித்தரமான படங்களை தமது கதைகளோடு இணைக்கமுடியும். அவையாவன:

- **வரைபடங்கள்:** ஒரு பிரச்சினையின் புவியியல் பின்னணியை விளக்கவும், அத்துடன் சம்பவங்களுக்குரிய பகுதிகளை காண்பிக்கவும் கூகிள் வரைபடங்கள் உதவியாக இருக்கின்றன. குறிப்பாக தண்ணீர் மாசடைதல் பற்றி எழுத்தில் விபரிப்பதைவிட வரைபட விளக்கங்களினால் அறியத்தரலாம். அத்தோடு பத்திரிகை நிறுவனங்களும் படவிளக்கங்களோடு புதிய தகவல்களைத் தருபவையாக அமைகின்றன.

- **அட்டவணைகளும் வரைபுகளும்:** இவைகளே கணித அடிப்படையில் புள்ளிவிபரங்களோடு விளக்கமளிக்கின்றன. இல்லையேல் வரைபுகளற்ற வானொலி அலைவரிசைகள் போன்று, விடயங்களில் உரிய விளக்கங்களைக் கொடுக்கமுடியாது.

- **படங்கள்:** ஒரு புலனாய்வுச் செய்தியாளர் தமது பேட்டிகள், தகவல்களுக்குரிய படங்களை எடுத்துக்கொள்ளும் விதத்தில் ஒரு படப்பிடிப்பாளரை தம்மோடு ஆரம்பத்திலிருந்தே வைத்துக் கொள்வதுண்டு. தம் இலக்கானவரை பேட்டிகாணும்போதும் படப்பிடிப்பாளர் உடன் இருக்க வேண்டும்.
புகைப்படப்பிடிப்பாளர் அவரது பணியோடு மட்டும் நின்றுவிடாது செய்தியாளருடன் இணைந்து கையாளுகின்ற விடயங்களுக்கு அவற்றின் கச்சிததன்மைபற்றி கேள்வி எழும்போது சாட்சியாகவும் இருக்க முடிகிறது. ஓர் அனர்த்தத்தின் முன்னரான மற்றும் பின்னரான விடயங்களை தெளிவுறத் தருவதில் புகைப்படங்கள் கூட முக்கிய பங்காற்றுகின்றன.

- **இணையத்தள பங்களிப்புகள்:** ஒலி மற்றும் படங்களை ஒருங்கிணைப்பதில் இணையத்தளங்கள் சிறந்த களமாக இருக்கின்றன. ஒரு கதையை வீடியோ படமொன்றின் மூலமாகச் சொல்லமுடியும். ஜப்பானில் 2011 சுனாமி பேரலைத்தாக்கம் பற்றி வெளியான வீடியோ தகவல்கள் இதற்கு நல்ல உதாரணமாகும்.

## அத்தியாயம் ஒன்பது

# முரண்பாடான பேட்டி

இறுதியாக புலனாய்வுச் செய்தியாளர் பல்வேறுபட்ட செய்தி மூலங்களையும் சந்தித்த பின்னர், தமக்கு வேண்டிய ஆவணங்களை சேகரித்தும், அவற்றை ஆராய்ந்தும் உத்தரவாதப்படுத்திய பின்னர், அடுத்தகட்டமாக முரண்பாடான பேட்டியை நோக்கி நகர முடிகிறது.

இத்தருணத்திலேயே தனது விடயத்தோடு சம்பந்தப்பட்டவரிடம் நேருக்குநேர் தான் அறிந்து பெற்றுக்கொண்டவற்றை முன்வைக்கிறார். இதனை ஒரு முரண்பாடான பேட்டி என ஏன் அழைப்பதெனில் இக்கட்டத்தில் செய்தியாளர் ஒரு வழக்குத் தொடுநர் போல தனது ஆதாரங்களை முன்வைத்து கேள்விக்குரியவரிடமிருந்து காத்திரமான பதில்களைப் பெறமுயலுகிறார்.

இந்த அணுகுமுறை இருதரப்புக்கும் சோதனையளிக்கும் , விரக்தியளிக்கும் தன்மையானதாக இருக்கலாம். ஆனால் ஒரு முரண்பாடான பேட்டி முரண்பட்டதாகவே இருக்கவேண்டுமென்பதில்லை. இத்தகைய செயல்முறை ஊடகத்துறையின் நியாயமான - கச்சிதமான நோக்கங்களை கௌரவமாக பூர்த்தி செய்கிறது . இந்நிலையில் உணர்ச்சிவசமான தன்மைக்கு இடமளிக்காது, ஆதாரங்களை காண்பித்து நேர்மையான ஆர்வத்தை வெளிப்படுத்தி கேள்விக்குரியவரிடமிருந்து அவர் கூற வேண்டியதை அறியலாம்.

இன்றுங்கூட தென்னாசியாவில் உள்ள ஊடக நிறுவனங்கள் அநாமதேய மூலங்களை அடிப்படையாகவைத்து செய்திகளைத் தருகின்றன . இதில் குற்றஞ்சாட்டப்பட்ட தனிநபரிடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ எவ்வித கருத்துக்களும் எடுக்கப்படுவதில்லை. அதிகாரம் கொண்ட ஒருவரை நேரடியாக எதிர்கொள்ள முடியாமையால் செய்தியாளர் ஒருவர் அவரது கருத்துக்களை எடுக்க முன்வருவதில்லை. அத்துடன் சாதாரண முறுகல் நிலைகூட கலாசார பின்னணியோடு இருக்கின்ற அதேசமயம், வயதானவர்களுக்கு மதிப்பளித்தல், செல்வாக்குப்படைத்தோர் மீதான அணுகுமுறை போன்றவை ஒரு செய்தியாளருக்கு அவரது கௌரவத்தை பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வைக் கொடுக்கிறது. பயமுறுத்தல், வன்முறை, சட்டநடவடிக்கை, ஆத்திரவெளிப்பாடு போன்றவை கூட செய்தியாளரைப் பேட்டிகளை எடுப்பதிலிருந்தும் தவிர்த்துவிடுகிறது.

இருப்பினும் முரண்பாடான பேட்டிகளை விலக்கிக் கொள்வது ஊடகத்தொழிலில் ஒரு தவறாகும். இதனால் குறித்த செய்தி பூரணத்துவமில்லாதிருப்பதோடு அதனைக் கையாண்ட செய்தியாளர் அனைத்தையும் அறிந்தவர் என்ற மாயையையும் ஏற்படுத்தி விடுகின்றது. புலனாராயப்படும் ஊழல்பற்றி சாதாரண அறிக்கையொன்று வெளியானதை செய்தியாளர் அறியாதிருக்கலாம். அத்துடன் வேண்டப்படுபவர் செய்தியாளரினால் கண்டுபிடிக்கப்பட்டவற்றை உறுதி செய்து பாரதூரமான கருத்துக்களையும் அது பற்றிக் கூறலாம்.

ஆயினும் பெருமளவு காலநேரத்தையும், உடல் பலத்தையும் விரயம் செய்தபின்னர் முரண்பட்ட பேட்டியொன்றை எடுக்காதிருப்பது செய்தியாளரைப் பொறுத்தவரை தொழில்ரீதியான பின்னடைவாக இருக்கலாம். பலம்வாய்ந்தவர்களுடைய தவறுகள் பற்றி முரண்படுவதில் இலங்கைச் செய்தியாளர்கள் நெடுந் துாரம் சென்றுள்ளனர். இதன் மூலம் வாய்மூலமான உடல்ரீதியான அச்சுறுத்தல்கள், விஷமத்தனமான சட்டநடவடிக்கை, சிறைவாசம் என்பவற்றையும் சந்தித்துள்ளனர்.

## ஆயத்தமாதல்

ஒரு வெற்றிகரமான முரண்பட்ட பேட்டியை நடத்துவதென்பது அது சம்பந்தமான ஆயத்தம், தொழில் நுணுக்கம் என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

**ஆயத்தப்படுத்தல்:** வெறுமனே ஞாபகத்தை நிலைநிறுத்தாமல், சகல ஆவணங்களையும் ஆராய்ந்து குறிப்பிடப்படாத நேர்த்தியான முக்கிய ஆவணப்பிரதிகளை பரிசீலனை செய்யவும் சில பலமான ஆவணங்களின் பிரதிகள் செய்தியாளர் நன்கு அவற்றைப் பரிசீலித்துள்ளதையும், அவரை ஏமாற்ற முடியாதென்பதையும் சர்ச்சைக்குரியவருக்குப் புரியவைப்பதாக இருக்கும்.

**பிரதியாக்கம்:** தமக்கு வேண்டியவரிடமிருந்து ஒரே சந்திப்பில் பதில்களை எடுக்கமுடியாதென்று புலனாய்வுச் செய்தியாளர்களுக்குத் தெரியும். பேட்டி வழங்குபவர் பேட்டியை எந்நேரமும் நிறுத்திக் கொள்ளலாம். அல்லது தொடர்ச்சியான தொலைபேசி உரையாடல்களை அவர் தவிர்க்கலாம். எந்தவொரு விடயத்தையும் செய்தியாளர்கள் மறக்கமுடியாது . தமது கேள்விகள் பற்றி அவர்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். எனவே செய்தியாளர்கள் கேள்விகளை எழுதிக்கொண்டு தமது பேட்டியை எடுத்துக்கொள்கின்றனர். அத்துடன் தமக்கு வேண்டப்படுபவர் கூறக்கூடியவைபற்றிய கேள்விகளையும் தயார் செய்ய வேண்டும். கேள்விகளை ஒழுங்காக குறித்து அதனை தனியாகவோ அல்லது தமது சகாக்களுடனோ சரிபார்த்துக் கொள்ளவும் முடியும். பெரும் ஊடக நிறுவனங்களில் புலனாய்வுச் செய்தியாளர்கள் ஒத்திகைபார்த்து தாம் எதனையும் தவறவிடாதிருத்தலை உறுதிசெய்யவேண்டும்.

**தெரிந்தும் தெரியாமலும்:** இது ஒரு பொதுவான அணுகுமுறை. குற்றவியல் புலனாய்வாளாராலும் இது பயன்படுத்தப்படுகிறது. பேட்டியின் ஆரம்பநிலையில் செய்தியாளர் தமது கதைக்குப்பாதிப்பில்லாத பல கேள்விகளைக் கேட்கின்றார். ஆனால் அக்கேள்விகளுக்கான விடைகளை செய்தியாளர் தெரிந்து வைத்திருப்பார். ஆயினும் அக்கேள்விகள் ஒரு நம்பகத்தன்மையை காட்டுவது போல இருக்கும்.

வேண்டப்பட்டவர் பொய் கூறுவாரேயானால் செய்தியாளர் உஷாரடைந்து அவரது பதில்களை ஏற்றுக்கொள்ளலாகாது. உதாரணமாக ஒரு கிராமத்தின் நீர் விநியோகம் பற்றி அம்மாவட்டப் பொறியியலாளர் தமக்குக் கிடைத்த பரிசோதனை அறிக்கைகளில் கையொப்பமிட்டிருக்கலாம். ஆனால் பேட்டியின்போது அப்பொறியியலாளரிடம் நீரின் தரம் பற்றிய அறிக்கையை ஒழுங்காக அப்பொறியியலாளர் பெற்றிருந்தாரா? என்று செய்தியாளர் கேட்கவேண்டும். அப்போது இல்லை என்ற பதில் கிடைக்குமானால்

அப்பொறியியலாளர் பொய்கூறுகிறார் என்ற முடிவுக்கு செய்தியாளர் நேரடியாகவே வரமுடியும்.

**களவிதிமுறைகள்:** பேட்டி தருபவர் குறித்த பேட்டியானது பதிவு செய்யப்படவேண்டியது என்பதை முன்னரே அறிந்திருக்க வேண்டியவராகிறார். இதனால் பின்னணி விபரம் அல்லது பதிய வேண்டாம் போன்று குறிப்பிடுபவை முரண்பட்ட கேள்விகளுக்கு ஏற்புடையவையல்ல. பதிய வேண்டாம் என்று குறிப்பிடுவதன் மூலம் சில சமயங்களில் பேட்டிக்குரியவர் செய்தியாளர்களை சமாளிக்க முற்படலாம். ஆனால் இதற்கு உண்மையில் இடந்தரலாகாது. உறுதியாக இருக்கவேண்டும். சுவையாக ஒன்றைக்கூறிவிட்டு, அதனைப்பதிய வேண்டாம் எனக்குறிப்பிடலாம். அப்போது "மன்னிக்கவும் நான் அதனைப்பயன்படுத்துவேன்" என்று உறுதிபடக்கூறவேண்டும்.

**ஒலிப்பதிவுக்கருவிகள்:** வானொலிச் செய்தியாளரிடம் எப்போதும் ஒலிப்பதிவுக் கருவி இருக்கும் . ஆனால் பேட்டிகளை எடுக்கும்போது செய்தியாளர்கள் எப்போதும் ஒலிப்பதிவுக்கருவியை பயன்படுத்த வேண்டும்.

பேட்டி ஒன்று ஒலிப்பதிவு செய்யப்பட பல காரணங்கள் இருக்கின்றன.

- **நிரூபித்தல்:** எது எப்படிச் சொல்லப்பட்டதென்பதை உறுதியாக நிரூபிக்க முடியும். இல்லையேல் பேட்டி தந்தவர் தாம் கூறியவற்றை மறுக்கமுடியும். திரிவுபடுத்தமுடியும் . தேவையேற்படின் செய்தியாளரது செய்தி நிறுவனம் மீளவும் அந்த பேட்டியை நிரூபித்துக் காட்டமுடியும்.

- **சுதந்திரம்:** பேட்டி தருபவரையும், செய்தியாளரையும் கவனக்குறைவாக இல்லாமலும், கைகளால் குறிப்பெடுக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தாமலும் ஒலிப்பதிவுக் கருவி உதவி புரிகிறது.

- **இணைப்பு:** ஒலிப்பதிவு செய்வதன்மூலம் எம். பி 3 கோவைகளுடாக வானொலி மற்றும் இணையத்தளங்களுக்கும் பேட்டியை இணைக்கமுடியும்.

அத்துடன் பேட்டியின்போது உபயோகிக்கப்படும் ஒலிப்பதிவுக்கருவி நல்லநிலையில், தூசு படியாதிருப்பதையும் உறுதிசெய்யவேண்டும்.

90 நிமிடங்கள் வரை பதிவு செய்யப்படக்கூடிய ஒலிப்பதிவுக் கருவிகளை செய்தியாளர்கள் பாவிக்க வேண்டுமென சிபார்சு செய்யப்படுகின்றது. சிறியளவிலான ஒலிப்பதிவு நாடாக்கள் பிரச்சினையை உண்டுபண்ணும். முக்கியமான தகவல்களை முரண்பாடான பேட்டிகளின் போது பதிவு செய்த பின்னர் அவை வீணாகச் செல்ல அனுமதிக்கலாகாது. பேட்டியின்போது ஒலிப்பதிவுக்கருவி நன்றாக இயங்குகிறதா என்பதை சரிபார்த்துக்கொள்ளவும். அத்துடன் மேலதிகமாக ஓர் ஒலிப்பதிவுக்கருவியை முன்னேற்பாடாக வைத்துக்கொள்ளவும்.

## தொழில் சார்ந்தமை

**ஒலிப்பதிவு:** அனுமதி கேட்கவேண்டாம். பேட்டி தருபவரிடம் நீங்கள் பேட்டியை ஒலிப்பதிவு செய்வதாகக் குறிப்பிடவும். அதன் பின்னர் ஒலிப்பதிவுக்கருவியை வெளியே வைக்கவும். சரியாக இயங்குகின்றதா என்பதை உறுதிசெய்யவும். பேட்டி நடைபெறும் போதுகூட இதைச் செய்யவும். பேட்டி தருபவர் ஒலிப்பதிவுக்கருவியைக் கையாள இடமளிக்கவேண்டாம். அவர் அதனை கையாளமுற்பட்டால் "நான் உங்களது கருவிகளை கையாளவில்லை. எனவே எனது கருவியை கையாளவேண்டாம்" எனக்கூறமுடியும்.

**கருமமே கண்ணாயிருத்தல்:** பேட்டியின்போது வாதிடவோ, பெரிதாகக் காட்டிக்கொள்ளவோ வேண்டாம். உணர்ச்சி வசப்படக் கூடாது பேட்டி தருபவர் பல்வேறு விதத்திலும் உங்களை வழி நடத்த முற்படலாம். சிரிக்கலாம், ஆத்திரமடைய வைக்கலாம். ஆனால் அவற்றுக்குள் சிக்கிவிடலாகாது. கருமத்தில் அவதானமாக இருந்து, பேட்டிதருபவர் நிறைய விடயங்களைத் தெரிவிக்கும் விதத்தில் நடந்துகொள்ளல் வேண்டும்.

**வார்த்தைகளுக்கு புறம்பாக:** அங்க அசைவுகள் மூலமாகவும் பல தகவல்கள் வெளிப்படலாம். உணர்வுகள், அசைவுகள் அத்துடன் தவறுதலாக உதிரும் சில உண்மைகள் என பேட்டி தருபவரிடமிருந்து பலதரப்பட்டவையும் வெளிப்படலாம். பேட்டியை பதிவு செய்யும் அதேசமயம் உணர்வு வெளிப்பாடுகளும் தகவல்களைத் தரக்கூடியவை பேட்டி தருபவர் குரலை உயர்த்துவது? மேசையில் அடிப்பது? அழுவது? நிறுத்துவது? கத்துவது? போன்ற செயற்பாடுகளையும் கூட செய்தியாளர் குறிப்பிட முடியும்.

**குறிப்பெடுத்தல்:** ஒலிப்பதிவுக்கருவியை பயன் படுத்தும் அதே வேளை செய்தியாளர் குறிப்புப் புத்தகம் மூலமாகவும் மேலதிகமாக உணர்வுகள் சம்பந்தப்பட்ட குறிப்புகளை எடுக்கலாம். அத்துடன் சில கேள்விகளையும் தயாரிக்கலாம். குறைந்த பட்ச அளவிலேயே குறிப்பெடுத்தல் அமைந்திருக்க வேண்டும். பேட்டிதருபவர் எதையாவது சுவையாகக் குறிப்பிடும் போது அதனை வெளிப்படையாகவே குறித்துக் கொள்வது போல செய்தியாளர் அவசரப்பட்டுவிட்டால் பேட்டி தருபவர் தான் கூறியதிலிருந்து பின்வாங்கிவிட முடியும்.

**அமைதி:** பேட்டி தருபவர் கதைப்பதை திடீரென நிறுத்தி விட்டு உன்னிப்பாக பார்க்கலாம். அமைதி எல்லோருக்கும் பொருந்தி வராது. அப்போது செய்தியாளர் பொறுமையிழந்து ஏதாவது கூற எத்தனிக்கலாம். ஆனால் ஒருபோதும் அப்படிச் செய்யலாகாது.

அமைதியை சரியாகப் பயன்படுத்தும்போது பேட்டி தருபவரை மேலும் பேசவைக்கலாம். அத்துடன் ஏதாவது முழுமையற்ற கருத்தைக்கூற பேட்டிதருபவர் முற்படும்போது சற்று பொறுத்து செயற்படவேண்டும். இல்லாவிட்டால் "எனக்குப்புரியவில்லை" அல்லது "எதைக்கருதுகிறீர்கள்?" என்று கேட்கலாம். அதில் ஏதாவது தாமதமாயின் அடுத்த கேள்விக்கு நகரலாம்.

**பிரதிபலிப்புகள்:** ஊடகப்பேச்சாளர்கள் பேட்டி தருபவர் சார்பாக பதிலளிக்க முயற்சிக்கலாம். அப்போது பேட்டி தருபவரை நோக்கி அமைதியாக கேள்வியை திசைதிருப்பவும். "இதுவா உங்கள் பதில்?" அல்லது "இப்படியா கருதுகிறீர்கள்?" என்று கேட்கலாம்.

**ஊடகப்பேச்சாளர்கள்:** உயர் அரச அதிகாரிகள் அல்லது அரச நிறுவனங்கள் தமக்கென பேச்சாளர்கள் அல்லது பொதுசனத்தொடர்பு அதிகாரிகளை தமக்கும், புலனாய்வுச் செய்தியாளர்களுக்குமிடையே வைத்திருப்பதுண்டு. இவர்கள் முக்கியத்துவமில்லாத பதில்களை வழங்கலாம். ஆனால் பேட்டிக்குரியவர்களுக்குப் பதிலாக அல்லது சமமாக இவர்களை நோக்கலாகாது.

செய்தியாளரை சந்திக்கவிருக்கின்ற பிரமுகரை அவர் எதிர்கொள்ள வேண்டியவற்றுக்கு ஏற்றவாறு தயார்படுத்துவதே ஊடகப்பேச்சாளரின் கடமையாகும். இதில் நன்மையும் உண்டு. ஏனெனில் புலனாய்வுச் செய்தியாளருக்கு வேண்டிய ஆவணங்களையும் வேறு தகவல்களையும் இந்த பேச்சாளர்களால் வழங்க முடியும். ஊடகப்பேச்சாளர்கள் செய்தியாளர்களிடம் எழுத்து மூலமான கேள்விகளை கேட்பதுண்டு. இதன் பின்னர் பேட்டி தருபவரின் பதிலை எழுதுவதோடு, மோசமான கதையைக்கூட கேள்விகளின் அடிப்படையில் தரமுடியும். இந்நிலையில் சரியான தகவல்களைப் பெறுவதில் சங்கடங்கள் ஏற்படலாம்.

முரண்பாடான பேட்டியின்போது அணுகப்படவேண்டிய விடயங்கள் பற்றியும், கேள்விகள் பற்றியும் பேட்டி தருபவரிடம் குறிப்பிடுவது தவிர்க்கமுடியாதது. அத்துடன் தமக்கு பேட்டி மூலம் பெறப்படக்கூடியவை பற்றி ஏற்கனவே செய்தியாளர் அனுமானித்தும் வைத்திருக்கமுடியும். இலங்கை போன்ற மிக நெருக்கமான சமூக அமைப்பில் இது சாத்தியப்படக்கூடியது. ஆனால் இதன்மூலம் தனது துணிவையோ அல்லது தான் அறிந்தவற்றையோ புலனாய்வுச் செய்தியாளர் வெளிப்படுத்த வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. நல்லெண்ண அடிப்படையில் சில கேள்விகளை செய்தியாளர் தெரியப்படுத்தலாம். ஆனால் முக்கியமானவற்றை தம்மோடு வைத்திருக்கமுடியும் . எனவே ஊடகப்பேச்சாளருக்கு பேட்டியின்போது அணுகப்படப்போகும் விடயம்பற்றி குறிப்பிடுவது சிறந்ததாகும்.

## அதன்பின்னர்

**தலைச்சுமையை நீக்கல்:** சில செய்தியாளர்களுக்கு உடனடியாகவே காரியாலயம் திரும்பி ஒலிப்பதிவுக்கருவியை இயக்குமாறு சொல்லப்படுகின்றது. ஆயினும் சற்று ஆற அமரச்சிந்திப்பதே நல்லது. ஏனெனில் முரண்பாடான பேட்டிகளின்போது சில விடயங்கள் பற்றி சந்தேகங்கள் ஏற்படலாம் . பேட்டி தந்தவர் மாறுபாடான விடைகளைத் தந்திருக்கலாம். அத்துடன் கேள்விகள் காரணமாக அவதானிப்புகள் விடைகள் என செய்தியாளரின் மனம் குழம்பிப்போயிருக்கலாம். இதனால் பல முக்கிய விடைகள் சம்பந்தமாகவும் மனதில் குழப்பங்கள் ஏற்படலாம். எனவே நேரம் இடந்தருமேயானால் ஓரிரு தினங்களுக்கு தான் எடுத்துக்கொண்ட பேட்டியின் அழுத்தத்திலிருந்து மனதை விடுவித்துக் கொள்ளலாம். அவ்வேளையில் வேறொரு விடயத்தை அவர் அணுகலாம்.

**உருவாக்கல்:** செய்தியாளர் தாம் எடுத்துக்கொண்ட பேட்டியின் ஒவ்வொரு வார்த்தையையும் பதிவு செய்தல் முக்கியமாகும். முக்கியமான கூற்றுக்கள் பெரிதான எழுத்துக்களில் எழுதப்படவேண்டும். பேட்டியின்போது கைகளினால் குறிப்பெடுக்கப்பட்டவற்றையும் அடைப்புக்குறிக்குள் சேர்க்கமுடியும்.

### கருத்துக்கூறவில்லை

அனைத்து பேட்டி தருவோரும் முரண்பட்ட பேட்டிக்கு இணங்குவதில்லை. உண்மையில் சிலர் முன்வருவதில்லை. இருப்பினும் தொழில்சார்ந்த மற்றும் சட்டரீதியான காரணங்களை முதன்மைப்படுத்தி நம்பகத்தன்மையோடு தான் அறிந்தவற்றோடு, கருத்துக்களைப் பெற முன்வரவேண்டும்.

எழுதுவதற்கு அல்லது ஒலிபரப்ப முன்னர் செய்தியாளர் குறைந்த பட்சம் மூன்று உண்மையான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். உண்மைத்தன்மை என்பது வெறுமனே தொலைபேசி அழைப்புடன் மட்டுமல்லாது, எழுத்துமூலமாக நேரம் / திகதி என்பவை ஆவணத்தில் குறிக்கப்படவேண்டும். பேட்டியைப் பெற இருப்பவரின் செயலாளரிடம் பேட்டிக்கான அனுமதியை இதன்மூலம் பெறமுடியும். அத்தோடு மின்அஞ்சல் மூலமாகவும் இந்த ஆவணத்தை சேர்ப்பித்து அதன் பிரதியை செய்தியாளர் தன்னிடம் வைத்திருக்கமுடியும். இதன் மூலம் பேட்டி தருபவர் தாம் கூறிய விடயங்கள் பத்திரிகைகள் மற்றும் ஊடக சாதனங்கள் மூலமாக வெளியானதும் தான் தொடர்பு கொள்ளப்படவில்லை என்று மறுப்பெதனையும் கூறமுடியாது.

## அத்தியாயம் பத்து

# செம்மைப்படுத்தலும் தகவல்களை சரிபார்த்தலும்

புலனாய்வு செய்தியாளர்கள் சமயோசிதமானவர்களாக இருக்கவேண்டும். பிழையானவற்றைத் தரும்போது சிக்கலில் மாட்டப்படநேரிடும் என்பதை செய்தியாளர்கள் அறிவார்கள். சொற்பிழை, தவறான திகதி, குழப்பமான கூற்றுக்கள், திரிபுப்படுத்தப்பட்ட விடயங்கள் என்பவை ஒரு பத்திரிகையாளருக்கு தொழில் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இதன் காரணமாகவே புலனாய்வுச் செய்தியின் ஒவ்வொரு அம்சமும் பிழையின்றி சீராக இருக்கவேண்டியது அவசியமாகும் . இருதடவைகளுக்கு மேல் அவற்றைப் பரிசீலிக்கவும் வேண்டும். எவ்விதத்திலும் கூறப்பட்டவற்றுக்கு மாறாக அல்லது ஊகங்கள் என்பவை சேர்க்கப்படலாகாது. எடுத்துக்கொண்ட விடயங்களை நன்கு பரிசீலிப்பதன் மூலமும் தீவிரமான செம்மைப்படுத்தல் மூலமும் இத்தகைய தரக்கட்டுபாட்டை மேற்கொள்ள முடியும். முக்கிய அமெரிக்க செய்தி நிறுவனங்களில் புலனாய்வுச் செய்திகள் சம்பந்தப்பட்ட விடயங்கள், பல்வேறு தரத்திலுமான பத்திரிகையாசிரியர்கள் ஊடாகவும் செல்வதோடு மீள சீர்செய்யப்படவேண்டியவை, சரிவர எழுதப்பட்டு செம்மைப்படுத்தப்படுகின்றன. இது விடயத்தில் நியூயோர்க்கர் சஞ்சிகையின் அணுகுமுறை பிரபலமானது. அச் சஞ்சிகை தரவுகள், தகவல்கள், கூற்றுக்கள் என்பவற்றை சரிபார்த்து உறுதி செய்வதற்கு சிறந்த வளவாளர்களையும் நியமிப்பதுண்டு. இவர்கள் ஒவ்வொரு விடயங்கள் கூற்றுக்கள் தரவுகள் என்பவை பற்றி கேள்விகளை எழுப்பி வெளியாக வேண்டிய தகவல்களை செம்மைப்படுத்துகின்றனர்.

இலங்கையிலும் சில பதிப்பாளர்கள் இதுபோன்ற வளவாளர்களை பணியிலமர்த்தியிருந்தனர்.

நுணுக்கமான செம்மைப்படுத்தல் என்பது சலிப்படைய வைப்பதும் நீண்ட வேலையுமாகும். முதல் சுற்றில் செய்தியாளரின் உடனடி மேற்பார்வை ஆசிரியர் குறித்த செய்தியின் ஒவ்வொரு விடயத்தையும் ஆராய்வார். “எப்படி அது உனக்குத் தெரியும்?” என்ற கேள்வியோடு அதனை உறுதிப்படுத்த குறிப்புகள், ஒலிப்பதிவு ஆவணங்கள் என்பவற்றையும் அவர் கோருவார். தகவலின் தரத்தை பரிசீலிக்கும் வகையில் பெயர் குறிப்பிடப்படாத செய்தி மூலங்களின் அடையாளங்களையும் ஆசிரியர் கோருவார்.

குறித்த செய்தி ஒவ்வொரு கட்டமாக செய்தி அலுவலகத்தில் ஒவ்வொரு தரத்திலும் இருக்கின்ற ஆசிரியர்கள் ஊடாகச் செல்லும்போது அவர்கள் தமது யோசனைகள், அவதானிப்புகள் என்பவற்றை வழங்க முன்வருவார்கள்.

இறுதி வடிவம் பெறும் குறித்த செய்தியை பிழையின்றி செம்மையாக வழங்குவதே இதன் நோக்கமாகும். இறுதியாக செய்தி நிறுவனத்தின் சட்டத்தரணி குறித்த செய்தியின் சட்டப்பிரச்சினை பற்றியும் விளக்கி அதற்குரிய அறிவுரைகளையும் வழங்குவார்.

ஆனால் பிராந்திய செய்தியாளருக்கு இத்தகைய செம்மைப்படுத்தும் வாய்ப்புக்கள் பெரிதும் கிடைப்பதில்லை. அவர்கள் தாமாகவே தமது புலனாய்வுச் செய்தியை உறுதி செய்து செம்மைப்படுத்த வேண்டியுள்ளது.

சில அம்சங்கள் வருமாறு:

- **பெயர்களும் - இலக்கங்களும்:** இலக்கங்கள் பற்றி ஊடகவியலாளர்கள் பொதுவாகவே பிழைவிடுவதுண்டு. ஆனால் புலனாய்வுச் செய்தியாளர்கள் அத்தவறைவிட முடியாது. ஒவ்வொரு இலக்கமும் பல தடவைகள் சரிபார்க்கப்பட்டு உறுதிப்படுத்தப்படவேண்டும்.

  ஓர் அமெரிக்க செய்தியாளர் தனது விடயங்களை எழுதும்போது, சிவப்பு பென்சிலினால் தனது விடயத்திலுள்ள இலக்கங்களை வட்டமிடுவதுண்டு. இவ்வாறு செய்வதன்மூலம் அவர் அவற்றை மீளவும் உறுதிப்படுத்த முடிகிறது. எனவே செய்தியாளர்கள் இலக்கங்களை உறுதிப்படுத்துவது போன்றே பெயர்களையும், அவற்றின் எழுத்துக்களையும் செய்தியின் நம்பகத்தன்மையைப் பேணும் விதத்தில் கச்சிதமாக உறுதிசெய்யவேண்டும்.

- **தொனி :** ஒரு செய்தியில் உண்மைத்தகவல்களே முக்கியமானவை. ஆயினும் அச்செய்தி வழங்கப்படும் தொனியிலேயே செய்தியாளர் அல்லது குறித்த செய்தி நிறுவனம் எதிர்நோக்கும் பிரச்சினை தங்கியுள்ளது. ஒரு புலனாய்வு செய்தியாளர் தனது செய்தியை அதன் உண்மைத் தகவல்களோடு கச்சிதமாக வழங்கமுடியும். ஆனால் பரபரப்பை ஏற்படுத்தும். “பாரிய, வியப்பான, ஆச்சயரியமான” என்ற பரபரப்பையும், உணர்ச்சியையும் துாண்டக்கூடிய வார்த்தைப் பிரயோகங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

- **உள்ளடக்கம்:** ஒரு செய்தியின் முழுமையான விடயத்தைத் தருவதைவிட அதிலுள்ள கவர்ச்சியான வார்த்தைப் பிரயோகங்களை பாவிக்க செய்தி யாளர்கள் உந்தப்படமுடியும். இத்தகைய குறுக்குவழியைப் பின்பற்றலாகாது. எனவே ஒரு முக்கிய கதையை முழுமையாக தருவதே உகந்தது. அதிலுள்ள விசேடமானவற்றை மட்டும் குறிப்பிடுவது செய்தியின் முழுமையற்ற நிலையை ஏற்படுத்தி சர்ச்சையையும் உருவாக்கலாம்.

- **நியாயத்தன்மை:** பேட்டிதந்தவரிடமிருந்து சில விசேடமான கருத்துக்களை செய்தியாளர் பெற்றிருக்கலாம். ஆனால் அதற்கு முக்கியமளிக்காது இறுதிப்பாகத்தில் அதனை இணைத்துவிடுவது நியாயமற்றதாகும்.

  உரிய முக்கியத்துவமளித்து அதனை கதையின் மையப்பகுதியில் அல்லது ஆரம்பத்தில் இணைப்பதே சிறந்ததாகும்.

- **மீளப்போட்டுக் காண்பிப்பது:** தமது தகவலின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த தமது செய்தி மூலங்களிடம் தாம் பதிவு செய்ததை மீளப்போட்டுக் காண்பிப்பதுண்டு. இதனை செய்ய வேண்டிய அவசியமில்லை.

ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் மட்டுமே மீளவும் போட்டுக் காண்பித்து, பிழைகளை சரிசெய்ய முடியும். செய்தி மூலங்கள் முக்கியமானவை. ஆனால் அவர்கள் செய்திகளை தீர்மானிப்பவர்களாகிவிடமுடியாது.

- **சட்டவாளர்:** சில சர்ச்சைக்குரிய விடயங்களை கையாளும் செய்தியாளர், நீதிமன்ற விசாரணைக்கு அது எடுத்துக்கொள்ளப்படும் பட்சத்தில் அதற்காக தம்மை தயார்படுத்த வேண்டியவராகிறார். தனது கோவை, எழுதிய பிரதிகள், தொடர்புகள் பின்னணி ஆவணங்கள், பேட்டி குறித்த சரியான தகவல்களையும் ஒழுங்கமைத்து வைக்க வேண்டியவராகிறார்.

**மீளஎழுதுதல்:** சரியாக எழுதுவது கடின உழைப்புக்குரிய விடயமாகும். பல்வேறு விடயங்கள் ஊடாக இணைத்தும், விலக்கியும் ஒதுக்கியும் அநேக நகல்களுடன் மீளசரிவர எழுதவேண்டியுள்ளது. உங்களது கதை மிகமுக்கியமானது என நீங்கள் கருதினால் உங்களது ஆசிரியர் அதனை நீங்கள் இருதடவைகள் வரை மீள எழுதவேண்டுமென எதிர்பார்ப்பார். இதன் பின்னர் ஏனைய மேற்பார்வையாளர்கள் மேலதிக விளக்கங்களைக் கோருவர்.

லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் பத்திரிகையின் முக்கிய செய்தி நிர்மாணங்களின்போது செய்தியாளர்கள் பத்து அல்லது இருபது தடவைகளுக்கு மேல்கூட தமது செய்திகளை ஒழுங்காகத்தரும் விதத்தில் எழுதுவதுண்டு. பெரும்பாலான செய்தி நிறுவனங்கள் கால அவகாசத்தை கருத்திற்கொண்டு இவ்வாறு செய்வதில்லை. ஆயினும் ஓரிரு தடவைகள் மீள எழுதுவது நல்ல பயனைத் தருவதாக இருக்கும்.

**கண்களும் செவிகளும்:** ஒரு செய்தியை அதை எழுதிய செய்தியாளர் பார்க்கும்போது அதிலுள்ள குறை, நிறைகளை அவதானிக்கமுடியும். இதன்மூலம் தவறானவற்றை சரிசெய்யமுடியும். இது தவிர தனது சகாவிடம் தான் எழுதியதை உரக்க வாசித்துக்காட்டும் பட்சத்தில் அதில் உள்ள சீரற்ற தன்மைகளை நிவர்த்தி செய்யமுடியும்.

ஒரு முக்கிய புலனாய்வுச் செய்தி தொடர்பாக மூன்று கோடிக் கண்களை ஒரு செய்தி நிறுவனம் கொண்டிருக்கவேண்டும். இக்கண்கள், செய்தியாளரின் சகாவுடையதாக மேற்பார்வையாளருடையதாக இருப்பதோடு ஆசிரியருடையதாகவுமிருக்கலாம். பலர் ஒரு செய்தியைப் பார்க்கும்போது அதிலுள்ள குறைபாடுகளை கண்டறியமுடியும். இதன் காரணமாகவே சில ஊடக நிறுவனங்கள் கதைகளில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய சிரேஷ்ட நிலையிலிருப்பவர்களை பணிக்கமர்த்துவதுண்டு.

**செய்தி வெளியான பின்னர்:** ஒரு பலம் வாய்ந்த அதிகாரி அல்லது நிறுவனம் ஒரு பத்திரிகையாளனின் துணிச்சலுக்கு சவால் விடமுடியும். புலனாய்வுச் செய்தியின் நோக்கம் மாற்றத்தைக் கொண்டுவருவதேயாகும். அது பலதரப்பட்டதாக இருக்கலாம். இது விடயத்தில் உண்மைச் செய்தி வெளியானதையடுத்து செய்தியாளர் ஓய்ந்துவிடலாகாது. தனது புலனாய்வுச் செய்தியை உயிரோட்டம் கொண்டதாக மாற்றிவிட அதை எழுதிய செய்தியாளர் முன்வரவேண்டும்.

இதன் மூலம் அப்புலனாய்வுச் செய்தி முக்கிய நிறுவனங்கள் மற்றும் முக்கிய மானவர் களைச் சென்றடைந்து எதிர்பார்த்த மாற்றங்களுக்கு வழியமைத்துவிடும்.

புலனாய்வுச் செய்தியை உயிரோட்டமுடையதாக்குவதற்கான நடவடிக்கைகள்:

- **பின்தொடரும் செய்திகள்:** ஒரு பின்தொடரும் செய்தியை புலனாய்வுச் செய்தியாளர் ஒருவராலேயே நன்கு தொடர்ந்து மேற்கொள்ளமுடியும். தமக்கு வேண்டிய கருப்பொருளை பிரஜைகள் குழுக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள், சுகாதார திணைக்களங்கள் பாதிக்கப்பட்டோர் என்ற ரீதியில் பெற்றுக்கொள்ளமுடியும். அல்லது ஒரு முக்கிய அதிகாரி ஒத்து ழைக்க முன்வரும் பட்சத்தில் செய்தியாளர் பின்தொடர்ந்து எழுதலாம். நிறுத்திவிடாது இதனைச்செய்ய வேண்டும். செய்தியாளரும், அவரது நிறுவனமும் குறித்த செய்தியை வளர்த்துக்கொள்ளாத பட்சத்தில் வேறெவராலும் அதனைச் செய்யமுடியாது.

- **முன்னோடி அறிவித்தல்:** ஒரு செய்தி வெளியாவதற்கு ஓரிரு தினங்கள் முன்னர் பிரஜைகள் குழுக்கள், சர்வதேச அமைப்புகள் அல்லது அரச ஒழுங்கமைப்பாளர்கள் சில தகவல்களைத் தரமுடியும். இவை பின்தொடரக்கூடிய புலனாய்வுச் செய்திகளுக்கு வழிவிடமுடியும்.

- **விளம்பரம்:** செய்தி நிறுவனத்துக்கு அனைத்து வளங்களும் இருக்குமாயின், முக்கியமான புலனாய்வுச்செய்தி அல்லது செய்தித் தொடர்பு பற்றி அந்நிறுவனம் விளம்பரங்களைப் பிரசுரிக்கமுடியும். இதன்மூலம் அந்நிறு வனம் தனது பிரபலத்தையும் பெருக்கிக் கொள்ளமுடியும்.

- **தேவைப்படுதல்:** ஒரு புலனாய்வுச் செய்தி வெளிவந்தால் அதனை எழுதிய செய்தியாளரை ஏனைய செய்தி நிறுவனங்கள் பேட்டி கண்டு மேலும் தகவல்களை எழுத முடியும். இதற்கு அச்செய்தியாளரும் தயாராக இருக்கவேண்டும்.

பாகம் மூன்று

# ஆசிரியர்கள் மற்றும் செய்தியாளர்களின் பாதுகாப்பு

## அத்தியாயம் பதினொன்று

# புலனாய்வுச் செய்தித்துறை செயற்திட்டங்களை நிர்வகித்தல்

புலனாய்வுச் செய்தித்துறை என்பது ஓர் அணியின் பந்தயமாகும். ஒரு செய்தி நிறுவனம் ஆர்வமுள்ள, சிறந்த ஆட்டக்காரர்களை இப்பந்தயத்தில் கொண்டிருக்கமுடியும். ஆனால் அந்நிறுவன முகாமையாளரோ அல்லது உரிமையாளரோ தம்மை அப்பந்தயத்தில் ஈடுபடுத்தாதவரை எவரும் வெல்லமுடியாது. ஆகையினால்தான் இலங்கையில் ஊடக மேற்பார்வையாளர், ஆசிரியர்கள், ஊடக உரிமையாளர் ஆகியோர் இச்செய்தித் துறையின் பெறுமானத்திற்கு ஊக்கமளிக்க வேண்டியோராகின்றனர். புலனாய்வு செய்தித் துறை சமூகக் குறைபாடுகளை நீக்குகிறது. அத்துடன் சிறந்த ஊடக செயற்பாட்டுக்கு வழியமைப்பதோடு, செய்தித்துறை முகாமையாளர்களது நிதித் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. ஊடக நிறுவன உரிமையாளர்களும், மேற்பார்வையாளர்களுமே இலங்கையின் செய்தி அறைக்கலாசாரத்தை மாற்றமுடியும். இலங்கையிலும் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மற்றும் யுத்தத்துக்குப் பின்னரான சூழ்நிலைகளையுடைய நாடுகளில் போன்று தரத்தைவிட தொகைக்கே முக்கியமளிக்கப்படுகிறது.

ஏ. ஆர். ஐ. ஜே. சஞ்சிகைக்கான தனது முன்னுரையில் அல்ஜசீரா புலனாய்வுச் செய்தியாளர் யொஸ்றி பொன்டா தெரிவித்தாவது:

> ஒரு தொழில் சார்ந்த நோக்கில் பார்க்கும்போது, எமது ஊடக நிறுவனங்கள் பலவும் தரத்தைப் பேணுவதிலும் பார்க்க தொகையைப் பேணுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளன. தரத்தைப் பேணுதல் என்பது நல்ல கல்வியறிவுள்ள முகாமைத்துவம், தொடர்ச்சியான பயிற்சி, ஒருங்கிணைக்கப்பட்ட குழுக்கள் , ஒழுங்கான வரவு - செலவு என்பவற்றோடு நேர முகாமைத்துவம் போன்றவற்றைக் கொண்டிருத்தலாகும். ஆழமான செய்தியறிக்கையினை பாராட்டாத ஒரு முகாமையாளரோ அல்லது ஆசிரியரோ அரிதாகவே இருக்கமுடியும்.
>
> அதேசமயம் தமது பாராட்டை அவர்கள் மிக அரிதாகவே உண்மையான விதத்தில் வெளிப்படுத்துவோராகவும் இருக்கின்றனர். எனவே அவர்கள் பிரச்சினையின் ஒரு பகுதியாக உள்ளனர். இந்நிலையில் அவர்களை ஒரு தீர்வின் பகுதியாக காண்பதே தரத்தைப்பேணும் ஊடகக் கலாசாரத்தை கொண்டிருப்பதற்கான ஒரு வழியாகும்.

இலங்கையில் தொகையைவிட தரத்தைப் பேணவேண்டுமென்ற நிர்ப்பந்தத்துக் கான காரணங்கள் செய்தி முகாமையாளர்கள் மத்தியில் காணப்படுவதாக இருக்கின்றது.

**பரஸ்பரம் பிரத்தியேகமானதல்ல:** குறுகிய கால அடிப்படையில் பார்க்கும்போது நாளாந்த செய்திகளின் முக்கியத்துவத்தை புலனாய்வுச் செய்தி பெற்றுவிடுமென்ற மாயை முதலாவது காரணமாகும். உண்மையில் கடந்த காலங்களில் புலனாய்வுச் செய்தித்திட்டங்கள் பெரிதும் பயனளித்துள்ளதோடு நாளாந்த செய்திகளைவிட சிறப்பானவையாகவும் இருந்துள்ளன.

**சமூகப் பொறுப்பு:** தனிப்பட்ட வியாபாரத்திற்கு அப்பாற்பட்டதாக ஊடகத்துறை விளங்குகின்றது. ஒரு ஜனநாயக அமைப்பில் தொழிற்சாலைகள் , நீர்த்தேக்கங்கள், அதன்மூலமான மின்உற்பத்தி, நீர்வழங்கல் என்பவை பற்றி அறியத்தருகின்றன. பொது நன்மைக்குரியதாகவும், சமூகவியல் நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்தி அரசியல் மற்றும் கலாசார பரிவர்த் தனைக்கு அரங்கிடுவதாகவும் இருக்கின்றது. முக்கியமான தீர்மானங்கள் குறித்த தகவல்களையும் செய்தி என்பதற்கு அப்பால் மக்களுக்கு வழங்குவதில் ஊடகம் முக்கிய பங்காற்றுகிறது. இத்தகைய நடவடிக்கை செய்தியை வழங்குவதற்கு அப்பாற்பட்டவிதத்தில் செய்தியாளரின் பல்வேறு பொறுப்புணர்வுகளையும் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. ஊழலை அகற்றி ஒரு புதிய சமூகக் கட்டமைப்பைப் பேணும் விதத்தில் தகவல்களை ஆழமான செய்திகளாக தருவதிலும் ஊடகத்துறைக்கு சமூகக்கடமைப்பாடு இருக்கின்றது.

**சிறந்த ஊடக செயற்பாடு:** புதிய ஜனநாயக அமைப்புகளிலே விரிவுபட்டுவருகின்ற புலனாய்வுச்செய்தித்துறை செயற்பாடுகளை இலங்கை ஊடக நிறுவனங்களும் கைக்கொள்ள வேண்டியவையாக இருக்கின்றன. ஊடக சுதந்திரத்தை நிலைநிறுத்துவதோடு செய்திக்கூடங்களில் தொழில்கள் தரத்தையும் உயர்த்துவதாக இருக்கின்றது.

**சிறந்த வியாபாரம்:** பொதுவான நடைமுறைகளைப் போலன்றியும், குறுகியகால நோக்குடனும் அல்லாமல் புலனாய்வுச் செய்தித்திரட்டல் ஓர் ஊடக நிறுவனத்துக்கு உதவுகிறதே தவிர அதனை பாதிக்க செய்யவில்லை.

அமெரிக்க ஊடகவியல் நிபுணர் பில்கொவக் மற்றும் ரொம்ரொனெடீல் ஆகியோர் பத்திரிகைகளும், ஒலி, ஒளிபரப்புச் சேவைகளும் விளம்பரதாரர்களுக்கே அதிகளவு இடத்தை ஒதுக்குவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.


“செய்தியாளர்கள் தமது செய்திகளை விற்பதைவிட, தமது வாசகர்களுடன் பெறுமானங்கள் , தமது தீர்ப்புகள் , துணிச்சல் , ஆளுமை , தொழில்திறன் சமூக அர்ப்பணம் என்பவற்றின் அடிப்படையில் உறவுகளைக் கட்டி எழுப்புகின்றனர். இத்தகைய நிலை பொதுமக்களுடன் ஓர் உறவை ஏற்படுத்துகிறது . இதனையே பின்னர் செய்தி நிறுவனங்கள் விளம்பரதாரர்களுக்கு வாடகையாகத் தருகின்றன.” இதனை அவ்விரு செய்தியாளர்களும்” ஊடகத்துறையின் அம்சங்கள்” என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளனர்.

பத்திரிகையாளராகவிருந்து சமூகவியலாளராக மாறிய பிலிப்மெயர் என்பவர் ஊடக கச்சிதத்தன்மை பற்றி ஆழமாக ஆராய்ந்த பின்னர், “இல்லாதுபோகும் பத்திரிகை” என்ற தமது நூலில் ஒரு பத்திரிகை நிறுவனத்தின் எழுச்சியும், வீழ்ச்சியும் அந்நிறுவனம் எவ்வளவு தூரம் வாசகர்களின் செல்வாக்கிற்குட்பட்டதாக இருக்கின்றதென்ற விளம்பரதாரர்களின் அனுமானத்திலேயே தங்கியிருப்பதாக தெரிவிக்கின்றார்.

அத்துடன் ஊடக நிறுவனமொன்றின் நம்பகத்தன்மை என்பது பொதுமக்கள் நலன்கருதியதாக அந்நிறுவனம் எவ்வாறு இயங்குகின்றதென்பதிலேயே தங்கியுள்ளது.

சிறந்த புலனாய்வுச் செய்தித்துறை என்பது உயர்ந்த தரத்திலான கச்சிதத்தன்மையைப் பேணுவதோடு ஒரு செய்தி நிறுவனம் மக்கள் நலனில் கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துகிறது. இத்தகைய நிலை ஊடக நிறுவனமொன்றின் செல்வாக்கை அதிகரிப்பதோடு அதன் நீண்டகால அடிப்படையிலான பொருளாதார உறுதிப்பாட்டையும் உறுதிசெய்கிறது. அத்துடன் ஊடக உரிமையாளர்கள் பணத்துக்காகவும், அரசியல் நலனுக்காகவுமே இயங்குகின்றனர் என்ற தென்னாசிய செய்தி நுகர்வோர் மத்தியில் நிலவும் எண்ணத்தையும் நீக்குவதாக இருக்கின்றது.

**உதாரணம்:**




அண்மையில் அமெரிக்க சர்வதேச அபிவிருத்திக்கான நிறுவனம் பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் மேற்கொண்ட ஆய்வொன்றில், பெரும்பாலான பங்களாதேஷ் மக்கள், தமது ஊடக நடவடிக்கைகள் குறிக்கோள்களுடன், பொறுப்புணர்வை வெளிப்படுத்துபவையாக மாறிவருகின்ற போதிலும், அவற்றின் செய்திப் பங்களிப்பென்பது பெரிதும், அரசியல், பணம், மற்றும் தனிப்பட்ட செல்வாக்கிற்குட்பட்டதாக இருக்கின்றதென அறியப்பட்டுள்ளது.

எண்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் கருதுவதென்னவென்றால், ஊடக உரிமையாளர்கள் தமது வர்த்தக நோக்கத்திற்காகவே செய்தி நிறுவனங்களை உருவாக்கி பணம் சம்பாதிப்பதை நோக்கமாக கொண்டிருப்ப தாகவும், நம்பத்தகுந்த செய்திகளை தருவதை விடுத்து தமது ஏனைய வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்தவே ஊடக நிறுவனத்தைப் பயன் படுத்துவதாகவும் கருத்து வெளியிடப்பட்டுள்ளன. அரசியல் நோக்கங்களை ஊக்குவிக்கு வேண்டுமென்பதையே ஊடக நிறுவனங்கள் விரும்புவதாக 54 சதவீதமானோர் கருதுகின்றனர். இந்நிலையில் பங்களாதேஷில் ஊடகத்துறை மக்கள் நலன்கருதியதாக அமையவில்லை என்பதையே இவ்விரு ஆய்வுகளும் வெளிப்படுத்துகின்றன.

## புலனாய்வுச் செய்தியை எவ்வாறு பாதுகாப்பது?

ஏனைய இடங்களைப் போல இலங்கையிலும் புலனாய்வுச் செய்தித்துறை, புதிய புரிந்துணர்வு, அர்ப்பணிப்பு என்பவற்றை செய்தியாளரும், மேற்பார்வையாளருக்குமிடையே குறிப்பாக மாகாணமட்டத்தில் உருவாக்க வேண்டியதாக இருக்கின்றது.

தமது செய்திகளுக்கு கொழும்பை மையமாகக் கொண்ட ஊடகநிறுவனங்கள் முக்கியமளிப்பதில்லை என்ற அபிப்பிராயத்தை பிராந்திள செய்தியாளர்கள் கொண்டுள்ளனர். தாம் சிறந்த புலனாய்வுச் செய்தி யோசனைகளைக் பிராந்திய செய்தியாளர்கள் கொண்டுவந்தால் அவற்றை கொழும்பிலுள்ள ஊடக மேலதிகாரிகள் உள்வாங்கிவிடுவதோடு அலுவலக செய்தியாளர் ஒருவரோடு இணைந்து செயற்பட வைக்கின்றனர் எனவும் தெரிவிக்கின்றனர். இதனால் அலுவலகச் செய்தியாளரே அச்செய்தி மூலம் முக்கியத்துவம் பெறுகின்றார் எனவும் கருதுகின்றனர். புலனாய்வுச்செய்தி திரட்டலுக்கான நிதி உதவியோ அல்லது நிறுவன ரீதியான உதவியோ தமக்குக் கிடைப்பதில்லை எனவும் அவர்கள் முறையிடுகின்றனர்.

பிராந்திய செய்தியாளர் சங்கத்தலைவர் ஒருவர் அண்மையில் வெளியிட்ட முறைப்பாடொன்றில் கிராமிய பகுதிகளில் விபசாரம் பற்றி தான் எழுதிய செய்திக்கு குறித்த ஊடக நிறுவனத்திடமிருந்து உதவி கிடைக்கவில்லை எனக்குறிப்பிட்டுள்ளார்.

குறித்த செய்தி வெளியானதையடுத்து சிலர் தனது வாகன கண்ணாடிகளை உடைத்ததோடு வாகன டயர்களில் துவாரமிட்டதாகவும் அதனால் திருத்தவேலைக்கு என தாம் 1,50,000 ரூபாவை செலவிட்டதாகவும் ஆனால் தமது ஊடக நிறுவனம் எந்தவொரு உதவியையும் தரவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

“நான் இறந்திருந்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் என்ற கேள்வியை தனது மேலதிகாரியிடம் கேட்டதாக அச்செய்தியாளர் தெரிவித்தார்.” குறைந்த பட்சம் மலர்வளையத்தையாவது வைப்பீர்களா? என தாம் கேட்டதாகவும் அவர் தெரிவித்தார். மேலதிகாரி அமைதி காத்தார்.

“இதற்கென ஒரு குறித்த உத்தியோகத்தர் இல்லை” என்றும் அச்செய்தியாளர் தெரிவித்தார்.

## பரஸ்பர எதிர்பார்ப்புகள்

ஆசிரியர்களும் செய்தியாளர்களும் எதிர்பார்ப்புகளை கொண்டிருப்பார்கள். எனவே இந்த எதிர்பார்ப்புகளை ஒப்பீடு செய்யும் இடமாகவே ஊடக நிறுவனம் அமைந்துள்ளது.

**ஆசிரியர்:** புலனாய்வுச் செய்தியைத் தரத் தயாராகும் பிராந்திய செய்தியாளரிடமிருந்து செய்தி முகாமையாளர்கள் எதிர்பார்ப்பது :

- ஓர் உண்மையான உந்துதல் குறைந்த பட்சம் அல்லது "அதிகபட்சம்" ஒரு புலனாய்வுச் செய்தி சேகரிப்பு சம்பந்தமாக ஏற்படல்.
- செய்தி சேகரிப்பு சம்பந்தமாக இடையறாது அறியத்தரல்.
- ஊடக நிறுவனத்துக்கே பிரத்தியேகமாக தருவதோடு, புலனாய்வு தகவல்களை பங்கு போட்டுக்கொள்ளாமை.
- அவசியமானால் ஏனைய பிராந்திய அல்லது கொழும்பு செய்தியாளர்களுடன் குறித்த செய்தியை விரிவாக அல்லது ஆழமாகக் கொண்டுசெல்ல ஒத்துழைத்தல்.
- ஒழுக்கக்கோவை வழிமுறைகளை பின்பற்றுதல்.
- படங்கள், வரைபடங்கள், வேறு புலப்படும் காரணிகள் பற்றிய ஆலோசனை கள்.
- சரியான முறையில் செய்தி தரப்படுதல்.
- தகவலின் நம்பகத்தன்மை.

**செய்தியாளர்கள்:** தமது புலனாய்வுச் செய்திகளை பிரசுரிப்பதில் முனைப்பாக இருக்கும் அதேவேளை ஊடக நிறுவனங்களிடமிருந்து செய்தியாளர்கள் எதிர்பார்க்கவேண்டியவை:

- செய்தியை பிரசுரிப்பதற்கான அர்ப்பணிப்பு.
- செய்தியை தருவதற்கு வேண்டிய காலமும், வளங்களும்.
- செய்திக்கூடத்துக்குள் அனைத்துத்தரப்பிலிருந்துமான ஒத்தழைப்பு.
- கொழும்பு செய்தியாளருடன் இணைந்து செய்தியைத் தரும்போது தமது பெயர் இடம்பெறுவதை உறுதிசெய்தல் . தற்காலிகமாக ஒரு செய்தியாளரை துணைக்குத் தருவது.
- முக்கிய பேட்டிகளை அவ்வப்போது காண்பதற்கான ஒத்துழைப்பு.
- இணையத்தள பாவனை, போக்குவரத்து, குறிப்புப் புத்தகம், பிரதிபண்ணல் போன்றவற்றுக்கான செலவுகளை கவனித்தல்.
- துணைச் செய்திகளுக்கான மேலதிக கொடுப்பனவு.
- புலனாய்வுச் செய்தி தொடர்பாக ஊடக நிறுவனமொன்றின் உள்ளேயும், வெளியேயும் வழிகாட்டல்களுடன் கூடிய ஒத்துழைப்பு.

## அத்தியாயம் பன்னிரெண்டு

# பாதுகாப்பு

எந்தவொரு இலங்கைச் செய்தியாளருக்கும் பாதுகாப்பு முதன்மையானதாகின்றது. எல்லைகளைக் கடந்த செய்தியாளர் அமைப்பு இலங்கையில் செய்தியாளரது பாதுகாப்பை அடிமட்டத்தில் அல்லது 158 ஆவது இடத்தில் தனது வருடாந்த குறிப்பில் கணிப்பிட்டு வைத்துள்ளது. அண்மையில் முடிவுற்ற போர் சூழலில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதும் கொல்லப்பட்டதுமே இதற்கான முக்கிய காரணங்களாகும்.

நாளாந்த செய்தி அறிக்கையிடல் காரணமாக அவை நடந்தேறின. ஆனால் பலம்மிக்கவர்களுடன் மற்றும் செல்வாக்கான விடயங்கள் சம்பந்தமாக சவால் விடுவதன் காரணமாக புலனாய்வுச் செய்தித்துறை அதற்கேயுரிய அபாயகரமான தன்மைகளைக் கொண்டுள்ளது. இலங்கை செய்தியாளர்கள் அதிகாரம் படைத்தோருக்கு எதிராக சவால்விட்டதன் காரணமாக சிறைப்படுத்தப்பட்டனர். நாட்டுக்கு வெளியே புகலிடம் தேடவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாயினர். அத்துடன் காணாமலும் போயிருந்தனர்.

2009 ஆம் ஆண்டு ஜனவரியில் மயிர்க்கூச்செறியும் சம்பவமொன்று நிகழ்ந்திருந்தது. இலங்கையில் புலனாய்வுச் செய்தித்துறையின் முன்னோடிகளில் ஒருவரான சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்க தமது அலுவலகத்துக்கு காரில் சென்றபோது சுட்டுக்கொல்லப்பட்டார். இச்சம்பவம் சர்வதேசக்கண்டனத்துக்குள்ளானது . அத்துடன் கொலை இடம்பெற்று மூன்று தினங்களின் பின்னர் அவரது பத்திரிகை விசேட பத்தி ஒன்றை வெளியிட்டது. அதில் விக்கிரமதுங்க தனது மரணத்தை அனுமானித்திருந்ததுடன் தன்னைக் கொன்றவர் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

அவர் மரணித்த சிறிது காலத்தின் பின்னர் பதினான்கு பேரடங்கிய சர்வதேச பத்திரிகை ஜுரர்கள் குழாமொன்று, யுனெஸ்கோவின் 2009 ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை சுதந்திர விருதை அவரது துணிவிற்காகவும், தியாகத்திற்காகவும் வழங்கியிருந்தது.

இந்த ஜுரர் சபைத்தலைவரும் தென்னாப்பிரிக்க பத்திரிகை கவுன்ஸிலைச் சேர்ந்தவருமான ஜோத்லோ என்பவர் கூறியதாவது: ஏகமனதாகவே அவரை இவ்விருதுக்கு ஜுரர் சபை தெரிவு செய்துள்ளது. தனது மரணத்தை தெளிவாக அறிந்திருந்ததோடு தான் கூறவேண்டியதை அவர் அச்சமின்றி தெரிவித்திருந்தார். மரணத்தின் பின்னரும் புதைகுழிக்கப்பாலும் அவரது மனச்சாட்சி ஒலித்திருந்தது. “மரணத்துக்குப் பின்னர் வெளியான லசந்த விக்கிரமதுங்கவின் பத்தியைக்குறிப்பிட்டு அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.” லசந்த விக்கிரமதுங்க சர்வதேச ஊடகவியலாளர்களை தொடர்ந்தும் கவர்பவராகவே இருக்கின்றார்.

இச்சம்பவத்தின் பின்னணியில் எழுகின்ற கேள்வி என்னவெனில், விக்கிரமதுங்க மேலதிக நடவடிக்கைகளை தமது பாதுகாப்புக்கருதி மேற்கொண்டிருக்கமுடியுமா என்பதேயாகும். யுத்தத்தின் பின்னரான போல்கன் பிரதேசங்களில் போன்றும், ரஷ்யா மற்றும் இத்தாலியில் மாபியா உட்பட கறுப்புச்சந்தைக் குற்றவாளிகளுக்கெதிராக சவால்விடும் செய்தியாளர்கள் போன்றுமே விக்கிரமதுங்க உட்பட ஏனைய செய்தியாளர்களும் இலங்கையில் ஆபத்துக்களை எதிர்நோக்குபவர்களாக இருக்கின்றனர்.

நியூயோர்க்கை தளமாகக் கொண்ட பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான கமிட்டியின் கணிப்பீட்டில் 75 சதவீதமானவர்கள் அவர்களின் பணியின் நிமித்தமே கொல்லப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் உள்ளூர் ஊடகங்களைச் சேர்ந்தவர்கள். கொலையுண்ட பத்திரிகையாளர்கள் தொடர்பான ஆய்வொன்றில் 55 சதவீதமானவர்கள் அரசியல் செய்தியாளர்கள் எனவும், 27 சதவீதமானோர் யுத்தச் செய்தியாளர்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இதே கணிப்பையே பத்திரிகையாளருக்கான சர்வதேச சம்மேளனம் “நேரடி செய்தி பத்திரிகையாளருக்கான பாதுகாப்பு வழிகாட்டி” என்ற ஆக்கத்தில் சுட்டிக்காட்டியிருந்தது. அதன் அறிக்கையொன்றில் 1990 க்கும் 2000 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பலியான 1200 பத்திரிகையாளர்களில் 90 சதவீதமானவர்கள் தாம் பிறந்து வளர்ந்த மண்ணிலேயே கொல்லப்பட்டிருந்தனர். வெளிநாட்டுச் செய்தியாளர்களையும் முக்கியமாகக் குறிப்பிட்டுள்ளபோதிலும் பலியானோரில் பெரும்பாலானோர் உள்ளூர் பத்திரிகையாளர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரச்சினைகளால் சூழப்பட்ட பிரதேசங்களில் ஊடகத்துறையினருக்கு உதவும் நிறுவனங்கள் குறித்து பத்திரிகையாளர்கள் அறிந்திருக்க வேண்டும். லண்டனைத் தளமாகக் கொண்டதே சர்வதேச செய்திப்பாதுகாப்பு நிறுவுனமாகும். பத்திரிகைத்துறை அமைப்புகள் செய்தியாளரின் பாதுகாப்புக்கென தம்மைப் பிரத்தியேகமாகவே அர்ப்பணித்துக்கொண்டவர்கள் என்ற வட்டத்தோடு இணைப்பை ஏற்படுத்தி இயங்கும் ஒரு முன்னோடி நிறுவனமாக இது விளங்குகின்றது. அபாயகரமான சூழலில் பணியாற்றும் பத்திரிகையாளர்களது பாதுகாப்புப் பற்றியும் இந்த நிறுவனம் கரிசனை கொண்டுள்ளது. லாபம் கருதாது பத்திரிகையாளரின் பணிகளுக்கு உதவுவதே இதன் நோக்கமாகும்.

உலகளாவிய ரீதியில் ஒரு பாதுகாப்பு வலைப்பின்னலை ஏற்படுத்தி சர்வதேச ரீதியாகவும் உள்ளூரிலும் பணியாற்றும் பத்திரிகையாளருக்கு வேண்டிய உதவிகள், ஆலோசனைகளை வழங்குவதே இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஆபத்துக்களைக் குறைக்கலாம். ஆனால் அவற்றை முழுமையாக உள்ளூர் பத்திரிகையாளருக்கு ஏற்படுவதை தவிர்க்க முடியாது. மேற்பார்வையாளர்கள் செய்தியாளர்களுடனான முன்னெச்சரிக்கையுடன் கூடிய ஒத்துழைப்புடனேயே அபாயங்களை தணிக்கலாம். அல்ஜஸீராவின் பிரதம புலனாய்வுத்துறைச் செய்தியாளர் பொஸ்றி பௌடா இவ்வாறு கூறுகின்றார்.

பிரத்தியேக பாதுகாப்பு என்ற ரீதியில் "பத்திரிகையாளன் என்பவர் பிரச்சினையை எதிர்நோக்கியிருப்பவர்" என்ற கூற்று புலனாய்வுத்துறைச் செய்தியாளரைத் தவிர வேறெந்த செய்தியாளருக்கும் பொருந்தாது. அபாயத்தை எடைபோடுவது புலனாய்வுச் செய்தித்துறையில் ஒரு முக்கிய அம்சமாகும். உயிரைக்கொடுத்து முயற்சிக்காதவரை பெறப்படும் செய்தியில் முக்கியத்துவமிருக்காது. எனவே அபாயகரமான சூழலில் இருந்து மீள்வதற்கான பங்களிப்பில் ஊடக திணைக்களங்கள் பயிற்சி நிலையங்கள், நிர்வாகங்கள் ஆகியன முக்கியம் பெறுகின்றன. ஆயினும் முக்கியமான பங்கென்பது பத்திரிகையாளரது தோள்களிலேயே தங்கியுள்ளது. அவரோ அல்லது அவளோ இருவரில் ஒருவரே தமது உயிரைத்தீர்மானிக்க வேண்டியவராகின்றனர். அவர்களே மற்றுமொரு கதைக்காக வாழவெண்டியதையும் தீர்மானிக்க வேண்டியவராகின்றனர்."

1980 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டுவரை ஏறத்தாழ பத்து ஆண்டுகள் லெபனானில் பணயக்கைதியாக அஸோஸியேட்டட் பிரேஸ் செய்தி நிறுவனத்தின் பெய்ரூட் பொறுப்பாளர் ரெறி அன்டர்ஸன் வைக்கப்பட்டிருந்தார் விசேடமாக யுத்த வலயங்கள் போன்ற உயர் அபாயகரமான பகுதிகளில் பணியாற்றும் செய்தியாளர்களிடம் தமக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றி நன்கு சிந்தனை செய்யுமாறு அவர் கேட்டிருந்தார்.

"எப்போதும் இடையறாது ஒவ்வொரு நிமிடமும் அபாயங்களைப் பற்றி சிந்தியுங்கள். சங்கடமான நிலையை உணரும்போது, இரு நிமிடத்திற்குள் வெளியேறிவிடுங்கள், தொடர்ந்திருப்பது பிரயோசனமில்லை. உயிரை மாய்க்கும் அளவுக்கு ஒரு செய்தியும் முக்கியமானதல்ல" என்று அவர் கூறுகிறார்.

பொஸ்னிய ஹெர்ஸெகோவினாவிலுள்ள புலனாய்வுச் செய்தித்துறைக்கான நிலையத்தின் ஆசிரியர்களும், செய்தியாளர்களும் அச்சமூட்டல் வராதபோதிலும் தாம் ஆபத்திலிருப்பதை இயல்பாக அறிந்து கொள்கிறார்கள். இதற்கான காரணம்: புள்ளி விபரங்களினடிப்படையில் கொல்லப்பட்ட முக்கால்வாசி பத்திரிகையாளர்களுக்கு அவர்களது செய்திகள் தொடர்பாக எச்சரிக்கை செய்யப்படவில்லை. இதன்காரணமாக அந்நிறுவனம் கொண்டுள்ள பாதுகாப்பு திட்டத்தில் ஆசிரியர்களுக்கும் செய்தியாளர்களுக்குமிடையே கூடுதல் ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது.

கீழ்வருவன புலனாய்வுச் செய்தியாளர்களுக்கும், அவர்களது செய்தி மூலங்களுக்குமான பாதுகாப்புக் குறித்த பொது வழிகாட்டலாகும். இந்த வழிகாட்டல்கள் பொஸ்னியாவின் புலனாய்வு செய்தித்துறைக்கான நிறுவனத்தின் பாதுகாப்புக் கைநூலில் இருந்தும், இலங்கைச் செய்தியாளர்களுக்கென "பத்திரிகையாளர்களுக்கும், ஊடகப்பணியாளர்களுக்குமான பாதுகாப்பு விடயங்கள்" என்ற தலைப்பில் அண்மையில் சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம், இன்டர்நியூஸ், மற்றும் யங் ஏசியா டெலிவிஷன் ஆகியவற்றால் எழுதப்பட்ட நூலிலிருந்தும் தொகுக்கப்பட்டவையாகும்.

## பாதுகாப்பு நடைமுறைகள்

**தொழில்சார்பு நிலை:** சிறந்த தொழில்சார்ந்த நிலையில் சரியான நியாயமான செய்திகளை தருவதே எந்தவொரு செய்தியாளருக்குமான சிறந்த பாதுகாப்பு விதிமுறையாகிறது. இதன் அர்த்தம் யாதெனில்:

- **பாரபட்சமின்மை:** செய்திக்குரியவர் உங்களது தகவலை நன்கு புரிந்துகொள்ளவும், பதிலளிக்கவும் கால அவகாசத்தை கொண்டுள்ளதை உறுதிப்படுத்தவும். செய்திக்குரியவர் பேட்டி தரமறுத்தால் அவரோடு தொடர்ந்து இணைந்திருக்க முயற்சிக்கவும். மின்அஞ்சல் , கடிதம் அல்லது தந்தி மூலமாக அவரை அணுக முற்படலாம். காலக்கெடு முடியும்வரை அணுக முற்படவும். இத்தருணத்தில் உங்கள் செய்தி நிறுவனத்தின் ஏனைய விடயங்களைவிட குறித்த செய்தி தருபவரின் விடயமே முழு அளவில் நியாயமான முறையில் அறியப்படவேண்டியதாகின்றது. அத்துடன் செய்தி தருபவர் நியாயமாகவும் உங்களை ஏமாற்றாதிருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

- **மீளவும் போட்டுப்பார்த்தல்:** முன்பு இக்கை நூலில், பேட்டியை மீளவும் போட்டுக்காண்பித்தல் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். உண்மைத் தன்மையைப் பேணுவதும், பேட்டி தந்தவரின் ஒத்துழைப்புக்கு மதிப்பளிப்பதுமே இதன் முக்கிய நோக்கமாகும். செய்தி தருபவர் மூர்க்கமாகவோ அல்லது மாறுபாடாகவோ செய்தி வெளியான பின்னர் நடந்துகொள்வதை தடுப்பதாகவும் இது அமையும்.

- **நிலைப்பாடு:** புலனாய்வுச் செய்திதிரட்டலும், பேட்டிகாண்பதும் பணிகளே தவிர, பிரத்தியேக முரண்பாடல்ல. பலத்ததொனியில் முரண்பட்டால் பேட்டி தருபவரும் அதே தொனியில் பதிலளிக்கமுடியும். உண்மையில் பேட்டிக்குரியவர் மிகவும் ஆவேசத்துடன் செய்தியாளரின் உணர்ச்சிபூர்வமான நிலைக்கு சாதுவான கலந்துரையாடலின்றி பதிலளிக்கமுடியும்.

- **செய்தி எல்லைகள்:** பெரும்பாலான தருணங்களில் குற்றவாளிகள் உட்பட செய்திக்குரியவர்கள் ஊடக அவதானிப்புக்குட்பட்டவர்கள். ஆயினும் தகவலுக்குரியவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை செய்தியாளர்கள் சீண்ட ஆரம்பித்தால் அதற்கான பதிலடியையும் எதிர்கொள்ள நேரிடும். ஊழல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்குள்ளானோர் தமது மனைவி, பிள்ளைகள், குடும்பத்தவர் பற்றி செய்தியாளர் குறிப்பிடுவது குறித்து கலவரமடைந்து விடுவர்.

- **தனிப்பட்டவற்றைத் தவிர்த்தல்:** ஒரு சர்ச்சைக்குரிய செய்தியை எழுதும்போது, செய்தியாளர்கள் தமது தனிப்பட்ட விபரங்களான குடும்பத்தவர்களது பெயர், விபரங்கள், வயது, வீட்டு விலாசம், தொலைபேசி இலக்கங்கள் போன்றவற்றை வழங்கலாகாது. இவ்வாறு செய்வதன் மூலம் அச்சுறுத்தல்களுக்குள்ளாகுதல், பணயம் வைக்கப்படுதல் போன்ற அபாயங்களுக்குள்ளாக நேரிடலாம். எவராவது தனிப்பட்ட விபரங்களை அறிய முற்பட்டால் அமைதியாக அவ்வாறு கேட்கப்படுவதிலிருந்தும் விலகிக்கொள்ளவும்.

- **குடும்பத்தவரையும், நண்பர்களையும் தவிர்க்கவும்:** ஏதாவது முக்கிய சர்ச்சைக்குரிய விடயத்தை அணுகும்போது, அதுபற்றிய விபரங்களை குடும்பத்தவரோடு அல்லது நண்பர்களோடு பேசுவதைத் தவிர்த்துக்கொள்ளவும். இவ்வாறு பேசுவதால் அச்செய்தியின் அந்தரங்கத்தன்மை பாதிக்கப்பட்டு அது தவறான பேர்வழிகளுக்கு வெளியிடப்படக்கூடிய சூழ்நிலையும் காணப்படுகிறது. அத்துடன் அத்தகவலை வெளியிட்டவர் ஆபத்தை எதிர்நோக்கவும் முடியும்.

- **உங்களது செய்திமூலங்களை பாதுகாத்தல்:** செல்வாக்குப் படைத்தவர்கள், தமக்குத் தெரிந்த அல்லது ஊழல் பேர்வழிகளான செய்தியாளர்கள் மூலமாக செய்திக்கூடங்களுக்குள் பிரவேசிக்கமுடியும். உங்களது முக்கியமான தகவல்கள் , ஆதாரங்கள் என்பவற்றை கணனிக்கோவையில் வைத்திருக்கலாகாது. அவை இலகுவாகவே பதிவு செய்யப்படும் அல்லது வெளியே எடுக்கப்படும் சூழ்நிலைகள் அதிகமாகவே உள்ளன. அனைத்து ஆவணங்களையும் சாவியும், பூட்டுமாக மிகப்பாதுகாப்புடன் வைத்திருக்கவும். முடியுமானால் செய்திக் கூடத்துக்கு வெளியிலும் அவற்றை வைத்திருக்கவும். செய்திமூலங்களைச் சந்திக்கும்போது சந்திக்கும் இடம் , நேரம் என்பவற்றை அடிக்கடி மாற்றிக்கொள்ளவும். இதன்மூலம் நாம் பின்தொடரப்படுவதை தவிர்க்கமுடியும்.

- **பிரத்தியேக பாதுகாப்பு:** எப்போதும் மேலதிக கணனி கோவையில் அல்லது இறுவட்டொன்றில் முக்கிய ஆவணங்கள், தகவல்களை பாதுகாத்து அவற்றை பாதுகாப்பான இடத்தில் வைக்கவும். அதிகாரி ஒருவரை ஆத்திரமூட்டும் விதத்தில் முக்கிய ஆவணமொன்றை அவரிடம் கொண்டு செல்லவேண்டாம்.

## அபாயகரமானவர்களும், அச்சுறுத்தல்களும்

**செய்தியாளர் கவனத்திற்கு**: சில தருணங்களில் புலனாய்வுச் செய்தியாளர்கள் சில சர்ச்சைக்குரியவர்களை தொடர்பு கொள்ளநேரிடும். அத்தகையவர்களை எத்தகைய நல்லமுறையில் அணுகமுடிந்தாலும் அச்சுறுத்தலை விடுத்து தகவல்கள் கசிவதை தடுக்கமுற்படுவார்கள். அத்தகைய சூழலில் பாதுகாப்பிற்கான சில ஆலோசனைகள்.

- **தொலைபேசி அச்சுறுத்தல்:** அச்சுறுத்தலின் சரியான வார்த்தைகளை எழுதிக்கொள்ளவும். தொலைபேசி உரையாடலை உடனடியாகவே பதிவு செய்யவும். தொலைபேசியில் அழைத்தவரிடமிருந்து போதுமானளவு தகவல்களைப்பெற முயலவும். என்ன செய்தி ? உங்கள் ஆட்சேபனைகள் என்ன ? எனக்கேட்கவும். விவாதிப்பதை தவிர்க்கவும். செய்தியாளரல்ல, ஆசிரியரே செய்தியை கையாளுகிறார் என தொலைபேசியில் பேசியவருக்கு கூறவும். ஆசிரியருக்கும், பொலிஸாருக்கும் அச்சுறுத்தலைப்பற்றி உடன் அறிவிக்கவும். அச்சுறுத்தலை பகிரங்கப்படுத்தவும். ஏனையவர்களை விழிப்படைய செய்தால் அச்சுறுத்துவோர் பின்வாங்கிவிடுவர்.

- பின்தொடர்தல்: பொஸ்னியாவில் சில ஊடகவியலாளர்கள் தாம் பின்தொடரப்பட்டதாகக் கொல்லப்படுவதற்கு முன்பதாக தெரிவித்தனர். பினதொடரப்படுவதாக உணரப்படும்போது செய்தியாளர் அதுபற்றி கவனஞ்செலுத்த வேண்டும். தனது பணிக்குப் பொறுப்பான ஆசிரியரிடமும் இது பற்றி தெரிவிக்கவேண்டும். பொலிஸாருக்கும் அறிவித்த பின்னர் பாதுகாப்பு அறிவுறுத்தல் கிடைக்கும் வரை பாதுகாப்பான இடமொன்றைத் தேடிக் கொள்ளவும்.

- **கையடக்கத் தொலைபேசிகள்:** தொலைபேசி அட்டைகளை இலங்கையில் இலகுவாக வாங்கலாம். அபாயகரமான பேர்வழிகள் எனக்கருதப்படுவோருக்கு குறுந்தகவல் அனுப்பவும், உரையாடவும் ஒரு தொலைபேசி அட்டையை வாங்கி பயன்படுத்தவும். பிரத்தியேக மற்றும் அலுவலக தொலைபேசிகளை ஒருபோதும் பயன்படுத்தவேண்டாம். மேலதிக பற்றரி ஒன்றை வாங்கவும். ஒரு கையடக்கத் தொலைபேசியை பின்தொடர்தல் பற்றரி மூலமாகவே இடம்பெறுகிறது. வேண்டுமானால் அதனை பின்னர் அப்புறப்படுத்தி விடமுடியும்.

- **மின்அஞ்சல்:** மின் அஞ்சல் பரிவர்த்தனையிலும் இதேவழியைக் கையாளவும். யாஹூ. கொம் அல்லது கூகிள் என்பவற்றோடு சுயமான இணைப்பை தகவல்களுக்காக மட்டும் வைத்துக்கொள்ளவும். வேறெதற்கும் பாவிக்கலாகாது.

- **பாதுகாப்பான இடம்:** ஒரு சர்ச்சைக்குரியவரை பேட்டி காண்பதனால் தொலைபேசி மூலமாக அல்லது பலரும் பார்க்கக்கூடிய பொதுவான இடத்தில் அப்பேட்டியை நடத்தலாம். பஸ்வண்டியில் அல்லது டாக்ஸி ஒன்றில் செல்லவும். பேட்டிதருபவரின் காரியாலயத்தில் சந்திப்பதை தவிர்க்கவும். அல்லது பேட்டிதருபவரை செய்தி அலுவலகத்துக்கு கூட்டி வரவும். அங்கு தகவல்களை பத்திரிகைகள் பிரத்தியேக படங்கள் மூலமாக பெறுவதோடு பிரச்சினையற்ற சூழலில் பேட்டியை நடத்தமுடியும்.

- **பின்புலம்:** செய்தியாளர் ஒருவர் தனது மேலதிகாரிக்கு எங்கே? எவரை? எவ்வளவு நேரம்? பேட்டி காண்பதுபற்றி அறியத்தரவேண்டும். பேட்டி பாதுகாப்பாக முடிவுற்றதும், தனது ஆசிரியரை செய்தியாளர் உடனடியாக தொடர்புகொள்ள வேண்டும். மற்றுமொரு நடவடிக்கையாக பேட்டி இடம்பெறும் இடத்தில் தனது சகா ஒருவரை நிறுத்திவைக்கமுடியும். செய்தியாளர் ஏதாவது சங்கடத்தில் சிக்கும்போது அவரது சகா அது பற்றி அதிகாரிகளுக்கு அறிவிக்கமுடியும்.

- **பேட்டியை இடைநிறுத்தல்:** செய்தி மூலம் வேடிக்கையாகக்கூட அச்சுறுத்தினால் செய்தியாளர் பேட்டியை இடைநிறுத்தவேண்டும். "நான் இங்கு பணியின் நிமித்தமே வந்தேன். ஆனால் நீங்கள் பயமுறுத்துவதாக உணர்கிறேன். நான் போக வேண்டும" எனக்கூறி வெளியேறவும்.

- **தாமதிக்கவும் ஆனால் கைவிடவேண்டாம்:** பயமுறுத்தல் கடுமையானால் நிலைமை சாந்தமடையும்வரை பொறுத்திருக்கவும். இதன்மூலம் பயமுறுத்தியவர் பின்தொடர்வதை தவிர்க்கவும். ஆயினும் ஆரம்பித்த செய்தியை செய்தியாளர் அல்லது நிறுவனத்தைச் சேர்ந்த வேறொருவர் நிறைவு செய்யவேண்டும். இல்லையேல் அச்சுறுத்தல் பயனளிப்பதோடு பின்னர் மோசமானதாகவும் மாறக் கூடும்.

- **ஆசிரியர்களுக்கு:** ஒரு புலனாய்வுச் செய்திதிரட்டும் நடவடிக்கை ஆரம்பமான தினத்திலிருந்து அதனை மேற்கொள்ளும் செய்தியாளரின் பாதுகாப்புக்கு அதி முக்கியமளிக்கப்படவேண்டியது அவரது மேற்பார்வையாளரதும், நிறுவனத்தினதும் கடமையாகும்.

  தமது செய்தியாளர்களைப் பாதுகாக்க ஆசிரியர் கையாளவேண்டிய வழிமுறைகள்:

- **முன்பதாகவே கணிப்பிடவும்:** புலனாய்வு செய்யப்படப்போகும் செய்தி எவ்வளவு தூரம் தமக்கும் தமது செய்தியாளருக்கும் அபாயகரமானதென்பதை ஒரு ஆசிரியர் அனுமானிக்கவேண்டும்.

- **முன்னதாக திட்டமிடவும்:** ஒரு புலனாய்வுச் செய்திப்பணியை ஆரம்பிக்கமுன்னர், பாதுகாப்பு முறைமைகள் பற்றி ஓர் ஆசிரியர் முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்ளவேண்டும். குறித்த செய்தி தொடர்பான அபாயகரமான போர்வழிகள் பற்றி வெளிப்படையாக ஆசிரியரும் செய்தியாளரும் கலந்துரையாடவேண்டும். அத்துடன் அவசரமான தருணத்தில் யாரை அழைக்க வேண்டுமெனவும் முடிவு செய்யவும். செய்தியாளரின் குடும்பத்தவருக்கும் நண்பர்களுக்கும் நெருக்கடி நிலைமைகளில் தொடர்புகொள்ளக்கூடிய விபரங்களையும் தெரிவிக்கவும். பிரச்சினையின்போது தொடர்புகொள்ளக்கூடிய “பாதுகாப்பான வார்த்தை” யையும் தீர்மானிக்கவேண்டும்.

- **மேற்பார்வையிடல்:** ஒவ்வொரு செய்தியாளரும் கையடக்கத்தொலைபேசி வைத்திருப்பதையும் அவர்கள் தமது சகாக்களுடன் தொடர்பிலிருப்பதையும் உறுதிப்படுத்தவும். நாளாந்த பணி, மற்றும் அவரது நடவடிக்கைகள் பற்றி செய்தியாளருடன் தினமும் காலையில் தொடர்பு கொள்ளவும். ஏதாவது சந்திப்பை நடத்தமுன்னர் அழைக்குமாறு செய்தியாளருக்கு தெரிவிக்கவும். அதற்கான கால அவகாசத்தையும் வழங்கவும். அவ்வாறு செய்தியாளர் அழைக்க தவறும் பட்சத்தில் ஆசிரியர் அவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களது பாதுகாப்பு பற்றி அறிய வேண்டும்.

- **பயமுறுத்தல்கள்:** பயமுறுத்தல் ஒன்று ஏற்படுமானால் அதுபற்றி அதிகாரிகளுக்கு அறியத்தரும் பொறுப்பு ஆசிரியருடையது. அத்துடன் முன்னரே ஏற்பாடான பாதுகாப்பான இடமொன்றுக்கு செய்தியாளரை அனுப்புவதோடு, அவரை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யவைக்கவேண்டும். மேலதிக பாதுகாப்பை செய்தியாளருக்கு வழங்குவதோடு, அவரது குடும்பத்தவரை சிலகாலம் நகரைவிட்டு வெளியே வைத்திருக்கவும் வேண்டும். அத்துடன் பயமுறுத்தல் அதிகமானால் அப்புலனாய்வுச் செய்தி திரட்டும் நடவடிக்கையை தற்காலிகமாக நிலைமைகள் சீராகும்வரை ஒத்திவைக்கவும்

- **பயமுறுத்தலை ஆராய்தல்:** ஒவ்வொரு அச்சுறுத்தலையும் அதன்தன்மை, எவ்வளவுதூரம் அபாயகரமானது என்பதுபற்றி ஒருவர் மூலமாக அறிந்து கொள்ளவும். ஊடக செய்தியறிக்கையொன்றின் மூலமாகவும், வேறு ஊடகங்கள் மூலமாகவும் அச்சுறுத்தலின் தன்மையை அறியத்தரவும். குறித்த அச்சுறுத்தல்பற்றி செய்தி ஒன்றையும் எழுதிவிடவும்.

- **பொறுப்புடன் செம்மைப்படுத்தல்:** ஒரு செய்தியை செம்மைப்படுத்தும்போது பொறுப்புடன் நடக்கவும். செய்திக்குரியவருக்கு போதுமானளவு கால நேரம் பதிலளிப்பதற்காக ஒதுக்கப்பட்டதை உறுதிப்படுத்தவும். சட்ட பிரச்சினைகள் பற்றி நிறுவனத்தின் சட்டத்தரணியுடன் ஆலோசிக்கவும்.

- **செய்திக்கூட விருந்தினர்கள்:** செய்திக்கூடத்திற்கு வரும் விருந்தினர்களை அனுமதிப்பது, சந்திப்பது சம்பந்தமான பொறுப்பை ஏற்றுக்கொள்ளவும். அவர்களை செய்திக்கூடம் தவிர்ந்த ஒரு சந்திக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லவும். செய்தியாளரையும், செயல்திட்டத்தையும் மட்டும் அணுகும் விதத்தில் மட்டும் அனுமதிக்கவும்.

- **உறுதியாக இருக்கவும்:** முன்னரே ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு இணங்க செய்தியாளர் மறுத்தால், அவருக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும்.

## செய்தி மூலங்களின் பாதுகாப்பு

இலங்கையில் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் அவர்களது செய்திமூலங்களையும் பாதிக்கின்றது.

ஏற்கனவே தனது செய்தி மூலங்களைப் பாதுகாப்பதற்கு இருக்கும் ”சட்ட கவசங்கள்” எனப்படுவதற்கு வேறாக தமது செய்தி மூலங்களை தெரிவிப்பதை மறுப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் ஊடகவியலாளர்களுக்கு இல்லை. சில ஊடகவியலாளர்கள் கடந்த காலங்களில் தமது செய்தி மூலங்களை தெரிவித்து விடும் விதத்தில் பலத்த அழுத்தங்களுக்குள்ளாகியிருந்தனர்.

உடல் ரீதியான ஆபத்துக்களை தவிர்ப்பதற்கு தாம் கையாளுகின்ற அதே வழிமுறைகளையே தமது செய்தி மூலங்களை பாதுகாக்கவும் செய்தியாளர்கள் கையாளவேண்டும். தனது செய்திமூலம் ஊடகம் மட்டுமேயான சிம் அட்டை இலக்கம் வைத்திருப்பதை உறுதிப்படுத்தவும். உங்களுடன் அவசரமாகவோ அல்லது ஆபத்து வேளையிலோ உரையாடும் விதத்தில் இரகசிய குறியீடு ஒன்றையும் உருவாக்கவும். செய்திமூலங்களின் பாதுகாப்பு பற்றி ஆசிரியர்களுக்கு அறியத்தரவும். ஒரு பொது இடத்தில் இரு தடவைக்குமேல் செய்தி மூலத்தை சந்திக்கலாகாது.

எப்படியிருப்பினும் ஓர் இரும்புக்கவசம் தம்மைப் பாதுகாக்க இல்லை என்பதை செய்தி மூலமும் செய்தியாளரும் அறிந்திருக்கவேண்டும். 2007 ஆம் ஆண்டு இது மிகத்தெளிவாகத் தெரியவந்திருந்தது. சண்டே லீடர் பத்திரிகையில் வெளியான செய்தியொன்றில், சில பொலிஸ் அதிகாரிகள், போதைவஸ்து நடவடிக்கைகளை கொழும்பில் முறியடித்தது தொடர்பாக தவறான முறையில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். அந்த போதைவஸ்து நடவடிக்கை சில பொலிஸ் மேற்பார்வையாளர்களின் அனுமதியுடனேயே இடம்பெற்றுவந்தது. குறித்த சண்டே லீடர் செய்தி இன்ஸ்பெக்டர் டக்ளஸ் நிமால் உட்பட தவறாக குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகளையும் குறிப்பிட்டிருந்தது.

அச்செய்தி வெளியான மறுதினம் அதனை வெளிப்படுத்திய செய்தியாளருக்கு இன்ஸ்பெக்டர் நிமால் நன்றி தெரிவித்திருந்தார். தாம் அநீதியாக இடைநிறுத்தப்பட்டமையை எதிர்த்து உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுத்தாக்கல் செய்யப்போவதாகவும் இன்ஸ்பெக்டர் நிமால் தெரிவித்திருந்தார். பத்திரிகை அலுவலகத்துக்கு வந்து தனது மேலதிகாரிகள் புரிந்த வேறு தவறான நடவடிக்கைகள் பற்றி தகவல் தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் அவர் அதனைச் செய்யமுடியவில்லை. நிமாலும் அவரது மனைவியும் உயர்நீதிமன்றம் செல்லும் வழியில் அத்துருகிரியவில் கொல்லப்பட்டனர்.

நீதிமன்றில் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஊழல்களை தெரியப்படுத்த முயன்ற நிமாலின் மறைவு, அவரோடு தொடர்பு வைத்திருந்த செய்தியாளருக்கு தனிப்பட்ட முறையிலும், தொழில் ரீதியாகவும் ஓர் இழப்பாகும். இச்சம்பவம் புலனாய்வுச் செய்தி நடவடிக்கையில் ஈடுபடும்போது ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் அவதானமாக இருக்கவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது.

# பிற்சேர்க்கை

## பிற்சேர்க்கை 1

# புலனாய்வுச் செய்தித்துறையின் வரைவிலக்கணங்கள்

ஒரு கவனத்துக்குரிய விடயத்தை ஆழமாகத்துருவி ஆராய்ந்து அதுபற்றிய தகவல்களை செய்தியாளர்கள் அறிந்து கொள்வதே புலனாய்வுச் செய்தித்துறையாகும். குற்றச்செயல்கள், அரசியல் மோசடிகள், அல்லது நிறுவன ரீதியான தவறுகள் என்பவையே புலனாய்வுச் செய்தித்துறையின் கவனத்துக்கு பெரும்பாலும் உடபடுகின்றன . செய்தி அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதில் புலனாய்வுச் செய்தியாளர் ஒருவர் பல மாதங்கள் அல்லது வருடங்களைக் கூட செலவிடலாம். பெரும்பாலான புலனாய்வுச் செய்தி நடவடிக்கைகள், பத்திரிகைகள், செய்தி நிறுவனங்கள், மற்றும் சுயமாகச் செயற்படும் செய்தியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. புலனாய்வு ஊடகத்துறையை 'காவல் நாய் ஊடகத்துறை" அல்லது "பொறுப்புவாய்ந்த செய்தித்திரட்டல்" எனவும் குறிப்பிடுவதுண்டு.

- விக்கிபீடியா

புலனாய்வுச் செய்தித்துறை என்பது சர்ச்சைக்குரியதும், கச்சிதமானதுமாகும்.

- புலனாய்வுத்துறைக்கான டச்சு அமைப்பு VVOJ

பொதுநலன் கருதியதாக தகவல்களை அறிந்திட செய்தியாளர்கள் முற்படும்போது, அவற்றை ஒருவர் மறைத்துவைத்திருக்கும் பட்சத்தில் அதுபற்றி துருவி ஆராய்வதே புலனாய்வுச் செய்தித்துறையாகும்.

-கேம்பிறிட்ஜ் இணைய அகராதி

மறைத்து வைக்க முயற்சிக்கும் தகவல்களை அறிவது சம்பந்தமாக செய்தியாளர்கள் பெருமளவு ஆய்வுகளை மேற்கொள்வதே புலனாய்வுச் செய்தித்திரட்டலாகும்.

www.mediadictionary.com

ஊழல்கள் பற்றி அல்லது அரசாங்கத்தின் தவறான நிர்வாக நடவடிக்கைகள் பற்றி செய்தியாளர்கள் ஆராய்ந்து உண்மை நிலவரங்களை வெளியிடுவது புலனாய்வுச் செய்தித்துறையாகும்.

www.publishingdictionary.com

பொதுநலன்கருதிய புலனாய்வுச் செய்தித்திரட்டலைவிட காத்திரமான பங்களிப்பை சமூகத்துக்கு நாம் வழங்கமுடியாது. ஆழமாக புதைந்து மறைவாக இருக்கும் தகவல்களை ஆராய்ந்தறிந்து உண்மைத்தன்மைகளை "ஏன்", "எவ்வாறு" எனத்தருவதே புலனாய்வுச் செயதித்திரட்டலாகும். எனவே பொதுவாகவே செய்தியாளர்களால் எழுப்பப்படும் அடிப்படைக் கேள்விகளான யார்? எது? எங்கே? எப்போது? என்பவற்றுக்கு அப்பால் புலனாய்வுச் செய்தித்திரட்டல் அமைந்துள்ளது.

டோனி பேர்மன் பிரதம ஆசிரியர் - CBC News

## பிற்சேர்க்கை 2

# ஊடகத்துறையின் பத்துக்கட்டளைகள்

- **உலகமயமாதல்** (அனைவருக்கும் கிடைக்கக்கூடியதும், அணுகப்படக்கூடியதும்.)
- **ஈடுபடவைத்தல்** (உள்ளடக்கமானது அணுகப்படக்கூடியதும் , வாசகர்கள் , நேயர்களால் ரசிக்கக்கூடியதும்)
- **பல்வகைத்தன்மை** (ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒருவிடயம்)
- **பலதரப்பட்ட கருத்துக்கள்** (வயது, பால், இனம், வர்க்க வேறுபாடின்றி சிறுபான்மையினருக்கும் பங்களித்தல்)
- **அடையாளம்** (சமூக, பிராந்திய, தேசிய அடையாளத்தன்மைகள் மீதான கரிசனை, கலாசார, மொழிப்பல்வகைத்தன்மையை பேணுதல், சமூக ஒருங்கிணைப்பை கட்டியெழுப்புதல்)
- **ஆசிரியபீட சுதந்திரம்** ( அரசாங்க தலையீடு, பக்கச்சார்பான போக்கிலிருந்து விடுபட்டு சுயமாக இயங்குதல்)
- **தரம்பேணல்** (உள்ளடக்கம் மற்றும் விடயதானங்களில் உயர்ந்த தரத்தைப் பேணுதல்)
- **சுயத்தன்மை** (பழையனவற்றையே மீள அணுகாது, விற்பனைப்பண்டம்போல் இருக்காது, புதிய உள்ளடக்கத்தை கொண்டிருத்தல்)
- **புத்தாக்கம்** (புதிய அணுகுமுறையும், புதிய களமமைத்தலும்)
- **சவால்விடுவது** (வாசகர்களையும், நேயர்களையும் சிந்திக்கவைப்பது)

## பிற்சேர்க்கை 3

# புலனாய்வுச் செய்தித்திரட்டலுக்கான ஏழு அடிப்படை விதிமுறைகள்

தருபவர் : கிளார்க் மொலென்ஹொவ்.

**விதி - 1:**

அரசியல் வேறுபாடுகளை தவிர்க்கவும். ஒரு அரசியல் கட்சியை மட்டும் புலனாய்வு செய்வதன்மூலமும் அல்லது ஒரு அரசியல் கட்சி சார்பாக புலனாய்வு செய்வதன் மூலமும் உங்களது ஆக்கத்திறனில் 50 சதவீதத்தை இழக்கிறீர்கள்.

**விதி - 2:**

தகவல்களையும், விடைகளையும் பெறுகின்றபோது உறுதியான அதேசமயம் மிக அவதானத்துடனும் நடந்துகொள்ளவேண்டும். தவறான செயலில் ஈடுபட்ட அரச அலுவலர்கள் நீங்கள் விரும்புகின்றவரா? அல்லது உங்களுக்கு நம்பிக்கையற்றவரா? என்பதை மிக ஆணித்தரமாக தீர்மானிக்கவேண்டும். உங்களது நண்பருக்கு சாதகமாக இருக்கும் விதத்தில் கடுமையான நேரடிக்கேள்விகளை அவர் பொறுப்புக்கூறவேண்டும் என்ற வகையில் நீங்கள் கேட்கவேண்டியதாக இருக்கும்.

**விதி - 3:**

உங்கள் விடயத்தைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள். அவ்விடயம் ஒரு நகரம் பற்றிய பிரச்சினை சம்பந்தப்பட்டதா? ஒரு தேசம் அல்லது சமஷ்டி அரசாங்கம் அல்லது ஒரு பெரும் தொழில்சார்ந்த மற்றும் வியாபாரம் சம்பந்தப்பட்டதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். நீங்கள் ஒரு மிகவும் தொழில்நுட்ப ரீதியான சூழலில் இருக்கும்போது அல்லது சர்ச்சைக்குரிய விடயம் குறித்து செயல்படும்போது நீங்கள் அறிந்துகொண்டதை தெளிவாகப் புரிந்துகொள்ளாதவிடத்து எதிர்பாராதவிதமாக தவறுகளைப் புரிய முடியும்.

**விதி - 4:**

சட்ட நியமங்களை திரிபுபடுத்தவோ அல்லது மிகைப்படுத்தவோ கூடாது. கையாளும் விடயத்தை பரபரப்பாக்க முனைவது உங்களது புலனாய்வுப்பணியை பாதித்துவிடும்.

**விதி - 5:**

புலனாய்வுச் செய்திகளை சேகரிப்பது தொடர்பாக அதுகுறித்த விடயங்களுடனும், செய்திமூலங்களுடனும் நேரடியாகவே அணுகவும். தந்திரோபாயங்களையோ அல்லது மாற்று வழிகளையோ கையாளவேண்டாம். போலியான பெயரையோ அடையாளத்தையோ கொள்ள வேண்டாம். அல்லது சட்டத்தை அமுலாக்கும் அதிகாரி ஒருவரைப்போல நடந்து கொள்ளவும் வேண்டாம். நேரடியாகவே உங்களது புலனாய்வு விடயங்களை நீங்கள் அணுகினால் அதன்மூலம் எதிர்காலத்திலும் உங்கள் பணிகளை நீங்கள் சிறப்புடன் நல்ல செய்தி மூலங்களுடன் முன்னெடுக்க முடியும்.

**விதி - 6:**

ஒருவர் மீது பாதகமான பிரதிபலிப்பை ஏற்படுத்தும் விடயம்பற்றிய ஆதாரத்தை நேரடியாகவே எழுதுவதுடன், குறித்த நபர் அவர் மீது எழுப்பப்பட்ட கேள்வி தொடர்பாக முழுமையாக பதிலளிக்கும் விதத்தில் வாய்ப்பையும் வழங்கவும். நேரடி சாட்சியம் பெரும்பாலும் நம்பகத்தன்மையற்றது. காட்சி தருபவர் எவ்வித பிரத்தியேக ஈடுபாட்டைக்கொண்டிராத போதிலும் தவறுகளுக்கான வாய்ப்புகள் எண்கணித முறையில் அதிகரித்துச் செல்லும்.

கரிசனை கொண்ட ஊடகவியலாளர் கமிட்டி -

பதிலளிப்பவர் முழுமையாக தமக்குரிய கேள்விகளுக்கான பதிலை வழங்கும் விதத்தில் நேரடி ஆதாரங்களைப்பயன்படுத்தி அவற்றை கடுமையாக பிரதிபலிக்க வைக்கவும்.

## பிற்சேர்க்கை 4

# தொழில்சார் நடைமுறைக்கான இலங்கை பத்திரிகையாசிரியர் குழாத்தின் ஒழுக்கவிதிகள் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது

### 1. முன்னுரை

சர்வதேச தரத்துக்கமைவாக ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேசமயம் சகல ஊடக நிறுவனங்களையும், ஊடகவியலாளர்களையும் ஒன்றிணைக்கும் ஒழுக்கக்கோவையானது வாசகர்களது எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்கின்றதோடு, இலங்கையில் பத்திரிகைத்துறையின் சுதந்திரத்தையும், பொறுப்புணர்வையும் உறுதிசெய்வதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இத்தகைய ஒழுக்க நியமங்கள், கச்சிதமான முறையில் பத்திரிகைகள் இயங்கி தொழில் சார்புடையவையாக ஒருங்கிணைப்போடு புலனாய்வுச்செய்தித்துறையின் சிறப்பான பாரம்பரியங்களை பொதுநலன் கருதியதாகவும், வர்த்தக ரீதியாக திரிபுபடுத்தப்படாததாகவும் இருப்பதை உறுதிசெய்கின்றது. கூடவே ஊடக சுதந்திரத்தை குறுகிய சுயநலன் சார்ந்த அழுத்தங்கள் பாதிக்காதிருப்பதையும் உறுதிசெய்கிறது. ஊடகவியலாளர்களும், பத்திரிகைகளும் தமது சொந்தக்கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தைக் கொண்டுள்ள அதேசமயம் ஏனையோருடைய கருத்துக்களுக்கு மதிப்பளித்து, சமூகப் பொறுப்புணர்வையும் வெளிப்படுத்த முன்வரவேண்டும்.

ஒழுக்கக்கோவையானது தனிப்பட்டவருடைய உரிமையை பாதுகாப்பதோடு மக்களுடைய கருத்தறியும் உரிமையையும் உறுதிப்படுத்துகிறது. இவ் ஒழுக்கக்கோவையின் ஒவ்வொரு அம்சமும் மதிக்கப்படவேண்டியதாக இருக்கவேண்டிய அதேசமயம், குறுகிய முறையில் அதனை வியாக்கியானம் செய்து தனிநபர்களுடைய உரிமைகளை உதாசீனம் செய்யவோ அல்லது பொதுநலன் கருதியவற்றை விரிவாக வெளியிடுவதைத் தடுப்பதையோ அனுமதிக்கலாகாது.

## 2. கச்சிதமான செய்தியறிக்கையிடல்

2.1 திரிபுபடுத்தப்படாதவகையில் படங்களையும் செய்திகளையும் கச்சிதமாக வெளியிடுவதை ஊடகத்துறை உறுதி செய்யவேண்டும்.

2.2 நியாயமான முறையில் அனைத்து முயற்சிகளும் ஆசிரியர்களினாலும் செய்திகளின் கச்சிதத்தன்மையை, அது வெளியிடப்படுவதற்கு முன்பதாக நன்கு ஆராயவேண்டும்.

2.3 தவறான அல்லது உண்மைக்குப் புறம்பானது என்று கருதப்படுபவற்றை ஆசிரியர்கள், அவர்களது சக அலுவலர்கள் , வெளியே இருந்து பங்களிப்பவர்கள் ஒருபோதும் பிரசுரிக்க முயலக்கூடாது.

2.4 புலனாய்வுச் செய்தித்துறை பொதுநலன் கருதியதாக இருப்பதை உறுதி செய்யும் விதத்தில் பத்திரிகை நிறுவனங்கள் இயங்குவதை ஊக்குவித்தல்.

## 3. திருத்தங்களும் - மன்னிப்புக்கோரல்களும்

3.1 செய்தியறிக்கையொன்று தவறானதாக பிரசுரமாகியுள்ளதை பத்திரிகை ஆசிரியர் அறிந்துகொள்ளும் பட்சத்தில் அவ்விடயம் சரிவரத்திருத்தப்பட்டு உரிய முக்கியத்துவத்துடன் பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் மன்னிப்புக்கோரியதாக அமைந்திருக்கவேண்டும்.

## 4. பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம்

4.1 செய்தியறிக்கையொன்று தனிப்பட்ட ஒருவரது அல்லது நிறுவனத்தின் முக்கியத்துவம், கௌரவம், உணர்வுகள், அந்தரங்கத்தன்மை என்பவற்றைப் பாதித்திருந்தால், அதுகுறித்து பாதிக்கப்பட்டோர் விளக்கமளிக்க நியாயமான வாய்ப்பினை அவர்களுக்கு வழங்கவேண்டும் . இப்பதிலானது முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுக்காட்டுகின்ற தவறு காணப்படும் தகவலை மட்டும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டுமே தவிர ஏனையவற்றை முழுமையாக திருத்தவேண்டிய அவசியமில்லை.

4.2 பத்திரிகைகள் அல்லது ஊடகவியலாளர்கள் முறைப்பாட்டாளர்களுக்கு தமது தவறு தொடர்பாக வருத்தம் தெரிவித்து மன்னிப்புக்கொரும் அதேசமயம், பாதிக்கப்பட்ட தரப்பினர் பதிலளிப்பதற்கான புதிய வாய்ப்பையும் வழங்கவேண்டும்.

## 5. அந்தரங்க மூலங்கள்

5.1 செய்திமூலங்கள் தம்மை வெளிக்காட்ட விரும்பாத வரை அவர்களின் அந்தரங்கத்தன்மையை பாதுகாப்பது ஒவ்வொரு ஊடகவியலாளரதும் முக்கிய பொறுப்பாக இருக்கின்றது.

### 6. பொதுவான செய்தியறிக்கையிடலும், எழுதுதலும்

6.1 சமூக அமைப்பில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளை பொதுநலனைப் பாதுகாக்கும் விதத்தில் வெளிப்படுத்தவேண்டியது ஊடகத்துறையின் கடமையாகும். இது விடயத்தில் விசேட கவனத்தோடு ஊடகத்துறை தனது பங்களிப்பைத் தரவேண்டும். வியப்பைத்தருவதும் வருத்தத்துக்குரியதுமான சமூக விரோத செயல்களான வன்முறைகள், அடக்குமுறைகள் , போதைவஸ்த்து பாவனை, பாலியல் துஷ்பிரயோகம் போன்றவற்றை உரிய ஆதாரங்கள், அபிப்பிராயங்கள், படங்கள், வரைபடங்கள் என்பவற்றுடன் மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு பிரசுரிக்க வேண்டும்.

6.2 செய்தியறிக்கையிடும் விடயத்தில் பொறுப்புணர்வு தேவைப்படுகின்றது. பொதுநலன்கருதியதாக சட்டபூர்வமாக அனுமதிக்கப்படாதபட்சத்தில் குற்றச்செயல் அல்லது குற்றவியல் வழக்கு சம்பந்தமாக கீழ்வருவனவற்றை குறிப்பிடலாகாது:

1. பாலியல் துஷ்பிரயோகத்தில் பாதிப்புற்றோரின் பெயர்கள்.

2. முன்பு குற்றமிழைக்காத 16 வயதுக்குக்குறைந்த குற்றஞ்சுமத்தப்பட்ட சிறார்களின் பெயர்கள்.

3. குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவரை அவரது உறவினரது அனுமதியின்றி அடையாளப்படுத்தல்.

6.3 வேண்டுமென்றோ அல்லது தெரிந்தோ ஊடகவியலாளர் ஒருவர் மத, இன வன்முறைகளை துாண்டலாகாது.

6.4 தனிநபருடைய இனம், நிறம், மதம், பால் அல்லது அவரிடம் இருக்கக்கூடிய மனப்பாதிப்பு உட்பட ஏனைய அங்கக்குறைபாடுகளை அவருக்குத் தீங்கு அல்லது நஷ்டம் ஏற்படும் விதத்தில் குறிப்பிடுவதை ஊடகத்துறை தவிர்க்கவேண்டும்.

தரப்படும் செய்தியுடன் நேரடிச்சம்பந்தம் இல்லாதவரை ஒருவரது இனம், சாதி, மதம், பால் வேறுபாடு, மனநோய் அல்லது அங்கக்குறைபாடு என்பவைபற்றி பிரசுரிப்பதை தவிர்க்கவேண்டும்.

6.5

1. சட்டம் தடுத்திராதபோதிலும், தமது சுயநலன்கருதி ஊடகவியலாளர்கள் பிரசுரிக்கப்படுவதற்கு முன்பதாக தமக்குக் கிடைக்கும் நிதி நிலவரம் சம்பந்தப்பட்ட தகவலை பயன்படுத்தவோ அல்லது ஏனையோர் லாபம் கருதி அவற்றை கைமாறவோ கூடாது.

2. பங்குச்சந்தை விபரங்கள் சம்பந்தமாக பதிப்பாளர், ஆசிரியர் அல்லது நிதித்துறை பொறுப்பாசிரியர் ஆகியோருக்கு வெளிப்படுத்தாது, ஒருவரது பங்குச்சந்தை பங்கு விபரங்கள் அல்லது நெருங்கிய குடும்பத்தவரது குறிப்பிடத்தக்க நிதிக்கையிருப்பு என்பவற்றை எழுதலாகாது.

## 7. அந்தரங்கத்தன்மை

7.1 தனிநபர்களது தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, அவரது வீட்டு நிலவரம், தேகாரோக்கியம், தொடர்புகள் என்பவை பற்றி மதிப்பளிப்பதில் ஊடகத்துறை விசேட கவனம் செலுத்தவேண்டும். அனுமதியில்லாமல் ஒருவரது அந்தரங்க விடயங்களுக்குள் பிரவேசிப்பது, பொதுநலனை மீறும் செயலாகவே கருதமுடியும்.

7.2 பொதுநலன் தவிர, தனிப்பட்ட அல்லது பொதுச்சொத்துக்களை அனுமதியின்றி புகைப்பட கருவியின் நீண்ட தொலைநோக்கிச் சாதனம் மூலமாக நியாயமான அந்தரங்கத் தன்மையையும் மீறிப்படமெடுப்பது ஏற்கப்படக்கூடியதல்ல.

7.3 வேதனைக்குரியவை, அதிர்ச்சிதருபவை, விசாரணைகள் என்பவை சம்பந்தமான வழக்குகள் பற்றி கையாளும்போது மிக அவதானத்துடனும் விநயத்துடனும் கவனஞ்செலுத்த வேண்டும்.

7.4 அநாவசியமற்ற தலையீடுகளின்றி சிறுபராயத்தினர் அவர்களது பாடசாலை வருடங்களை நிறைவு செய்யவேண்டும் . பாதிப்புற்ற நிலை, அவன் அல்லது அவள் பற்றிய குடும்பம் , பாதுகாவலர் மற்றும் பலராலும் பேசப்படும் நிலை தவிர்ந்த விதிவிலக்காகப் பொதுநலன் கருதியதாகவே ஒரு சிறார் சம்பந்தப்பட்ட எந்தவொரு விடயமும் பிரசுரமாவது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகின்றது.

7.5 பொதுநலன் கருதியதாகவன்றி தனிநபர்களுடைய வைத்தியசாலை அல்லது அதையொத்த நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் போன்ற அந்தரங்க விடயங்களில் தலையிடுவது கட்டுப்படுத்தப்பட வேண்டியதாகின்றது.

## 8. தொந்தரவும், கபடத்தனமும்

8.1 புகைப்பட ஊடகவியலாளர்கள் உட்பட ஏனைய ஊடகவியலாளர்கள் தமக்குரிய தகவல்கள் மற்றும் புகைப்படங்களைப் பெறுவதற்காக அச்சுறுத்தலையோ கபடத்தனமான அணுகுமுறைகளையோ மேற்கொள்ளலா காது. நீண்டதொலைநோக்கி புகைப்படக்கருவிகளைப் பயன்படுத்துவது, ஒலிப்பதிவுக்கருவியைப் பயன்படுத்துவது போன்ற நடவடிக்கைகளையும் பொதுநலன் கருதியதாக மேற்கொள்ள வேண்டுமே தவிர எதனையும் பலாத்காரமாக மேற்கொள்ளலாகாது.

## 9. கௌரவம்

9.1 ஒவ்வொரு ஊடகவியலாளரும் தனது தொழிலின் கௌரவத்தை பேணவேண்டும்.

### வியாக்கியானம்

பொதுநலனுக்குட்பட்டவை.

1 .

(i) ஜனநாயகம், நல்லாட்சி, கருத்துச்சுதந்திரம் மக்களின் அடிப்படை உரிமைகள் என்பவற்றைப் பாதுகாப்பதோடு, இவற்றை நேரடியாகவோ மறைமுகமாகவோ குந்தகம் விளைவிப்பது பற்றி அறியத்தருவது குற்றச்செயல்களை கண்டறிவது அல்லது வெளிப்படுத்துவது, சீரற்ற நிர்வாகம், பாதகமான செயல்களை இனங்காண்பது .

(ii) பொதுச்சுகாதாரம் , சமூகப்பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதுகாப்பதோடு கல்வி, கலாசார விடயங்களின் தரத்தையும் பேணுதல்.

(iii) ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் அறிக்கை அல்லது செயலினால் பொதுமக்கள் தவறாக வழிநடத்தப்படுவதிலிருந்து பாதுகாத்தல்.

2. பொதுநலன் சம்பந்தப்படுமிடத்து, பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பத்திரிகையாசிரியர் அல்லது ஊடகவியலாளரிடமிருந்து விளக்கத்தைக்கோர உரிமை கொண்டுள்ளது.

### மறுபரிசீலனை

இலங்கை பத்திரிகையாசிரியர் குழாம் காலத்துக்குக்காலம் ஆனால் ஆண்டுதோறும் ஒரு தடவைக்குக் குறையாத வகையில் அதன் ஒழுக்கக்கோவையின் அம்சங்களை மறுபரிசீலனை செய்யமுடியும்.

## பிற்சேர்க்கை 5

# ஊடகவியலாளர்களின் செயற்பாடு குறித்த சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஒழுக்கவிதிகளின் பிரகடனம்

இச்சர்வதேச பிரகடனம் ஊடகவியலாளர்களது தொழில்சார்ந்த செயற்பாடு குறித்த நியதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், செய்தி சேகரித்தல் ஒளி - ஒலிபரப்புதல், பரவச்செய்தல், சம்பவங்களை விபரிக்கும்போது கருத்துக்களைத் தெரிவித்தல் போன்றவற்றின்போது பின்பற்றவேண்டிய விதிமுறைகளைத் தருவதாகவும் அமைந்துள்ளது.

1. உண்மைக்கு மதிப்பளித்தலும், பொதுமக்களுக்கு உண்மையை அறிவதற்குரிய உரிமைக்கு மதிப்பளித்தலுமே ஓர் ஊடகவியலாளரின் முதற்கடமையாகும்.

2. ஊடகவியலாளர்கள் கடமைகளைச் செய்யும்போது, செய்திகளைச் சேகரிக்கும்போது, ஊடக சுதந்திரத்தின் நேர்மைத்தன்மையை பாதுகாத்து நியாயமான கருத்துக்களையும் விமர்சனங்களையும் மதிப்பளித்துப் பேணவேண்டும்.

3. ஒரு பத்திரிகையாளர், ஒரு விடயத்தின் ஆரம்பத்தை நன்கு அறிந்த நிலையில் சரியான தகவல்களின் அடிப்படையிலேயே செய்தியைத்தரவேண்டும். முக்கியமான தகவல்களை மூடிமறைக்கலாகாது. ஆவணங்களை தவறான முறையில் பயன்படுத்தவும் கூடாது.

4. நேர்மையான அணுகுமுறைகள் மூலமே செய்திகள், படங்கள், ஆவணங் களைப் பெற ஊடகவியலாளர்கள் முயலவேண்டும்.

5. பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில், நேர்த்தியற்ற முறையில் இருக்கக்கூடிய தகவல்கள் குறித்து நன்கு ஆராய்ந்தறிந்த பின்னரே பிரசுரிக்க பத்திரிகையாளர்கள் முன்வரவேண்டும்.

6. நம்பகத்தன்மையோடு பெற்றுக்கொண்ட தகவல்களின் செய்தி மூலங்களது அந்தரங்கத்தன்மையை தொழில்சார் முறையில் பேணவேண்டும்.

7. ஊடகத்துறை மூலமாக வேறுபாடுகளை ஏற்படுத்துவதின் மூலம் ஏற்படும் அபாயங்களை ஊடகத்துறையினர் நன்கறிந்திருக்கவேண்டும். இந்நிலையில் இனம், மதம், அரசியல் பால் வேறுபாடுகள் கருத்துக்கள், அபிப்பிராயங்கள், தேசிய, சமூக விடயங்கள் என்பவற்றை கையாளுவதில் நடுநிலையான நேர்மையான போக்கை ஊடகவியலாளர்கள் கடைப்பிடிக்கவேண்டும்.

8. தொழில் ரீதியான பெரும் தவறுகள் என கீழ்வருவனவற்றை ஊடகவியலாளர்கள் கருதவேண்டும்.
விஷமத்தனமான தவறான விளக்கமளித்தல், பொய்யான, ஆதாரமற்ற தகவல்கள், ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள், அவதூறாக எழுதுதல், மூடிமறைத்தல்.

9. ஒழுக்கவிதிமுறைகள் அனைத்தையும் ஊடகவியலாளர்கள் நேர்மையான முறையில் கடைப்பிடிக்கவேண்டும். அரசாங்கங்கள் மற்றும் ஏனையோரது தலையீடுகளை தவிர்க்கும் அதேசமயம், ஒவ்வொரு நாட்டினது பொதுச்சட்டங்களையும் ஊடகவியலாளர்கள் அறிந்து அவற்றுக்கு மதிப்பளிக்கவேண்டும்.

## பிற்சேர்க்கை 6

# இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு எவ்வாறு முறைப்பாடொன்றைச் செய்வது?

### விதிமுறைகளும் முறையிடுதலுக்கான நடைமுறைகளும்

1. இலங்கையிலுள்ள ஒரு பத்திரிகை அல்லது ஒரு சஞ்சிகையில் வெளியான ஒரு செய்தி, கட்டுரை, புகைப்படம் அல்லது வரைபடம் என்பவற்றினால் தான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதை ஒருவர் நியாயமாக உணருவாரேயானால் அதுபற்றி பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிடம் முறையிடமுடியும்.

2. முறைப்பாட்டாளர் தனது முறைப்பாட்டை எழுத்துவடிவில் முறைப்பாட்டிற்கான விண்ணப்பத்தில் எழுதி, அதில் முறையாகக் கையொப்பமிட்டு அதனை நேரடியாகவோ, பதிவுத்தபாலிலோ, மின் அஞ்சல் அல்லது வேறு இலத்திரனியல் மார்க்கமாகவோ பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிடம் கையளிக்கமுடியும்.

3. தனது முறைப்பாட்டுடன், தன்னை மிகவும் பாதித்ததாக தெரிவித்த பத்திரிகைத் தகவலின் பிரதியையும் முறைப்பாட்டுக்காரர் இணைக்கமுடியும் . மின்அஞ்சல் அல்லது வேறு இலத்திரனியல் மார்க்கமாக தமது முறைப்பாட்டை முறையாகக் கையொப்பமிட்டு, தம்மைப்பாதித்த விடயத்தின் பிரதியையும் அதனோடினைத்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அலுவலகத்தில் ஏழு வேலை நாட்களுக்குள் அனுப்பிவைக்கவேண்டும்.

4. முறைப்பாடு முறையான விதத்தில் கிடைக்கப்பெற்றதும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி அதுபற்றிப் பரிசீலிப்பார். தம்மிடம் கிடைக்கப்பெற்ற பத்திரிகையில் வெளியான செய்தித்தகவல் இலங்கை பத்திரிகை ஆசிரியர் குழாத்தின் தொழில் நெறிவிதிமுறைகளை மீறியிருந்தால் மட்டுமே அதுகுறித்து செயலில் இறங்குவார். இலங்கை பத்திரிகை நிறுவனம், பத்திரிகை ஆசிரியர் குழாம் என்பவற்றினால் தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதே தொழில் நெறிவிதிமுறையாகும்.

5. பத்திரிகைச்செய்தியொன்று வெளியாகி இரு வருடங்களின் பின்னர் அதுபற்றிய முறைப்பாடொன்று கிடைக்குமானால் அதனை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஏற்றுக்கொள்ளமாட்டார்.

6. முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டதும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஒரு வேலை நாளுக்குள் முறைப்பாட்டின் பிரதியை குறித்த முறைப்பாட்டுக்குரிய பத்திரிகையின் அல்லது சஞ்சிகையின் ஆசிரியருக்கு அனுப்பிவைப்பார். அத்துடன் அம்முறைப்பாடு குறித்த பதிலையும் குறித்த பத்திரிகை ஆசிரியரிடமிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் அனுப்பிவைக்கும்படி கோருவார்.

7. குறிக்கப்பட்ட திகதிக்குள் பத்திரிகை அல்லது சஞ்சிகையின் ஆசிரியர் பதில் அனுப்பி வைக்காதவிடத்து, பத்திரிகை முறைப்பாட்டுக்குழுவுக்கு மேற்படி முறைப்பாடு நடுவர்களின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படும். இல்லையேல் ஆசிரியர் அல்லது அவர் சார்பாக ஒருவர் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு பதிலளிக்க கால அவகாசத்தைக் கோரும் பட்சத்தில் அக்கோரிக்கை நியாயமானதாயின் மேலதிக கால அவகாசம் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் வழங்கப்படமுடியும்.

8. முறைப்பாடு கிடைக்கப்பெற்றதும் இருவாரங்களுக்கு மேற்படாத காலப்பகுதியில் பிரதம நிறைவேற்று அதிகாரி சர்ச்சைக்குரிய தரப்பினரை இணக்கப்பாடான முறையிலும், சமரசமாகவும் அவர்களுக்கிடையேயான பிணக்கைத் தீர்க்க சகல முயற்சிகளையும் மேற்கொள்வார். அச்சமரசமுயற்சி என்பது ஒரு திருத்தத்தை அல்லது மனிப்புக்கோரலை வேண்டுவதாகவும் அமையும். இதுதவிர பிரதம நிறைவேற்று அதிகாரி இணக்கமொன்றைத் தோற்றுவிப்பதற்காக பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரின் சேவையையும் நாடுவார்.

9. பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் நெறிப்படுத்தலின்படி இணக்கம் காணப்பட்டு திருத்தம், மன்னிப்புக்கோரல் அல்லது தவறைத் திருத்துவதற்கான பதில் பிரச்சினைக்குள்ளான பத்திரிகை அல்லது சஞ்சிகையில் பிரசுரமாகியிருந்தால், அப்பிரசுரத்தில் பிரச்சினைக்குரிய இணக்கப்பாடு பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு முன்பாகவே எட்டப்பட்டதாக குறிப்பிடப்படவேண்டும்.

10. இணக்கப்பாடு மத்தியஸ்தம் என்பவை மூலமாக ஒரு தீர்வு எட்டப்படாத பட்சத்தில், தீர்வு ஏற்படாத நாளிலிருந்து இருவாரகாலத்துக்குள் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு நடுநிலையாளர் மூலமாக இணக்கப்பாட்டை அல்லது மத்தியஸ்த்த முயற்சியை முன்னெடுக்கும்.

11. பிரதம நிறைவேற்று அதிகாரி தம்மால் ஏற்கப்பட்ட எந்தவொரு முறைப்பாட்டையும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் கவுன்ஸிலுக்கு மத்தியஸ்த்தமொன்றை முறைப்பாட்டாளர் நலன்கருதியதாகவும், பொதுநலன் மற்றும் பத்திரிகைத்துறை நலன் கருதியதாகவும் சமர்ப்பிக்க முடியும்.

12. கட்சிக்காரர்கள் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு கவுன்ஸில் உறுப்பினர்கள் மத்தியஸ்த்தத்துக்கு ஏற்பாடாவது பற்றி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவர்களாகின்றனர்.

இலங்கை பத்திரிகைமுறைப்பாட்டு ஆணைக்குழு

13. மத்தியஸ்த சபைக்கான உறுப்பினர்களது எண்ணிக்கை மூன்றாக இருக்கவேண்டிய அதேசமயம் இதில் பொரும்பாலானோர் ஊடகத்துறை சாராதோராக இருக்கவேண்டும்.

14. இம்மத்தியஸ்த்த சபையில் இருக்கும் உறுப்பினர்களில் எவராவது பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்குக் கிடைத்த விசாரணைக்குரிய முறைப்பாட்டுடன் சம்பந்தப்படும் பட்சத்தில் அவர் அம்மத்தியஸ்த்த சபையில் இடம்பெற முடியாது .

## ஆதாரம்

15. நடுவர் சபையின் வேண்டுகோளுக்கிணங்க, கட்சிக்காரர்கள் தமது ஆதாரங்களைக் குறிப்பிடுவதோடு, தாம் எதனை நிரூபிக்க முயல்கின்றனர் என்பதையும் தெரிவிக்கவேண்டும்.

16. நடுவர் சபையின் வேண்டுகோளின்படி கட்சிக்காரர்கள் தமது ஆதாரங்களை ஆவணமாகவும் சமர்ப்பிக்கமுடியும்.

17. சமர்ப்பிக்கப்பட்டவை நேர்த்தியாக இருப்பதாக நடுவர் சபை கருதும் பட்சத்தில் எழுத்து மூலமான வாக்குமூலத்தை அச்சபை கோரும்.

18. சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள் பொருத்தமற்றவை அல்லது அநாவசியமானவை என நடுவர்சபை அவற்றை ஏற்க மறுத்து நிரூபிக்கப்படக்கூடியவற்றை இலகுவாக வேறுவகையில் சமர்ப்பிக்க முடியுமெனவும் எதிர்பார்க்கலாம்.

19. பிணக்கில் இருக்கின்ற கட்சிக்காரர் சமர்ப்பித்த அனைத்து அறிக்கைகளும் விரிவானதாக பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் விதிமுறைகளை அனுசரித்ததாக இருக்க வேண்டுமென்றே நடுவர் சபை எதிர்பார்க்கின்றது. தேவையான விதத்தில் அனைத்தும் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில், வழக்கினை தள்ளுபடி செய்துவிடவும் முடியும் . அதேவேளை சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆதாரங்களும் வேண்டப்பட்ட விதிமுறைகளுக்குள் அமையாவிட்டாலும் , நடுவர் சபை செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுவதை தடுத்துவிடப்போவதில்லை.

20. கட்சிக்காரர்கள் இணங்காத பட்சத்தில் ஒரு குறித்த விடயம் தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிட நிபுணர் ஒருவரை நடுவர் சபை நியமிக்கமுடியும்.

21. விசாரணைகளில் ஒரு கட்சி பங்குபெறத் தவறும் பட்சத்தில் அல்லது உத்தரவொன்றுக்கு உடன்படாதவிடத்தில் அல்லது பங்குபற்றாமைக்கான சரியான காரணத்தை தெரிவிக்காத பட்சத்தில் நடுவர்சபை நடவடிக்கைகள் தடைப்படமாட்டாது. அத்துடன் அது வெளிப்படுத்தும் தீர்ப்பும் நிறுத்தப்படமாட்டாது.

22. நடுநிலையாளர் பற்றி பிணக்கிற்குள்ளாகியுள்ள கட்சிக்காரர்கள் எழுத்துவடிவில் வேறெந்த நிவாரணத்தையும் வழங்குவது பற்றி திட்டவட்டமாக ஆராயாதவிடத்து நடுநிலையாளரின் நிவாரணம் வழங்கும் அதிகாரம் எந்தவொரு நியாயசபை செயல்முறைகளிலும் ஒரு கட்சியான பிணக்குக்குரிய பிரசுரத்துக்கு மன்னிப்பை அல்லது பதிலை அல்லது திருத்தத்தை ஊடகம் வாயிலாக வழங்கச் செய்வதில் கட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.

23. பிணக்கு சம்பந்தப்பட்ட நிவாரணம் கோரும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்துக்கும் குறைவான காலப்பகுதியில் நடுநிலையாளரின் தீர்ப்பு வழங்கப்படல் வேண்டும். இல்லையேல் அதுபற்றிய தீர்மானம் கவுன்ஸிலினால் எடுக்கப்படும்.

24. இணக்கப்பாடொன்று எட்டப்படும் பட்சத்தில், கட்சிக்காரர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவ் இணக்கப்பாட்டை கவுன்ஸில் உறுதிசெய்யும்.

25. மிக அவதானமாக அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்தறிந்த பின்னரும், நடுவர் சபை அப்பிணக்குப்பற்றிய விளக்கத்தை வழங்கிய பின்னருமே தீர்ப்பு வழங்கப்படும்.

26. அதேசமயம் நடுவர் நியாயாதிக்க சபையாக கவுன்ஸில் அமர்ந்து கொள்ளும் பட்சத்தில் அந்நியாயாதிக்கசபையின் பெரும்பான்மை அபிப்பிராயம் நிலைபெறும்.

27. பிணக்கொன்றில் சம்பந்தப்பட்ட வேறொரு விடயத்தை ஒரு கட்சி வேறானதாக ஆராய விரும்பினால் அதற்குரிய முடிவு பிறிதொரு தீர்ப்பாக வழங்கப்படும். ஏதாவது ஒரு கட்சி ஆட்சேபித்தால், விதிவிலக்கான காரணங்கள் இருக்கின்றன என்று நடுவர் நியாயாதிக்கசபை தீர்மானிக்கும் பட்சத்திலேயே அத்தகைய தீர்ப்ப வழங்கப்படும்.

28. கட்சியொன்று ஒரு பகுதியாக கோரிக்கை ஒன்றை அனுமதித்தால் நடுவர் நியாயாதிக்கசபை வேறான தீர்ப்பொன்றை குறித்த கட்சி விடுத்த கோரிக்கை தொடர்பாக வழங்கும்.

29. நடுவர் சபை உள்ள இடத்திலேயே தீர்ப்பு வழங்கப்படும். உத்தரவையும், அல்லது பிரகடனத்தை உள்ளடக்கியதாக அவை பற்றிய காரணங்களோடு, நடுவரினால் அல்லது அனைத்து நடுவர்களாலும் ஒப்பமிடப்பட்டதாக தீர்ப்பு அமைந்திருக்கும். ஒரு நடுவரின் ஒப்பமில்லாத இடத்தில் கூட தீர்ப்பு வழங்கப்படமுடியும். பெரும்பான்மையான நடுவர்கள் ஒப்பமிடும் பட்சத்தில் இது சாத்தியமாகும் . அதேசமயம் நடுவர் ஒருவரின் ஒப்பம் இடம்பெறாதிருப்பதற்கான காரணமும் விளக்கமும் வழங்கப்பட்டிருத்தலும் அவசியமாகும்.

30. செயற்பாடுகள் அனைத்தையும் முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர் ஆணைக்குழுவிடம் அனைத்தும் சமர்ப்பிக்கப்படும். ஒவ்வொரு தீர்ப்பின் பிரதியும், அனைத்து செயற்பாடுகளும் இதில் அடங்குவதாக இருக்கும்.

### திருத்தம் அல்லது தீர்ப்பை மாற்றுதல்

31 . வெளிப்படையான தவறு கணிப்பீட்டில் இடம்பெற்றிருந்தால் அல்லது தீர்ப்பில் காணப்படக்கூடிய வேறு அலுவலக ரீதியான பிழைகள் இருக்கும் பட்சத்தில் நடுவர் நியாயாதிக்க சபையினால் அக்குறைபாடுகள் திருத்தப்படமுடியும் .

32. கட்சியொன்று கேட்கும் பட்சத்தில் தீர்ப்பு கிடைக்கப்பெற்ற முப்பது (30) நாட்களுக்குள், நடுவர் நியாயாதிக்கசபை தீர்ப்பில் தீர்மானிக்கப்பட்டிருக்கப்படவேண்டிய, ஆனால் தீர்மானிக்கப்பட்டிராத கேள்வியொன்று பற்றி தீர்மானிக்கும்.

33. கட்சியொன்று கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் தீர்ப்பொன்று கிடைக்கப்பெற்று முப்பது (30) தினங்களுக்குள், நடுவர் நியாயாதிக்கசபை எழுத்துவடிவத்தில் வியாக்கியானமொன்றை வழங்கும்.

34. இத்தகைய நடவடிக்கை நடுவர் நியாயாதிக்கசபை எடுக்கமுன்னர், கட்சிக்காரர்கள் தமது அபிப்பிராயங்களை வழங்க சந்தர்ப்பம் வழங்கப்படல்வேண்டும்.

### அமுல்படுத்தல்

35. இணக்கப்பாடு, மத்தியஸ்தம் அல்லது நியாயாதிக்க சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களுக்கமைவாக பதிப்பாளர் நடக்கத்தவறும் பட்சத்தில் , மேல் நீதிமன்றில் நியாயாதிக்க சட்ட இல : 11 - 1995 க்குஅமைவாக இணக்கப்பாட்டில் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை அமுலாக்கும் விதத்தில் பாதிக்கப்பட்டவரை வழக்குத்தாக்கல் செய்யச் செய்வதில் கவுன்ஸில் ஒத்துழைக்கும்.

36. மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்த பின்னர் ஒரு வருடத்தினுள் நியாயாதிக்கசபை தீர்ப்பு, அது வழங்கப்பட்டு பதினான்கு (14) தினங்கள் முடிவடைந்த பின்னர் நியாயாதிக்கசபை சட்ட இல : 11 1995 க்கு அமைவாக அமுலாக்கமுடியும்.

37. இதன் பின்னர் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு கவுன்ஸிலின் தீர்ப்பானது முழுமையாக சம்பந்தப்பட்ட பத்திரிகை அல்லது சஞ்சிகையினால் கூடியவிரைவில் பதிப்பிக்கமுடியும்.

38. இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு கவுன்ஸிலின் அத்தீர்ப்பானது நியாயாதிக்கசபை சட்ட இல: 11 1995 இல் குறிப்பிட்டதற்கமைவாக நியாயாதிக்க சபை தீர்ப்பிற்குச் சமமானதாகும். அத்துடன் அச்சட்டமூலத்தின் நடைமுறைகள், மரபியல் அணுகுமுறைகள், குறித்த தீர்ப்பினை அமுலாக்குவதில் வேண்டப்படும்.

39. பிரதம நிறைவேற்று அதிகாரியின் அல்லது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டுக் கவுன்ஸிலின் தீர்ப்பானது அனைத்து நடைமுறைகள் தொடர்பிலும் இறுதியும், முடிவுமானதாகும். இது குறித்து நீதிமன்றில் வழங்காட முடியாது.

40. இணக்கப்பாடு, மத்தியஸ்தம் மற்றும் நியாயாதிக்கசபை நடைமுறைகள் குறித்த அனைத்து முறைப்பாடுகள், தீர்மானங்கள் என்பவை பற்றிய அறிக்கைகளை பிரதம நிறைவேற்று அதிகாரி கொண்டிருப்பார். இவை ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையில் பொதுமக்களின் அவதானத்துக்காக வெளியிடப்படும்.

41. 2003 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் பிரசுரமான பத்திரிகை அல்லது சஞ்சிகை தொடர்பில் இந்த நடைமுறை ஏற்புடையதாகும். இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் குழாத்தின் இலங்கை பத்திரிகை நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழில்சார் நெறிக்கோவை.

42. இலங்கை பத்திரிகை நிறுவனத்தினாலும், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்திரிகையாசிரியர் குழாத்தின் ஒழுக்கக்கோவை வியாக்கியானம் கீழ்வரும் விதிமுறைகளை செயல்படுத்துவதற்கான அதிகாரத்தை கவுன்ஸிலுக்கு வழங்குவதாக இருக்கின்றது:

## இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பேச்சாளர்

43. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரே அந்நிறுவனத்தின் சகல கொள்கை விடயங்கள் தொடர்பாக பேச்சாளராக இருப்பார். அல்லது ஆணைக்குழுச்சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அச்சபை சார்பாக இருக்கமுடியும்.

44. பிரதம நிறைவேற்று அதிகாரியே அனைத்து முறைப்பாடுகளையும் ஏற்பதுடன் தீர்மானங்களையும் எடுப்பார். அவசியமேற்படின் கவுன்ஸில் தலைவரிடம் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆலோசனை பெறமுடியும்.

ஆயினும் எச்சந்தர்ப்பத்திலும் நடத்தப்படுகின்ற விசாரணைகள் பற்றிய தகவல்கள் பத்திரிகைகள் இலத்திரனியல் ஊடகம் , அல்லது பொதுமக்களிடம் வெளியிடப்படமாட்டாது. கவுன்ஸிலின் நடுவர்சபைத் தீர்ப்போ அல்லது வியாக்கியானங்களோ கவுன்ஸிலின் தலைவர் அல்லது நடுவர் சபையுடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே பிரதம நிறைவேற்று அதிகாரியினால் வெளிப்படுத்தமுடியும்.

45. இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் எந்தவொரு அலுவலரும் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றி பத்திரிகைகளில் எழுதவோ அல்லது இலத்திரனியல் ஊடகத்தில் கருத்துக்கூறவோ விரும்பினால் முன்னேற்பாடாக எழுத்துவடிவில் பிரதம நிறைவேற்று அதிகாரியின் சம்மதத்தைப் பெறவேண்டும். எப்படியிருந்தபோதிலும் அத்தகைய ஓர் அலுவலர் சபை உறுப்பினர்களுக்கே உரிமையுடைய கொள்கை விடயங்கள் பற்றிக் கருத்துக்கூற அனுமதிக்கப்படமாட்டார்.

46. பிரதம நிறைவேற்று அதிகாரியினால் வெளியிடப்படுகின்ற அனைத்து செய்தி அறிக்கைகளும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரது முன் அனுமதியைப் பெற்று விசாரணைகளின் விபரங்களை வெளியிடாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

47. இந்த நடைமுறைகள் வருடந்தோறும் மீளாய்வு செய்யப்படுவதோடு தேவைப்படும் பட்சத்தில், அவசியமானதாயின் இம்மீளாய்வு இயக்குநர் ஒழுங்கமைப்பு கவுன்ஸிலிடமும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு இயக்குநர்களிடமும் உறுதி செய்யப்படுவதற்காகவும் அமுலாக்கப்படுவதற்காகவும் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் சமர்ப்பிக்கப்படும்.

## பிற்சேர்க்கை 7

# Press Complaints Commission of Sri Lanka Complaint Form

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
**Press Complaints Commission of Sri Lanka**

## COMPLAINT FORM

**Name in Full:**...................................................................

**Address:** .........................................................................................

**Telephone:** ............................, **Mobile:**............................... **Fax:**................................

**Email:**.............................................

**Newspaper/Magazine**....................................... **Publication date:**.................................

**Headline:**....................................................................................................................

**Please indicate which clause/clauses of the Code of Professional Practice, in your view has been breached. (Give clause number only)**..........................................................................

**By signing below I agree to abide by the following terms and conditions:**

1. **I agree to participate in the process adopted by the Press Complaints Commission of Sri Lanka (PCCSL) in resolving the complaint.**
2. **I agree to abide by the settlement reached between myself and the Editor through the facilitation of the PCCSL.**
3. **I have enclosed a copy of the newspaper article against which the complaint is being made, and my version of the facts.**

**Please note that the PCCSL follows the Rules and Complaints Procedure of the Commission in seeking a settlement. As per clause 38 of the Procedure, if a settlement is reached through the intervention of the Dispute Resolution Council (DRC) of the PCCSL, such a decision is equivalent to an award by the Arbitral Tribunal referred to in the Arbitration Act No. 11 of 1995, and provisions of the said Act shall apply "mutatis mutandis" (as it is) for the enforcement of such adjudication.**

**Any decision of the CEO and or the Adjudication of the Council of the PCCSL is deemed final and conclusive for all purposes, and cannot be challenged before a court of law.**

.................................................... ......................................

**Signature of Complainant** **Date**

***Conciliation is the first step in seeking a settlement. The PCCSL obtains the services of the DRC to adjudicate in the matter if conciliation fails.***

96, Kirula Road, Colombo -05, Sri Lanka
Tel: (+94 11) 5353635 | Fax: (+94 11) 5335500 | E-mail: pccsl@pccsl.lk | Web: www.pccsl.lk

## பிற்சேர்க்கை 8

# உதடுகளை இலகுபடுத்தல்

# பேட்டிகாணும் கலை

**எரிக் நல்டார் - சியாட்டல் டைம்ஸ்**

### அமைப்பு

**ஆய்வு:** ஆராய்ந்தறிந்த தகவல்களோடு கேட்கப்படும் கேள்விகளே சிறந்த கேள்விகளாகும். பேட்டி காண ஐந்து மணித்தியாலங்கள் அல்லது ஐந்து தினங்கள் அவகாசமிருந்த போதிலும், ஏற்கனவே வெளியான தகவல்கள், நீதிமன்ற அறிக்கைகள் என்பவை மூலமாக பேட்டிக்குரியவரிடம் நல்ல தகவல்களைப் பெறும் விதத்தில் பேட்டி காண்பவர் தன்னை தயார் செய்து கொள்ள வேண்டும்.

**உத்திகள்:** பேட்டிகாண்பதற்கான உத்திகளோடு ஒரு திட்டத்தை வடிவமைத்து அதனை உங்களது நண்பர் அல்லது சகாவுடன் கலந்தாலோசிக்கவும். நான் எதைப்பற்றி எழுதுகிறேனோ, அதற்கு அமைவான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரையே பேட்டி காண்பேன். தவறுகள் பற்றிய தகவல்களைத் தருபவர்கள் மற்றும் இறுக்கமான நபர்களை இருக்குமிடத்திலிருந்தவாறு தொடர்பு கொள்ளமுடியும். பதட்டமடையும் பேட்டிக்குரிய நபர் ஒருவரை சாந்தப்படுத்தும் விதத்தில் அவரோடு அமைதியாக நடந்தவாறு பேசமுடியும். உணவு விருந்தளிக்கும்போது ஒருவரை சுமார் ஒரு மணிநேரம் வரை பேசவைக்கமுடியும்.

**ஏற்பாடு:** பேசப்படவேண்டிய விடயம், கேட்கப்படவேண்டிய கேள்விகள் என்பவற்றை உங்களது குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொள்வதன் மூலம் பேட்டியின்போது குழப்பமின்றி இருக்கமுடியும். மென்மையான கேள்விகளுடன் கேள்விகளை ஆரம்பிக்கவும். வாழ்க்கைப் பின்னணி பற்றி பேச்சை ஆரம்பிக்கலாம். ஆயினும் பேட்டியின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும் விரிவான கேள்விகளை தயார் செய்யவும். இதன்மூலம் விடை தரப்படாத இறுக்கமான நிலையும் ஏற்படலாம்.

**உள்ளார்ந்த பேட்டி:** காலைப்பொழுதில் உங்களைத் தயார்படுத்தும்போது நீங்கள் குளிக்கும்போது கூட வெற்றிகரமான பேட்டி பற்றி கற்பனை செய்யுங்கள். பேட்டியோ அல்லது தகவல்களோ கிடைக்கமாட்டாதெனக் கருதும் செய்தியாளர்கள் தோல்வியடைந்து விடுகின்றனர். தனக்குத்தானே பேசுவதை தவிர்க்கக்கூடாது. இதனால் பயனடையமுடியும்.

ஆரம்பம்: உள்ளார்ந்த பேட்டியின் நுட்பங்கள் தொடர்கின்றன. பேட்டிக்குரியவர் குழப்பமான நிலையில் இருக்கும்போது அவரை அணுக வேண்டாம். அப்பாவித்தனமாகவும் சிநேகபூர்வமாகவும் அச்சமற்றவராக ஆர்வத்தோடு இருப்பவராக காட்சியளியுங்கள். நீங்கள் கடுகடுப்பான , தவறான முறைகளில் பேச்சுக்கொடுக்கும் செய்தியாளரானால் உங்களுக்கு நடிப்புக்கலையில் பயிற்சியும் தேவை. விடயங்களில் அவதானமாக இருக்கவும். நீங்கள் பேட்டியை நடத்தும் அறைப்பகுதியை நோட்டமிடுங்கள். சுவர்களையும், மேசையின் மீதுள்ள பொருட்கள், குறிப்புகள் மீதும் கவனத்தைச் செலுத்துங்கள். நீங்கள் அவதானிப்பவை பற்றி குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.

வேறுசெய்தி மூலங்களையும் தேடுங்கள்: பேட்டி தருபவரின் செயலாளர், சக ஊழியர்கள் ஆகியோரைச் சந்தியுங்கள். அவர்கள் பற்றிய விபரங்களையும் குறித்துக் கொள்ளுங்கள். இவர்களை நீங்கள் செய்திமூலங்களாகக் கையாளும் விடயத்தில் சேர்க்கமுடியும்.

## மறுத்து விடுபவர்கள்

தொடர்ந்து முயற்சிக்கவும்: ஒருவர் உங்களை சந்திக்க மறுக்கும் பட்சத்தில், பொதுவான ஒரு விடயத்தின் அடிப்படையில் அவரை அணுக முயற்சிக்கவும். ‘ஆம், உங்களிடம் ஒரு நாய் இருப்பதை அவதானித்தேன். என்னிடமும் அதே இன நாய் இருக்கின்றது. இவை அபூர்வமான இனத்தவை” இவ்வாறு பேச்சை ஆரம்பித்து மறுமுனையில் இருப்பவரை இலகுபடுத்திக்கொண்டதும், "நான் எந்தவொரு விடயத்தை கையாளுகிறேன் என்பதை விளக்க விரும்புகிறேன். அதனை நீங்கள் அறிந்திருக்கவேண்டும் "என்று பேச்சோடு பேச்சாக குறிப்பிடலாம். நான் எதனைச் செய்கிறேன் என்று கூறியதும் பொதுவாகவே அவர்கள் கருத்துக்கூற முன்வருவார்கள். ஒரு தடவை எதிர்பாராதவிதமாக தவறான தகவல் ஒன்றைப்பற்றி குறிப்பிட்டேன். அப்போது பொலிஸ்காரர் ஒருவர் அறிக்கை ஒன்றை எடுத்து காண்பித்து நான் தவறானதையே தெரிவித்துள்ளேன் என்பதையே குறிப்பிட்டிருந்தார். நீங்கள் விரைவாகவும், தயவாகவும், மரியாதையோடும் இது விடயத்தில் நடந்து கொள்ளவேண்டும்.

இது ஒரு பெரிய விடயமல்ல: “என்னால் கருத்துக்கூற முடியாது” எனத்தெரிவிக்கும் பட்சத்தில் “நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை.” இவ்விடயம் பற்றி பலரிடம் கருத்துக்கேட்டுள்ளேன். அதில் நீங்களும் ஒருவர். இதுவொரு பெரிய விடயமல்ல. இதுதான் நான் அறிந்துகொண்டது. எனவே இதைப்பற்றி சற்றுப்பேசுவோம் “ எனக்கூறி உறுதிப்படுத்தவேண்டிய விடயம்பற்றி பேச்சை மெதுவாக ஆரம்பிக்கலாம். அவர்கள் நாம் குறிப்பிடுகின்ற விடயம்பற்றிப் பேசமுற்படும்போது அவர்களுடன் அதுபற்றி விவாதிப்பதை தவிர்க்கவும். அத்தகைய விவாதத்தில் நீங்கள் பெரும்பாலும் தோல்வியடையலாம். எனவே கூடியவரை பேச்சைத்தொடர்ந்து எமக்கு வேண்டியவரை வழிக்குக் கொண்டுவர முயற்சிக்கவும்.

**அனுதாபம்:** “எனக்குக் கருத்துக் கூறப் பயமாக இருக்கிறது” எனக் கூறும்போது சற்று அனுதாபத்துடன் அணுக முயற்சிக்கவும். அத்துடன் அவரிடம் உறுதிப்பாட்டை ஏற்படுத்தவும். “உங்கள் பிரச்சினையை நான் அறிவேன். உங்களுடைய நிறுவனத்துக்கு இதுவோர் கடினமான காலம். ஆயினும் இப்படியான தருணங்களில் பலர் என்னோடு பேசியுள்ளார்கள். இதில் உங்களோடு பணியாற்றுவோரும் அடங்குவர். சிலவற்றை மட்டுமே

உங்களிடமிருந்து அறியவிரும்புகிறென். அவை எனக்குப் பெரும் உதவியாக இருக்கும்." என்று கூறி அவர்களது கருத்துக்களுக்கும் மதிப்பளித்து எமது செய்தியின் முக்கிய விடயத்தை அறியும் விதத்தில் நடந்து கொள்ளவேண்டும்.

**அரச அதிகாரி அல்லது வேறு பெரும் புள்ளி :** "கருத்துக்கூற விரும்பவில்லை" என்று தெரிவிக்கும் ஒரு முக்கிய நபரிடம், "கருத்துக்கூற விரும்பவில்லை" என்று நீங்கள் குறிப்பிடுவதை இச்செய்தியில் நான் எழுத விரும்பவில்லை. ஏனெனில் நீங்கள் எதையோ மறைக்க முயல்வதாக வாசகர்கள் நினைப்பார்கள். எனவே இதுபற்றி நாம் பேசுவோம். குறிப்பாக இதைப்பற்றிக் கூறுங்கள் .......... என்று தெரிவிக்கமுடியும்.

**கதவு இல 1 அல்லது 2 :** கருத்துக்கூற மறுக்கும் அரசஅதிகாரி அல்லது ஒரு முக்கிய புள்ளியை இரு வகைகளில் அணுகமுடியும். நான் அவரிடம் கூறுவது "இதோபாருங்கள் என்னிடம் நீங்கள் கருத்துக்கூறப்போகிறீர்களோ, இல்லையோ நான் எனது செய்தியை எழுதவுள்ளேன். அப்போது நீங்கள் என்னோடு ஒத்துழைக்கவில்லை என்று அச்செய்தியில் நியாயமாக குறிப்பிடுவேன் அல்லது நீங்கள் கூறும் கருத்தையும் உள்ளடக்கிய நியாயமான செய்தியை என்னால் எழுதமுடியும். நீங்கள் இதில் எதை விரும்புகிறீர்கள்?" அச்சமயம் அவர்கள் இரண்டாவது அணுகுமுறையையே ஏற்றுக்கொள்வார்கள்.

**மாற்றுவழி:** ஒருவர் பேச முன்வராவிட்டால் அவரோடு பணியாற்றும் ஏனையோரிடம் சென்று பேசிப் பார்க்கமுடியும் . இதன்மூலம் மேலும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் பணியையும் இலகுபடுத்தலாம் .

**சுற்றிவளைப்பு:** ''பின்னணி" பற்றி பேட்டிக்குரியவர் பேசுவதை வலியுறுத்தும் பட்சத்தில் அவை பற்றி குறிப்பெடுக்கவும். பேட்டியின் முடிவில் அவர் குறிப்பிட்டவற்றில் ஒரு பாதிப்பில்லாத விடயத்தை எடுத்து, இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள் ? இதை ஏன் நீங்கள் அறிக்கையிடத்தரக்கூடாது ? எனக் கேட்க முடியும். எனவே அதனை அறிக்கையிட அவர்கள் சம்மதித்தால், மற்றொரு நல்லவிடயத்தை எடுத்துக்கூறி ஆம் நீங்கள் முன்னையதை அறிக்கையிடச் சம்மதித்தால், இதனையும் ஏன் அனுமதிக்க முடியாது ? எனக் கேட்கமுடியும். இவ்வாறு அனைத்துவிடயங்களையும் நான் குறிப்பெடுத்துக்கொண்டேன் .பேட்டிக்குரியவர் தன்னை அநாமதேயமாக வைத்துக்கொள்ள விரும்பினால் அதற்கும் நாம் மதிப்பளிக்கவேண்டும்.

**அநாமதேயம்:** "பின்னணி" பற்றிய தகவல்களை விட்டுக்கொடுப்பின்றிப் பெற முயற்சிக்க வேண்டும். பேட்டிக்குரியவரிடம் பல தடவைகள் செல்ல நேரிட்டாலும், அவர்கள் கூறுபவை அறிக்கையில் இடம்பெறுவதை வலியுறுத்தவும். (குறிப்பிடப்பட விரும்பாத தகவல்கள் பயனற்றவை. எத்தருணத்திலும் அவற்றைப் பயன்படுத்த முடியாதமையால் அவற்றைத் தவிர்த்துவிட வேண்டும்).

**தெளிவு:** சில தகவல்களின் ஒரு பதிலை மட்டுமே சிலர் தருவார்கள். ஏனையவற்றை மறைத்துவிடுவார்கள். நீங்களும் ஒரு தகவலை சில சமயங்களில் முழுமையில்லாது, அதன் ஒரு பகுதியை மட்டுமே பெறமுடியும். அச்சமயம் பேட்டி தருபவரிடம் 'நீங்கள் ஏற்கனவே இதுபற்றிக் கூறிவிட்டீர்கள் (அல்லது எனக்கு இதுபற்றிதெரியும் எனக்கூறலாம்.) எனவே நீங்கள் கூறியதன் மிகுதியையும் கூறுங்கள். நீங்கள் நான் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது என்று கருதுகிறீர்கள் எனக்கூறி, உங்கள் குறிப்பில் இருக்கின்ற ஒரு விடயத்தைக்காட்டி இதுபற்றி என்ன கூறுகிறீர்கள் ? எனக் கேட்கலாம்.

**தெரிந்து கொண்டதைப் போல நடக்கவும்:** குறித்த செயலைச் செய்தவரிடம், அதனை ஏன் செய்ததாக கேட்காமல், ஏன் அவரை வேலை நீக்கஞ் செய்தீர்கள் எனக் கேட்கலாம். உறுதிப்படுத்தாவிட்டாலும் அச்சம்பவம் பற்றி உங்களுக்கு தெரியும் என்பதை அக்கேள்வி வெளிப்படுத்தும். அப்போது அதுவிடயத்தை மறுப்பதைவிட அதுபற்றி அவர்கள் விளக்கமளிக்க முன்வருவார்கள்.

**சுதந்திரச்சிலை விளையாட்டு:** நீங்கள் கூறுவது உங்களது பெயரோடு வெளிப்பட்டால் அதனை மக்கள் பெரிதும் நம்புவார்கள் என்பதை வலியுறுத்தவும். இதுவோர் அமெரிக்க வழிமுறை. உறுதியான ஒரு பொது விவாதமாகும்.

**உதவியற்ற செய்தியாளர்:** பேட்டி தருபவரின் உதவியைக் கோருவதில் பாதிப்பில்லை. 'நீங்கள் விளக்கமளிக்காவிட்டால் வேறுயார் இதுபற்றி எனக்கு கூறப்போகிறார்கள் ? எனக் கூறலாம்.

**மீள முயற்சிக்கவும்:** உங்களை சந்திக்க மறுத்தால் ஓரிரு தினங்களின் பின்னர் மீளவும் முயற்சிக்கவும். அவர்கள் தமது மனதை மாற்றிக்கொள்ள முடியும்.

## அனைத்து விடயங்களையும் சேகரித்தல்

**நிகழ்வுகளின் பட்டியல்:** தகவலைத் தருபவரிடமிருந்து செய்தியை ஒழுங்காக நிகழ்வுகளின் வரிசைப்படுத்தப்பட்டதாக சேகரிக்கவும். இதன்மூலம் கூறப்படும் கதையை நீங்கள் நன்கு அறியமுடியும். அத்துடன் நேர அட்டவணையிலும், தத்துவார்த்த ரீதியாகவும் இடைவெளிகளை நீங்கள் கண்டுகொள்ளலாம்.

**ஏன் - எப்படி:** முக்கியமான தகவலை ஒருவர் தெரிவித்தால் "உங்களுக்கு எப்படி அதனைத்தெரியும்? என்ற பிரதான கேள்வியை எழுப்பவும். இக்கேள்வி நம்பகத்தன்மை பற்றிய தெளிவை ஏற்படுத்துகிறது . அத்துடன் மேலும் விடயங்களுக்கு இடமளிக்கின்றது. என்ன செய்கிறீர்கள் என்று வெறுமனே கேட்பதற்குப் பதிலாக ஏன் செய்கிறீர்கள்? என்ன செய்கிறீர்கள்? எனக்கேட்கலாம்.

**மெதுவாகச் செல்லல்:** ஒரு கதையின் முக்கியமான கட்டத்தை அணுகும்போது, மெதுவாகச் செல்லவும். அப்போது அக்கதையை வண்ண மயமானதாக்க முடியும். எங்கே நின்றார்கள்? என்ன செய்துகொண்டிருந்தார்கள்? எதை அணிந்து கொண்டிருந்தார்கள்? வெப்பநிலை என்ன? அவர்களைச் சூழவர நிலவிய ஓசையாது? எனக்கேட்கவும். அதன்பின்னர் நிகழ்காலத்தில் கேள்விகளைக் கேட்கவும். இப்போ என்ன செய்கிறீர்கள்? உங்கள் நண்பர் கூறுவது என்ன ? இதன் பின்னர் நிகழ்வின் காட்சிக்குள் பேட்டி தருபவரும், நீங்களும் மீளப்பிரவேசித்து ஒன்றாக அவ்விடயத்தை நோக்கி நகரமுடியும். இது முடியாது போனால் அவர்களிடம் சொல்லவும். இது பயனளிக்கவில்லை. 'நான் முயற்சிக்கிறேன். ஆனால் அதுபற்றி மனதில் நிறுத்தமுடியாதுள்ளது. அது எப்படி இருக்குமென்று உணர்கிறீர்கள்? " என்று கூறியே கதையை சேகரிக்கவும், இதைவிடுத்து நேரடியாகவே தகவல்களை பெற்றுவிட முடியாது.

**தொலைபேசி:** தொலைபேசி மூலமாக உரையாடும்போது, எம்மோடு உரையாடுபவரிடம் அவரின் வீட்டின் உட்புறச்சூழலை விபரிக்கக்கோரவும்.

(ஒருவரது வீட்டுச்சுவரில் காணப்பட்ட அலங்காரப் பொருள் ஒன்று பற்றிக்கேட்டபோது அதுபற்றிய விபரம் எனது தகவலில் ஒரு முக்கிய தகவலாகவும் அமைந்திருந்தது.) உரையாடுபவரிடம் அவரது கதையை முப்பரிமாணமாக சுவைபட மெதுவாகச் சொல்ல வைக்கவும்.

**செவிமடுத்தல்:** நாம் பேட்டியொன்றின்போது நிறையவே பேசுகின்றோம். ஆனால் அவ்வாறில்லாமல் நிறையவே செவிப்புலன் மூலமாக கேட்க முயற்சிக்க வேண்டும். எமக்கு பேட்டி தருபவரை நாம் நிறையவே பேச அனுமதிக்கவேண்டும். நாம் பேசுவதைக்குறைத்துக் கொள்ளவேண்டும் . திறந்த மனத்தோடு எவ்வித பாரபட்சமும் இன்றி சொல்வதைச் செவிமடுக்கவும்.

**சம்மதத்தைப்பெறல் :** பேட்டிக்குரியவரிடம் அவரை ஆதரிப்போரின் பெயர்களைக் கேட்கவும். அதன் பின்னர் விமர்சிப்போரின் பெயர்களைக் கேட்கவும். அத்துடன் விமர்சிப்போர் சொல்லப்போவது பற்றியும் கேட்கவும். இதன்மூலம் சற்று கடினமான - இறுக்கமான போக்கை தளர்த்தி முக்கியமான தகவல்களை பெறமுடியும். அதன்பின்னர் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை வேலைத்தளத்தில் அல்லது பாடசாலையில் எடுக்கப்பட்டதா என்பதையும், அவ்வேலையிலிருந்து நீக்கப்பட்டாரா? என்ற கேள்விகளோடு குற்றமொன்றுக்காக தண்டிக்கப்பட்டாரா, மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக கைதானாரா? நீதிமன்றில் நிறுத்தப்பட்டாரா? போன்றவற்றைக் கேட்கவும். இவை பற்றிய தகவல்கள் அறிக்கையொன்றில் ஏற்கனவே இருக்கும் பட்சத்தில் இவை பற்றி பொய் கூற முன்வரமாட்டார்கள்.

**பொய்பேசுவோர் :** ஒருவர் பொய்பேசுகிறார் என்றறிந்தால் அவரைக்குறுக்கிடாமல் நன்கு பேசவிடவும் . வேறு அதிகமான தகவல்களை அவரிடம் கேட்பதைவிட, குறுக்கீடு எதனையும் செய்யவேண்டாம். பொய்கூறுவோர் விரிவாக தகவல்களை தருவதுண்டு. இத்தகைய நிலை தமது நம்பகத்தன்மைக்கு ஏதுவாக இருக்குமென அவர்கள் நினைப்பதுண்டு . அவர்கள் கூறுவதை செவிமடுத்துக் குறிப்பெடுக்கவும் . அப்பொய்கள் யாவும் முழுமையாகக் கூறப்பட்ட பின்னர் அவற்றை மீளாய்வு செய்து சரியான தகவல்களையே ஊகித்தறியும் விதத்தில் நடந்துகொள்ளவும். இதுவிடயத்தில் பொறுமை இழக்கலாகாது.

**வாழ்க்கைப்பின்னணி:** பேட்டி காண்பவரின் வாழ்க்கைப் பின்னணியை அது அவசியமற்றதாயினும் தெரிந்துகொள்ள முற்படவும். ஒரு வழக்குப்பற்றி சட்டத்தரணி ஒருவரையோ அல்லது அரசாங்க கொள்கைபற்றி ஓரு அரச அதிகாரியை சந்திக்கும்போது, அவர்களது வாழ்க்கைப் பின்னணி பற்றியும் நேரமிருந்தால் நான் அறியமுற்படுவதுண்டு. இதன்மூலம் பயனுள்ள தகவல்களைப் பெறுவதோடு அதன்மூலமாக நல்ல கேள்விகளையும் கேட்கமுடியும் .

**சேராதிருத்தல்:** தயவாக நடந்துகொள்ளவும். ஆயினும் நீங்கள் பேட்டி காண்பவரின் பக்கம் சாராதிருக்கவேண்டும். சர்ச்சைக்குரிய காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் உங்களுடன் பேட்டியின்பொது நன்கு ஒத்துழைப்பதுபோல தோன்றலாம். ஆனால் அவர் கூறுவதை உள்வாங்கி ஏமாறலாகாது. "நான் அந்நபர்களிடமிருந்து பணம் பெறவேண்டுமென்று எண்ணவில்லை" என்று அவர் உங்களிடம் கூறலாம். ஆனால் நீங்கள் அவரிடம் பதில் கூறும்போது "அது உண்மையாக இருக்கலாம். நான் கேட்பதென்னவெனில் பணம் பெறுவது பற்றிய எண்ணமில்லை என்று நீங்கள் கூறுவது பற்றியல்ல. நீங்கள் அந்நபரிடம் பணம் பெற்றீர்களா? என்று மட்டுமே கேட்கிறேன்" எனக் குறிப்பிடலாம்.

**மீளக்கேட்கவும்:** சில சமயங்களில் ஒரே விடயத்தை இரண்டு அல்லது மூன்று தடவைகளுக்கு மேல் ஒரு நபரிடம் கேட்பதன் மூலம் பயனடைய முடியும். அரச அதிகாரி ஒருவர் வரிசெலுத்துவோரின் செலவில் பயணங்களை மேற்கொண்டது பற்றி நான்கு வித்தியாசமான முரண்பட்ட விளக்கங்களைத் தந்திருந்தார்.

**மீளாய்வு:** பேட்டிகண்டவர்களை உங்கள் குறிப்புப் புத்தகத்தோடு மீள அணுகவும். குறையாக இருக்கும் விடயங்களை அவர்கள் நிரப்ப முன்வரலாம். இதனால் உங்களுக்கு மேலதிக தகவல்கள் கிடைக்கமுடியும்.

**புதிதாக கேட்கவும்:** ஒரு கடுமையான கேள்வி மனதில் தோன்றுமானால், அது மிகத்தனிப்பட்டதாக இருந்தாலும் கூட அதனைக் கேட்டுவிடவும். சங்கடமான கேள்விகள் அல்லது சங்கடமான பதில்கள் என்று எதுவுமில்லை. உங்களுடைய கூர்மையான கேள்விகள் அனைத்து கோணங்களிலும் அமைந்திருக்கவேண்டும். கேள்விகளுக்கான வடிகாலமைத்து கேள்விகள் மூலமாக பேட்டிக்குரியவரை நீங்கள் வழிநடத்தவேண்டும் . ஒரு கூடை நிரம்ப தகவல்களைக் கொண்டிருப்பவரைப்போல உங்களது பேட்டிக்குரியவரைக் கருதி அக்கூடையை வெறுமையாக்குவதுபோல தகவல்களை முழுமையாக எடுக்கவும்.

**நேர்மை:** வேறொருவரைப்போல பாசாங்கு செய்யவோ அல்லது பொய்கூறவோ வேண்டாம் . எவ்வளவுக்கு எவ்வளவு நீங்கள் அணுகும் கதை பற்றிய விபரங்களை தெரிவிக்கிறீர்களோ அவ்வளவு தூரம் உங்களது பேட்டிக்குரியவர் உங்களுக்கு உதவுபவராகவும், தன்னை இலகுபடுத்தியவராகவும் காணப்படுவார்.

**டாக்டராக இருக்கவும்:** ஒரு முக்கியமான பேட்டி என்பது நீண்ட உரையாடலாக இருக்கலாம் ஆனால் அவ்வுரையாடல் உங்களுக்குத் தேவையான தகவலை எடுப்பதாகவே அமையமுடியும். பேட்டி காண்பவரை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதேசமயம் கனிவாகவும் இருக்கவேண்டும். அதாவது ஒரு டாக்டரைப்போல .

**அசையாதிருக்க வேண்டாம்:** உங்களுடைய செய்தி என்னவென்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் அதில் இறுக்கமாக இருக்கவேண்டாம். ஒரு நல்ல பேட்டி உங்கள் செய்தியில் மாற்றங்களையும் கொண்டுவரலாம்.

**ஆளுமை :** உங்களிடம் நல்ல ஆளுமை இருந்தால் அதனை பிரகாசிக்கவிடுங்கள். ஒரு வெறும்சுவராக இருத்தலாகாது.

**ஆரம்பித்து:** நிறைவுறும் கேள்வி : பேட்டியொன்றின் இறுதியில் பேட்டி காண்பவரிடம், வேறு எந்தவிடயங்களில் எமது வாசகர்கள் ஆர்வமாக இருப்பார்கள் எனக்கேட்கவும். சில சமயங்களில் ஒன்றுக்குமேற்பட்ட பத்திரிகைகளை வாசகர்கள் வைத்திருப்பதோடு நல்ல தகவல்களும் அவற்றில் இருக்கமுடியும்.

**பரிசீலிக்கவும்:** செய்தி வெளியானதும் அதனை தந்தவரிடம் அதுபற்றிக் கேட்கவும். மேலதிக தகவல்களையும் துப்புக்களையும்கூட பெறமுடியும்.

## பிற்சேர்க்கை 9

# சர்வதேச செய்திப் பாதுகாப்பு நிறுவனத்தின் (INSI) ஊடகவியலாளருக்கான பாதுகாப்பு விதிமுறைகள்

### சர்வதேச செய்திப்பாதுகாப்பு நிறுவனம் (INSI)

ஊடகவியலாளர்கள் மீதான துன்புறுத்தல்கள், அவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அவர்களது உயிருக்கும், உடலுக்கும் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் போன்றவற்றை விலக்கிப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமைக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாக இது விளங்குகின்றது. ஊடகவியலாளர்களுக்கு ஏற்படக்கூடிய சில அபாயகரமான சூழ்நிலைகளை அறிந்து கொண்ட நிலையில், அவர்கள் முழுமையாக பாதுகாப்புடன் இருக்க முடியாதென்ற நிலையில், அவர்களின் பாதுகாப்பை அநாவசியமான அச்சுறுத்தல்கள் இன்றி உறுதிப்படுத்துவதில் ஐ. என். எஸ். ஐ நிறுவனம் பாடுபடுவதாக அமைந்திருக்கின்றது. சமாதான மற்றும் போர்ச்சூழல்களில் இதனை அந்நிறுவனம் மேற்கொள்கின்றது. தனது உறுப்பினர்களது அனுபவங்கள் மற்றும் ஏனைய ஆதரவளிக்கும் நிறுவனங்களின் துணையுடன் ஐ. என். எஸ். ஐ நிறுவன விதிமுறைகளைப் பேணுகின்ற தொழில்சார் ஊடகவியலாளர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக ஏற்படக்கூடிய தடைகளை நீக்கி சுதந்திரமாகவும், இடையூறுகளின்றியும் செய்திகளைச் சேகரிப்பதையும், வெளியிடுவதையும் ஐ. என். எஸ். ஐ நிறுவனம் உறுதிசெய்கின்றது.

### ஐ. என். எஸ். ஐ. பாதுகாப்பு விதிகள்

1. உயிரையும், பாதுகாப்பையும் பேணுவது அதிமுக்கியத்துவமானதாகும். நிறுவன ரீதியான ஊடவியலாளர்களும், தனிப்பட்ட பத்திரிகையாளர்களும் தேவையற்ற அபாயகரமான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்து செய்திகளைச் சேகரிப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதென்பதையும் அத்தகைய முயற்சிகளை மிகவும் ஊக்கப்படுத்தலும, அபாயகரமான சூழ்நிலைகளில் ஊடகவியலாளர்களது பாதுகாப்பே போட்டித்தன்மையான செய்திச் சேகரிப்பைவிட முக்கியமானதென்பதை ஊடக நிறுவனங்கள் கவனத்தில் கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

2. யுத்தப்பிரதேசங்கள் மற்றும் அபாயகரமான ஏனைய இடங்களுக்கு செய்திசேகரிக்கச் செல்வதென்பது ஒருவர் தாமாகவே முன்வந்ததாக இருக்கவேண்டும். அத்துடன் அனுபவமிக்க செய்தியாளர்களால் அப்பணிகள் செய்யப்படவேண்டும். அல்லது அவர்களது வழிகாட்டல்களுடன் அப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அபாயகரமான சூழ்நிலைகளில் பணியாற்ற

மறுத்தமைக்காக தொழில் ரீதியான பாதிப்பு ஏற்படலாகாது. காரியாலயத்தில் இருக்கும் பத்திரிகையாசிரியர் அல்லது களத்திலுள்ள செய்தியாளர் ஆகியோர் ஒருவரோடொருவர் கலந்தாலோசித்த பின்னர் அபாயகரமான சூழலில் செய்திச் சேகரிப்பைத் தவிர்த்துக்கொள்ளவும் முடியும்.

3 . சகல ஊடகவியலாளர்களும் அபாயகரமான சூழலில் முகங்கொடுக்கவேண்டிய நிலவரங்களைக் கையாளுவது குறித்து உரிய பயிற்சிகளைப் பெறுவதோடு, நல்ல விழிப்புணர்வையும் கொண்டிருத்தல் அவசியமானதாகும். இதனை தொழில் கொள்வோரும் கட்டாயப்படுத்தவேண்டியது அவசியமானதாகின்றது.

4. ஊடகவியலாளர்களை வேலைக்கமர்த்துவோர் அவர்கள் பணியாற்ற வேண்டிய பகுதிகளின் அரசியல், சமூக, பௌதீகவியல் சூழ்நிலைகளை சரிவர அறிந்திருக்கவேண்டும். அத்துடன் ஜெனிவா பிரகடனத்துக்கமைவாக சர்வதேச ரீதியாக ஆயுதமோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் உள்ள நடைமுறைகள் குறித்தும் ஏனைய மனித உரிமைகள், சட்ட ஆவணங்கள் பற்றியும் அறிந்திருக்கவேண்டியது அவசியமானதாகின்றது.

5. அபாயகரமான இடங்களுக்கு ஊடகவியலாளர்களை பணியாற்ற அனுமதிக்கும்போது, அவர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள், மருத்துவ மற்றும் அவர்களது தேகாரோக்கியம் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

6. அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் அபாயகரமான பகுதிகளில் அவர்கள் பணியாற்றும்போது அவர்களது பாதுகாப்பை, குறிப்பாக காயமடைதல் மரணமடைதல் என்பவற்றைக் கருத்திற்கொண்டு அவர்களை காப்புறுதி செய்தல் அவசியமானதாகும். இது விடயத்தில் நிரந்தர அலுவலக செய்தியாளர்கள், மற்றும் சுயமாக இயங்கும் ஊடகவியலாளர்கள் எனப்பாகுபாடுகாட்டலாகாது.

7. மன உளைச்சலைத் தரக்கூடிய சம்பவங்களைப் பற்றி செய்தி சேகரிக்கும் ஊடகவியலாளர்கள் சுயமாக தமது மனநிலை பற்றி அந்தரங்க வைத்திய ஆலோசனைகளைப் பெறுவதற்கு அவர்களை பணியிலமர்த்துவோர் அனுமதிக்கவேண்டும். ஊடகவியலாளர்களை நிர்வகிப்போர், மன உளைச்சல்கள் ஏற்படும் சூழ்நிலைகளை கண்டறியும் விதத்தில் பயிற்சியளிக்கப்படவேண்டும். அத்துடன் அபாயகரமான சூழநிலைகளில் பணிபுரியும் ஊடகவியலாளரது குடும்பத்தவர்களுக்கு அவர்களது மனப்பயங்களை நீக்கி காலமறிந்த பாதுகாப்பைப் பற்றிய ஆலோசனைகளை அவர்களது பாசத்துக்குரியவர்கள் பற்றி வழங்கவேண்டும்.

8. ஊடகவியலாளர்கள் நடுநிலையானவர்கள். எனவே அவர்கள் ஆபத்தான ஆயுதங்களை அவர்கள் தாம் பணியாற்றச்செல்லும் இடங்களுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கலாகாது.

9. அரசாங்கமும் பாதுகாப்புப் படையினரும் தத்தமது நடவடிக்கைகளுக்குரிய பகுதிகளில் ஊடகவியலாளர்கள் பணியாற்றும்போது அவர்களது பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படவேண்டும். அத்துடன் அநாவசியமானமுறையில் சுயமாக செயலாற்றிச் செய்தி சேகரிப்பதை தடுக்க அனுமதிக்கலாகாது. அத்துடன் செய்திகளை சேகரித்து அவற்றை அனுப்பிவைப்பதனையும் தடுக்கலாகாது.

10. சட்டபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள செய்தியாளர்களை பாதுகாப்புப்படையினர் துன்புறுத்தவோ, அச்சுறுத்தவோ அல்லது உடல்ரீதியாக அவர்களை தாக்கவோ கூடாது.

ஐ. என். எஸ். ஐ விதிமுறைகள், பல்வேறு ஊடகநிறுவனங்களின் விதிமுறைகளை கருத்தில்கொண்டதாகவே தயார் செய்யப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வோடு செயலாற்றுதல்**

- எப்போதும் எச்சரிக்கையோடிருத்தல்.
- அயல்புறத்தோடு உங்களை நெருக்கமடையவைத்தல்.
- சந்தேகத்துக்கிடமான நபர்கள், வாகனங்கள் போன்றவற்றை குறிப்பெடுத்துக்கொள்ளவும்.
- மேற்குறித்தவை பற்றி அந்தரங்கமாகப் புகைப்படங்களை எடுத்துக் கொள்ளவும்.
- சந்தேகத்துக்கிடமானவர்கள் , வாகனங்கள் பற்றி சகாக்கள், நண்பர்கள், குடும்பத்தினருக்கு அறியத்தரவும்.
- பொலிஸில் முறைப்பாடு செய்யவும்.
- சோதனைச்சாவடிகள், போக்குவரத்து விளக்கு நிலைகள், பரபரப்பான போக்குவரத்து சூழல், பாலங்கள் குறுகலான வீதிகளிலும் கண்காணிக்கப்படுவதை அறியமுடியும்.
- வாகனங்களைச் செலுத்திச்செல்லும்போது கூட மோட்டார்கார்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவை உங்களைப் பின்தொடர்வதைப்பற்றி கவனத்தில் கொள்ளவும்
- மோட்டார்காரின் ஜன்னல் கண்ணாடிகளை மேலே உயர்த்தி கதவுகளை இறுக்கமாக பூட்டிக்கொள்ளவும்.
- உங்களது மோட்டார் காரை சிறந்த நிலையில் ஓட்டக்கூடியதாக வைத்துக்கொள்ளவும். விசாலமான வீதிகளில் காரை ஓட்டும்போது முடியுமானவரை அவ்வீதிகளின் நடுப்பகுதி ஊடாக காரைச் செலுத்தவும்.
- இருளான வீதிகள், வெறிச்சோடிய பாதைகள், குறுகலான வீதியோர நடைபாதைகள் என்பவற்றின் ஊடாக நடந்து செல்வதைத் தடுக்கவும்.
- உங்களை எவராவது பின்தொடர்வதாக நீங்கள் உணர்ந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தை நோக்கி நீங்கள் செல்லவேண்டும்.
- வாடகைக்கமர்த்திய வாகனமொன்றில் செல்லும்போது, உங்களைப் பின்தொடரும் வாகனங்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும். அச்சமயம் உங்ளது சாரதியிடம் ஹோர்ன் சத்தத்தை பெரிதாக அழுத்துமாறுகோரி அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்குச் செல்லுமாறு கூறவும்.

**மரண அச்சுறுத்தல்களை கையாள்வது**

- உங்களுக்குக் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களின் சரியான வார்த்தைகளை தெளிவாக குறிப்பெடுக்கவும். இதன்மூலம் பொலிஸாருக்கு நீங்கள் நேர்த்தியான அறிக்கையொன்றை வழங்கமுடியும்.
- அச்சுறுத்தல்களை சாமான்யமாக எடுக்கலாகாது. அவைபற்றி உங்களது மேலதிகாரிகள், சகாக்கள் குடும்பத்தினரிடம் உடனடியாக அறிவிக்கவேண்டும்.
- அச்சுறுத்தல்கள் பற்றி பரவலாக அறியத்தரவும். ஊடகநிறுவனங்கள், ஊடக அமைப்புகள் என்பனவற்றிடம் அச்சுறுத்தல்பற்றி அறியத்தருவதோடு செய்தி நிறுவனங்களிடம் அவைபற்றி பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்ளவும்.

- குறுந்தகவல்கள் மூலமாக விடுக்கப்படும் அச்சுறுத்தல்களை உங்களது கையடக்கத் தொலைபேசியில் பதிவுசெய்து வைத்துக்கொள்ளவும். இதன்மூலம் முறைப்பாடுகள் செய்யும்போது உரிய ஆவணப்பதிவை நீங்கள் வைத்திருக்க முடியும்.
- அச்சுறுத்தல் அதிகரித்தால், தற்காலிகமாக வேறொரு இடத்துக்கு மாறுவது பற்றி கவனத்தில் கொள்ளவும்.
- மிகவும் அவசியப்பட்டால் மட்டுமே பொலிஸ் பாதுகாப்பை கோரவும். அத்துடன் உங்கள் பகுதியில் உள்ள பொலிஸார் நம்பகத்தகுந்தவர்களாக இருந்தால் மட்டுமே இதனைக்கோரவும்.

### உங்கள் குடும்பத்தினரைப்பாதுகாப்பாக வைத்திருத்தல்

- குடும்ப அங்கத்தவர்களிடமும், வீட்டிலுள்ள ஏனையோரிடமும் தொலைபேசியூடாகவோ, வேறு விதத்திலோ தகவல்கள் எதனையும் கொடுக்கவேண்டாமெனக் கூறவும்.
- துப்பாக்கிப்பிரயோகம் மற்றும் வேறு தாக்குதல்களிலிருந்து தப்பித்துக்கொள்ளும் பயிற்சிகளை வீட்டிலிருப்போருடன் அடிக்கடி மேற்கொள்ளவும்.
- சந்தேகத்திற்கிடமான நபர்கள், வாகனங்கள் பற்றி குறிப்பெடுத்துக் கொள்ளுமாறு குடும்ப உறுப்பினர்களிடம் தெரிவிக்கவும். வீட்டுக்கதவுகள் சரியானமுறையில் பூட்டப்படுவதையும், அவை காத்திரமான பூட்டுக்களை கொண்டுள்ளதையும் உறுதிப்படுத்தவும்.
- தாக்குதல் ஏதும் நடக்கும்பட்சத்தில் பாதுகாப்பாக இருக்கக்கூடியவாறு ஓர் அறையை வீட்டில் ஒதுக்கிக்கொள்ளவும். பலமான கதவு, தொலைபேசித்தொடர்பு, தண்ணீர், உணவு, டோர்ச்லைட் முதலுதவி பெட்டி ஆகியவற்றோடு தப்பிச்செல்லக்கூடிய ஒரு வழியையும் அவ்அறை கொண்டிருக்கவேண்டும்.
- உங்களது வீட்டு திறப்புகளை வெளியே செல்ல நேர்ந்தால் நம்பிக்கைக்குரிய அயல்வீட்டுக்காரரிடம் அதைக்கொடுக்கவும். வாசல் கதவு விரிப்பின் கீழோ அல்லது மலர்ச்சாடியின் கீழேயோ வைக்கலாகாது.
- முடியுமானால் காவலுக்கு ஒரு நாயை வைத்திருக்கவும்.
- நீங்கள் கண்காணிக்கப்படுவதை நோட்டமிடும் விதத்தில் அயலவர்களுக்கு அறியத்தரவும்.

### யுத்தம் மற்றும் மோதல் பகுதிகளில் பணியாற்றல்

- அச்சுறுத்தப்படும் போது விரைவாகவே வெளியேறவும்.
- யுத்தப்பிரதேசத்தை குறுக்கிடவேண்டாம். அது ஆபத்தனதாக அமைய முடியும்.
- ஒரு மோதலின் போது இருபக்கங்களிலுமிருந்து செய்தி சேகரிப்பதில் அவதானம் தேவை. ஆபத்தானதாகவும் அது அமையலாம்.
- பாரபட்சமின்றி பக்கம்சாராதிருக்கவேண்டும்.
- இராணுவ மையங்கள் பற்றிய வரைபடங்களை உங்கள் குறிப்புப்புத்தகத்தில் வரையலாகாது. அத்துடன் தேவையற்ற விதத்தில் இராணுவ ஆயுதங்கள் குறித்து கவனத்தைச்செலுத்தலாகாது.
- பகிரங்கமாக குறிப்பெடுப்பதையோ அல்லது ஒலிப்பதிவுக்கருவியை மற்றும் குறிப்புப்புத்தகத்தையோ அனுமதியின்றி உபயோகிக்கலாகாது.

### உங்களை நோக்கி சுடப்பட்டால்

- பாதுகாப்பாக மறைந்துகொள்ளவும். எதனையும் பிரகாசமாக அணியலாகாது.
- பிரகாசிக்கின்ற உங்கள் கருவிகள் பெரிதாக பிரதிபலிக்காதவாறு அசுத்த

மடைந்தவையாகவும்,சேறுபட்டவையாகவும் இருக்கட்டும்.

- அருகிலிருந்து சுடுபவர் ஒருவரின் அருகே நின்று மறைந்து கொள்ள வேண்டாம்.
- தரையில் ஒரு துவாரம் அல்லது பள்ளம் மறைவாக இருப்பதற்கு ஏதுவானதாக இருக்க முடியும்.
- கட்டிடமொன்றினுள், ஹோட்டல் குளியலறைபோல் இருக்கும் அறையொன்றை மறைந்து கொள்வதற்கு ஏதுவாக தெரிவு செய்யவும்.
- மறைவிடத்திலிருந்து எட்டிப்பார்க்கலாகாது.
- சுவர் ஒன்றின் பின்னால் மறைந்திருந்தால் கூட தரையில் படுத்துக்கொள்ளவும்.
- மறைந்திருக்கும்போது அச்சூழலை உடனடியாகவே நோட்டமிட்டு தப்பி ஒடுவதற்கான மார்க்கத்தை திட்டமிடவும்.
- தப்பிச்செல்லும்போது தாவரங்கள், புதர்கள், கடடிடங்கள் ஊடாக மறைந்து சென்று சுடப்படும் திசைக்கு பிடிகொடாது தப்பிச்செல்லவும்.
- நீங்கள் வைத்துள்ள கருவிகள் நீங்கள் தப்பிச்செல்ல தடையாக இருந்தால் அவற்றை கைவிட்டுச்செல்லவும்.

**ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சிவில் குழப்பங்களின்போது பணியாற்றல்**

- முன்கூட்டியே திட்டமிடவும்.
- உங்களது அணியிலிருப்போரிடமிருந்து (படப்பிடிப்பாளர்,தயாரிப்பாளர்) பிரிந்து செல்ல நேரிட்டால் மீளவும் சந்தித்துக்கொள்ள முன்னரேயே ஓர் இடத்தை தெரிவுசெய்யவும்.
- ஊடக அடையாள அட்டையை எப்போதும் வைத்திருக்கவும். ஆயினும் தேவையற்ற விதத்தில் அதனை காண்பிக்கலாகாது.
- கைத்தொலைபேசியில் இலக்கமொன்றை அவசரமாக அழைக்கும்விதத்தில் பதிவுசெய்துகொள்ளவேண்டும்.
- கண்ணீர் புகைப்பிரயோகம் நடத்தப்படும் பட்சத்தில் புகைமூட்டம் கண்ணில்படாதவாறு பாதுகாத்துக்கொள்ளவும்.
- கண்களை பாதுகாக்கும்விதத்தில் நீச்சல்தடாக கண்ணாடிகளையோ,அல்லது கைத்தொழில் மையங்களில் அணியும் கண்ணாடிகளையோ பாவிக்கவும்.
- முதலுதவிப்பெட்டிகளை கொண்டுசெல்வதோடு அவற்றில் இருப்பவற்றையும் பாவிக்கத்தெரிந்துகொள்ளவேண்டும்.
- பெட்ரோல் குண்டுகள் வீசப்படும் அபாயம் எப்போதும் உண்டு. இதனால் இலகுவில் தீப்பிடிக்காத ஆடைகளை அணியவும்.
- முதுகுப்புறத்தில் ஒருநாள்வரை தாக்குப்பிடிக்கக்கூடியவாறு உணவு, நீர் ஆகியவை அடங்கிய பையொன்றை சுமந்து செல்லவும். பணியாற்றும் இடத்தில் நிலைமை மோசமானால் உங்களைச் சமாளித்துக்கொள்ள இது உதவியாக இருக்கும்.
- நீங்கள் ஒரு செய்தியாளராக இருப்பின் சனக்கூட்டம் மத்தியில் நிற்க நேரிட்டால் குறித்த சம்பவம் பற்றி அறிந்த பின்னரும் அவ்விடத்தில் நிற்கவேண்டியதில்லை.
- நீங்கள் படப்பிடிப்பாளராக அல்லது காணொளிப்பதிவாளராக இருந்தால் உயரமான ஓர் இடத்தில் நின்று அனைத்தையும் பதிவு செய்யவும்.
- உங்கள் அணியினரோடு சேர்ந்து பணியாற்றவும். நிலைமை மோசமானால் தப்பிச்செல்லும் வழியையும் மனதளவில் திட்டமிடவும்.
- செய்தி சேகரிப்பு நிறைவுற்றதும் அதில் ஏற்பட்ட அனுபவங்களை பகிந்து கொள்ள மாநாடொன்றை கூட்டவும்.
- இயற்கை அனர்த்தங்கள் பற்றி செய்தி சேகரிப்பது.
- நிலைமைகளை மதிப்பிடவும்.
- நீங்கள் செய்தி சேகரிக்க செல்லவுள்ள அனர்த்தம் (சுனாமி, பூகம்பம்

இரசாயண கசிவு) பற்றி முடியுமானவரை நன்கறிந்துகொள்ளவும்.

- தகுந்த பாதுகாப்பு ஆடை அணிகலன்களை அணிந்துகொள்ளவும்.
- போத்தலிலடைக்கப்பட்ட நீரைக்கொண்டுசெல்லவும்.
- அதிகாரிகள்,நிபுணர்களது வழிகாட்டல்களை அனுசரித்துக்கொள்ளவும்.
- பொலிஸார் வகுத்துள்ள எல்லைக்கோடுகளை தாண்டலாகாது.
- மீட்புப்பணியாளர்கள், உயிர்காக்கும் பணியாளர்களது கடமைகளில் குறுக்கிடலாகாது.
- கொள்கலன்கள், குவளைகள் போன்றவற்றை நுகர்ந்து பார்க்கலாகாது. அவை அபாயகரமான இரசாயணங்களை கொண்டிருக்க முடியும்.
- பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளில் எரிவாயுக் குழாய்கள் வெடித்திருக்கலாம். எனவே அப்பகுதிகளில் புகைத்தலைத் தவிர்க்கவும்.

### சோதனைச்சாவடிகளில் நடந்து கொள்ளும்விதம்

- எப்போதும் பணிவாக இருக்கவும்.
- வாக்குவாதத்தைத்தவிர்க்கவும்.
- உங்களை ஊடகவியலாளர் என அடையாளம் காட்டவும்.
- கால்நடையாக செல்வதாயின் தேவையான ஆவணங்களை மட்டும் சோதனைச்சாவடிக்கு எடுத்துச்செல்லவும். வாகனங்களில் சென்றால் வாகன ஜன்னல்கள், கதவுகளை மூடிக்கொள்ளவும். கீழிறங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டாலே தவிர நீங்கள் வாகனத்திலிருந்து கீழிறங்கலாகாது.
- அனுமதியின்றி படமெடுக்கலாகாது.
- சோதனைச்சாவடியில் உள்ள இராணுவத்தினர் அல்லது ஆயுதபாணிகள் பரபரப்பாக அல்லது கடுகடுப்பாக இருந்தால் அவர்களுக்கு உங்களிடமுள்ள சிகரெட்டுகள் அல்லது இனிப்புகளை வழங்கவும்.
- உங்களது அடையாள அட்டையை அவர்கள் அவதானிக்கும்போது உங்கள் பையிலுள்ள உங்கள் மனைவி, பிள்ளைகளின் போட்டோக்களையும் அவர்கள் கண்களில் படுமாறு வைக்கும் போது உங்கள் மீது அவர்களுக்கு அனுதாபம் ஏற்படவும் முடியும்.
- நீங்கள் எங்கிருக்கிறீர்கள் என்பதை மக்கள் அறிந்து வைத்துள்ளார்கள் என்பதையும், நீங்கள் திரும்பி வருவீர்கள் என அவர்கள் எதிர்பார்த்துள்ளார்கள் என்பதையும் அவர்கள் அறியச் செய்யவேண்டும்.
- நீங்கள் ஓர் அச்சுறுத்தல் அல்ல என்பதையும் அறியத்தரவும்.
- பணிவாகவும் அதேசமயம் எச்சரிக்கையோடும் சிப்பாய்களோடு நடந்து கொள்ளவும். அவர்களிடம் உங்களது பெயர் பட்டியல் இருக்கமுடியாது. அத்துடன் உங்கள் கண்ணைப் பார்த்தும் அவர்கள் கதைக்க மாட்டார்கள்.

### நீங்கள் கைதாகும்போது செய்யவேண்டியது

- உங்கள் உரிமைகள் பற்றி அறிந்து கொள்ளவும் அமைதியாக நீங்கள் இருப்பதோடு தகைமை வாய்ந்த உங்களது தெரிவுக்குள்ளான ஒரு சட்டத்தரணியால் நீங்கள் வழிநடத்தப்பட்டவேண்டும்.
- சித்திரவதை மற்றும் துன்புறுத்தல்களுக்குள்ளாகாதவாறு உங்களைப்பாதுகாக்கும் உரிமை உங்களுக்கு உண்டு.
- உங்களுக்கு இந்த உரிமைகள் பற்றி அறியத்தரும் உரிமையுள்ளதென்பதை உங்களுக்கு தெரியப்படுத்துவதோடு உங்களால் குறிப்பிடப்படுபவை நீதிமன்றத்தில் உங்களுக்கெதிராகவும் பயன்படுத்தப்படமுடியுமென்பதையும் அறியத்தரவேண்டும்.
- நீங்கள் தடுத்து வைக்கப்பட்டால் மனிதாபிமானத்தோடு நடத்தப்படுவது உறுதி செய்யப்படவேண்டும். அத்துடன் அவ்வாறு நடத்தப்படுவதற்கும் உரித்துடையோராக இருக்கிறீர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### ஆட்கடத்தலுக்குள்ளானால் அல்லது பணயக்கைதியானால்

- ஆட்கடத்தலிலிருந்து மீள்வதற்கு உறுதியான மனப்பாங்கையும் சாதகமான தன்மையையும் கொண்டிருக்க வேண்டும்.
- உங்களை கடத்தியோரை ஆத்திரமடைய வைக்கலாகாது. அவர்கள் சொல்வதைச் செய்யவேண்டும்.
- மனத்தளவில் உங்களது சகா அல்லது நண்பருடன் உங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்ள கதைத்துக்கொள்ளவும்.
- வீடு திரும்பியதும் என்ன செய்வீர்கள் என்பது பற்றிய சாதகமாக நினைத்து உங்களை சாந்தப்படுத்திக்கொள்ளவும்.
- ஒரு நாளைக்குமேல் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் உங்களது நிலைமையை முன்னேற்ற உதவிகளை நாடவும்.
- உங்களது குடும்பத்தவர்கள் பற்றி உரையாடி உங்களைக் கடத்தியோர் உங்கள் மீது பரிவு கொள்ளும் விதத்தில் நடந்து கொள்ளவும். மூர்க்கத்தனமாக நீங்கள் நடத்தப்பட்டால் உளரீதியாக உங்களுக்குப் பிரியமானவருடன் அல்லது நீங்கள் வணங்கும் கடவுளுடன் பேசிக்கொள்ளுங்கள்.
- நீங்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவீர்கள் எனக்கூறப்படும் வாக்குறுதிகளை நம்பவேண்டாம்.

### செய்திக்கூடத்தைப் பாதுகாக்கச்செய்ய வேண்டியவை

- உங்கள் ஆசிரியர் அல்லது உடனடி மேலதிகாரியிடம் நீங்கள் எங்கே செல்கிறீர்கள், உங்கள் நிகழ்ச்சித்திட்டம், மற்றும் நீங்கள் யாரை எங்கு எந்நேரம் சந்திக்கிறீர்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்கட்டும்.
- அபாயகரமான பணிகளில் ஈடுபடும்போது இடையறாது செய்திக்காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு அவர்கள் உடனடியாகவே உங்களை நாடக்கூடிய வழிகளைக் கையாளவும்.
- மிகவும் நுட்பமான ஆவணங்கள், இறுவட்டுகள், ஒலி - ஒளிப்பதிவுகள் ஆகியவை செய்திக்கூடத்துக்கு வெளியே பாதுகாப்பான முறையில் பாதுகாக்கப்படவேண்டும்.
- முக்கியமற்ற தகவல்களுக்காக தொலைபேசியூடான பேட்டிகளை முடியுமானவரை கட்டுப்படுத்தவும்.

பிற்சேர்க்கை 10

# Resource List (வள பட்டியல், நிறுவனங்களின் பட்டியல்கள்)

## Regional and Global Investigative Networks

- Arab Reporters for Investigative Journalism (ARIJ)
- Balkan Investigative Reporting Network(BIRN)
- Forum for African Investigative Reporters (FAIR)
- Global Investigative Journalism Network (GIJN)
- International Consortium of Investigative Journalists (ICIJ)
- Investigative Reporters Network Europe (IRENE)
- Organized Crime and Corruption Reporting Project (Southeastern Europe)
- SCOOP (East and Southeastern Europe)

## Global Investigative Reporting Centers

- Bulgarian Investigative Journalism Center (BIJC)
- Caucasus Media Investigations Center (CMIC)
- Center for Investigative Journalism, UK
- Center for Investigative Reporting, Bosnia & Herzogovina (CIN)
- Center for Investigative Reporting, Nepal
- Center for Investigative Reporting, Serbia
- Centro de Investigation le Information Periodistica (CIPER), Chile
- Ghana Center for Public Integrity
- Investigative Journalism Center (IJC), Croatia
- Investigative Journalism Center of Moldova
- Investigative Journalists NGO, Armenia
- Philippine Center for Investigative Journalism (PCIJ)
- Romanian Center for Investigative Journalism (CRJI)
- The Canadian Centre for Investigative Reporting (CCIR)

## Investigative Reporting Centers in the US

- Center for Investigative Reporting(CIR)
- Center for Public Integrity(CPI)
- Investigate West
- Investigative Reporting Workshop, American University
- New England Center for Investigative Reporting at Boston University
- ProPublica
- Rocky Mountain Investigative News Network
- Schuster Institute for Investigative Journalism, Brandeis University
- Stabile Center for Investigative Journalism, Columbia University
- Texas Watchdog
- Wisconsin Center for Investigative Journalism

பிற்சேர்க்கை 11

# Related websites (இணையத்தளங்கள்)

- Article 19 - http//www.gn.apc.org/article 19
- Canadian Journalists for Free Expression - http//www.cjfe.org
- Cobrapost - http://www.cobrapost.com/
- Committee to Protect Journalists (CPJ)- http//www.cpj.org
- Commonwealth Press Union - http//www.compressu.co.uk/
- European Journalism Centre - http//www.ejc.nl
- European Journalism Network - http//www.ejn.org
- FACSNET - www.facsnet.org
- Freedom Forum - http//www.freedomforum.org
- Groundviews - http//www. groundviews.org
- Independent Journalism Foundation - http//www.ijf-cij.org
- International Federation of Journalists - http//www.ifj.org
- International Freedom of Expression Exchange - http//www.ifex.org
- International Institute for Journalism -http//www.scripps.ohiou.edu
- International Journalists Network - http//www.ijnet.org
- International Media Support- http//www.i-m-s.dk
- International PEN - http//www.internationalpen.org.uk
- International Press Institute- http//www.freemedia.at/
- International Women's Media Foundation- http//www.iwmf.org
- Knight Center for Journalism in the Americas -http//www.knightcenter.utexas.edu
- Malaysiakini - http://www.malaysiakini.com/
- Online Journalism Review - www.ojr.org
- Panos South Asia - http://www.panossouthasia.org
- Poynter Institute- www.poynter.org
- Press Foundation of Asia -http//www.pressasia.org

- Reporters San Frontiers(RSF) -http//www.rsf.fr
- Salzburg Seminar- http//www.salzburgseminar.org
- Society of Professional Journalists in the United States - www.spj.org/ethics.asp
- Tehelka.org - http://www.tehelka.com
- The Freedom Forum -http//www.freedomforum.org
- The Reporters' Committee for Freedom of the Press- www.rcfp.org
- The Thomson Foundation -http//www.Thomfound.ac.uk
- UNESCO - http//www.unesco.org/webworld
- World Association of Newspapers -http//www.wan-press.org
- World Press Freedom Committee-http//www.wpfc.org
- World Press Photo -http//www.worldpressphoto.nl

## பிற்சேர்க்கை 12

# Bibliography (துணை நூல்பட்டியல்)


- Arab Reporters for Investigative Journalism - http://arij.net/en/?cat=13
- *Arthasastra* by Kautilya
- The Elements of Journalism: What Newspeople Should Know and What the Public Should Expect by Bill Kovach and Tom Resenstiel (2007)
- Story-Based Inquiry: A Manual for Investigative Journalists by Mark Lee Hunter, Nils Hanson, Rana Sabbagh, Luuk Sengers, Drew Sullivan and Pia Thordsen - http://www.arij.net/look/englishmanual.pdf
- Digging Deeper: A Guide for Investigative Journalists in the Balkans by Sheila Coronel (2009)
- http://groundviews.org
- Investigative Editors and Reporters - http://www.ire.org/
- The Code of Professional Practice (Code of Ethics) of the Editors Guild of Sri Lanka – http://www.fojo.se/polopoly_fs/1.1900!Code%20of%20Ethics-%20English.pdf
- Complaint Form of the Sri Lanka Press Complaints Commission - http://www.pccsl.lk/how to make complain.php
- International Federation of Journalists: Declaration of Principles on the Conduct of Journalists- http://asiapacific.ifj.org/en
- Tehelka - http://www.tehelka.com
- Cobrapost - http://www.cobrapost.com/

- ABC Television Network, US- http://abc.go.com/
- Definitions of Corruption - http://www.unodc.org/pdf/crime/corruption/Handbook.pdf
- Lexis-Nexis - http://www.lexisnexis.com/
- Loosening Lips (The Art of the Interview) by Eric Nader - http://home.earthlink.net/~cassidyny/naldertip.htm
- The Society of Professional Journalists - http://www.spj.org/pdf/ethicscode.pdf.
- Attacks on the Press 1999: Sri Lanka by the Committee to Protect Journalists - http://cpj.org/2000/03/attacks-on-the-press-1999-sri-lanka.php
- http://www.article19.org/data/files/pdfs/publications/sri-lanka-fifty-years-on.pdf
- Section 5.1 of The Code of Professional Practice (Code of Ethics) of the Editors Guild of Sri Lanka – http://www.fojo.se/polopoly_fs/1.1900!Code%20of%20Ethics-%20English.pdf
- http://groundviews.org/2010/11/04/a-turn-for-the-worse-undergraduate-protests-and-unrest-in-sri-lanka/
- Google - http://www.google.com/
- Wikipedia - http://www.wikipedia.org/
- South Florida Hurricane Relief Fraud Report - http://www.sun-sentinel.com/news/local/southflorida/sfl-femacoverage,0,3866065.storygallery
- Edgar Database at the US Securities and Exchange Commission - http://www.sec.gov/edgar/searchedgar/webusers.htm
- http://groundviews.org/2010/11/19/record-breaking-rice-cakes-but-at-what-cost/

- Press Freedom Index by Reporters Sans Frontiers 2010 - http://en.rsf.org/press-freedom-index-2010,1034.html

- 2009 UNESCO Press Freedom Prize Awarded to Lasantha Wickrematunge - http://portal.unesco.org/ci/en/ev.php-URL_ID=28500&URL_DO=DO_TOPIC&URL_SECTION=201.html

- Getting Away with Murder: Impunity Index by the Committee to Protect Journalists - http://www.cpj.org/reports/2010/04/cpj-2010-impunity-index-getting-away-with-murder.php

- Live News: A Survival Guide for Journalists by the International Federation of Journalists - http://www.ifj.org/assets/docs/091/223/51c565b-ee6f6df.pdf

- Safety Code by the International News Safety institute - http://www.newssafety.org/index.php?option=com_content&view=article&id=165:insi-safety-code&catid=166:safety-code&Itemid=100066
- http://www.icrc.org/customary-ihl/eng/docs/v2_rul_rule34

- Safety Matters - For Journalists and Media Workers by the International Federation of Journalists, Free Media Movement, Internews and Young Asia Television (2009)

- International Media Support on Safety of Journalists - http://www.i-m-s.dk/page/introduction-ims

- Accuracy Checklist - http://www.scribd.com/doc/31924802/Checklist-Craig-Silverman-Regret-the-error

- Safety Case Study - http://www.thesundayleader.lk/archive/20060423/spotlight.htm

- The Seven Basic Rules for Investigative Reporting by Clark Mollenhoff - http://www.concernedjournalists.org/seven-basic-rules-investigative-reporting

# புலனாய்வு ஊடகத் துறைக்கான வள நூல்

**Friedrich-Ebert-Stiftung**
**No.4, Adams Avenue, Colombo - 4.**
Phone: +94 112502710/1
Fax: +94 112502727
Email: office@fessrilanka.org
Web: http://www.fessrilanka.org

**Transparency International Sri Lanka**
**6, 37th Lane, Queen's Road, Colombo 3**
Phone: 011 4369781 - 3
Fax: 011 2506419
Email: tisl@tisrilanka.org
Web: www.tisrilanka.org

ISBN: 978-955-1281-49-6